கௌமார குருகுலக் கல்விப் பிரசுரம் 1.

இறைவன் துணை.

முதியோர் கிராமக் கல்வி நூல்.

3-வது பகுதி.

4. தமிழ்மொழி.
5. தேச சரித்திரம், பூகோளம்.

177
SIVAGNANA MUNIVAR LIBRARY
சிவஞானமுனிவர்

பதிப்பாசிரியர்
இராவ்சாகிபு சு. வி. கனகசபைப் பிள்ளை,
தலைவர், கௌமார குருகுலம், மன்னார்குடி.

மன்னார்குடி பாரதி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

1932.

4 பகுதிகளும் சேர்ந்து விலை ரூ. 2—8—0.

இறைவன் துணை.

முதியோர்
கிராமக் கல்வி நூல்.

3-வது பகுதி.

4. தமிழ்மொழி.
5. தேச சரித்திரம், பூகோளம்.

சிவஞானமுனிவர் நூல்நிலையம்
100 கீழை... தெரு, திரு...

பதிப்பாசிரியர்
இராவ்சாகிபு சு. வி. கனகசபைப் பிள்ளை,
தலைவர், கௌமார குருகுலம், மன்னார்குடி.

மன்னார்குடி பாரதி அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

1932.

4 பகுதிகளும் சேர்ந்து விலை ரூ. 2—8—0.

கௌமார குருகுலப் பிரசுரம்.

முதற்பதிப்பு 500.

இதின் சகல உரிமைகளும் கௌமார குருகுலத்திற்கே யாகும்.

இறைவன் துணை.

[illegible]ரியோர் கிராமக் கல்வி நூல்.

3-வது பகுதி.

நான்காம் பாகம்:— தமிழ்மொழி.

பொருளடக்கம்.

குறிப்பு:— பாட எண்ணிக்கைகளை அடியில் கண்டபடி திருத்திக்கொள்ளவும்.

பாடங்கள்.		பக்கங்கள்.
1	**கிராமக்கல்வி:**—ஜனாப். பாவலர் சி.மீ. முகம்மது யூசுப் சாகிபு, பத்திராதிபர் "ஷம்ஸுல் ஹுதா", மன்னார்குடி.	8
2	**தமிழ் அறிவின் அவசியம்:**— திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள் பி. ஏ., பி. எல்., கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவர், தஞ்சாவூர்.	8
3	**புத்தகசாலைகளும் கிராமங்களும்:**— திரு. எஸ். ஆர். ரங்கநாத ஐயர் எம். ஏ., எல். டி., எப். எல். ஏ. சென்னை சர்வ கலா சாலை புத்தகசாலை காரியதரிசி.	6
4	**தமிழின் பெருமை:**— திரு. சர்க்கரை இராமசாமிப் புலவர் தமிழ் ஆசிரியர், அண்ணாமலை சர்வ கலாசாலை, சிதம்பரம்.	10
5	**தமிழ் இலக்கியப் பகுதிகள்:**— திரு. நீ. கந்தசாமி பிள்ளை, எம். ஆர். ஏ. எஸ்., டூ[illegible]ட கண்டிராக்டர், தஞ்சாவூர்.	13
6	**கம்ப ராமாயணம்:**— திரு. டி. எஸ். சபாபதி பிள்ளை பி. ஏ., பென்ஷன் ஜில்லா ரிஜிஸ்டிரார், தஞ்சாவூர்,	6
7	**பிரபந்த ஆராய்ச்சி;**— ஜனாப் பாவலர் சி. மீ. முகம்மது யூசுப் சாகிபு, "ஷம்ஸுல்ஹுதா" பத்திராதிபர், மன்னார்குடி	9
8	பெண் கல்வியின் அவசியம் ௸ ௸	8

இறைவன் துணை.

கௌமார குருகுலக் கல்விப் பிரசுரம் 1.

தமிழ்மொழி 1.

கிராமக் கல்வி.

ஆசிரியர்:—ஜனாப் பாவலர் சி. மீ. முஹம்மது யூசுப் சாஹிப்

பத்திராதிபர், "ஷம்ஸுல் ஹுதா" மன்னார்குடி.

கல்வியிற் கிராமக்கல்வியென்றும் நகரக்கல்வியென்றும் பாகுபாடு கிடையாதெனினும் ஒவ்வொருநாடும் முன்னேறுவதற்கு அந்தந்த நாட்டிலுள்ள கிராமத்தார்கள் போதிய கல்வியறிவு படைத்தவர்களாயிருக்கவேண்டுமென்ற அவசியத்தின் காரணமாய்க் கிராமங்கள் தோறும் கல்வி யபிவிருத்திக்குத் தக்க ஏற்பாடு செய்து அதன் பலனைக் கிராமத்தார்கள் அவர்களுக்கு அவசியமான துறைகளில் கற்றுணருங்கல்விக்கே கிராமக் கல்வியெனப் பெயர் கொடுத்தழைக்கின்றோம்.

ஆகவே, கிராமக் கல்வியின் பயனைக்கொண்டே ஒருவர் பெரிய நீதிபதியாகவோ வக்கிலாகவோ, வைத்திய நிபுணராகவோ, அரியபெரிய வானசாஸ்திரியாகவோ வந்துவிடமுடியாதென்றாலும் அவர்க்குப் போதுமான விவசாய அறிவையும், உலக ஞானத்தையும், பூகோள ககோள விஷயங்களையும், சரித்திர ஆராய்ச்சியையும், குடித்தன ஒழுக்கங்களையும், பிள்ளை வளர்ப்பு, சுகாதாரம், தொழில்முறை, ஐக்கிய வாழ்வு முதலியவைகளையும், ராஜீயதேசிய விஷயங்களையும் கிராமக் கல்வியானது கொடுக்குமென்பதிற் சந்தேகமில்லை. அத்தகைய கிராமக் கல்வி இது சமயம் நமது கிராமங்களிற் போதிக்கப்படுகின்றதாவென்று பார்த்தால் அது தான் கிடையாது.

ஒவ்வொரு கிராமத்திலும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களைவிட ஒன்றுந்தெரியாதவர்களே மிகவும் அதிகமாயிருக்கின்றனர். கிராமச் சீர்திருத்தஞ் செய்யப்போகின்றவர்களுக்கு இது நன்கு தெரிந்தவிஷயமேயாகும். எழுதப்படிக்கவுந் தெரியாதவர்களிடம் விவசாய ஒழுங்கையும், குடித்தனப் பாங்கையும், சமூகச் சீர்திருத்த முன்னேற்றத்தையும் நாம் கண்டுகொள்ள

முடியுமா? ஒருகாலும் முடியாது. அதனாற்றான் ஒவ்வொரு கிராமமும்போதிய சீர்திருத்தமின்றிக் கிடப்பதுடன் தொழில்-விவசாய அபிவிருத்தியில்லாமல் பஞ்சத்தில் கட்டுண்டு தவித்துக் கொண்டுமிருக்கின்றது. இவ்வளவிற்குங் காரணம் கல்வியில்லாக் குறைவேயாகும்.

கல்வியினால் மாந்தர்க்கு ஏற்படுகின்ற நன்மைகளைக் கவனிப்போம்:— இப்பூவுலகின் மக்களாய்ப் பிறந்துள்ள ஒவ்வொருவரும் எப்பொழுதுஞ் சுகமாயிருப்பதையே விரும்புகின்றனர். அவ்வாறு என்றைக்குஞ் சுகமாகவே காலங்கடத்துகிறதற்கு முக்கிய ஸாதனமாய் உதவக்கூடியது கல்வியேயாகும். கல்வி கற்காத மக்கள் எத்துணைப் பெரிய செல்வத்தைப் பெற்றிருப்பினும் மனம் அமைதியின்றிச் சஞ்சலத்தினோடேயே உயிர் வாழ்வர். செல்வமில்லாத ஓர் ஏழை கல்வியுடையவனாயிருந்தால், என்றென்றும் அமைதியோடு கூடிய இன்பவாழ்வில் வாழ்ந்து வருவானென்பதில் ஒரு சிறிதும் ஆக்ஷேப மில்லை. ஏனெனில், கல்வி கற்றவன் தனக்கு முன்னிருந்த பெரியார்களின் நற்குணங்களையும், அன்னோர்களால் எழுதிவைக்கப் பெற்ற நீதி நெறிகளையும், திருமறையின் ஸன்மார்க்கத்தையும், உள்ளதைக் கொண்டு திருப்தியடையும் உயர் குணத்தையும் உணர்ந்து, அந்த நல்வழியிலேயே தானும் நடக்கப் பிரயத்தனப் படுவான். அதனால், அவனுக்கு உலகவாழ்க்கை எளிதாகவும் இன்பகரமாகவுந் தோன்றும். அவன் என்றென்றும் இன்பத்துடன் வாழ்வதற்கு அருந்துணையாயிருந்ததானது அழியாத் தன்மையுடைய கல்வியேயாகும். எவ்வாறு அழியாததெனின்:—

வெள்ளத்தாற் போகாது வெந்தணலால் வேகாது வேந்தராலுங்
கொள்ளத்தான் முடியாது கொடுத்தாலும் நிறைவொழியக் குறைபடாது
கள்ளர்க்கோ மிகஅரிது காவலோ மிகஎளிது கல்வி என்னும்
உள்ளத்தே பொருளிருக்க உலகெலாம் பொருள்தேடி உழல்வதேனோ?"

என்று பெரியார்கள் கூறியிருக்கின்றனர். இதை நன்கு ஊன்றிக் கவனித்தோமாயின், மிகுதியான வெள்ளப் பிரவாகத்தினாலும், மூண்டெரிகின்ற கொடிய தீயினாலும், படைகளையுடைய அரசனாலும், அயர்ந்த நேரம்பார்த்துத் திருடுகின்ற கள்வராலும் அழிக்கமுடியாததாயும், பிறருக்குக் கொடுக்கக்

கொடுக்க மேன்மேலும் வளர்ந்து அதிகமாகக் கூடியதாயும், யாதொரு சிறிய காவலையும் வேண்டாததாயும் நிலைபெற்றிருந்து தன்னைப் பெற்றுள்ள கல்வியாளர்க்கே யன்றிக் கேள்வியுற்ற பலருக்கும் அவர்கள் கேட்ட அளவிலேயே இன்பங் கொடுக்கக் கூடியதாயு முள்ள கல்வியின் மிகைப்பட்ட மேன்மையை யாரே வரையறுத்துக் கூறவல்லார்? அன்றியும்,

மணற் கேணியைத் தோண்டத் தோண்ட நீர் சுரத்தலை போன்று நல்ல நூற்களைக் கற்கக் கற்க நல்லறிவானது ஊறுமெனப் பெரியார்பலர் கூறுகின்றனர். இதனாற்றான் தெய்வப் புலமை வாய்ந்த திருவள்ளுவர்,

"தொட்டனைத் தூறும் மணற்கேணி; மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு"

எனக் கூறிப் போந்தார்.

அறிவின் முதிர்ச்சியினால் நன்று இன்னது, தீது இன்னது என்று வேறுபிரித்துணரும் சக்தியானது இனிது புலனாகும். தீய காரியங்களை விலக்கி நல்ல காரியங்களைச் செய்வதால் என்றென்றும் மன அமைதியோடு கூடிய இன்பவாழ்க்கை நிலைபெறும். தீக்ஷண்யமான புத்தியுடன் யாவரோடும் சேர்ந்து வாழும் பண்பு வாய்க்கும். உலக விஷயங்களில் தளக்கமற நெஞ்சத்துடன் புகுந்துழைக்கும் ஆற்றல் மிகும். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்னும் விசால நோக்கத்துடன் மக்களனைவர்களின் க்ஷேம லாபத்தையுங் கருதிப் பாடுபடுகின்ற ஊக்கம் அதிகமாகும். இத்தியாதி நற்குணங்களால் மக்களின் இகலோக வாழ்வு மாண்படைவதுடன் பரலோக வாழ்வுக்குத் தக்க பலனும் உண்டாகின்றது.

கல்வியறிவில்லாத ஆண்மக்களும் பெண்மக்களும் குருடர்களே போன்று நன்மை தீமைகளின் பாகுபாட்டைப் பிரித்துணருஞ் சக்தியற்று அடாதகலாம் பல விளைத்துத் துன்பத்திலேயே உழன்று சஞ்சலிப்பர். இன்னோர்களின் கண்கள் பார்வையுடையனவேயாயினும் புண்களே யாகும் என்னெனின் கற்றவர்களின் கண்கள் நீதிநூற்களைக் கொண்டு முன்னோர்களின் நன்னடைகளையும், தூர தேசங்களின் ரகசியங்களையும், இனி நடக்கவேண்டிய சட்ட திட்டங்களையும் தாமிருந்த இடத்தி

லிருந்தே கண்டுகொள்ளுங் காரணத்தால் மெய்யான கண்க ளாகவே திகழ்கின்றன. கல்வியறிவற்றவர்களின் கண்கள் அத்தகைய உயரிய நோக்கங்களிற் செல்லாத காரணத்தால், மக்கட்கு வீண் ஆசைகளை யுண்டுபண்ணி, மனம் போன போக்கில் நடக்கச்செய்து, கேவலம் விலங்குகளைப் போல-இல்லை, அதனினுங் கேவலமாய்ச் சஞ்சரிக்கும்படி செய்துவிடுகின்றன. இதனால், மக்கள் அறியாமையாற் கொள்ளுகின்ற வீண் ஆசைகள் நிறைவேறாததினால், ஆசை அடங்கவில்லை யென்ற தொந்தரவினாலும், தாம் முறைதவறிச் செய்த கேட்டினாலும் அல்லும் பகலும் கவலையிலாழ்ந்து, நீங்காத வியசனத்தினால், "அழுத கண்ணுஞ் சிந்திய மூக்குமாய்" இருப்பர். இத்துணைக்கும் ஏதுவாயிருந்த கண்களிற் புண்களைப் போன்று நீர் வடிவதனாலும், மனத்தில் அவஸ்தை யுண்டுபண்ணுவதனாலும் அக்கண்கள் புண்களாய்ப் போயினவே யன்றோ? இதுகாரணம் பற்றியே பொய்யா மொழியார்,

> "கண்ணுடையர் என்பவர் கற்றோர்; முகத்திரண்டு
> புண்ணுடையர் கல்லா தவர்."

என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார். ஆதலின், ஒவ்வொருவரும் நன்கு கல்விபயின்று மெய்யான கண்களைப் பெறவேண்டியது எவ்வளவு அவசிய மென்பது யாவர்க்குந் தெரியாததல்ல

ஃ

மேலும், அழியாத கல்விப் பொருளைப் பெற்றுள்ள அறிஞர்க்குத் தம் நாடென்றும் பிறநாடென்றும், தம் ஊரென்றும் பிறவூரென்றும் வேற்றுமை கிடையாது. அவர்கள் சென்ற ஊரெல்லாம் அவர்களின் சொந்த ஊராகவே விளங்கும். கற்றவர்க்கும் கல்லாதவர்க்குமுள்ள வேற்றுமையைப் பார்த்தால், நாட்டு மனிதர்க்கும் காட்டு விலங்கிற்குமுள்ள வேற்றுமையே யாகும். விஷய மிப்படியிருப்பதை ஒரு சிலர் உணர்ந்து கொள்ளாமல், தங்களின் வாழ்நாள் முழுவதையும் வீணே கடத்திவிட்டு, ஒரு பயனுமின்றி உறுதுயருற்று மாள்வதில் யாது பிரயோஜன முண்டு? இவர்கள் அறியாமையால் இவ்வாறு காலங் கடத்துவது இவர்களுடன் ஒழிந்துபோகாமல் இவர்களின் சந்ததிகளையுந் தாக்கி, அவர்களின் வழி வழி தோறும் பழிமொழியை

யுண்டுபண்ணிக்கொண்டே போகின்றது. இதுவிஷயங்களைப் பகுத்தறிவுபெற்ற மாந்தர்களிற் சிலர் உற்றுணராததே ஆச்சரியப்படத்தக்கதொரு விசேஷமாய்க் காணப்படா நின்றது!

"கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதரா கும்மே".

என்ற நீதிவாக்கியத்தை உணர்ந்தேனும் அரிய கல்விப் பொருளைப் பெற்று, உயர்வாழ்வடைய ஒவ்வொருவரும் முயற்சிப்பார்களென எதிர்நோக்குகின்றோம்.

சகோதரீர்! கல்வியின் பெருமையைப்பற்றிக் கூறுவதற்கு நமது ஆயுட்காலமே போதாது. சுருங்கக் கூறுமிடத்து ஒருவனுக்குப் பகைவந்தவிடத்தில் சகோதரனைப் போன்றும் சஞ்சலந் தோன்றிய விடத்து நண்பனைப்போன்றும், தனித்த விடத்து மனைவியைப்போன்றும், தவறியவிடத்து ஊன்றுகோல் போன்றும், யோசிக்குமிடத்து மந்திரியைப்போன்றும் என்றைக்கும் உடனிருந்து உதவக்கூடியது கல்வியே யாகும். கல்வியானது அழியாப் பொருளென்பது யாவர்க்குந் தெரியும்.

அத்தகைய கல்விப்பொருள் யாரிடத்தில் இல்லையோ அவர்களையே மகா ஏழைகளென்று கருதவேண்டும் கல்வியபிவிருத்தியில்லாத நாடு ஒருபோதும் முன்னேற முடியாது. சென்ற பத்து வருஷங்களுக்குமுன், இந்தியாவின் கல்வியபிவிருத்தியைக் காணுவதற்காக எடுக்கப்பெற்ற கணக்கின்படி இந்தியாவில் ஆயிரத்திற்கு ஐம்பது ஆண்களும் பன்னிரண்டு பெண்களுமே கற்றிருக்கின்றனர். ஆனால், ஜெர்மனியில் ஆயிரத்திற்கு 990 ஆண்களும், டென்மார்க்கில் ஆயிரத்திற்கு 996 ஆண்களும் கற்றவர்களாயிருக்கின்றனர். இந்தியாவின் கல்வி யபிவிருத்தி எவ்வளவு கேவல நிலைமையிலிருக்கின்றதென்பதைச் சிறிது யோசித்துப்பாருங்கள். இந்நிலையில் நாம் எவ்வாறு முன்னேறப்போகின்றோம்?

அவ்வாறு நம்மக்கள் கல்வித்துறையில் க்ஷீணித்திருப்பதற்கு அநேகக் காரணங்களிருக்கின்றன. அவைகளில் முக்கியக்காரணம் பொதுவாகக் கிராமக் கல்வியும் சிறப்பாகப் பெண் கல்வியும் இல்லாததே யாகும். மக்கள் சிறுவயதிலிருந்து பழகு

கின்ற தாயாரிடமும், அவர்கள் வசிக்கின்ற கிராமத்தினிடமும், கல்வி வாசனையே இல்லாதிருந்தால் யாவருங் கல்வியில் விருத்தி யடைவது எப்படி முடியும்? ஆதலின், ஒவ்வொரு கிராமத்தி லும் சிறுவர் முதல் முதியோர்வரை யாவரும் அவரவர்களின் தகுதிக்குத்தக்கவாறு கல்விகற்கும் வழியைக் கண்டுபிடித்து அவ்வழியை நமது கிராமங்களில் அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டும்.

கிராமங்கள்தோறும் சங்கங்களை ஏற்படுத்தி அந்தச் சங்கங்களின் ஆதரவில் ஆரம்பப் பாடசாலைகளை உண்டுபண்ண வேண்டும். ஒவ்வொரு குழந்தையையும் அதன் பெற்றோர் பாடசாலைக்கு அனுப்பவேண்டுமென்று கட்டாயம் ஏற்படுத்த வேண்டும். பொதுவாக வாசகசாலைகளில் விவசாயத்திற்கும், தொழிலபிவிருத்திக்கும் அவசியமான நூற்களையும், பூகோளம் ககோளம் முதலிய சாஸ்திரங்களைப் போதிக்கின்ற நூற்களையும், தேசச்சரித்திரம் தலைவர்களின் சரித்திரம் முதலியவைகளுக்குத் தேவையான நூற்களையும், சுகாதாரம் தேகாப்பியாசம் முதலியவற்றுக்குப் போதுமான நூற்களையும், மற்றும் கிராமவாசிகளுக்கு அவசியமான நூற்களையும் பத்திரிகைகளையும் வரவழைத்துச் சேமித்துவைத்து ஒவ்வொருநாளும் அந்த வாசகசாலையில் ஜனங்கள் சர்வசாதாரணமாய்ப் பிரவேசித்துத் தங்கட்கு இஷ்டமான நூலை எடுத்து வாசிக்கும்படி செய்தல் வேண்டும். தினந்தினமும் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் நல்ல நூற்களையும் வர்த்தமானப் பத்திரிகைகளையும் ஒருவர் இறைந்து வாசிக்கும்படியும் கல்வி கற்றில்லாத பொது ஜனங்கள் சூழ்ந்திருந்து வாசிக்கப்பெறும் விஷயங்களைக்கேட்டு உணர்ந்து கொள்ளும்படியுஞ் செய்தல் வேண்டும். அடிக்கடி கிராமங்களில் கல்வியபிவிருத்திக்கு அவசியமான நிழல்படங்களைக் கிராமவாசிகளுக்குக் காண்பித்துக் கல்வியிற் பிரியத்தை ஊட்டவேண்டும். இராப்பள்ளிக்கூடங்களை வைத்து வயது முதிர்ந்தவர்களில் கற்றில்லாதவர்களுக்குக் கல்வி கற்பிக்கவேண்டும்.

இந்த முறைகளை அனுசரிப்பதால் கிராமத்தார்களிற் பெரும்பான்மையோர் கல்வியபிவிருத்தியடைந்து தமது மக்களையும் கல்விகற்கும் வண்ணஞ் செய்வார்கள். விவசாயத்தின்

முறைகளையும், தொழிலபிவிருத்தியின் வழிகளையும், கிராம முன்னேற்றத்திற்கவசியமான விஷயங்களையும் உணர்ந்து கொள்ளுவார்கள். தேசச் சரித்திரங்களையும் பூகோள ரசாயன சாஸ்திரங்களையும் தெரிந்துகொள்வார்கள். சுகாதாரத்துடன் நாகரிகமாய்த் தங்களின் குடித்தனத்தை அமைதியுடன் நடத்துவார்கள். மற்றும் சமூகத்திற்கு வேண்டிய பலதுறை களிலுந் தேர்ந்து முன்னேற்றமடைவார்கள். முன்னேற்ற முள்ளதாய்க் கருதப்படுகின்ற ஏனையநாட்டினரோடு போட்டி யிடவும் முற்படுவார்கள்.

அன்பு நிறைந்த சகோதரீர்! இன்றைக்கு நாம் பேச வேண்டிய விஷயம் "கிராமக் கல்வி" என்பதாகவிருப்பதால் இதுவரை கிராமக் கல்வியைப்பற்றி ஒருவாறு பேசியுள்ளோம். இனி, கிராமக் கல்வியில் சமரஸமானது வேண்டியிருக்கின்ற தென்பதைக் கூறுகின்றோம். கல்வி கற்பதில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வேறுபாடில்லாமல் மேலே கூறப்பெற்ற முறைகளில் கல்வி கற்கவேண்டுமென்பதே எம்முடைய அவா. இதை விவரித்துக் கூறவேண்டுமானால், ஹிந்து முஸ்லிம்—கிறிஸ்தவர் — ஆதித்திராவிடர் — தீண்டாதார் என்ற வேறு பாடின்றி எச் சமூகத்தாரும் அந்த முறைகளின்படி கல்வி கற்றுக்கொள்ளவேண்டுமென்றே கூறலாம்.

இது சமயம் இந்த மன்னார்குடி நகரில் திருவாளர், இஞ்சினீயர், கனகசபைப்பிள்ளை அவர்களின் அரிய முயற்சி யாலும் பொருளுதவியாலும் கிராமக் கல்விக்காகச் செய்யப் பெற்றிருக்கும் ஏற்பாடுகள் யாம் முன்னே கூறிவந்த அத்துணை முறைகளுக்கும் அடிப்படையானதாய்த் தோன்றுகின்றது. அவர்கள் கிராமக்கல்வி விஷயமாய்க் கிராமங்கள்தோறும் அரும் பிரசாரஞ்செய்து வருவதுடன் ஒவ்வொரு கிராமத்தி லும் வாசகசாலையை ஏற்படுத்துவதற்குப் போதிய சௌகரிய முஞ் செய்து கொடுக்கத் தையாராயிருக்கின்றார்களென்பதை அதிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம். மன்னார் குடியில் தலைமை வாசகசாலையை ஏற்படுத்தி, அதிலிருந்து கிரா மங்களில் ஏற்பட்டிருக்கும் கிளைவாசகசாலைகளுக்கு வண்டியின் மூலமாய்ப் புத்தகங்களைக்கொண்டுபோய் மாதாமாதமும் கொடுப்

பதற்குத் தக்க வண்டியொன்றைச் செய்து முடித்திருக்கின்றார்கள். அவசியமானபல நூற்களையும் வரவழைத்து வைத்திருக்கின்றார்கள். எந்தக்கிராமத்திற்கும் ஜாதிமத வித்தியாசமின்றி அவர்களுக்குவேண்டிய நூற்களை அனுப்பச் சித்தமாயிருக்கின்றார்கள். ஆகவே, ஒவ்வொரு மாதத்திலும் புதிய புதிய புத்தகங்களைக் கொண்டுபோய் கொடுத்துவிட்டுப் பழைய புத்தகங்களை எடுத்துவர ஆள்வசதியும், நிழற்படங்காட்டத்தகுந்த வசதிகளும் செய்து வைத்திருக்கின்றனர். ஒவ்வொரு கிராமத்தார்களும் தக்க பொறுப்பேற்றுச் சமரஸத்துடன் ஒத்துழைக்க முற்பட வேண்டியதையே எதிர்நோக்கப்படுகின்றது.

நமது நாட்டில் கல்வியபிவிருத்திக் குறைவாயிருப்பதையுணர்ந்து தமது திரவியத்தையும் வாழ்க்கையையும் ஒருங்கே தியாகஞ்செய்ய முற்பட்டிருக்கின்ற திருவாளர் கனகசபை பிள்ளை அவர்களின் தளராத ஊக்கத்தைப் பன்முறையும் பாராட்டுகின்றோம். நமது நாட்டிலுள்ள ஒவ்வொரு தனவானும் இவ்வாறு பொதுநலத்தொண்டிற்கும் கல்வியபிவிருத்திக்கும் உதவிசெய்ய முற்பட்டு வரவேண்டுமென்று பிள்ளையவர்களின் முயற்சியானது அறைகூவி யழைக்கின்றது. சமரஸ ஞானசபையின் காரியதரிசியாகிய அந்தத்திருவாளர் கனகசபை பிள்ளை அவர்களின் நன்னோக்கம் ஈடேறி ஒவ்வொரு கிராமத்தார்களும் கல்வியபிவிருத்தியடைந்து, மிக்க மகிழ்ச்சியுடனுந் தக்க சுதந்தரத்துடனும் முன்னேற்றமடைய எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் பாலிப்பானாக!

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளியுண் டாகும்;
வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவு மாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்;
தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.

—பாரதியார்.

பாரதி பிரஸ்; மன்னார்குடி.

உ

சிவமயம்.

கௌமார குருகுலக் கல்விப் பிரசுரம் 1 | தமிழ்மொழி 3

தமிழறிவின் அவசியம்.

ஆசிரியர்:—

திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள், B.A., B.L.,

தலைவர், கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சை.

தமிழ் நாட்டில் பிறந்து வளர்ந்த தமிழ்ப்பழங்குடிகளாகிய நாம் தாய் மொழியாகிய தமிழ்மொழிப் பயிற்சியில் கருத்தில்லாதவர்களாய் நமது முன்னேற்றத்திற்கே கேடு சூழ்ந்து கொண்ட பேதைமையை என்னென்பேன்! பொருளாதார நிலையிலும் நாகரீகத்திலும் முன்னேறிய நாடுகளின் கல்வி முறையினையும் வரலாற்றினையும் ஆராய்பவர்கள், ஒவ்வொரு நாட்டினரும் தத்தம் தாய்மொழியின் துணை கொண்டே கலைகளில் வல்லுநர் ஆன உண்மையைக் காணுததல்ல. சமீப காலம் வரையில் கலைபயில் தெளிவு யாதுமின்றி அறிவினர்களாய் அந்தகாரத்தில் அமிழ்ந்து கிடந்த சப்பானியர்கள் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்குள் தமது தளராத முயற்சியினுல் அயல் நாட்டினரின் கலைத்திறங்களை தாம் அறிந்து கொண்டதும், தாம் அறிந்தவற்றைத் தம்மவர் அனைவரும் அறிந்து கொள்ளுமாறு தமது நாட்டு மொழியிலே நூல்கள் இயற்றிக் கொண்டதும், இற்றை நாளில் மேனுட்டினரும் மதிக்கத்தக்க உயர் நிலையை சப்பானியர் எய்தியதும் நம்மவர் கருத்திலிருக்கத் தக்க உண்மைகளாகும். மேனுட்டினராகிய ஆங்கிலே

யர், பிரஞ்சுக்காரர், சர்மனியர், இதாலியர், ஆகிய பல்வகையினரும் தத்தமக்குரிய தாய்மொழிப் பயிற்சியில் வெகுவிரைவாகக் கலையறிவு பெற்று முன்னேறி வருவதை நாம் நன்கறிந்தும், நமது நாட்டின் முன்னேற்றத்திற்கென உழைப்பவர் என வாய்ப்பறையறைந்து வீணே திரியும் தலைவர்கள் எனப்படுவோர் தாய்மொழிப் பயிற்சியில் கருத்தூன்றாது, பிறமொழிகளை வளர்க்கக் கருதுவதும், அதற்கென முயலுவதும் அறிவுடைமையாமோ? நாம் பாலுடன் அருந்திப் பயின்று வந்ததும், சொல் வளனும் பொருள் வளனும் மலிந்ததும், படைப்புக் காலந்தொட்டுச் சீருடன் விளங்குவதும், கன்னித் தமிழென உயர்ந்தோரால் போற்றப்படும் விழுப்பம் பொருந்திய நஞ்செந்தமிழ் மொழியைப் பயிலாது புறக்கணிக்கும் நமது ஏழைமதிதான் என்னே!

சென்ற ஒரு நூற்றாண்டிற்கு மேற்பட்ட காலமாக நமது அரசியலார் தமது குற்றேவல்களைப் புரியவல்ல பணியாளர்களை ஆக்கிக் கொள்வதற்கென ஆங்கிலக் கல்வியை இந்நாட்டில் பரப்பத் தலைப்பட்டனர். நமது வண்டிகளை இழுப்பதற்கும், நாம் சவாரி செய்வதற்கும் வளர்க்கும் குதிரைகட்கு உணவு உறையுள் முதலியன தந்து, அவற்றைத் தேய்த்துக் குளிப்பாட்டி மெருகிட்டும், சேணம் முதலியன பூட்டி அலங்கரித்தும் வைத்திருப்பதையொப்ப, நம்மவர்களுக்கு பி. ஏ. எம். ஏ. முதலிய பட்டங்களை வழங்குவல் எனவும், பலதிறப்பட்ட பதவிகள் தருவல் எனவும் ஆங்கிலக் கல்வித்துறைகளில் நம்மவர்களை அரசியலார் மிக மிக ஊக்கினர்; நாட்டிற்கு விளையும் நலந் தீங்குகளைத்தானும் ஆராயாது, அரசியலாரின் குறிவழிநின்றுக் குற்றேவல் புரியும் ஊழியர்களல்லது நாட்டின் சிறப்பை நிலைநிறுத்தும் கலை வாணர்களோ, புலமை சான்ற பெரியோர்களோ இங்கு மிகுதியாகக் காணப்படுகின்றனரா?

தொடக்கப் பள்ளிக்கூடங்களென்றும், உயர்தரப் பள்ளிக்கூடங்களென்றும், கல்லூரிகளென்றும், பல்கலைக் கழகங்களென்றும், பல வேறுவகையான கல்வி நிலையங்களை நிறுவி கோடிக்கணக்கான தொகைகளைச் செலவிட்டு அரசியலார் கல்வியை வளர்த்தும், 100-க்கு 90 பேர்களின் மேல் படிக்கத்தானும் எழுதத்தானும் தெரியாத கல்லா மாக்கள் நமது நாட்டில் நிரம்பியிருக்கின்றனர். கல்வியில் தேர்ந்தவர் எனப்படுபவர் தமது கலையறிவு பிறர்க்குப் பயன்படும் வண்ணம் பேசவுந் தெரியாத மூங்கையராவார். அவரிற் பெரும்பாலார் தாம்பெற்ற ஆங்கிலக் கல்வியால் செருக்குற்றும் இறுமாந்தும், கல்வி நலம் பெறாத தம்மவர்கட்கு அறிவுச்சுடர் கொளுத்தி நன்னிலைக்குக் கொணர்தற்கான மனப்பரிவு சிறிதுமின்றி நீர்க்குள் பாசிபோல் வேற்கோள்ளாது வறிதே வயிறு வளர்த்துச் செல்கின்றனர். அதுவேயுமன்றி, நமது நாட்டின் நலஞ்சிறந்த கொள்கைகளைத் தெரிந்து கொள்ளாதவராய், தமிழ் மரபில் பயிலாத காரணத்தால் அதனைப் புறக்கணிக்கவும், அயல் நாட்டினரின் மனப்பான்மையினையும், ஒழுக்க வழக்கங்களையும் கைக்கொள்ளவும் தலைப்பட்டு தமிழ் நாகரிகத்தின் தனிச் சிறப்புகளை மாய்க்க வல்ல கருவியாகின்றனர். இதுகாறும் தமிழ்க்கல்வி தமிழறிவு இன்மையால் நாம் அடைந்துவரும் கேடுகள் சிலவற்றைக் கூறினேன்.

இனி எடுத்துக்காட்டாக, பண்டைக் காலத்தில் தமிழறிவே தனியரசு பெற்றிருந்த ஞான்று, நாம் எய்திய சிறப்புகள் சிலவற்றைக் கூறலாமென எண்ணுகிறேன். பழங்காலத்தின் தமிழ்க் கல்வியின் நிலையை அளந்தறிதற்குரிய கருவிகள் பழந்தமிழ் இலக்கியங்களேயாம். அவற்றினைத் துருவி ஆராய்ந்து முடிவுகட்ட வல்லவர் செந்தமிழ்நூல்களை நன்கு பயின்ற புலவர்களே யாவர். என்போன்றார்க்கு அது முடியாத

தோன்றுயினும் மேனேக்காகப் பயின்றதில் நான் கண்ட சில உண்மைகளைக் கூறலாமெனக் கருதுகின்றேன்.

படைப்புக்காலந்தொட்டுத் தமிழ் நாட்டைப் புரந்தவரெனப் புகழ்ப்பெற்ற தமிழ்நாட்டு மூவேந்தராகிய சேர, சோழ, பாண்டிய மன்னர்கள், குறுநில மன்னர்கள் அமைச்சர்கள், நிலக்கிழவர்கள், மருத்துவர்கள், வணிகர்கள் எனப் பல்திறப்பட்டவர்களும் புகழ்மிக்க புலவர்களாயிருந்தனர்; ஆண்மக்களேயன்றி பெண்மக்களும் புலவர்களாயிருந்தனர்; தமிழ் நாட்டில் புகழுடன் விளங்கிய பெண் புலவர்களின் எண்ணிக்கையும், புலமைத்திறனும், வியத்தகு கொள்கை மேம்பாடும், நாகரிகம் பெற்ற எந்த நாட்டிலும் காண்பதரிது. பல நிலையிலுள்ள மக்கள் மிகப்பலராவார் நுண்மாண் நுழை புலனுடைய பெரும்புலவராயிருந்தனர்; பல்லாயிரம் ஆண்டுகளின் முன் அன்னூர் இயற்றிய பனுவல்கள் இற்றைநாள் வரை நம்மவரால் பொன்னேபோல் போற்றப்படுகிறது; அன்னூல்களின் வியத்தகு சிறப்புக்களை அயல் நாட்டுக் கலைஞர்கள்கூட வாயாரப்புகழ்ந்து போற்றுகின்றனர்; தமிழ்மக்கள் அனைவருமே கல்வியில் கருத்துடையாராய், கல்வியினூஉங்கில்லை சிற்றுயிர்க் குற்றதுணையென ஊக்கத்துடன் உழைத்துக் கல்வி நலங்களைப் பெற்றுச் சிறந்தமையாலன்றோ, தமிழ் சமூகத்தில் எண்ணிறந்த புலவர்கள் தோன்றினர். எண்ணிறந்த கலைகள் மலிந்தன; பலதிறம்பட்ட கைத்தொழில், வாணிபம், படைத்திறம் முதலியவற்றில் தமிழர் தலைசிறந்தனர்;

"கல்லாது நிற்பார் பிறரின்மையிற் கல்விமுற்ற
வல்லாருமில்லை யவைவல்ல ரல்லாருமில்லை" எனவும்

ஏகம் முதற் கல்விமுளைத் தெழுந் தெண்ணில் கேள்வி
ஆகம் முதற்றிண்பணை போக்கி யருந்தவத்தின்
சாகந்தழைத்தன்பரும் பித்தருமம் மலர்ந்து
போகங்கனியொன்று பழுத்தது போலுமன்றே

எனவும் புலவர் பாடியது உண்மையே என்க.

பண்டைக்காலத்தில் தமிழ்க்கல்வி இத்துணை விரிவாகப் பரவுதற்குரிய சாதனங்கள் இன்றுபோல் மிகப்பல இருந்த தில்லை. படிப்படியாகப் பயிலுதற்கு நமக்குள்ள கலாசாலைகள் போன்றன அற்றை நாளில் கிடையா; ஆசிரியர் பயிலுதற்குரிய போதனமுறைக் கலாசாலைகள் கிடையா; பாடபுத்தகங்களை நாள் ஒன்றுக்கு அம்பாரமாக அச்சிட்டு வெளியேற்றவல்ல அச்சுப்பொறிகள் கிடையா; ஆசிரியர்களும் கருவிநூல்களும், பாடசாலைகளும் அருகியிருந்தும் கலைகள் மலிந்ததன் காரணம் என்ன? இத்துணை சாதனங்களும் நிரம்ப இருந்தும் இற்றை நாளில் கல்விவளம் குன்றியிருப்பதன் காரணமென்ன?

முதலாவது:—கல்வி கற்பதற்கு நாம் தேடும் கருவி நமக் குரித்தல்லாதது. அயல் நாட்டு மொழிகளின் துணைகொண்டு கற்க முயலுவதில் மொழித்திறம் பெறவே பத்து ஆண்டுகள் கழிகின்றன. பள்ளியிறுதித் தேர்வு (School final) வரை மாணவர் கற்கும் கலைஞானம் மிகவும் அற்பம்; அதன்மேல் நான்காண்டுகளில் கற்கும் கலையறிவு நிலைத்தபயனைத் தருவ தில்லை. ஒருவர் கருத்தை பிறரொருவர்க்குத் தெரிக்கவல்ல கருவி, மொழியாகும். நாம் இளம்பருவம் முதல் பழகிக் கைவந்த நந்தாய் மொழியாகிய தமிழ்மொழியை விடுத்து பிற மொழிகளைக்கற்று அம்மொழிகளின்வழிக் கலைகற்போ மென்பது, கையிலுள்ள கருந்தனத்தை சொரிந்து போகட்டு அரிப்பரித்துப் பொருள் செய்திட முயலுதல் போன்றிருக் கிறது.

இரண்டாவது:—கல்விகற்க முயலும் மாணவரின் நோக்க மும், கல்விகற்பிக்கும் தலைவர்களின் நோக்கமும் மிக இழிந்தன வாக இருக்கின்றன. ஏதேனும் ஊழியங்களைப் பெறுதற்கு ஏற்ற சாதனமென்றே கல்வி கற்கப்படுகின்றது. தாம் விரும்பிய படி ஏதேனும் பதவிகளைப்பெற்று வயிறு வளர்ப்பதற்கு வழி

செய்துக்கொண்டால் தாம் அரிதிற்கற்றுத் தேர்ந்த கலைகளை நினைப்பதேயில்லை. தமது கல்வி வளர்ச்சியிலோ, தமது நாட்டின் கல்வி வளர்ச்சியிலோ, பெரும்பாலார் கருத்து வைப்ப தில்லை. பிழைக்கும் வழியெனக்கருதி கல்வி விரும்பப்படுவ தால், செல்வர்கள் கல்வியை விரும்புவதில்லை; செவியிற்சுவை யுணரா வாயுணர்வின் மாக்களாகவே தமது வாணாளை வீணே கழிக்கின்றனர்.

மூன்றாவது:—பண்டைத் தமிழரசர்கள் கற்றுத்துறை போகிய புலவர்களாகவும், கல்விநலங்களை நன்குணர்ந்த புரவலர் களாகவும் இருந்தமையால் புலவர்களைத் தமது தோழர்க ளாகவும், துணைவர்களாகவும் போற்றி வந்தனர். தமிழரச ரிடத்தும் தமிழ் வள்ளல்களிடத்தும் தமிழ்ப் புலவர்கள் பெற்று வந்த சீரும் வரிசையும் பிறநாட்டுப் புலவர்கள் பெற்றறியார் என்பது உண்மை.

இன்னோரன்ன காரணங்களால் தமிழ்க்கல்வி நாடெங்கும் பரவித் தலைசிறந்தது.

இனித் தமிழ்க்கல்வியின் இன்றியமையாமை குறித்து ஒரு சில கூறிமுடிப்பேன்.

ஆங்கிலக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் மிகச்சிலர்; அவற்றில் நுழையாமலே வெளியே திரியும் கல்லா மாந்தர்கள் மிகப்பலர். இவ்விருதிறத்தினர்க்கும் தமிழறிவு இன்றியமை யாததாகும். கல்லா மாந்தர்கள், அயல்நாட்டு மொழிகளைக் கற்று அவற்றின் வழி கல்வி பெறுதலினும், தாய்மொழியாகிய தமிழின் வழி கற்பது மிக மிக எளிது. இக்குருகுலம்போன்ற பல குருகுலங்கள் நாடெங்கும் தோன்றி ஒழிவு நேரங்களில் மக்களனைவரையும் ஒருங்கு சேர்த்து, வாழ்க்கைக்கு இன்றி யமையாத அறிவுநூற்பொருளை அவர்கட்குத் தருதல் வேண்டும்.

'கற்றிலனாயினும் கேட்க' என்ற பொன்மொழியின் உண்மையை பொதுமக்கள் உணர்ந்து, கற்றல் கேட்டலுடையார் குழுமியுள்ள பேரவைகளில் அமர்ந்து, அவர்கள் கூறும் அறிவுரைகளைச், செவிவாயாக, நெஞ்சுகளனாக கேட்டவை கேட்டவை விடாதுளத்தமைத்து 'நல்லாரிணக்கமும் நின்பூசை நேசமும்' பயின்று நன்மக்களாதல் வேண்டப்படுவதாகும்.

அன்றி ஆங்கிலக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள், நமது தமிழ் மூதறிஞர் எய்ப்பில் வைப்பாக நமக்குத் தந்திருக்கும் தமிழ்க் கலைகளைக் கற்று வல்லவர் ஆவதும் இன்றியமையாததாகும். தாம் அரிதிற்கற்ற கலையறிவை நாடெங்கும் பரப்பவும், தமிழ் கற்றவரிடம் தாம் நன் மதிப்புக் கொள்ளவும் நாட்டு மக்களிடம் வேற்றுமையின்றி அன்புடன் பழகவும் தமிழ்க்கல்வி உதவி செய்யும். பழந்தமிழ் மக்களின் மனப் பான்மைகளையும், உயர் நோக்கங்களையும், சிறந்த ஒழுக்கங் களையும், வீரம், கொடை, கொற்றம், கற்பு, அறம் மரபு, நாகரிகம் ஆதிய ஒல்காச் சிறப்புகளையும் நன்கு தெரிக்கும் கருவியுமாகும். கண்ணோட்டமொன்றே நாகரிக மென்று சொல்லும் பெற்றிமை தமிழர் ஒருவர்க்கே உரியதாகும். தலைக் கோலத்தாலும், உண்பன உடுப்பனவாலும், வெளிமயக்கான நடை உடை பாவனைகளாலும் நாரிகம் பெற்றனம் என்னும் குருட்டு நம்பிக்கையால் ஏமாற்றமுறும் நவீன நாகரிகர்கள் தமிழர் நாகரிகத்தை ஐயந்திரிபறக்கற்றுப் பயனடைவாராக!

"உண்டா லம்மவில் வுலகமிந்திர
ரமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர், பழியெனி
னுலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்வில
ரன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மையானே"

இப்பழம் பாட்டில் கூறப்படும் வாழ்க்கையின் சிறந்த நோக்கங்களை நன்கறிந்து அதன்வழி நிற்றலினும் சிறப்பென்னே ! இத்தகைய சீரிய கொள்கைகளின் துணையால் செழிப்புடன் வாழ்ந்த தமிழ்ப்பெரு மக்களின் மரபுவழுவாது நாம் திருந்திய முறையில் வாழ்க்கையை நடத்த அவ்வொழுக்கமுடையாரின் வாய்ச்சொல் நமக்கு உறுதுணையும் ஊன்றுகோலுமன்றோ ?

இறைவன் துணை

கௌமார குருகுலக்
கல்விப் பிரசுரம் 1.

தமிழ் மொழி 3.

புத்தகசாலைகளும் கிராமங்களும்

ஆசிரியர் :—எஸ். ஆர். ரங்கநாதன், எம்.ஏ., எல்.டி., எப்.எல்.ஏ.,
சென்னை, சர்வ கலாசாலை புஸ்தகசாலை காரியதரிசி

பழைய நோக்கம்

கிராமங்களுக்கும் புத்தக சாலைகளுக்கும் என்ன சம்மந்தம் இருக்கக்கூடும் என்று அநேகர் ஆச்சரியப்படலாம். ஏனெனில் பழைய நோக்கப்படி புத்தகங்களும் புத்தக சாலைகளும் நகர வாசிகளுக்கு உரித்தே தவிர கிராமாந்திரங்களுக்கு சம்பந்தமில்லை என்றும் அவைகள் பள்ளிக்கூட வகுப்புகளுக்குப் பொருத்தமே ஒழிய பெரும்பாலும் பாமர ஜனங்களான கிராம வாசிகளுக்கு பொருத்தமில்லை என்றும் எண்ணம். கிராமங்களில் பெரும்பாலோர் படிப்பில்லாது இருக்கிறார்கள். அவ்விதமான நம் நாட்டில் கிராமங்களுக்கும் புத்தக சாலைகளுக்கும் அதிக சம்மந்தம் இருக்க முடியாது என்று கூட சொல்லுகிறார்கள்.

தற்கால நோக்கம்

2. ஆனால் இது ரொம்பவும் பழைய நோக்கம். இனி அது நிற்காது. தற்காலத்தில் புத்தகசாலை இயக்கத்தின் சுலோகம் என்னவென்றால், "புத்தகசாலைகள் எல்லோருக்காகவும்" உள்ளன; பணக்காரர்களுக்கு மாத்திரம் அல்ல ஏழைகளுக்கும், நகரவாசிகளு மாத்திர மல்ல நாகரீக மற்றவர்களுக்கும், ஆண்களுக்கு மல்லாது பெண்களுக்கும், படித்தவர்களுக்கு மல்லாது படிக்காதவர்களுக்கும் புத்தகங்கள் உரியன. மேற்கண்டவைகள் எல்லாம், "கல்வி சகலருக்கும் உரித்தானது சிலருக்கு மாத்திர மல்ல" என்ற ஆழ்ந்த கருத்துள்ள வாக்கியத்தில் அடங்கியது. ஆனால் கிராம வாசிகள் ஆரம்பக் கல்வியில் கூட விருப்பம் காட்டுவதில்லை என்று குறிப்பிடலாம். அவ்விதம் வெறுப்பு இருந்தால் அதற்கு என்ன காரணம், என்று நான் கேட்கிறேன். இதுவரையில் கிராம வாசிகளுக்கு கொடுத்துவரும் ஆரம்பக் கல்வியின் முறையே இவ்வித வெறுப்புக்குக் காரணமென்று நான் எண்ணுகிறேன். கிராம வாசிகளின் தினசரி வாழ்க்கைக்கும் தினசரி தேவைகளுக்கும் நமது ஆரம்பக் கல்வியின் திட்டங்களுக்கும் சம்பந்தா சம்பந்தம் இல்லை என்பது உண்மை அல்லவா? மேலும் தற்காலிகமான கல்வி முறையின் விசேஷபலன் பெரும்பாலும் கிராம வாழ்க்கையில் வெறுப்பு ஏற்படுகிறதென அநேகர் சொல்லக் கேட்டிருக்கிறேன். எல்லாக் கைத்தொழிலுக்கும் பிள்ளைகள் பிரயோஜனம் இல்லாது போகிறார்கள். உள்ளங்

காலில் முள்ளுகளைத் தைத்துக்கொள்ளாது வயல்களில் நடக்க முடிகிறதில்லை. மாட்டைக் கன்றை அவிழ்த்துக் கொள்ளாது கெட்டியாகக் கட்டத் தெரிகிறதில்லை என்பதாகவும் கிராமவாசிகள் சொல்ல அடிக்கடி கேட்டிருக்கிறேன்.

எவ்வித புத்தகங்கள் தேவை

3. கிராமங்களில் புத்தகசாலைகளை ஸ்தாபிக்க வேண்டுமானால் பழைய நாள் எண்ணப்படி உயர்நடையுள்ள புத்தகங்கள், தேர்ச்சி யடைந்த கணக்குப் புத்தகங்கள், இரகசியார்த்தமான தத்துவ சாஸ்திரங்கள், இன்னும் இவ்வித புத்தகங்களே புத்தகசாலையில் இருக்கவேண்டுமென்ற எண்ணம் ஒழிய வேண்டும். இதற்குமாறாக கிராமப் புத்தகசாலையில் கிராமவாசிகளின் தினசரி கைத்தொழிலுக்கு நேரிட்ட சம்மந்தமுள்ள புத்தகங்கள் இருக்கவேண்டும். இவ்விதமான முறைகள் மேல் நாட்டுப் புத்தகசாலைகளில் நடந்தேறி வருகிறது. ஒரு கிராமத்தில் நெசவுத் தொழில் அதிகமென்றால் அந்த கிராமத்து புத்தகசாலையில் பருத்தி, நெசவு, வெளுத்தல், சாயம் இவைகளைப்பற்றிய புத்தகங்கள் அதிகமாக இருக்கும். இவை சம்மந்தமான பத்திரிகைகளும் அந்த புத்தகசாலையில் வரவழைக்கப்படும். நான் இங்கிலாந்தில் ஒரு கிராமத்தைப் பார்த்தேன். சுவரில் ஒட்டக்கூடிய காகிதம் அந்தக் கிராமத்தில் கைத்தொழில். அந்தக் கைத்தொழில் சம்மந்தமான ஏராள புத்தகங்களும் சுவர் காகிதம் செய்யும் விதங்கள் அடங்கிய அநேக பத்திரிகைகளும் அந்த புத்தகசாலையில் இருந்தன. அநேக காலங்களில் அநேக தேசங்களில் செய்துள்ள சுவர் காகிதங்கள் ஒரு பொருள் காட்சியில் காட்டப்பட்டன. நான் ரீடிங் என்ற ஓர் ஊருக்குப் போயிருந்தேன். அது பிஸ்கோத்துக்குப் பேர் போனது. விவசாயத்துக்கு முக்கிய மத்திய ஸ்தலம். அந்த இடத்தில் நமது கோயமுத்தூர், பூசா விவசாய பிரசுரங்கள் ஏராளமாக இருந்ததைப் பார்த்து ஆச்சரிய மடைந்தேன். அவ்வித கோயமுத்தூர், பூசா பிரசுரங்கள் நமது விவசாய முக்கிய ஸ்தலங்களில் இருக்குமா என்பது எனக்கு சந்தேகம்.

புத்தகசாலைத் திருமூர்த்திகள்

4. கிராமவாசிகளின் தினசரி வாழ்க்கை தினசரி கைத்தொழில் சம்மந்தமான அச்சுப் புத்தகங்கள் புத்தகசாலையில் இருப்பதோடுகூட இன்னொரு முக்கியமான கடமை என்னவென்றால், கிராமவாசிகளுக்கு புத்தகசாலையில் விருப்பம் ஊட்டவேண்டும். புத்தகசாலை என்றால் புத்தகங்கள் ஒன்று, வாசிப்பவர்கள் ஒன்று, சிப்பந்திகள் ஒன்று என்று மும்மூர்த்திகள் அடங்கினது என்ற விஷயம் மறக்கக்கூடாது. அநேகர் இந்த விஷயத்தை மறந்துவிடுகிறார்கள். புத்தகங்கள்மாத்திரமே புத்தகசாலைக்கு போதுமானது என்று நினைக்கிறார்கள். சரியான சிப்பந்தியைப் பற்றி நினைக்கிறதில்லை.

அதன் உபயோகம் என்ன, எவ்விதம் உபயோகப் படுத்திக் கொள்வது என்பதே தெரியாது. புத்தகங்களை பந்தோபஸ்தாக பாதுகாத்தாலும் குறிப்பிட்ட காலங்களில் தூசி அடிப்பதும் கூடியவரையில் பூச்சி அரிக்காமல் பார்த்துக்கொள்வதுமே சிப்பந்தியின் முக்கிய கடமை என்று இக்காலத்தில் நினைக்கிறார்கள். மேற்படியார் தொழில், இந்த சில்லரை விஷயங்கள் மாத்திரமல்ல, அவர்கள் முக்கிய கடமை இன்னும் ஒன்று உண்டு. அந்த ஸ்தலத்தில் உள்ள ஜனங்களை புத்தகசாலைக்கு இழுத்து அவர்கள் எல்லோரையும் சுருசுருப்பாகப் படிக்கிறவர்களாகச் செய்யவேண்டும்.

நம்மவர்களின் அறியாமை

5. ஒரு புத்தகசாலை சிப்பந்தியின் கடமையையும் அவ்வித கடமை செலுத்தக்கூடிய சிப்பந்தியின் தேவையையும் மறந்து "ஓ, நம்மவர்கள் ரொம்பவும் உபயோகமற்றவர்கள். நம்முடைய கிராமங்களில் புத்தகசாலைகளை ஸ்தாபிப்பதினால் என்ன பயன். ஒருவரும் கவலைப்பட்டுவந்து புத்தகங்களைப் படிக்கிறதில்லை," என்று சிலர் யோசியாமல் பேசுகிறார்கள். ஆனால் என்னுடைய அபிப்பிராயமோ அதற்கு நேர் மாறானது. சாதாரணமாக படிப்பில் ஆசை தானாகவே வருகிறதில்லை. அதைத் தூண்டிவிடவேண்டும். இந்த விஷயம் நம் தேசத்தில்மாத்திரம்தான் உள்ளது என்று நினைக்கவேண்டாம். உலகம் எங்கும் அப்படியேதான் இருக்கிறது.

மேல் நாட்டார் முயற்சிகள்

6. மேல் நாட்டுப் புத்தகசாலைகளில் ஜனங்களைப் படிக்கப் பிரியம் உண்டாக்குவதற்கு எடுத்துக்கொள்ளும் அநேக வழிகளைப் பற்றி கொஞ்சம் சொல்லுகிறேன். வாசிக்கிறவர்களின் தினசரி வாழ்க்கைக்கு நேரிட்டு சம்பந்தமானதும் அப்போதைக் கப்போது உபயோகிக்கக்கூடியதுமான புத்தகங்களைச் சேகரம் செய்வது ஒருவித உபாயம்-ஜனங்களை இழுப்பதற்கென்று ஏற்கனவே குறிப்பிட்டேன். மேலும் மேல் நாடுகளில் "புத்தகசாலைப் பேச்சு" என்று ஏற்பாடு செய்கிறார்கள். அதாவது கிராம வாசிகளுக்கு உற்சாகம் கொடுக்கக்கூடிய விஷயங்களைப்பற்றி கீர்த்தி வாய்ந்த ஜனங்கள் விரும்பும் உபன்யாசகர்களைக்கொண்டு பேசச் சொல்லுவார்கள். பேசும்போதே பேசும் விஷயம் சம்மந்தமாக புத்தகசாலையில் உள்ள புஸ்தகங்களுக்கு ஓர் சாப்தாக் கொடுப்பார்கள். பிரசங்க சபையிலிருந்து ஜனங்கள் வெளியே போகும்போது அவர்கள் போகும் வழியில் ஜாப்தாவில் சொல்லப்பட்ட புத்தகங்களை அழகாகவும் ஆடம்பரமாகவும் பரப்பி வைப்பார்கள். எவ்விதத்திலும் வசப்படாதவர்கள் விஷயத்தில் புத்தசாலைக் காரியதரிசி அல்லது வேறொருவர் அவர்கள் வீடுகளுக்கும் போய் புத்தகசாலை, இலவசமாக படிக்கக்கூடிய ஸ்தலம் என்றும் ஜனங்கள் செலுத்தும் வரியினால்தான்

புத்தகசாலை ஆதரிக்கப்படுகிறதென்றும் இன்னும் இதில் கிடைக்கக் கூடிய உபயோகமான விஷயங்களைப் பற்றியும் நெருங்கிப் பேசுவார்கள். ஒரு புத்தகசாலையின் காரியதரிசி செய்து காட்டிய அறிய பொறுமையும் தந்திரமும் வாய்ந்த ஒரு அபூர்வமான உதாரணத்தைச் சொல்லுகிறேன்.

ஒரு ஆச்சரியமான சம்பவம்

7. கேம்பிரிட்ஜ் என்ற நகரில் ஒரு பழத் தோட்டக்கார் இருந்தார். அவருக்கு அந்த கிராமப் புத்தகசாலையிலும் அதன் புத்தகங்களிலும் கொஞ்சங்கூடப் பிரியமில்லை. ஆனால் அவரைப் பிரியப்படும்படி செய்ய அந்த காரியதரிசி எடுத்துக்கொண்ட அதி நுட்பமான தந்திரங்களைப்பற்றியும் அது சம்மந்தமாக அவர் காண்பித்த மிதமிஞ்சிய பொறுமையைப் பற்றியும் முக்கியமாகக் குறிப்பிடுகிறேன். அந்தக் காரியதரிசி விடாமல் எவ்வளவோ கேட்டுக் கொண்டாலும் வயது சென்ற பழ வியாபாரி கேட்கிறதே யில்லை. புத்தகங்களின் பேரில் ஏற்பட்ட துவேஷத்தினால் அந்தக் காரிய தரிசியையும் வெறுக்க ஆரம்பித்தார். அவரை தன் வாசலில் கூட விட மறுத்தார். கிராமத்தார்களுக்குள் எல்லாம், தான் ஒருவன் தான் புத்தகசாலைக் காரியதரிசியின் வலையில் அகப்படவில்லை என்று பெருமையாகப் பேசுவார். காரியதரிசி சில சமயத்தில் கோப மூட்டப்படுவார். ஆனால் அவருக்கு ஓர் சரியான சமயம் வாய்த்தது. அதாவது ரயில் மார்க்கமாகவும் படவு மூலமாகவும் அனுப்பும் பழ வர்க்கங்களை பார்சலாகக் கட்டும் முறையைப்பற்றி வியாபார சங்கத்தார் சில புதிய விதிகளை ஏற்படுத்தினார்கள். நமது பழத் தோட்டக்காரருக்கு புதிய விதிகள் தெரியாது. அதனால் வெளியூருக்குப் போக சாமான் எடுத்துக்கொள்ளும் இடத்தில் பார்சல்கள் சரியாகச் செய்யப்படவில்லை, என்று தள்ளிவிட்டார்கள். அவருக்கு மிகவும் மனதிற்கு வியாகூலம் உண்டாயிற்று. இது விஷயம் புத்தகசாலைக் காரியதரிசிக்குத் தெரிந்து பழங்களைப் பார்சல் செய்யும் விஷயமாக கடைசியாக வந்த புத்தகம் ஒன்றை பழத் தோட்டக்கார வியாபாரிக்கு தபால் மூலம் அனுப்பினார். தான் நேரில் கொண்டுபோனால் துரத்திவிடுவார் என்று பயந்து நேரில் போகத் துணியவில்லை. அந்த புத்தகத்தில் சொல்லிய விதிப்படி பழங்களைப் பார்சல் செய்து அனுப்பினார். அந்தப் பார்சல்களையும் அதிகாரிகள் அங்கீகரித்தார்கள் என்றதைப் பார்க்க அவர் மனதிற்கு அதிக சந்தோஷம் ஏற்பட்டது. வியாபாரத்தில் லாபமும் அடைந்தார். இரண்டு வாரம் கழித்து புத்தகத்தை அனுப்பும்படி காரியதரிசி எழுதினார். புத்தகம் இன்ன இடத்திலிருந்து வந்தது என்று தெரியாத பழ வியாபாரி புத்தகம் மிக்க நன்றாய் இருக்கிறது அனுப்ப முடியாது என்று எழுதினார். பிறகு காரியதரிசி பழம் பார்சல் செய்வதைப் பற்றியும் பழம் உற்பத்தி செய்வதைப் பற்றியும் வேறு சில புத்தகங்களையும் எடுத்துக்கொண்டு பழ வியாபாரியிடம் நேரில்போனார்.

காரியதரிசியை தனது ரக்ஷகராக நினைத்து உடனே மரியாதையாக நடத்தினார். அதிலிருந்து கேம்பிரிட்ஜ் மாகாண புத்தகசாலையில் ஓர் தவராத வாடிக்கைப் படிப்பாளராக ஆனார். ஒரு புத்தி கூர்மையுள்ள இங்கிலீஷ்காரருக்கே இவ்விதமாக வசப்படுத்த வேண்டிய தந்திரங்கள் தேவை என்றால், ஒரு கிராம புத்தகசாலையின் பிரயோஜனத்தைப்பற்றி நம் கிராமவாசிகள் தெரிந்துகொள்ளச் செய்வதென்றால் எத்தனை சிரமமென்று நீங்களே சுலபமாய்த் தெரிந்துகொள்ளலாம்.

ருஷியாவும் இந்தியாவும்

9. படிப்பில்லாதவர்களுக்கு இந்த புத்தகங்களினால் என்ன நன்மை என்று நீங்கள் கேட்பீர்கள் என்பதாக எனக்குத் தெரியும். ருஷியா தேசத்திலிருந்து இந்த கேள்விக்கு மிக நேர்த்தியும் மனதில் பதியக்கூடியதுமான பதில் தெரிந்துகொள்ளலாம். சுமார் பத்து வருஷங்களுக்கு முன் இந்தியாவிலும் ருஷியாவிலும் கல்வியின்மை ஒரே மாதிரியாக இருந்தது. இப்பொழுதோ அந்தப் பெரிய தேசத்தில் ஒரு கோடியிலிருந்து மற்ற கோடி வரை ஒவ்வொரு சிறு ஊரிலும் கூட வாசக சாலைகளும் புத்தக சாலைகளும் ஏராளமாக ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஒவ்வொரு புத்தக சாலையிலும் கல்வி யின்மையைத் தொலைக்க ஒரு சங்கம் ஏற்படுத்தினார்கள். ஆரம்பத்தில் ஒவ்வொரு புத்தக சாலையிலும் படிக்காதவர்களுக்கு புத்தகங்களை வாசிக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டன. இவ்விதம் படிப்பில் ஒருவித உற்சாகம் ஏற்படுத்திய பின் அறிவீனத்தைப் போக்கக்கூடிய சங்கங்கள் முன்னுக்கு வந்தது. எழுதப் படிக்கக் கணக்குப் போட கற்பித்தார்கள். படிப்பதில் ஆசை அதிகமாக, வயது சென்ற கிழவர்கள் கூட எழுதப் படிக்கக் கணக்குப் போட ஆறுமாத காலத்தில் கற்றுக்கொண்டார்கள். எழுதப் படிக்கத் தெரிந்தவுடன் பாலர் வகுப்பு புத்தகங்களை வாசித்து பிறகு முதியோர்களுக்குத் தகுந்த புத்தகங்களை வாசிப்பார்கள்.

முதியோர் கல்வியே நமது கல்வி இன்மையைத் தொலைக்கும் வழி

10. ருஷியாவில் செய்யக் கூடியது இந்தியாவிலும் செய்யக் கூடும். நமது தேசத்து பயங்கரமான கல்வியின்மையைத் தொலைக்க வேறு வழி யிருக்கிற தென்று சொல்ல முடியவில்லை. கோடான கோடி படிக்காதவர்களுக்கெல்லாம் சர்க்காரில் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்துவது சாத்தியமென்று நினைக்கிறீர்களா? அவ்விதம் அவர்கள் ஏற்படுத்திய போதிலும் நமது முதியோர்கள் வயது சென்ற ஆண் மக்களும் பெண் மக்களும் அந்தப் பள்ளிக்கூடங்களில் வந்து உபாத்தியாயரிடத்தில் வாசிப்பது என்பது சாத்தியமென நினைக்கிறீர்களா? இவ்விதமான கிராமப் புத்தக சாலைகளினால் ஏற்படக் கூடிய ஓர்வித இயக்கத்தினாலேயே நமது கல்வி யின்மையைத் தொலைக்கலாம் என்று நினைக்கவில்லையா?

மன்னார்குடிக்கு சுற்றிலுமுள்ள கிராமங்களில் ஓர்வித வழக்க மில்லாத புதிய கல்வி முறையை ஏற்படுத்துவது இராவ் சாகிபு, சு. வி. கனகசபை பிள்ளை அவர்களின் ஆயுள் நாளின் கனவு என்று நான் அறிகிறேன். சமீப காலத்தில் அவரால் ஏற்படுத்தி நடந்து வரும் "சுற்றுப் புத்தகசாலை" சில நாளைக்குள் மன்னார்குடி தாலூக்கா கிராம வாசிகளை ஒன்று கூட்டி யமைத்து அவர்களுடைய அஞ்ஞானத்தை நீக்கும். இதனால் அவர்கள் நாட்டு நகரவாசிகளாகவும், திறமை வாய்ந்த விவசாயிகளாகவும், தேச பக்தர்களாகவும் ஆவார்கள். இப்போது ஆரம்பித்திருக்கும் பரோபகரமான கைங்கரியத்தில் மன்னார்குடி தாலூக்கா வாசிகள் ஒத்துழைக்கவும், அவருடைய பிரயாண புத்தகசாலை மற்ற ஜில்லாக்களுக்கு ஓர் உதாரணமாக இருக்கவும் எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக!

இறைவன் துணை.

கௌமார குருகுலக்
கல்விப் பிரசுரம்!

தமிழ் மொழி 4

தமிழின் பெருமை.

ஆசிரியர்:— சர்க்கரை இராமசாமிப் புலவர்.
தமிழாசிரியர், அண்ணாமலை சர்வகலாசாலை, சிதம்பரம்.

அமிழ்தினுமினிய நந்தமிழ் மொழியானது உலகத்தின் கண்ணுள்ள எண்ணிறந்த பாஷைகளில் இலக்கண வரம்புடைய மொழிகளுள் தலைசிறந்த தொன்றாம்.

இது கறைமிடற் றிறைவன் மறை முதலியவைகளைத் திருவாய் மலர்ந்தது போல இறையனாரகப் பொருளென்னு மிலக்கணநூல் அருளிச்செய்யப் பெற்றது. வடமொழியோ டொத்த சிறப்புடையது. இவற்றை:—

மறை முதலளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
யிறைவர் தம் பெயரை நாட்டி யிலக்கணஞ் செய்யப் பெற்றே
யறைகடல் வரைப்பிற் பாடையனைத்தும் வென்றாரியத்தோ
டுறழ்தரும் தமிழ்த் தெய்வத்தை யுண்ணினைந்தேத்தல் செய்வாம்.

என்பதனானும்

ஆரியமுஞ் செந்தமிழு மாராய்ந்திதனி னிது
சீரிய தென்றொன்றைச் செப்பரிதால்—ஆரியம்
வேத முடைத்துத் தமிழ் திருவள்ளுவனார்
ஓது குறட்பா வுடைத்து.

என்பதனானுமுணர்க.

அன்றியும் அகத்தியமுனிவர் தலைமையில் பாண்டியரால் வளர்க்கப்பட்ட தமிழ்ச் சங்கத்திற்றானு மொருபுலவனாக விருந்து ஆராய்ந்த பெருமையும் பெற்றதென்பது.

சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்பலத்துமென் சிந்தையுள்ளும்
உறைவா னுயர்மதிற் கூடலினுய்ந்த வொண்டீந் தமிழின்
றுறைவாய் நுழைந்தனை யோவன்றி யேழிசைச் சூழல் புக்கோ
விறை வாதடவரைத் தோட்கென் கொலாம் புகுந்தெய்தியதே.

என்பதனுல் வெளியாம்.

இத்தமிழின் றொன்மையும் பெருமையும் அளவிகந்தனவாக வினவற்றைச் சுருங்கிய காலத்திற் கூற வொண்ணுவாயினும் அதன் அருமை பெருமையைப் பாராட்டிய கடவுளாதியவள்ளல் களிற் சிலர்புரிந்த செயல்களை மாத்திரம் சுருக்கிக் கூறுகிறேன்.

அவை வருமாறு

1. சீரிலகுமால் பணிப்பாய் சுமந்தான்.

காஞ்சிபுரத்திலே திருவெஃகாவிலே அருந்தவம்புரிந்தெழுந் தருளியிருந்த திருமழிசையாழ்வார் அந்நகரிலிருந் தரசுபுரிந்த பல்லவச் சக்கரவர்த்தி யிடங்கொண்ட வெறுப்பினுல்

கணிகண்ணன் போகின்றுன் காமருபூங் கச்சி
மணிவண்ணு நீகிடக்க வேண்டா—துணிவுடனே
செந்நாப் புலவனிதோ செல்கின்றே னீயுமுன்றன்
பைந்நாகப்பாய் சுருட்டிக் கொள்.

என்னும் பாடலைக் கேட்டவுடன் வரதராசப் பெருமாள் படுக் கையைச் சுருட்டிக்கொண்டு திருமகளைக் கொடுங் கையில் அணைத்துப் பின் சென்றனர். இதனை

முன்போம் புலவனுக்கு மூதறிவாற் பாய்சுருட்டிப்
பின் போஞ்சவரிப் பெருமாளே—யன்பாகப்
பேய்முலைப் பாலுண்டவனே பேதையே னின்னுமொரு
தாய்முலைப் பாலுண்ணு மற்று.

என்பதனுலறிக.

2. கம்பர் சிவிகையைப் பாண்டியனேந்தினுன்.

கவிச்சக்கரவர்த்தியாகியகம்பர் சோழராசன் பாண்டியனைப் பாடக் கூடாதென்ற வேண்டுகோட் கிணங்கி மதுரைக்குச் சென்றபோது அவர் வரவறிந்த பாண்டியன்றன் மனைவியுடன்

மறைவாக வந்து கம்பராற் கவிபெற வேண்டிக் கம்பர் சிவிகையைத் தாங்கியமை தெரிந்த கம்பர் சிவிகையினின் றிறங்கிச் செழியனை நோக்கி

“ வாங்குதிரைக் கடலேழ் மஞ்சனநீர் வானளவி
யோங்குமகா மேரு வுண்டியற்கல்—தேங்குபுகழ்
இந்திரன் சம்பந்தி யிறையவனும் பண்டாரி
சந்திர குலவங்கி சனீதான் ”

எனவும்

பாண்டியராச பத்தினியைப் பார்த்து

“ உமையவளு நீயுமொருங் கொப்பே யொப்பில்
உவைமயளுக்கு ண்டிங் கோரூனம்—உமையவடன்
பாகந்தோய்ந் தாண்டான் பலிக்குழன்றான் பாண்டியனின்
ஆகந் தோய்ந்தாண்டா னரசு ”

3. செல்வமிகு கச்சியப்பன் னுதை பொறுத்தனன்.

வல்லைமா நகர்க்கச்சியப்பனென்றும் வேளாண்டலைவன் றன்பால், ஆசுகவியிற் சிறந்த வீரகவிராயர் வந்து பிரசங்கஞ் செய்தபோது யாதோ வொருகாரணத்தால் சற்று பராமுகமாக விருப்பதை யறிந்த புலவர் செருப்பணிந்த காலாலுதைத்தலும் தம்மறியாமைக் கிரங்கி யங்ஙன முதைத்த புலவர் காலினிப்பூமியினடக்க வொண்ணா தென்று சிவிகையாதிய வரிசைகளளித்துப் புலவரை மகிழ்வித்தனன்.

மண்படுமோ வெய்யிலிலே வாடுமோ புல்லரிரு
கண்படுமோ வன்பாகக் கற்றவர்க்கு—விண்கடந்து
மெச்சியப் பாலும்புகழும் வீறுவல்லை யானவந்த
கச்சியப் பனையுதைத்த கால்.

என்பதனாலும்,

வில்லைச் செருப்பிட்ட காலாலுதைத்து வியனுலகிற்
சொல்லற் கரியபுகழ்படைத் தோன்றுட்ட வீரன்றன்னாற்
பல்லக்கிலே யன்றிமண் படுமோவெனும் பாடல்கொண்ட
வல்லைப்பதிக் கச்சியப்பனும் வாழ்தொண்ட மண்டலமே.

என்பதனானுமறிக.

4. திகழ் சுட்டி சோமனீந்தான்.

தினகரராசகுமாரனுகிய ஐந்துவயதுள்ளசோமன்என்பான் வீதியில் விளையாடிக் கொண்டிருந்தபோது அவ்வழியே சென்ற ஒரு புலவர் கையை விரித்தழைப்பப் புலவர் தன்னையாசிக் கின்றாரென் றெண்ணியவக் குழந்தை தன்றலையில் வைத்துப் பின்னிய மாணிக்கத்தா விழைக்கப் பட்ட சுட்டியை யவிழ்த்துக் கொடுத்ததைக் கண்ட புலவர்,

" கையைவிரித் தழைப்பக்கண்டு குழந்தைச் சோமன்
செய்யசுட்டி யீந்தான் றினகரா—பையவே
தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று. "

என்று பாடப் பெற்றான்.

இந்தச் சோமன் பெருங் கொடைவள்ளலாக விருந்தானென்ப தும், தமிழ்ச் சொல்லின் அருமை பெருமைகள் நாலடியார் திருக் குறளென்னும் நூல்களிற் காணலா மென்பதும்

நிழலருமை வெய்யிலிலே நின்றறி மினீசன்
கழலருமை வெவ்வினையிற் காண்மின்—பழகுதமிழ்ச்
சொல்லருமை நாலிரண்டிற் சோமன் கொடையருமை
புல்லரிடத் தேயறிமின் போய்.

என்னும் ஔவையார் பாடலானுமுணர்க.

5. தாருலவு குமண னுந் தலைகொடுத்தான்.

முதிர மென்னு மலைக்குத் தலைவனும் பெருங் கொடை வள்ளலுமாகிய குமணன் தன்தம்பியால் நாடு கொள்ளப்பட்டு காட்டில் மறைந்திருந்தபோது பெருந்தலைச் சாத்தனு ரிரப்பத் தன்றலை கொடுத்தற்கு வாட்படையைப் புலவர் கையிற் கொடுத்தவன். இவனைப் பெருந்தலைச் சாத்தனூர்

" ஆடுநனி மறந்த கோடுய ரடுப்பின்
ஆம்பிபூப்பத் தேம்புபசி யுழவா
பாஅலின்மையிற் றோலொடு திரங்கி
யில்லிதூர்ந்த பொல்லா வறுமுலை

சுவைத்தோ றழுந்தன் மகத்துமுக நோக்கி
நீரொடுநிறைந்த விரிதழ் மழைக்கணென்
மனையோ ளெவ்வ நோக்கி நினைஇ
நிற்படர்ந்தி சினேனாற் பெயர்க்குமண
என்னிலையறிந் தனையாயி னின்னிலைத்
தொடுத்துங் கொள்ளா தமையலன்.''

என்னும் பாடலைக் கேட்டலும்,

அந்தநாள் வந்திலை யருங்கவிப் புலவ
இந்தநாள்வந்து நொந்தனை யடைந்தாய்
தலைதனைக் கொடுபோய்த் தம்பிகைக் கொடுத்ததன்
விலைதனைப் பெற்றுன் வெறுமை நோய்களையே. :—என்றும்

வெம்புங் காலை வெதும்பி விழுஞ்சிரஞ்
செம்பொன் கோடிவிலை யெனச் சிந்தித்தான்
உம்பர்நாடு முலகினுந் தேடினும்
எம்பிபோ லெமக்கியா ரினிநல்லரே.

என்றும் சொல்லி வாளையீந்தனன்.

வாட்படையை வாங்கியபுலவர் நாடாட்சிசெய்யும் இளங்குமணன் இடஞ் சென்று,

மன்னுவுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ்நிறீஇத் தாமாய்ந்தனரே
துன்னருஞ் சிறப்பினுயர்ந்த செல்வர்
இன்மையினிரப் போர்க் கீயாமையிற்
றொன்மைமா க்களின் றொடர்பறியலரே

வெற்றி பெற்றயானையைப் பாவலர்க்கு மிகக் கொடுக்கும் அழி வில்லாத புகழையுடைய தலைவனாகிய நின் தமையனைப் பாடினேனாக ஆங்குத் தருதற்குத்தந் நிலத்திற் சிறந்ததோர் பொருளில்லாமையின் பெருமைபெற்றபரிசிலன் பயனின்றியே வாடிலனாகப் பெயர்தல் எனது நாட்டை இழந்ததனினும் இன்னாதென நினைந்து தனது தலையை எனக்குத் தருவானாக வாளையீந்தனன். வென்றி மிக்கவுவகையான் வந்தேன் என்றுகூறி இளங்குமணன் மனதிலுள்ள மாறுபாட்டைப் போக்கினார்.

6. சிவன்ருனு மொரு தூது சென்ருன்.

திருவாரூரிலே தியாகேசன் சுந்தரமூர்த்திநாயனுர் கொண்டிருந்த மனக் குறையைத் தவிர்ப்பதற்கு பரவை நாச்சியார் கொண்டிருந்த வூடலை நீக்குவதன் பொருட்டு அவர் திருமாளிகைக்கு பூதகணங்கள் புடைசூழப் பாதியிரவிலே தூது சென்று வூடலைத் தணித்தனர். இதனை

அரவகலல் குலார்பாலாசை நீத்தவர்க் கேவீடு
தருவமென் றளவில் வேதஞ்சாற்றிய தலைவன்றன்னைப்
பரவைதன் புலவி தீர்ப்பான்கழுது கண்படுக்கும்பானு
ளிரவினிற்றூது கொண்டோனினை யடிமுடி மேல்வைப்பாம்.

என்னும் பரஞ்சோதி முனிவர் வாக்கானு மறிக.

அரியயற் கரியார்தாமு மாயிழையாரை நோக்கி
யுரிமையாரூ ரனேவமீளவுமுன் பால்வந்தோ
முருகலர்குழலா யின்னமுன்பு போல்மருதே நம்பாற்
பிரிவுறவருந் துகின்ருன்வரப் பெறவேண்டுமென்ருர்.

என்னுந் திருத்தொண்டர்புராணத்தானு மறிக.

7. சர்க்கரையு மெச்சில் வாய் கழுவினுன்.

காரைக்காலிற் பெருஞ் செல்வராயிருந்த சர்க்கரைப் பிள்ளை என்பார் தம்மை யவமதித்துப் பேசியதாகக் கேள்வியுற்ற புலவர் நேரில் வந்து என் என்னை யிகழ்ந்தனை என்று வினவ கேட்டவுடனே அச்சமுற்று நடுங்கி யான் தங்களை வையவில்லையே யென்று காய்ச்சிய நெய்யிலே கையை விட்டு உண்மை கூறினர்.

அதனைக் கண்ட புலவர்

மகிழ்ந்து காரைப்பதியில் வாழ் சர்க்கரை தான்
புகழ்ந்து திரிபுலவோரை—இகழ்ந்து நான்
வைய வில்லை என்று சொல்லி மண்டலமெல்லாந்து திக்க
நெய்யிலே கையை விட்டானேர்ந்து.

என்னும் வெண்பாவைக் கூறி அந்தப் பிரபுவுடன் போசனஞ் செய்தபின் அப்பிள்ளையை நோக்கி நம் எச்சில் வாயைச் சுத்தி செப்வீரோ என்ற புலவர் வாயைக் கழுவிப் புகழ் பெற்ருன்.

8. காளத்தி தனதிருகை புற்றிலிட்டான்.

திருநின்றவூரில் இருந்த காளத்தி முதலியார் என்னும் வள்ளல் தம்முடைய செல்வங்களை எல்லாம் இரவலர்க் கீந்து வறுமையுற்று இனிப் புலவர்வரின் யீதற்கில்லையே எனக் கவன்று ஓர் நாள் மாலைக் காலத்தில் தாமும் மனையாளும் புறப் பட்டுப் போய் அயலூரிலுள்ள வொரு சத்திரத்தின் முகப்பிற் படுத்திருந்தனர்

அது சமயம் இவரைக் கண்டு பரிசு பெற விரும்பி வெகு தூரத்திலிருந்து வந்த வோர் புலவர் பக்கத்திற் சயனித்துக் கொண்டு தன்னை வருத்திக் கொண்டிருக்கும் வறுமையை முன்னிலையாக்கி.

நீளத்திரிந்துழன்ருய் நீங்கா நிழல் போல
நாளைக்கிருப்பாயோ நல்குரவே—காளத்தி
நின்றைக்கே சென்றக்கால் நீ எங்கே நானெங்கே
இன்றைக்கே சற்றே யிரு.

என்னும் வெண்பாவைப் பாடினர். இதனைச் செவி யேற்ற காளத்தியப்பர் இத்தகைய பாடலைக்கேட்டு, யாம் மறைந்து செல்வது முறையன்று. இப்புலவர் நம் வீட்டுக்கு வருவதன்முன் நாம் முன் சென்று உயிர் நீப்பின் இப்புலவரால் இரங்கற் பாக்களும் பாடப் பெறுவோம் எனக் கருதி விடிவதற்கு முன் வீடு சென்று வீட்டுப் புறத்தில் தோட்டத்திலுள்ள புற்றில் கையை விட்டுக்கொண்டிருந்தனர். அது சமயம் சத்திரத்தில் வெண்பாப் பாடிய புலவரும் வீட்டுத் திண்ணையில் வந்திருந்தனர். புற்றிலிருந்த பாம்பு கொடுத்துச் சிவந்த முதலியார் திருக் கரத்தில் தன்னிடமுள்ள இரத்தினத்தைக் கக்கியது.

அறிந்த முதலியார் கையை வெளியில் எடுத்துப் பார்க்கும் பொழுது விலை மதிக்க முடியாத மாணிக்கமணி யிருப்பக்கண்டு மகிழ்ந்து கைம் மூடியபடி வீட்டுத் திண்ணைப் பக்கம் வந்து அங்கிருந்த புலவர் கையில் மாணிக்கத்தைக் கொடுத்தனுப்பினர்.

இதனை

"கூர்ந்த வறுமையிடைத் கோளரவம் யீந்தமணி
சார்ந்த புலவன்றனக் களித்தான்" என்பதானும் தெரியவரும்.

9. பேருலவு கம்பையனும் விரலாழி யீந்தனன்.

வாடி மிட்டாச் செமீந்தாராகிய குமரகம்பைய நாயுடு என்பார் ஓர் புலவர் வந்து தம் முன்னிலையில் பிரசங்கஞ் செய்த போது பராமுகமாக யிருந்தமைகண்டு கவிஞர் கோபமுற்று செமீந்தார் முகத்தில் அறைந்துவிட்டனர். அங்ஙனம் செய்தும் அக் குறுநில மன்னவர் தமக்கு நல்ல புத்தி வரச் செய்ததாகு மென்று நினைந்து அறைந்த கை விரலுக்கு கணையாழியும் பொன் முடியும் பரிசளித்து உபசரித்தனர்.

இதனை

"வையம் புகழுஞ்சந்திர கிரிவளங்கொள்பதியைப்புரக்குமெங்கள்
ஐயன் குமரக் கம்பையவேன் அறிவுக்கினிமே னிகருண்டோ
வைதேன் வைதேன் சினந்தீர வாயிலடித் தேனுகுமென்று
கையைப் பிடித்து மோதிர மூங்கனக முடிப்புந் தந்தானே"

என்பதனுலறிக.

10. பெரியவன் பெண் கொடுத்தான்.

தேவ நல்லூர் பெரியவன் பிள்ளை என்னும் பெருஞ் செல்வர் ஒருவர் புலவர் வேண்டுவன வெல்லாங் கொடுக்கின்ருர் என்பதைக் கேள்வியுற்ற ஒரு புலவர் பெரியவன் பிள்ளை மனை யாளையுங் கொடுப்பரோ வென்று ஏளனஞ் செய்தனர். அதனைக் கேட்ட மற்றொருவர் மனையாளைக் கேட்பினுங் கொடுக்கத் தக்கவரே என்றனர்.

அங்ஙனஞ் சென்றறிவோமென்று அப் பெரியவன் பிள்ளை யிடம் சென்று தம்முடைய கவிச்சாதுரியங்களைப்பற்றி வெகு நேரம் பிரசங்கித்தனர். போசன காலம் வந்து விட்டமையால் அவர் தருமபத்தினி போசனத்திற் கழைக்க வந்தனர். புலவர் இரண்டு கையையும் நீட்டி தம்மிடம் குறுக்கி சமிக்கை செய்தனர்.

அதைக் குறிப்பாலுணர்ந்த பெரியவன் பிள்ளை தம் மனைவியை யழைத்து இப்புலவர் உன்னை அடைய விரும்புவதால் இனி அவருடனே இருப்பாயாக வென்றதும், புலவர் பதை பதைப்படைந்து ஐயோ யான் அங்ஙனஞ் சிந்திக்கவில்லையே அழைப்பதை யங்கீகரிக்க வேண்டுமென்றேனே யன்றி வேறில்லை யென்று சாதுரியமாகப் பேசி

"கண்ணாயிரம் படைத்தான் மகவான் ஐவர் காடுறைந்தார்
எண்ணான நூற்றொருபேர் மடிந்தார் இலங்காபுரியும்
மண்ணாய் மடிந்தது வாலியும் பட்டனன் மாநிலத்திற்
பெண்ணாலக் கெளிதாமே நந் தேவைப் பெரியவனே"

என்று புகழப் பெற்றனர்.

11. பிணிமுகத் தோன் கீரனைப் புரந்தான்.

பிணிமுகத்தோன். மயில்வாகனத்தையுடைய முருகக் கடவுள், நக்கீரர் என்னும் புலவரைப் பாதுகாத்தன ரென்பது.

சிவபூசையிற் சிறிது வழுவியவர்களை மலைக்குகையில் அடைத்து வைத்திருந்த வோர் பூதம் ஒருவர் குறையாயிருந்த மையால் நக்கீரர் சிவபூசையில் வழுவும்படி செய்து அடைக்கப் பட்டிருந்தவருடன் சேர்த்தபோது திருமுருகாற்றுப்படை என்னும் ஓர் பாடலை இயற்றி எல்லாரையும் அக்குகையினின் றும் விடுவித்த வரலாறு உலகம் அறிந்ததாம்.

12. பேதை முதுகிலனம் ஒருவனிட்டான்.

ஒரு வேளாண் பிரபு தம்மிடம் வந்த புலவரை உபசரித்து உணவுகொள்ளவேண்டியபோது நிறைந்த கர்ப்பவதியா யிருக் கும் உம்முடைய மனைவி முதுகில் அன்னம் படைத்தால் புசிப் பேன் என்றபோது அவ்வாறே அன்னம் படைத்து உபசரித்தனர்.

இதனை

"சூலிமுதுகிற் சுடச்சுடப் போதமைத்த

பாலடி சிறன்னைப்படைக்குங்கை" என்று கம்பரியற்றிய திருக்கை வழக்கம் என்னும் நூலாலறியலாம்.

13. பாருலகி வித்தமிழ்க்குத் தொண்டு செய்த பேர்பார்க்கிற் கணக் பராசர்பணிகின்றவண்ணமலைக்குரிசில்பாதத்தைவருடினனே. [கில்லையே

அண்ணமலைக்குரிசில்பாதத்தை வருடிய வரலாறு.

இராமநாதபுரஞ் சமத்தானத்து அமைச்சராயிருந்த அண்ணமலைப் பிள்ளை என்பார் இரகுநாதசேதுபதிபேரில் ஒரு துறைக்கோவைபாடிய அமுதகவிராயரைக் காணும்பொருட்டு அவர் வீட்டுக்குச் சென்றிருந்த பொழுது கவிராயர் நித்திரை செய்திருந்தமையால், அமைச்சர் அவர் கால்பக்கமிருந்து அவர் பாதத்தை தமது திருக்கரத்தால் மெதுவாகத் தடவிக்கொண்டிருக்க விழித்தெழுந்த புலவர் இவரது பெருமையைப் பாராட்டி,

"சீருலவுமால் பணிப்பாய் சுமந்தான் கம்பர்சிவிகை பாண்டியனேந்தினன்
செல்வமிகுசுச் சியப்பன்னுதை பொறுத்தனன் திகழ்சுட்டி சோமனீந்தான்
தாருலவு குமணனுந் தலைகொடுத்தான் சிவன் ருனுமொரு தூது சென்ருன்
சர்க்கரையு மெச்சில் வாய் கழுவினன் காளத்தி தனதிருகை புற்றிவிட்டான்
பேருலவுகம் பையனும் விரலாழி யீந்தனன் பெரியவன் பெண் கொடுத்தான்
பிணிமுகத்தோன் கிரனைப்புரந்தான் பேதை முதுகிலனம் ஒருவனிட்டான்
பாருலகி வித்தமிழ்க் குத்தொண்டு செய்த பேர் பார்க்கிற் கணக்கில்லையே
பராசர் பணிகின்ற வண்ணமலைக்குரிசில் பாதத்தை வருடினனே"

என்னும் பாடலைக் கூறி அமைச்சரை மகிழ்வித்தனர்.

இவைபோன்ற சரித்திரங்கள் எண்ணிகந்தனவுள. அவற்றிற்கு காலம் போதாமையால் ஒருவாறு யான் கூறியவற்றுட் குற்றங் கடிந்து குறை பெய்து மேற்கொள்வது கற்றறிந்த மாந்தர் கடன்.

தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகம், கரந்தை.

கௌமார குருகுலக்
கல்விப் பிரசுரம் 1

தமிழ் மொழி-5

தமிழ் இலக்கியப் பகுதிகள்

ஆசிரியர் :— திரு. நீ. கந்தசாமி பிள்ளை அவர்கள், M. R. A. S.
கண்டிராக்டர், தஞ்சாவூர்.

க

திருக்குறள்.

தமிழ் மொழியில் எல்லாச் சமயத்தாராலும் வேற்றுமை இல்லாமல் போற்றப்படுவது "திருக்குறள்" என்னும் அருமை நூலாகும். இந்த நூல் ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முன்பு "திருவள்ளுவர்" என்னும் பெரியாரால் இயற்றப்பட்டது. குறள் வெண்பா என்னும் ஒருவகைச் செய்யுளால் இயற்றப் பட்டமையால் இது திருக்குறள் என்னும் பெயரால் வழங்கப்படுவதாயிற்று. இந்த நூலில், உலகத்தில் மக்களால் கைக்கொண்டு முன்னேற்ற மடைவதற்குத் தகுதியான நீதிகளும், உண்மைகளும் 1330 செய்யுள்களால் சொல்லப்பட்டிருக்கின்றன.

1. அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

பொருள் :— எழுத்துக்களுக்கெல்லாம் "அ" என்னும் எழுத்து எப்படி முதன்மையாக இருக்கின்றதோ, அப்படி உலகத்துக்கெல்லாம் கடவுள் முதன்மையானவர்.

2. இடுக்கட் படினு மிளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்.

இடுக்கண்—துன்பம். இளிவந்த—கீழ்ப்பட்ட. நடுக்கற்ற—குற்றமில்லாத. காட்சி—பார்வை.

பொருள் :—துன்பம் வந்த காலத்திலும், நல்ல நோக்கத்தை யுடைய பெரியவர்கள் கீழ்ப்பட்ட காரியங்களைச் செய்ய மாட்டார்கள்.

3. ஒப்புரவி னால்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக் கோட்டக்க துடைத்து.

ஒப்புரவு—சமத்துவமுடையவர் என்னும் உலக நடை. ஒருவன் "யாவரும் சமத்துவமுடையவர்" என்பதுணர்ந்து உலகத்துக்கு நன்மை செய்வதால் கெடுதி உண்டாகும் என்று சொன்னாலும், அந்தக் கெடுதி ஒருவன் தன்னை விற்றாவது அடையக்கூடியதாகும்.

4. தீயவை செய்தார் கெடுதல் நிழல் தன்னை
வீயாது அடியுறைந் தற்று.

தீயவை—கெட்ட செய்கைகள். வீயாது—விடாது. உறைந் தற்று—தங்கி யிருப்பது போன்றது.

கெடுதியான காரியங்களைச் செய்தவர்கள் கெடுதல், தன் நிழல் தன்னை விட்டு நீங்காதது போலாம். இந்த செய்யுளி லுள்ள உவமை நோக்குக.

5. நெடுநீர் மறவி மடி துயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்.

நெடுநீர்—காலந்தாழ்த்தல். மறவி—மறப்பு. மடி—சோம்பல். துயில்—தூக்கம். கெடுநீரார்—கெட்டுப்போகும்தன்மையை உடையவர்கள், காமம்—விருப்பப்படுவது. கலன்—கப்பல்.

பொருள் :— செய்யவேண்டிய காரியங்களைக் காலந் தாழ்த்துச் செய்வதும், மறதியும், சோம்பலும், நீண்ட தூக் கமுமாகிய இந்த நான்கும் கெடுதியை அடைகிறவர்கள் விரும்பி ஏறும் கப்பலாகும்.

உ

திருவள்ளுவமாலை.

திருக்குறளைப் புகழ்ந்து பல புலவர்கள் பாடிய ஒரு தொகுதிக்கு திருவள்ளுவமாலை என்று பெயர். இது 53 வெண்பாக்களை உடையது. இதில் திருக்குறளின் சிறப்பு அழகாகப் பாராட்டப்பட்டிருக்கிறது.

கவுணியனார் பாடியது.

சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க் கினிய
வந்த விருவினைக்கு மாமருந்து—முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய வின்குறள் வெண்பா.

நல்ல நீதிகளை நாம் அறிந்துகொள்ளும்படி நாவால் விளங்குகிற புலமையையுடைய வள்ளுவனார் அருளிய இந்தக் குறள் வெண்பா, மனத்திற்கும், செவிக்கும், வாய்க்கும் இனிக்கின்றதும் நமது இருவினைக்கும் வாய்த்த மருந்து போல்வதுமாகும்.

௩

புறநானூறு.

இது சங்க காலத்துப் புலவர்களால் பாடப்பெற்று பிற்காலத்தறிஞர்களால் தொகுக்கப் பெற்ற தொகை நூல்களுள் ஒன்று. புறப்பொருளைப் பற்றிய நானூறு பாட்டுக்களைக் கொண்டுள்ளபடியால் புறநானூறு என்னும் பெயர் பெற்றது. இதில், கீழ் வரும் பாடல் பாண்டியன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் என்னும் அரசனால் கல்வியின் பெருமையைக் குறித்துப் பாடப் பெற்றதாகும்.

உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்,
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே!

பிறப்போ ரன்ன வுடன் வயிற்றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும்
"மூத்தோன் வருக" என்னாது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே.

கருத்து:- நல்ல ஆசிரியரை அடைந்து அவருக்கு வேண்டிய இடத்தில் உதவிசெய்தும், பொருளைக் கொடுத்தும், தான் பணி வுடையவனாக நின்று அவ்வாறு நிற்பதற்கு மனம் கோணாமலும் கற்றல் நல்லதாகும்; ஏனென்றால், ஒத்த தன்மையராய் ஒரு வயிற்றில் பிறந்த மக்கள் பலருள்ளும் கல்வியால் உண்டான சிறப்பை உடையவனிடத்திலேயே தாய்க்கும் அன்புண்டாகும். ஒரே குடியில் பிறந்த பலருள்ளும் வயதால் மட்டும் மூத்தோனை விரும்பாது அறிவுடையோனையே அரசும் துணையாகக் கொள்ளும்; நான்கு பகுதியாகப் பிரிக்கப்பட்ட மக்களுள் கீழ்ப்பட்ட குடியுள் பிறந்த ஒருவன் கற்றவனாக இருந்தால் மேற்பட்ட குடியில் பிறந்தவரும் அவன் அறிவைப் பின்பற்றுவர்.

ச

சிலப்பதிகாரம்.

சிலப்பதிகாரம் என்பது தமிழ் மொழியிலுள்ள ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்னும் ஐந்து நூல்களும் ஐம்பெருங் காப்பியங்கள் எனப்படும். சிலப்பதிகாரத்தை இயற்றியவர் இளங்கோவடிகள் என்னும் சேரமன்னர். இது கற்புக்கரசியாகிய கண்ணகியின் சரித்திரத்தைக் கூறுவது.

கண்ணகியின் சிலம்பே இக்கதையின்முக்கியப் பொருளாதலின் இதற்கு சிலப்பதிகாரம் என்னும் பெயர் வழங்கலாயிற்று. கீழ்வரும் பாடல் காவிரியாற்றைப் புகழ்வது.

காவிரி.

திங்கண்மாலே வெண்குடையான் சென்னி செங்கோலதுவோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி,
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவா தொழிதல் கயற்கண்ணாய்
மங்கை மாதர் பெருங் கற்பென் றறிந்தேன் வாழி காவேரி.

(இ-ள்) சென்னி-சோழமன்னன்; ஓச்சி-செலுத்தி, காவேரி நதியும் கங்கைநதியும் பெண்களாக வருணிக்கப் படுகின்றன. சோழமன்னன் தனக்குரிய பெண்ணாகிய காவேரியை விட்டுக் கங்கையைச் சேர்ந்தாலும், (என்றது கங்கைநதியின் நீரிலே தோய்ந்தாலும் அல்லது கங்கைநதி வரையில் உள்ள நாட்டை வயப்படுத்தினாலும்)காவேரியே நீசினங்கொள்ளமாட்டாய். எ-று

ஆய்ச்சியர் குரவை.

ஆய்ச்சியர் குரவை யென்பது, சிலம்புவிற்க மதுரைக்குச் சென்ற கோவலன் ஓர்பொற்கொல்லன் வஞ்சனையால் பாண்டியனால் கொல்லப்படவே தீச்சகுனம் கண்டு கண்ணகியை ஆதரித்த ஆய்ச்சியர்கள் குரவை என்ற கூத்தை ஆடி மாயவனை வேண்டுகின்றவர்கள் சொல்லுவது.

பெரியவனை மாயவனைப் பேருலகம் எல்லாம்
விரிகமல உந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையும் கனிவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்னகண்ணே!

(இ-ள்)எவன் பெரியவன்என்றும், மாயவன்என்றும், பெரிய உலகங்கள் எல்லாவற்றையும் தன் உந்திக் கமலத்தினின்றும் தோற்றுவித்தவன் என்றும், கண்களும் திருவடிகளும் கைகளும்

வாயும் சிவப்பாயிருக்கத் திருமேனிகருமையாக உள்ளவன் என்றும் சொல்லப்படுகின்றனே அவனைத் தரிசிக்காத கண்கள் என்னபயனுடையன? சும்மா இமைத்தலுக்கும்விழித்தலுக்குமே படைக்கப்பட்டன. எ-று

சிந்தாமணி.

சிந்தாமணியென்பது வடநாட்டிலே இராசமாபுரி யென்னும் நகரத்திலே அரசு செலுத்திய சச்சந்தன் புதல்வன் சீவகன் என்பவன் சரித்திரத்தைக் கூறுவது. சச்சந்தன் விசயை என்பவளை மணந்து அவள்மேல் காதல் கொண்டொழுகும் நாளிலே, அரசாட்சியை ஏற்று நடத்திய கட்டியங்காரன் சச்சந்தனேடு போர் செய்யத் தொடங்கியபோது, அவ்வரசன் தன் தேவியாகிய விசயையை ஒரு மயிற் பொறிமேல் ஏற்றிச் செல்லவிட்டான். அது ஒரு சுடுகாட்டில் இறங்கியது. அப்போதே சீவகன் பிறக்கிறான். அப்போது பிள்ளை நிலைக்கு இரங்கிய தாய் கூறுவது இது.

வெவ்வாய் ஓரி முழவாக விளிந்தார் ஈமம் விளக்காக
ஒவ்வாச் சுடுகாட்டு உயர்அரங்கின் நிழல்போல் நுடங்கிப்பேயாட
எவ்வாய் மருங்கும் இருந்திரங்கிக் கூகைகுழறிப் பாராட்ட
இவ்வாருகிப் பிறப்பதோ இதுவோ மன்னர்க்கு இயல்வேந்தே.

(இ-ள்) என் அருமைப் புதல்வனே, நம்முடைய அரண்மனையிலே பிறக்கவேண்டிய நீ இச் சுடுகாட்டில் பிறப்பதற்கு யான் முன்செய்த தீவினை என்னவோ? நீ நம் அரண்மனையிலே பிறந்திருந்தால் அங்கே முழவு முதலிய வாத்தியங்கள் ஒலிக்குமே; இங்கே அதற்கீடாக நரி ஊளையிடும் ஒலியே கேட்கப்படுகின்றது. அங்கே நல்ல சுடர் விளக்குகளும் மணி விளக்குகளும் எரியுமே; இங்கே எரிகின்ற பிணங்களின் ஒளியே உள்ளது. அங்கே அரம்பையரை ஒத்தவர்கள் நடனம் புரிவாரே; இங்கே பேய்களே நடமாடுகின்றன. அங்கே வேத

வொலியும் வாழ்த்தொலியும் கேட்குமே; இங்கே பேராந்தை யின் ஒலியே கேட்கின்றன. நீ இப்படிப் பிறந்தது அரசர் இயல்புக்குப் பொருந்துமோ? எ-று.

அந்தப் பிள்ளையைத் தாய் பார்த்துச் 'சிந்தாமணியே நீ இங்கே கிடப்பாய்' என்று சொல்லி வாழ்த்தினள். வெவ்வாய்—கொடியவாய். ஓரி—கிழநரி. முழவு—மத்தளம். கூகை—பேராந்தை.

திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்.

திருஞான சம்பந்த சுவாமிகள் அறுபத்துமூன்று நாயன் மார்களில் ஒருவர். சைவசமயாசாரியர்களில் முதன்மையானவர் அறுமுகக்கடவுள் அவதாரம் என்று சொல்லப்படுபவர். இவர் சீகாழியென்னும் தலத்தில் அந்தணர் குலத்திலே பிறந்து மூன்றுவது ஆண்டிலே அம்மையின் திருமுலைப்பாலுண்டு தமி ழுலகம் ஈடேறத் தேவாரங்கள் பாடித் தமிழின் பெருமையை நிலைப்படுத்தியவர். அவரால் பாடப்பட்ட தேவாரங்கள் பின் வருகின்றன.

எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் தன்னடியார்க்கு
இங்கேயென்று அருள்புரியும் எம்பெருமான் எருதேறிக்
கொங்கேயும் மலர்ச்சோலைக் குளிர்பிரம புரத்துறையும்
சங்கேயொத்து ஒளிர்மேனிச் சங்கரன்றன் தன்மைகளே.

கொங்கு—வாசனை. ஏயும்—பொருந்திய. பிரமபுரம்—சீகாழி என்னும் தலம்.

எந்த நாட்டிலே எப்பிறப்பில் பிறந்தவராயிருந்தாலும் தன் அடிகளை வணங்குவாரை இங்கே வாரும் என்று அருள் செய்பவன் எம்பெருமான் ஆகிய சிவனே. அவன் நறுமணம் வீசும் மலர்கள் மலர்ந்த சோலைகளால் சூழப்பட்ட சீகாழித் தலத்தில் எழுந்தருளியவன். சங்குபோல வெண்மையான திரு மேனியை உடையவன்.

'எண்ணார் முத்தம் ஈன்று மரகதம் போற்காய்த்து
கண்ணார் கமுகு பவளம் பழுக்கும் கலிக்காழிப்
பெண்ணோர் பாகா பித்தா பிரானே என்பார்க்கு
நண்ணா வினைகள் நாள்தோறும் இன்பம் நணுகும்மே.'

மரகதம்—பச்சை. கமுகு—பாக்குமரம். கலி—ஆரவாரம். நண்ணா—பொருந்தா. நணுகும்—கிடைக்கும்.

(இ-ள்) கமுகமரத்தின் பாளையில் விரிந்த பூ முத்துக்கள் போலிருக்கும், காய்கள் பச்சை மணிகள்போல் இருக்கும், பழங்கள் பவளமணிகள்போல இருக்கும். அப்படிப்பட்ட கமுகின் சோலை சூழப்பெற்ற சீகாழித் தலத்தில் அமர்ந்த சிவ பெருமானைத் துதித்தவர்க்குப் பாவம் நெருங்காது. இன்பம் நாள்தொறும் கிடைக்கும். எ-று.

பெருமாள் திருமொழி.

இது மலைநாட்டிலே திருவஞ்சிக்களம் என்னும் நகரில் இருந்து அரசுபுரிந்து பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவராக விளங்கிய குலசேகர ஆழ்வாரால் இயற்றப்பட்டது. இவர் ஒரு நாள் இராமாயண கதை கேட்கும் காலத்தில், 'இராவணன் சீதாபிராட்டியாரை எடுத்துக்கொண்டு இலங்கைக்குச்சென்றான்' என்று சொல்லக் கேட்டவுடன், இராமபத்தியினால், உடனே நால்வகைப் படையோடும் எழுந்து சென்று கடலில் இறங்கி நீர் கழுத்தளவு ஆனவுடன் இராமர் சீதாபிராட்டி இளையபெரு மாளுடன் தோன்றிக் காட்சியளிக்கப்பெற்றவர். இராமர் காட்டுக்குப் போகும்போது தசரதர் புலம்பலாக இவ் வாழ்வார் கூறிய பாடலுள் ஒன்று பின் வருவது.

'வெவ்வாயேன் வெவ்வுரைகேட்டு இருநிலத்தை வேண்டாதே
விரைந்து வென்றி

மைவாய களிறொழிந்து தேரொழிந்து மாவொழிந்து
வனமே மேவி

நெய்வாய வேல்நெடுங்கண் சனகியும் இளங்கோவும்
பின்பு போக

எவ்வாறு நடந்தனையெம் இராமாவோ எம்பெருமான்
என் செய்கேனே.

என் அருமைப் புதல்வனாகிய இராமா! நீ யெம்குலதெய்வம் ஆயினையே. நீ காடாளவேண்டும் என்றும் பரதன் நாடாள வேண்டும் என்றும் இரண்டு வரங்கள் கைகேசி கேட்டபடி கொடுத்தேன். என் வாய்கொடிது. அது கேட்ட மாத்திரத்தில் உலகாள்வதைத் துச்சம் என்றொதுக்கி, பின்னோடு அரசாங்கத்திற்குரிய பட்டத்து யானை போகாமல், இரதம் போகாமல், குதிரை போகாமல் சீதாபிராட்டியும் இளைய பெருமாளுமே பின்னேவர தனியே கல்லும் முள்ளும் செறிந்த காட்டிற்கு தாமரை மலர்போலும் காலாலே எப்படி நடந்து சென்றாயோ? நான் யாது செய்வேன்.

பெரிய புராணம்.

63 நாயன்மார் என்னும் சிவனடியார் அறுபத்துமூவரது வரலாற்றைக் கூறுவது. பத்திச்சுவை சொட்டச் சொட்டச் சேக்கிழார் பெருமானால் பாடப்பட்டது. அவற்றுள் தடுத்தாட்கொண்ட புராணத்துள் சுந்தரமூர்த்தி நாயனார் சீகாழித் தலத்தில் சென்று சிவபிரானை வணங்கியபோது அவருடைய பத்தி நிலைமையை தெரிவிப்பது வரும் பாட்டு.

'தெண்ணிலா மலர்ந்த வேணியாய்
உன்றன் திருநடம்கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே எனக்கு
வாலிதாம் இன்பமாம் என்று
கண்ணில் ஆனந்த அருவிநீர் சொரியக்
கைம்மலர் உச்சிமேல் குவித்துப்
பண்ணினல் நீடி அறிவரும் பதிகம்
பாடினர் பரவினர் பணிந்தார்.'

மூன்றாம்பிறைச் சந்திரனைச் சடையில் தரித்த சிவபெருமானே உன்னுடைய திருநடனத்தைத் தரிசிக்கப் பெற்றமையினாலே இப்பூமியிலே மக்கட்பிறப்பில் தோன்றியதே எனக்கு மேலான இன்பமாகும் என்று, ஆனந்தக்கண்ணீர் அருவிபோல் வழிய, கைகளை உச்சிமேல் கூப்பி நின்று, அரிய தேவாரப் பதிகங்களைப் பாடினர், துதித்தார், பணிந்தார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

வில்லிபுத்தூராழ்வார் பாரதம்.

கீழே குறிக்கப்படும் பாட்டுக்கள் அருச்சுனனால் அடிபட்டுப் போர்க்களத்தில் கிடந்த கன்னனுடைய உயிரைப் பிரிக்க, அதனைக் காத்துக்கொண்டிருந்த தருமத்தைக் கிருஷ்ணமூர்த்தி ஓர் அந்தண வடிவம் கொண்டு வந்து இரந்து வாங்கும்போது நடந்த செய்தியைக் கூறுவன.

ஆவியோ நிலையிற் கலங்கியது யாக்கை
அகத்ததோ புறத்ததோ அறியேன்
பாவியேன் வேண்டும் பொருளெலாம் நயக்கும்
பக்குவந்தன்னில் வந்திலையால்
ஓவிலாது யான்செய் புண்ணியம் அனைத்தும்
உதவினேன் கொள்கநீ உனக்கு
பூவில்வாழ் அயனும் நிகரலன் என்றால்
புண்ணியம் இதனினும் பெரிதோ.

(இ-ள்) என்னுடைய உயிரோ கலங்கியது. உடம்பின் உள்ளே யிருக்கிறதோ வெளிப்பட்டதோ அறியேன். நீ வேண்டியதெல்லாம் நான் தரக்கூடிய காலத்தில் நீ வரவில்லையே. அதனால் நான் மிகவும் பாவத்தைச் செய்துளேன். ஆயினும், நான் இல்லையென்று சொல்லாதபடி நீ கேட்டது என்னிடத்து இப்போது உள்ளதான புண்ணியத்தையே. உனக்குப் பிரம தேவனும் நிகரல்லன். நான் இதுவரையில் செய்த புண்ணியத் தையெல்லாம் உனக்கே தந்தேன் என்றான். எ-று

அப்பொழுது கிருஷ்ணமூர்த்தி அப்புண்ணியத்தை விதிப் படி தாரை வார்த்துத் தரவேண்டும் என்று சொல்ல, அங்கே நீர் கிடையாமையால் அருச்சுனன் பாணம்பட்டுத் தன் உடம்பி லிருந்து ஒழுகுகிற இரத்தத்தைக்கொண்டுதாரை வார்த்துக் கொடுத்தான். அதைப் பெற்றுக்கொண்ட கிருஷ்ணமூர்த்தி மகிழ்ந்து கூறுவது.

மல்லல் அந்தொடையல் நிருபனை முனிவன்
மகிழ்ந்து நீ வேண்டிய வரங்கள்

சொல்லுக உனக்குத் தருதுமென்றுரைப்பச்
சூரன்மா மதலையும் சொல்வான்

அல்லல் வெவ்வினையால் இன்னம் உற்பவமுண்
டாயினும் ஏழெழுபிறப்பும்

இல்லையென்று இரப்பார்க்கு இல்லையென்றுரையா
இதயம் நீ அளித்திடு கென்றான்.

(இ-ள்) கன்னன் புண்ணியத்தைக் கொடுத்ததன்மேல் கிருஷ்ணமூர்த்தி மகிழ்ச்சியுற்று உனக்கு வேண்டிய வரங்களைக் கேள் என்ன, இனி நான் எந்தப்பிறப்பில் பிறந்தாலும் ஒரு பொருள் இல்லையென்று என்னிடம் வந்து இரந்தால் அவருக்கு அந்தப்பொருள் என்னிடத்து இல்லையென்று சொல்லாத மனத்தை நீ அளிக்கவேண்டும் என்றான் கன்னன். எ-று.

திருவிளையாடற் புராணம்.

கடுக்கவின்பெறு கண்டனும் தென்றிசை நோக்கி
அடுக்க வந்து வந்தாவோன் ஆடலின் இளைப்பு
விடுக்க ஆரமென்கால் திருமுகத்திடை வீசி
மடுக்கவும் தமிழ் திருச் செவிமாந்தவும் அன்றே!

இது மதுரையம்பதியில் சிவபெருமான் புரிந்தருளிய அறுபத்து நான்கு திருவிளையாடல்களைப் பற்றிக் கூறுவது. பரஞ்சோதி முனிவர் என்பவரால் மிகவும் அழகுற விருத்தக் கவிகளால் பாடப்பட்டது. மேற்குறித்த பாட்டுத் தமிழ் நாட்டின் சிறப்பை வருணித்துக் கூறுகின்றது.

கடு—ஆலகாலவிடம். கவின்—அழகு. ஆரம்—சந்தனச் சோலை. மென்கால்—தென்றற்காற்று.

(இ-ள்) பேர்கேட்ட மாத்திரத்திலே கொடிதென்று அஞ்சத்தக்க நஞ்சும் தன் கண்டத்துக்கு ஓர் அழகென்று பரமசிவன் அதனை உண்டு தரித்துக்கொண்டான். அந்த நஞ்சை உண்டதனாலே இளைக்காத பரமசிவன், இளைப்பை அடைய வேணுமென்றே அடுத்தடுத்து இந்த தமிழ் நாட்டிலே வந்து தெற்கு முகமாக நின்று திருக்கூத்தாடினன். பொதியமலையில் உள்ள சந்தனச் சோலையிலிருந்து புறப்படும் தென்றற் காற்று தன் திருமுகத்திலே வீசி உட்கொள்ளவும் தமிழ் அமுதத்தைத் திருச்செவியால் உண்பதற்கும் கருத்துக்கொண்டே. எ-று.

காளமேகப்புலவர் பாடல்.

காளமேகப்புலவர் என்பவர் ஓர் வரகவி. உடனே பாடும் திறமை வாய்ந்தவர். ஒருவர் வாழவும் சாகவும் பாடவல்லவர். திருவானைக்கா உலா சித்திரமடல் என்னும் அழகிய பிரபந்தங்களைப்பாடியவர். இவர் ஒருநாள் திருமலைராயன் பட்டணத்துக்குச் சென்று தன்னை அவமதித்த புலவரைவென்று அரசன் மீது சினந்து அப்பட்டணம் மண்மாரியால் அழியும்படி பாடியவர். அப்போது அங்கு நடந்த வாதத்தில் இவர் பாடிய பாட்டுக்களுள் ஒன்று இது.

வெண்பா

சேற்றலரை வென்ற திருமலைராயன் கரத்தில்
வெற்றி புரிவாளே வீரவாள் - மற்றையவாள்
போவாள் வருவாள் புகுவாள் புறப்படுவோள்
ஆவாள் இவாள் அவாள் ஆம்.

(இ-ள்) வெளிப்படை.

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்.

பிள்ளைத்தமிழ் என்பது பிரபந்தம் 96 வகையுள் ஒன்று. கடவுளையோ பெரியோரையோ பிள்ளைப்பருவத்தாராக வைத்துப்பாடுவது. இந்நூல் மதுரைப்பதியில் எழுந்தருளிய மீனாட்சியம்மை மீது வரகவி குமரகுருபரசுவாமிகளால் பாடப்பட்டது. மீனாட்சியம்மை அரசனுடைய பெண்போல வடிவெடுத்துக் கொண்டு வந்து கேட்டு மகிழ்ந்து இப்பாட்டை இன்னும் ஒரு முறை சொல்க என்றது இப்பாட்டு.

தொடுக்கும் கடவுட் பழம்பாடல்
 தொடையின் பயனே நறைபழுத்த
துறைத் தீந்தமிழின் ஒழுகுநறும்
 சுவையே அகந்தைக் கிழங்கை அகழ்ந்து
எடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்கு
 ஏற்றும் விளக்கே வளர் சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
 இளமேன் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனம் கடந்து நின்ற
 ஒருவன் திருவுள்ளத் தில்அழகு
ஒழுக எழுதிப் பார்த்திருக்கும்
 உயிர் ஓவியமே மதுகரம்வாய்
மடுக்கும் குழற்காடு ஏந்தும் இள
 வஞ்சிக் கொடியே வருகவே.
மலயத்துவசன் பெற்ற பெரு
 வாழ்வே வருக வருகவே.

தொடை—பிரபந்தம். நறை—தேன். அகந்தை-ஆணவம். தொழும்பர்—அடியார். சிமயம்—உச்சி. பிடி—பெண்யானை. தரங்கம்—அலை. புவனம்—பூமி. ஓவியம்—பதுமை. மதுகரம்—வண்டு. வாய்மடுக்கும்—குடிக்கும். குழல்—கூந்தல்.

கௌமார குருகுலக்
கல்விப் பிரசுரம் 1.

கம்பராமாயணம்.

ஆசிரியர் :—டி. எஸ். சாபாபதி பிள்ளை அவர்கள், பி. எ.,
பென்ஷனர், ஜில்லா ரிஜிஸ்டிரார், தஞ்சாவூர்.

கம்பராமாயண இன்கவித் திரட்டு.

பாலகாண்டம்.

தெய்வ வணக்கம்.

உலகம்யாவையும் தாம் உள ஆக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட்டு உடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே.

(கருத்து) எல்லா உலகங்களையும் படைத்து காத்து அழித்து திருவிளையாட்டு செய்கின்ற முழுமுதற் கடவுள் எவரோ அவருக்கே நாமெல்லாம் அடைக்கலம்

அவை யடக்கம்.

ஓசை பெற்று உயர் பாற்கடல் உற்று ஒரு
பூசை முற்றவும் நக்குபு புக்கென
ஆசை பற்றி அறையல் உற்றேன் மற்று இக்
காசு இல் கொற்றத்து இராமன் கதை அரோ.

(கருத்து) கீர்த்தியுள்ள பாற்கடலை ஒரு பூனை அடைந்து நாவினால் நக்கி அக்கடலை முழுதும் பருகுகிறேனென்று ஆசையினால் புகுந்தது போலாகும் இராமனுடைய கதையை நான் சொல்லப் புகுந்தது.

அயோத்தி நாட்டின் வளம்.

ஆறுபாயரவம் மள்ளர் ஆலைபாய் அமலை ஆலைச்
சாறுபாய் ஓசை வேலைச் சங்குவாய் பொங்கும் ஓசை
ஏறு பாய்தமரம் நீரில் எருமைபாய் துமுனி யின்ன
மாறு மாறாகித்தம்மின் மயங்கும் மா மருதவேலி.

(கருத்து) ஆறு, மள்ளர் என்பதற்குப் பொருள் திண்ணியோர் (வலியோர்) கரும்பு, ஆலை, சங்கு, ஏறு, எருமை முதலான வைகளினால் உண்டாகும் ஓசை நிறைந்தது.

ஊர நீர் படிந்து இங்கிலத்தே சில
கார்களென்ன வருங்கரு மேதிகள்
ஊரில் நின்றகன்று உன்னிட உண்முலை
தாரை கொள்ளத் தழைப்பன சாலியே.

(கருத்து) எருமை மாடுகள் கன்றுக் குட்டிகளை நினைத்துப் பால் சொரிந்துகொண்டு ஓடுவதால் சில வயல்கள் நெல் விளையும்.

எரிதரும் அரியின் சும்மை எடுத்துவான் இட்டபோர்கள்
குறிகளும் போற்றிக் கொள்வார் கொன்ற நெற்குவைகள்
[செய்வார்
வறியவர்க்கு உதவிமிக்க விருந்துண மனையினுய்ப்பான்
நெறிகளும் புதையப் பண்டி நிரைத்து மண்நெளிய
[ஊர்வார்.

(கருத்து) ஆகாயமட்டும் உயரப் போர்கள் போட்டு வறியவர்க்கு தானம் செய்து மிகுந்த நெல்லை பூமி நெளியும்படி வண்டிகளில் ஏற்றி மனைக்குக் கொண்டு போவார்கள்.

எள்ளும் ஏனலும் இறுங்கும் சாமையும்
கொள்ளும் கொள்ளையிற் கொணரும் பண்டியும்
அள்ளல் ஓங்கு அளத்து அமுதின் பண்டியும்
தள்ளும் நீர்மையில் தலை மயங்குமே.

(கருத்து) எள் தினை சோளம் சாமை கொள் முதலிய கொண்டு வரும் வண்டிகளும் உப்பு ஏற்றிவரும் வண்டிகளும் தள்ளுகின்ற தன்மையினால் ஒன்றோடொன்று கலக்கும்.

அயோத்தி நாட்டார் தொழில் உணவு நடை முதலியன.

கலம் சுரக்கும் நிதியம் கணக்கு இலா
நிலம் சுரக்கும் நிறைவளம் நன்மணி
பிலம் சுரக்கும் பெறுதற்கு அரிய தம்
குலம் சுரக்கும் ஒழுக்கம் குடிக்கு எலாம்

(கருத்து) மரக்கலங்கள் திரவியத்தையும், நிலம் தானியங்களையும், மலைக் குகை இரத்தினங்களையும் கொடுக்கும். குலந்தோறும் ஒழுக்கம் நிரம்பியிருக்கும்.

முந்து முக்கனியில் நானா முதிரையில் முழுத்த நெய்யில்
செந்தயிர்க் கண்டம் கண்டம் இடை இடை செறிந்த
[சோற்றில்
தந்தம் இல்லிருந்து தாமும் விருந்தொடும் தமரினோடும்
அந்தணர் அமுதருண்டி அயில்வுறும் அமலைத் தெங்கும்

(கருத்து) முக்கனிகள் பருப்புகள் நெய் தயிர் சர்க்கரை முதலியன சேர்ந்த சோற்றை விருந்தினரோடும் சுற்றத்தாரோடும் தேவர் அமுருந்தம் உண்பது போல் உண்பார்கள்.

அகில் இடும்புகை அட்டில் இடும்புகை
நகலின் ஆலை நறும்புகை நான் மறை
புகலும் வேள்வியில் பூம்புகையோடு அளாய்
முகிலின் விம்மி முழங்கின எங்கணும்

(கருத்து) அகிற்கட்டை அடுப்பு கரும்பு ஆலை அந்தணர்கள் வேள்வி இவற்றின் புகை எல்லாம் மேகம் போல விளங்கின.

கல்வியும் தருமமும்.

பெருந்தடம் கண்பிறை நுதலார்க்கு எலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க்கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே

(கருத்து) மாதர்கள் எல்லோரும் தக்க செல்வத்துடன் கல்வி நிறைந்தவர்களாயிருந்ததால் வருந்தி வந்தவர்களுக்கு பொருள் உதவி புரிந்து தினம் விருந்தினர்களுக்கு உபசரித்து வந்தார்கள்.

பொற்பின் நின்றன பொலிவு பொய்யிலா
நிற்பினின்றன நீதி மாதரார்
அற்பினின்றன அறங்கள் அன்னவர்
கற்பினின்றன காலமாரியே.

(கருத்து) கீர்த்தி ஆடவர்களுடைய குண நலத்திலும் நீதி அவர்களுடைய உண்மை நிலையிலும் தருமம் மாதர்கள் அன்பிலும் கால மழைகள் அவர்கள் கற்பிலும் நிலை பெற்றிருந்தன.

நெறி கடந்து பரந்தன நீத்தமே
குறியழிந்தன குங்குமத் தோள்களே
சிறிய மங்கையர் தேயும் மருங்குலே
வெறியவும் அவர் மென்மலர்க் கூந்தலே

(கருத்து) வெள்ளம் மட்டும் வழிதப்பி மீறினது. புருஷர்கள் தோள்களில் தோய்ந்த குங்குமக் குறிகள்தாம் அழிக்கப்பட்டன. மாதர்கள் இடை மட்டும் தான் நாளுக்கு நாள் குறைந்தன. அவர்கள் கூந்தல் தான் நாற்றத்தை உண்டாக்கின,

கல்லாது நிற்பார் பிறரின் மையிற் கல்வி முற்ற
வல்லாருமில்லை அவை வல்லர் அல்லாருமில்லை
எல்லாரும் எல்லாப் பெரும் செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ

(கருத்து) எல்லோரும் கற்றவர்களாயிருந்த படியால் மிக்ககல்விமான்கள் என்றுவது கல்லாதவர்களென்றுவது யாரையும் சொல்லக் கூடவில்லை. எல்லோரும் செல்வர்களாயிருந்த படியால் தரித்திரர்களாவது தனிகர்களாவது யாரென்று சொல்ல முடியாது.

ஏகம் முதல் கல்வி முளைத்து எழுந்து எண்ணில் கேள்வி
ஆகம் முதல் திண்பணை போக்கி அருந்தவத்தின்
சாகம் தழைத்து அன்பு அரும்பித் தருமம் மலர்ந்து
போகம் கனியொன்று பழுத்தது போலும் அன்றே.

(கருத்து) கல்வியாகிய விதை முளைத்து கேள்வியாகிய பலமான கிளைகள் வெடித்து தவமாகிய இலைகள் தழைத்து அன்பாகிய அரும்பு விட்டு தருமமாகிய மலர் பூத்து போகமாகிய கனி ஒன்று பழுத்தது போல் இருந்தது.

இலங்கை.

சுந்தர காண்டம்.

கழலிலாக்காலும் கால அயிலிலாக்கையும் காந்தும்
அழலிலாக்கண்ணும் இல்லா ஆடவர் இல்லை அன்னர்
குழல் உலாம் களிவண்டார்க்கும் குஞ்சியாற் பஞ்சிகுன்ற
மழலையாழ்க் குழலைச் செவ்வாய் மாதரும் இல்லைமாதோ.

கறங்கு கால்புகா கதிரவன் ஒளிபுகா மறலி
மறம்புகாது இனிவானவர்புகார் என்கைவம்பே
திறம்பு காலத்துள் யாவையும் சிதையினும் சிதையா
அறம்புகாதிந்த அணிமதில் கிடக்கை நின்றகத்தின்.

(கருத்து) வீரகண்டையணியாத காலும் வேல் இலாத கையும் கோபாக்கினி இல்லாத கண்ணும் இல்லாத புருடர்கள் இலங்கையில் இல்லை,

பிரசண்டமாக அடிக்கிற காற்றும் சூரியனுடைய கிரணங்களும் எமனுடைய தூதர்களும் இலங்கைக்குள் புகா என்றால் மற்ற வானவர்கள் புகார்கள் என்று சொல்ல வேண்டியதில்லை. யுகமுடிவில் எல்லாம் அழியினும் அழியாமல் நிலை பெருக்கும் தருமமும்அந்நகரத்தினுள் புகாது.

இலங்கை மாக்கள்.

வஞ்சமும் களவும் வெஃகி வழியலாவழி மேலோடி
நஞ்சினும் கொடியராகி நவைசெயற்குரிய நீரார்
வெஞ்சின அரக்கர் ஐவர் ஒருவனே வெல்லப்பட்ட
அஞ்செனும் புலன்கள் ஒத்தார் அவனும் நல்லறிவை
[ஒத்தான்.

தாடகை வதை.

கையடைப் படலம்.

மடங்கல்போல் மொய்ம்பினன் முன்னர் மன்னுயிர்
அடங்கலும் உலகும் வேறு அமைத்து தேவரோடு
இடங்கொள் நான்முகனையும் படைப்பென் ஈண்டென
தொடங்கிய துனியறு முனிவன் தோன்றினன்.

(கருத்து) சிம்மத்தை ஒத்த வல்லமையுடைய தசரதன் முன் சீவர்களையும் உலகங்களையும் படைத்து தேவர்களுடன் பிரமாவையும் படைப்பென் என்று ஆரம்பித்த விசுவாமித்திர முனி தோன்றினர்.

என் அனைய முனிவரும் இமையவரும் இடையூறு
[ஒன்று உடையரானால்
பன்னகமும் நகுவெள்ளிப் பனிவரையும் பாற்கடலும்
[பதும பீடத்து

அன்னகரும் கற்பக நாட்டணிநகரும் மணிமாட
[அயோத்தியென்னும்
பொன்னகரும் அல்லாது புகல் உண்டோ இகல் கடந்த
[புலவு வேலோய்.

(கருத்து) என்போன்ற முனிவர் முதலானவர்களுக்கு ஒரு இடையூறு உண்டானல் கைலையங்கிரியும் பாற்கடலும் பிரமலோகமும் இந்திரலோகமும் அயோத்தி நகரமும் தவிர வேறு புகலிடம் உண்டோ என்றார்.

தருவனத்துள் யானியற்றும் தவவேள்விக்கு இடையூறுத்
[தவம் செய்வோர்கள்
வெருவரச் சென்று அடைகாமம் வெகுளி யென
[நிருதரிடை விலக்கா வண்ணம்
செருமுகத்துக் காத்தியென நின் சிறுவர் நால்வரினும்
[கரிய செம்மல்
ஒருவனைத் தந்திடுதியென உயிரிரக்கும் கொடும் கூற்றின்
[உளையச் சொன்னான்.

(கருத்து) ராக்ஷதர்கள் எங்கள் வேள்வியை அழிக்காதபடி யுத்தம் செய்து காப்பாற்றும்படி உன் சிறுவர் நால்வரிலும் கரிய செம்மலாகிய இராமனை தந்திடுதியென்று உயிரை யாசிக்கிற யமன் போல் சொன்னான்.

குருவின் வாசகம் கொண்டு கொற்றவன்
திருவின் கேள்வனைக் கொணர்மின் சென்றென
வருக என்றனன் என்றலோடும் வந்து
அருகுசார்ந்தனன் அறிவின் உம்பரான்

(கருத்து) வசிஷ்டராகிய குருவின் வார்த்தை மனதிற்கொண்டு இராமனை அழைத்து வரச்சொல்ல இராமன் தசரதர் பக்கத்தில் வந்து நின்றான்.

வந்த நம்பியைத் தம்பி தன்னொடு
முந்தை நான்மறை முனிக்குக் காட்டி நற்
தந்தை நீ தனித்தாயு நீ இவர்க்கு
எந்தை தந்தனன் இயைந்த செய்கென்றான்.

(கருத்து) வந்த இராமனை இலக்குமணனுடன் முனிக்குக் காட்டி இவர்களுக்கு நல்ல தந்தையும் தாயும் நீ தான், வேண்டிய காரியத்தை செய்துகொள் என்றான்.

அன்ன தம்பியும் தானும் அய்யனும்
மன்னன் இன்னுயிர் வழிக்கொண்டாலென
சொன்ன மாதவற்றொடர்ந்த சாயை போல்
பொன்னின் மாநகர்ப் புரிசை நீங்கினான்.

(கருத்து) இராமனும் இலக்குவனும் தசரதனுடைய உயிர்போவது போல விசுவாமித்திரனுடைய நிழல் போல் சென்றார்கள்.

தாடகை வதைப் படலம்.

நோக்கினன் அவர் முகம் நோக்க நோக்குடை
கோக்குமரரும் அடிகுறுக நான்முகன்
ஆக்கிய விஞ்சைகள் இரண்டும் அவ்வழி
ஊக்கினன் அவை அவருள்ளத் துள்ளினர்.

(கருத்து) அவர்களை முனி நோக்கவும் அவர்கள் சமீபத்தில் நெருங்கினார்கள். பிரமதேவன் தனக்கு உபதேசித்த இரண்டு மந்திரங்களை உபதேசித்தார். அவர்களும் உடனே மனத்தில் பதித்துத் தியானித்தார்கள்.

உள்ளிய காலையில் ஊழித்தீயினை
எள்ளுறு கொழுங்கனல் எருசும் வெஞ்சுரம்
தெள்ளுதண் புனலிடைத் சேறல் ஒத்தது
வள்ளலும் முனிவனை வணங்கிக் கூறுவான்.

(கருத்து) தியானித்தபோது கொடிய பாலை வனமானது குளிர்ந்த நீருள்ள சேற்றுக்குச் சமானமாய் விட்டது.

தாடகை எதிர்படல்.

ஆர்த்து அவரை நோக்கி நகை செய்து எவருமஞ்ச
கூர்த்த நுதிமுத்தலை அயிற்கொடிய கூற்றைப்
பார்த்து எயிறு தின்று பகுவாய் முழைதிறந்தோர்
வார்த்தையுரை செய்தனளிடிக்கு மழையன்னாள்.

(கருத்து) இராம இலக்ஷ்மணர் இருவரையும் பார்த்துப் பல்லைக் கடித்துச் சூலத்தை நோக்கி இடிபோல் ஒரு வார்த்தை சொன்னாள்.

கடக்கரும் வலத்தெனது காவலிதில் யாவும்
கெடக்கருவறுத்தனெனினிச்சுவை கிடக்கும்
விடக்கு அரிது எனக்கருதியோ விதிகொடுந்தப்
படக்கருதியோ பகர்மின் வந்த பரிசென்றே.

(கருத்து) என்னுடைய காவலுக்குள் நீங்கள் வந்தது எனக்குத் தின்ன நல்ல உணவு இல்லை யென்றோ விதிபிடித்து தள்ள மடிந்து போக எண்ணியோ சொல்லுங்கள் என்றாள்.

பிரபந்த ஆராய்ச்சி.

ஆசிரியர்:—பாவலர் சி. மீ. முஹம்மது யூசுப் சாஹிப்,
பத்திராதிபர், ஷம்ஸுல்ஹுதா, மன்னார்குடி.

முன்னுரை.

"பிரபந்தம்" என்பதற்குக் கதை, தொடர்பு, பாமாலை என்பது பொருள். பிரபந்தங்களை இயற்றுகின்றவர்கள் போதிய பாண்டித்தியம்பெற்ற கவிஞர்களாகவே விளங்குகின்றனர். அத்தகைய அறிவிற்சிறந்த கவிஞர்கள் இயற்றுகின்ற பிரபந்தங்களை ஆராய்வதால் மாந்தர்க்கு ஏற்படும் நலன்கள் என்ன என்பதையே இங்கு ஆராய்வோம்.

கவிஞர்கள் ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி என நான்கு வகைப்படுவார்கள். அவர்களுள்:—பொருள், அடி, பா, அணி முதலியவற்றை ஆசாகக் கொடுத்துப் பிறர், பாடுக என்றவுடன் பாடி முடிக்கின்றவர்கள் 'ஆசுகவி' யாவர். பொருட்செல்வம், சொற்செல்வம், தொடை, தொடைவிகற்பம் செறிந்திருக்கும்வண்ணம் உருவகம் முதலிய அலங்காரத்துடன் இனிய ஓசை பயக்கக்கூடியதாய் இன்பமுறப் பாடுகின்றவர்கள் 'மதுரகவி' யாவர். மாலைமாற்று, ஏகபாதம், கரந்துறை, கோமூத்திரி, ஓரெழுத்தினம், வினவுத்தரம் முதலிய மிறைக் கவிகளைத் தெரிந்து பாடுகின்றவர்கள் 'சித்திரகவி' யாவர். பன்மணிமாலை, கலம்பகம், நூற்றந்தாதி, மும்மணிக்கோவை, பெருங்காப்பியம், இயல், இசை முதலிய விரித்துப் பாடுகின்றவர்கள் 'வித்தாரகவி' யாவர் இந்த நால்வகைக் கவிஞருள் வித்தாரகவி என்போர் விரித்துப் பாடியுள்ள பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு வகைகளாய்க் கூறப்படுகின்றன. அத்துணை வகைகளின பெயர்களையும் அவை அமையவேண்டிய இலக்கணங்களையும் விரித்துக் கூறப்புகுந்தோமாயின் அஃதொரு தனிக்கிரந்தமாகவே முடிவுபெறும். ஆதலின் விரிவஞ்சி விடுத்தனம். (அவைகளின் பெயர்களையும் இலக்கணங்களையும், தமிழ்மொழி யகராதியினும், சதுரகராதியினுந் தெளிவாய்க் காணலாம்.) நம் தண்டமிழ் நாட்டின்கண் பரவிக்கிடக்கின்ற சொற்சுவை, பொருட்சுவை நிறைந்த பிரபந்தங்களிற் சிலவற்றின் பெயர்களைமட்டும் ஈண்டு எடுத்துக் காட்டுகின்றோம்:—

சீவகசிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலிய பெருங்காப்பியங்களும், அருணகிரியந்தாதி, கந்தாந்தாதி, திருவரங்கத்தந்தாதி, திருவேங்கடத்தந்தாதி, திருமதீனத்தந்தாதி, நாகையந்தாதி முதலிய நூற்றந்தாதிகளும், அருணைக்கலம்பகம், மதுரைக்கலம்பகம், திருவரங்கக்கலம்பகம் முதலிய கலம்பகங்களும், திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை முதலிய ஆற்றுப்படைகளும், மற்றும் பிள்ளைத்தமிழ், நான்மணிமாலை, கோவை, உலா, பதிகம், சதகம் முதலியவைகளும் பிரபந்தங்களேயாகும். அன்றியும், தேவாரம், திருவாசகம் முதலிய சைவநூற்களும், திருவாய்மொழி, அஷ்ட பிரபந்தம் முதலிய வைஷ்ணவ நூற்களும், கம்பராமாயணம், வில்லிபாரதம், சீறாப்புராணம் முதலிய புராணங்களும் பிரபந்தங்களெனவே கொள்ளல்வேண்டும்.

அத்தகைய பிரபந்தங்கள் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நான்கு பாக்களாகவும், மற்றும் இப்பாக்களின் இனங்களாகவும் வருகின்ற செய்யுட்களில் ஒரு வகையைக்கொண்டோ அல்லது பல வகைகளையுங்கொண்டோ இயற்றப் பெறுகின்றன. அவ்வாறு கலையுணர் புலவர்களாம் சான்றோர்களால் இயற்றப் பெற்றிருக்கின்ற அரிய பெரிய பிரபந்தங்கள் ஒவ்வொன்றினின்றும் மேற்கோள் எடுத்துக் காட்டி விளக்குவது இங்கு அசாத்தியமாதலின், அஷ்டபிரபந்தம் என்னும் அரிய நூலினின்றும் ஒரு சில செய்யுட்களைமட்டும் இவணெடுத்துக் காட்டுகின்றோம். இத்தியாதி பிரபந்தங்களை ஆராய்ச்சி செய்யப் புகுந்திருக்கின்றவர்கள் எச்சமயத்தோராயினும் அவர்கள் தங்களின் சமயக் கொள்கையை இடையிற்கொண்டு வந்துபோட்டுக் கஷ்டத்திற்குள்ளாகாம லிருத்தல் அவசியமாகும். ஏனெனின், யாமிங்குப் பிரபந்த ஆராய்ச்சியால் தமிழ் மொழியில் நல்ல பாண்டித்தியமேற்படுமென்ற ஒரே நோக்கத்துடன்றான் இவைகளை விரித்துக் கூறிவருகின்றோம். ஆதலின், ஒவ்வொருவரும் நடுநிலை நின்று பிரபந்த ஆராய்ச்சி புரிந்தார்களானால், அவர்கள் நல்ல பாண்டித்தியம் பெற்றபின் தங்கள் தங்களின் சமயநெறிகளை இனிதெடுத்துக் காட்டும் வல்லமையடையலாமென்பதை ஞாபகமூட்டுகின்றோம்.

அஷ்டபிரபந்தம்.

இந்த அஷ்டபிரபந்தம் என்னும் நூலின்கண் எட்டு பிரபந்தங்கள் காணக்கிடக்கின்றன. அதனாற்றான் இந் நூலுக்கு "அஷ்டபிரபந்தம்" என்று பெயரிட்டிருக்கின்றனர். அந்த எட்டு பிரபந்தங்களாவன:—திருவரங்கத்தந்தாதி, திருவரங்கத்துமாலை, திருவரங்கக்கலம்பகம், திருவேங்கடமாலை, திரு

வேங்கடத்தந்தாதி, அழகரந்தாதி, நூற்றெட்டுத் திருப்பதி யந்தாதி, சிரங்கநாயகரூசல் என்பவைகளேயாகும். இவ்வழகிய பிரபந்தங்களை இயற்றிய வல்லுநர் யாரோவெனின், சோழவள நாட்டிலுள்ள திருமங்கை என்னுந் திருப்பதியின்கண் வைஷ்ணவ சமயத்தில் அவதரித்து, அழகிய மணவாளதாசர் என்றும் திவ்வியகவி என்றும் சிறப்புப் பெயர் பூண்டொழுகிய பிள்ளைப் பெருமாளையங்கார் என்னும் விஷ்ணு பக்தரேயாவர். இவரது காலம் சுமார் நானூறு வருஷங்களுக்கு முன்னெனக் கூறப்படுகின்றது.

இவர் ஸ்ரீரங்கநாதர்மீது அத்தியந்த பக்தியுள்ளவர். செய்யுளியற்றுவதில் மிகச் சமர்த்தர். இவரால் இயற்றப்பெற்றுள்ள பாக்கள் சொன்னோக்கும், பொருள்நோக்கும், தொடைநோக்கும் நடைநோக்கும் நனியினிது வாய்க்கப்பெற்றுக் கற்பவர் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் இன்சுவை யுடைத்தாய்த் திகழ்கின்றன. சுருங்கக் கூறுமிடத்து:—

"வெண்பாவிற் புகழேந்தி, பாணிக்கோ சயங்கொண்டான், விருத்த மென்னும்
ஒண்பாவிற் குயர்கம்பன், கோவையுலா வந்தாதிக் கொட்டக்கூத்தன்,
வண்பாய கலம்பகத்திற் கிரட்டையர்கள், வசைபாடக் காளமேகம்,
பண்பாகப் பகர்சந்தம் படிக்காச லாதொருவர் பகரொணாதே".

என்று முன்னோர்களாற் புகழ்ந்து கூறப்பெற்றுள்ள புலவசிகாமணிகளின் அத்துணை சமர்த்தும் ஒருங்கே இந்த மணவாளதாசரிடம் குடிகொண்டிருந்ததென்பதை அவர்தம் பிரபந்தங்களை ஊன்றிக் கற்போர் உணர்ந்துகொள்வார்களென்பது உண்மையாகும். அவரது பிரபந்தங்கள் எட்டும் தோத்திர ரூபத்திலேயே பாடப்பெற்றிருக்கின்றன.

திருவரங்கத்தந்தாதி என்பது ஸ்ரீரங்கநாதரின்மீது தோத்திரமாகப் பாடப்பெற்றது. இப் பிரபந்தம் யமகம் என்னும் சொல்லணிபெற்ற நூறு கட்டளைக் கலித்துறைச் செய்யுட்களால் அந்தாதித் தொடையில் தொடுக்கப் பெற்றுள்ளது. யமகம் என்பது பல அடிகளிலேனும் ஒரு அடியிற் பலவிடங்களிலேனும் வந்த சொற்றொடரே மடக்கிவந்து வேறு பொருள் பட்டு நிற்கும்படி அமைத்துப் பாடுவதாகும். அந்தப் பிரபந்தத்தினின்றும் ஒரு செய்யுளைக் கீழே எடுத்துக் காட்டுகின்றோம்.

(கட்டளைக்கலித்துறை)

தாளத் தனத்தத்தைச் சொல்லிய ரால்வருந் தாழ்மலபா
தாளத் தனத்தத்தைத் தப்பநிற் பீர்!புடை தங்கியவே
தாளத் தனத்தத்தைத் தீர்த்தான், அரங்கன் சகடுதைத்த
தாளத் தனத்தத்தை யாயுதன் பாதம் தலைக்கொண்மினே.

(இதன் பதச் சிதைவு)

தாளம் தனம் தத்தை சொல்லியர்ஆல் வரும் தாழ்மலம்
பாதாளத்து அனத்தத்தை தப்பநிற்பீர்! புடைதங்கிய
வேதாளத்தன் அ தத்தை தீர்த்தான் அரங்கன் சகடு உதைத்த
தாள் அத்தன் அத்தத்து ஐ ஆயுதன் பாதம் தலை கொள்மின்எ

இதன் பொழிப்புரை:—"கைத்தாளம்போன்ற தனபாரங்களையும், கிளியைப்போன்ற இனிய மொழிகளையுமுடைய மங்கையரின் சம்பத்தத்தாலுண்டாகும் ஆழ்ந்து அசுத்தமான நரகத் துன்பத்தைத் தப்பி ரக்ஷிப்படைவதற்காக வாழுகின்றவர்களே! (நீங்கள்) எப்பக்கங்களிலும் சூழ்ந்து நின்ற பூதகணங்களை யுடைய சிவபிரானது (இரத்தலாகிய) அந்தத் துன்பத்தைப் போக்கியருளியவனும், சகடாசுரனை உதைத்த பாதங்களை யுடைய இறைவனும், திருக்கைகளில் பஞ்சாயுதங்களை ஏந்தி நிற்பவனுமான அரங்கநாதனுடைய திருவடிகளைத் தலைமேற்கொண்டு பணியுங்கள்" என்பதாகும்.

திருவரங்கத்துமாலை என்பது ஸ்ரீரங்கநாதரின் அளவிடற்கரிய தத்துவங்களையும், விசேஷங்களையும் விரித்துக் கூறப்பெற்றுள்ளது. இந்தப் பிரபந்தம் நூற்றுப் பதினொரு கட்டளைக் கலித்துறைச் செய்யுட்களால் ஆக்கப்பெற்றிருக்கின்றது.

திருவரங்கக் கலம்பகம் என்பது ஸ்ரீரங்கநாதரின்மீது தோத்திரமாக இயற்றப் பெற்றுள்ள கலம்பகமாகும். இதிற் கலம்பகத்திற்கு அவசியமான இலக்கணங்கள் முழுவதும் இனிதே அமைந்திருக்கின்றன. சொற்சுவை பொருட்சுவை மிளிர்கின்ற ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா, ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், வஞ்சிவிருத்தம், கலித்தாழிசை, கலிநிலைத்துறை, வஞ்சித்துறை, ஆசிரியத்துறை, வெண்டுறை முதலிய செய்யுட்களால் இடையிடையே வெண்பாவும் கலித்துறையும் விரவிவர மடக்குடைச் செய்யுளும், வண்ணம் சந்தம் முதலியனவும் பொருந்த அந்தாதித் தொடையால் நூறு செய்யுட்கள் கொண்டது இந்தப் பிரபந்தமாகும். இதினின்றும் இரண்டொரு செய்யுட்களைக் கீழே எடுத்துக் காட்டுகின்றோம்.

[அம்மானை]

(கலித்தாழிசை)

தேனமருஞ் சோலைத் திருவரங்கர் எப்பொருளும்
ஆனவர்தாம் ஆண்பெண் அலியலர்காண் அம்மானை,
ஆனவர்தாம் ஆண்பெண் அலியலரே யாமாகிற்
சானகியைக் கொள்வரோ தாரமாய் அம்மானை,
தாரமாய்க் கொண்டதும் ஓர் சாபத்தால் அம்மானை.

இதன் பொழிப்புரை:—"வண்டுகள் விரும்பி நெருங்குகின்ற சோலைகளையுடைய திருவரங்கநாதர் எல்லாப் பொருள்களும் ஆனவரே (ஆயினும்) ஆணும் பெண்ணும் அலியும் அல்லாதவராவர்—அம்மானை, (அங்ஙனம்) எல்லாப் பொருளுமாகிய அவர் ஆணும் பெண்ணும் அலியும் அல்லாதவரே யாவரானால் சீதையை மனைவியாகக் கொள்வாரோ? அம்மானை, (அப்படி) மனைவியாகக் கொண்டது ஒரு சாபத்தினாற்றான் அம்மானை" என்பதாகும்.

"அம்மானை" என்பது மூன்று மங்கையர் அம்மானையாடும்போது பிரபந்தத் தலைவனது தன்மையை வார்த்தையாடுவதாகப் பாடுவதாகும். இந்தச் செய்யுளில் சாபத்தால் என்பதற்குச் சபிப்பால் என்ற பொருள்கொண்டு பிருகு முனிவர் சபித்ததால் எனவும், சாபம் என்பதற்கு வில் என்றொரு அர்த்தமிருப்பதால் சிவபிரானுடைய வில்லை முறித்ததாலெனவும் சிலேடைப் பொருள்கொள்ள இடமிருத்தல் குறிப்பிடத்தக்கதாகும்.

(மற்றொரு அம்மானை)

நாரா யணனறியா நாதரரு ணேசருக்கு
வாரார் கலைசிலைமெய் மாதங்கம் அம்மானை,
வாரார் கலைசிலைமெய் மாதங்கம் ஆமாயின்
ஆராயுங் கால்எடுப்ப (து) ஐயமன்றோ? அம்மானை,
அன்னம்அறி யார்எடுப்ப(து) ஐயமோ அம்மானை.

இந்தச் செய்யுள் அருணைக் கலம்பகத்திலுள்ளதாகும். இந்தச் செய்யுளில் அருணேசரின் கலை (ஆடை), சிலை (மலை), மெய் (உடல்) இம்மூன்றும் மாதங்கம் என்று கூறப்பெற்றிருக்கின்றது. மாதங்கம் என்னும் சொல்லைச் சிலேடையாய்க் கொண்டு, யானை(த்தோல்) என்றும், மா + தங்கம் (பொன்மலை) என்றும், மாது + அங்கம் (உமையாள் ஒருபாகத்துள்ள உடல்) என்றும் அர்த்தம் செய்துகொள்ளவேண்டும். நான்காவதடியில் 'எடுப்பது ஐயமன்றோ?' என்பதற்கு எடுப்பது சந்தேகமென்றும், எடுப்பது பிச்சையென்றும் சிலேடைப் பொருள்கொள்ள இடமிருக்கின்றது. இதனால், "அருணேசருக்கு யாவும் மாதங்கமானாலும் ஒருவகையில்—வேண்டும்போது எடுப்பது சந்தேகமல்

லவா?" என்றும், மறுவகையில்—அவர் அத்தகைய சீமானே யாயினும் ஆராயும்போது அவர் பிச்சையல்லவா எடுத்தார்? என்றும் கேட்பதாகின்றது. இந்தக் கேள்விக்கு விடை கூறுமிடத்தில் இச் செய்யுளின் இறுதியில் "உணவை(ச்சாப்பிட்டு) அறியாதவராகிய அருணேசர் எடுப்பது பிச்சையோ?" என்று கடாவும் முறையில் அஃது பிச்சையாகாதெனக் கூறப்பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

[பிரிவாற்றுத தலைவியைக் கண்ட நற்றுய் இரங்கல்]

(பதினன்கு சீராசிரிய விருத்தம்)

மானை எய்தவர் இன்னம் என்மட மானை எய்திலர், நேமியால்
மாலை தந்தவர் பைந்து ழாய்மது மாலை தந்திலர், இந்திரன்
சோனை மாரிவி லக்கி விட்டவர் சொரிகண் மாரி விலக்கிலார்,
சுரர்க ளுக்கமு தங்கொ டுத்தவர் சோதி வாயமுதங்கொடார்,
தானை ஐவர்கொ டிக்க ளித்தவர் தானை கொண்டத ளிக்கிலார்,
சங்க ரற்கிர வைத்த டுத்தவர் தைய லுக்கிர வைத்தடார்,
ஆனை முன்வரும் அன்பு ளார்முலை யானை முன்வரும் அன்பிலார்,
அணிஅரங்கர் நடத்து நீதிஅ நீதியாக இருந்ததே.

இந்தச் செய்யுளானது தலைமகனேடு புணர்ந்து பிரிந்த தலைமகள் பிரிவாற்றுமையால் படுகின்ற பலவகைத் துன்பங்களையும் கண்டு ஆற்றுளான நற்றுய் தனது ஆற்றுமை மிகுதியால் இரங்கிக் கூறினதாகும். இவ்வாறு கூறுவதன் நோக்கமென்னவென்றுல், பிரபந்தத்திற்குடைய நாயகரைக் காதலனுகவும், பிரபந்தத்தைப் பாடுகின்ற பக்தரைக் காதலியாகவும் பாவனை செய்து, பொதுவாக ஒரு காதலனைப் பிரிந்த காதலியானவள் எவ்வாறு துன்புறுவாளோ அவ்வாறே இந்தப் பக்தர் பிரபந்த நாயகரைப் பிரிந்து நிற்பதால் துன்பப் படுவதாய் அமைத்துப் பாடி, அவர்தம் பக்தியின் மிகுதியை வெளியிடுவது சம்பிரதாயமாகும். மேற்கண்ட இரங்கல் செய்யுளில் தலைவியின் நற்றுய் தலைவன்மீது கூறுகின்ற குறைகளைச் சிலேடித்துக் கூறப்பெற்றிருப்பது மிகவும் அழகாக அமைந்திருக்கின்றது. அந்த நற்றுயின் முறையீட்டைக்கொண்டு தலைவியின் நிலைமையை யாவரும் நன்குணர்ந்து கொள்ளலாம். இன்னும் பலப்பல அழகிய செய்யுட்கள் அப் பிரபந்தத்தில் மலிந்துகிடக்கின்றன.

திருவேங்கடமாலை என்பது வடநாட்டுத் திருப்பதிகளுள் சிறந்ததாகிய திருவேங்கடத்தில் எழுந்தருளியுள்ள திருவேங்கடமுடையானைத் துதித்து அந்தத் திருப்பதியைப் பற்றிப் பாடப்பெற்ற பிரபந்தமாகும். அந்தப் பிரபந்தம் நூறு வெண்

பாக்களைக்கொண்டுள்ளதாகும். அந்த வெண்பாக்களின் பின்னிரண்டடிகளும் பெரும்பான்மை திரிபு என்னும் சொல்லணியையும், சிறுபான்மை யமகம் என்னும் சொல்லணியையும் பெற்றிருக்கின்றன. திரிபு என்பது ஒவ்வோரடியிலும் முதலெழுத்து மட்டும் வேறுபட்டு நிற்க, இரண்டு முதலிய பல எழுத்துக்கள் ஒன்றி நின்று பொருள் வேறுபடுவதாகும். அப் பிரபந்தத்தின் பிற்பகுதியாகிய ஐம்பது செய்யுட்களின் முன்னிரண்டடிகளிலும் சிலேடை என்னும் அலங்காரம் அமைக்கப்பெற்றிருப்பது மிக அழகாயிருக்கின்றது. அவைகளுள் ஒரு செய்யுளைக் கீழே எடுத்துக் காட்டுகின்றோம்:—

(நேரிசை வெண்பா)

காதலிற்றுச் சார்தவர்க்கும் காமியத்தைச் சார்ந்தவர்க்கும்
வேதனைக்கூற் றைத்தவிர்க்கும் வேங்கடமே—போதகத்தை
மோதி மருப்பொசித்தார் முன்பதினு றுயிரவர்
ஓதி மருப்பொசித்தார் ஊர்.

இதன் பொழிப்புரை:— "ஆசை ஒழிநது சேர்ந்த முனிவர்களுக்குப் பிரமனையும் யமனையும் விலக்குகின்ற—பிரபஞ்ச வாழ்வுகளை விரும்பியவர்களுக்குத் துன்பங்களின் வகையை ஒழிக்கின்ற வேங்கடமே யானையைத்தாக்கி அதன் தந்தங்களை முறித்தவரும், முற்காலத்தில் பதினாறுயிரம் மங்கையரின் கூந்தலினது நறுமணத்தை மோந்து நுகர்ந்தவருமான திருமாலின் வாசஸ்தானமாகும்."

இந்தச் செய்யுளின் இரண்டாம் அடியில் "வேதனைக் கூற்றைத் தவிர்க்கும்" என்பதற்கு முறையே 'பிரமனையும் யமனையும் விலக்குகின்ற' என்றும், 'துன்பங்களின் வகையை ஒழிக்கின்ற' என்றும் சிலேடைப் பொருள் கொள்ளத்தக்க முறையில் பதங்களை அமைத்திருப்பது பாராட்டத்தக்கதாகும்.

திருவேங்கடத் தந்தாதி என்பது திருவேங்கட முடையானைத் துதித்துப் பாடப்பெற்ற பிரபந்தமாகும். இந்தப் பிரபந்தம் நூறு கட்டளைக் கலித்துறைச் செய்யுட்களால் அந்தாதித்துப் பாடப்பெற்றிருக்கின்றது. அந்தச் செய்யுட்கள் பெரும்பான்மை திரிபு என்னும் சொல்லணியும் சிறுபான்மை யமகம் என்னும் சொல்லணியும் பெற்றுத் திகழ்கின்றன. இதனடியிற் காணப்பெறும் செய்யுள் இப் பிரபந்தத்திலுள்ள ஒரு திரிபுச் செய்யுளாகும்.

(கட்டளைக் கலித்துறை)

மாயவன் கண்ணன் மணிவண்ணன் கேசவன் மண்ணும்விண்ணும்
தாயவன் கண்ணன் கமலமொப் பான்சரத் தாலிலங்கைத்
தீயவன் கண்ணன் சிரமறுத் தான்திரு வேங்கடத்துத்
தூயவன் கண்ணன் புடையார்க்கு வைகுந்தந் தூரமன்றே.

(இதன் பதச் சிதைவு)

மாயவன் கண்ணன் மணிவண்ணன் கேசவன் மண்ணும் விண்ணும்
நாயவன் கண் நன் கமலம் ஒப்பான் சரத்தால் இலங்கை
தீய வன்கண்ணன் சிரம் அறுத்தான் திரு வேங்கடத்து
தூயவன்கண் அன்பு உடையார்க்கு வைகுந்தம் தூரம் அன்று ஏ.

அழகரந்தாதி என்பது பாண்டிய நாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றாகிய திருமாலிருஞ் சோலைமலையில் எழுந்தருளியுள்ள அழகரைத் துதித்துப் பாடப்பெற்ற பிரபந்தமாகும். இதுவும் நூறு கட்டளைக் கலித்துறைச் செய்யுட்களால் அந்தாதித்துப் பாடப்பெற்றதாகும். இந்தச் செய்யுட்களும் பெரும்பான்மை திரிபு என்னும் சொல்லணிபெற்றும், சிறுபான்மை யமக மென்னுஞ் சொல்லணிபெற்றும் விளங்குகின்றன. உதாஹரணமாக:—

(கட்டளைக் கலித்துறை)

தொலைந்தானை ஓதும் தொலையானை அன்னைசொல் லால்மகுடம்
கலைந்தானை ஞானக் கலையானை ஆய்ச்சி கலைத்தொட்டிலோ(டு)
அலைந்தானைப் பாலின் அலையானை வாணன்கை அற்றுவிழ
மலைந்தானைச் சோலை மலையானை வாழ்த்தென் மடநெஞ்சமே.

இந்தச் செய்யுளின்கண் தொலைந்தான் தொலையான், கலைந்தான் கலையான், அலைந்தான் அலையான், மலைந்தான் மலையான் என ஒன்றுக்கொன்று முரண்படக்கூறினும் பொருளளவில் வேறுவகை அர்த்தமுள்ளதாய் மாறுபாடின்றி முடிதல் குறிப்பிடத்தக்கதாகும்.

நூற்றெட்டுத்திருப்பதி யந்தாதி என்பது திருமால் திருப்பதிகள் நூற்றெட்டினையும் நூற்றெட்டு நேரிசை வெண்பாக்களால் அந்தாதித்து, அச்செய்யுட்களின் பின்னிரண்டடிகள் திரிபென்னும் சொல்லணிபெற்றுவர அமைத்துப் பாடப் பெற்றிருக்கின்றது. அந்தப் பிரபந்தத்தின் அழகிய அமைப்பு யாவர்க்கும் இனிது புலனாகும் வண்ணம் அதினின்றும் ஒருசெய்யுளைக்கீழே குறிப்பிடுகின்றோம்:—

(நேரிசை வெண்பா)

நானடிமை செய்யவிடாய் நானானேன் எம்பெருமான்
தானடிமை கொள்ளவிடாய் தானானன்—ஆனதன்பின்
வெள்ளக் குளத்தே விடாயிருவ ருந்தணிந்தோம்
உள்ளக் குளத்தேனை ஒத்து.

இந்தச் செய்யுளில் வெள்ளக்குளம் என்னும் திருப்பதியைப்பற்றிக் கூறவேண்டியிருப்பதால் அதன் பெயருக்கேற்ப விடாய் தணிந்த இடமாகச் சமத்காரந்தோன்றக் கூறுவது மிகப் பொருத்தமாயும் அதிக அழகுவாய்ந்ததாயுமிருக்கின்றது.

சீரங்க நாயகரூசல் என்பது ஸ்ரீரங்க நாதரின்மீது முப்பத்திரண்டு எண்சீர் ஆசிரிய விருத்தங்களாற் பாடப்பெற்ற ஊசலாகும். இந்தப் பிரபந்தத்தின் ஒவ்வொரு செய்யுளின் இறுதியிலும் “ஆடிரூசல்” என ஓசையுடன் பாடத்தக்க விதமாய்ச் செய்யுட்களைத் தெள்ளியமுறையில் இயற்றியுள்ளது பாடுவோர்களின் உள்ளத்திற்கு நல்ல இன்பத்தை யூட்டுகின்றது. உதாஹரணமாக இதனடியில் ஒரேயொரு செய்யுளைக் கவனிக்க:—

(எண்சீராசிரிய விருத்தம்)

முருகனுறை குறிஞ்சித்தேன் முல்லை பாய,
முல்லைநிலத் தயிர்பால்நெய் மருதத் தோட,
மருதநிலக் கொழும்பாகு நெய்தற் றேங்க,
வருபுனல்கா விரிசூழ்ந்த வளத்தைப் பாடக்
கருமணியே! மரகதமே! முத்தே! பொன்னே!
கண்மணியே! ஆருயிரே! கனியே! தேனே!
அருள்புரிவாய் என்றவர்தம் அகத்துள் வைகும்
அணியரங்க மாளிகையார் ஆடி ரூசல்.

மேற் கூறப்பெற்ற அஷ்ட பிரபந்தத்தைத் தவிர இன்னுஞ் சில பிரபந்தங்களையும் அந்த மணவாளதாசர் இயற்றியிருக்கின்றாரெனக் கூறப்பெறுகின்றார்.

பூர்த்தியுரை.

இத்தியாதி பிரபந்தங்களைத் தக்க ஆசிரியர்களிடம் பாடங்கேட்டுக் கற்றுக்கொள்வதால் போதிய பாஷா ஞானமும், விஷய ஆராய்ச்சியும், நூலுணர் புலமையும் இனிதே வாய்க்குமெனக் கருதுகின்றோம். மேலும், தாம் நினைந்துள்ள விஷயங்களைச் சுருங்கச்சொல்லி விளங்கவைக்கும் ஆற்றலும், எதையும் கனிவுபொருந்திய இனிய மொழியில் எடுத்துரைக்கும் திறமும், முன்னோர்களின் அரும்பெரும் நூற்களை எளிதில் உணருஞ் சக்தியும் ஏற்படுமென்பதில் என்ன ஆக்ஷேபமிருக்கின்றது? இதனாற்றான் “அஷ்ட பிரபந்தம் கற்றோர் அரை வித்வான்” என்று உயர்த்திக் கூறப்பெறுகின்றார். அன்றியும், இத்தகைய பிரபந்தங்களை ஆராய்ச்சி செய்வதால் அரிய நீதிகளும், உலக இயல்பும் நன்கு புலனாகும். “பயில்தொறும் நூல்நயம்போலும்” என்றும், “கற்றனைத்தூறும் அறிவு” என்றும் பொய்யாமொழியார் கூறுவதேபோல் பிரபந்த ஆராய்ச்சியால் கலை ஞானம் விருத்தியாகி நித்தியானந்தப் பெரும்பேற்றைக்கொடுத்தருளும் என்பது திண்ணம். ஆதலின், அத்தகைய பெரும்பேற்றை எல்லாம் வல்ல இறைவன் யாவர்க்குந் தந்தருளும் வண்ணம் யாமனைவரும் பிரபந்த ஆராய்ச்சி செய்வோமாக.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

—பாரதி பிரஸ், மன்னார்குடி.—

இறைவன் துணை.

கௌமார நுநுதலக் கல்விப் பிரசுரம் 1.

தேசபரிபாலனம் 1.

பெண் கல்வியின் அவசியம்.

ஆசிரியர் :—ஜனுப், பாவலர் சி. மீ. முஹம்மது யூசுப் சாஹிப்.
பத்திராசிரியர் ஷம்ஸுல்ஹுதா, மன்னூர்குடி.

நேரிசை வெண்பா.

கல்வி புகட்டாமற் கன்னியரை வீணுகச்
செல்வி யெனப்பெற்றுஞ் சீரென்னே!—நல்விதமாய்
நெஞ்சந் தெளிய நிதநிதமுங் கற்றுவைத்துப்
பஞ்சந் தெளியவகை பார். (பாவலர், மன்னூர்குடி)

வாழ்க்கைப்பயன்.

“அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பனே” என்று இலக்கணமுடையோர் கூறுவதே போன்று அரும் பெரும் நூற்களைக் கற்றுணர்வதால் மனித வர்க்கத்தினர்க்கு அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பயன்களும் கிடைக்கின்றன. இந் நான்கு பயன்களும் புருஷர்களுக்கு அவசியமா யிருப்பதைப் போன்று ஸ்திரீகளுக்கும் அவசியமானதே யாகும். புருஷர்கள் நூற்களைக் கற்பதால்தான் அத்தகைய பயன்களைப் பெறுகின்றார்கள். அவ்வாறே ஸ்திரீகளும் தக்க நூற்களைக் கற்றுப் பாக்கியம் பெறவே பெண்கல்வி அவசியம் என்று இங்குக் கூற முற்பட்டிருக்கின்றோம். ஒவ்வொருவரும் காய்தல் உவத்தலின்றி யாம் கூறப் போகும் விஷயங்களை ஊன்றிக் கவனித்து நற்பயனடையும் வண்ணங் கேட்டுக் கொள்கின்றோம்.

முற்கால நிலை.

பண்டைக் காலத்தில் நமது தண்டமிழ் நாட்டில் நல்ல பாண்டித்தியம் பெற்றுக் கல்வியிற் சிறந்த ஆடவர்கள் புலவர்களாய்த் திகழ்ந்ததே போன்று பற்பல பெண்மணிகளும் புலவியராய் விளங்கியிருக்கின்றனர். சங்க நூற்களிலே ஔவையார், வெண்ணிக் குயத்தியார், நப்பசலையார், நச்செள்ளையார் முதலான அரும் பெரும் புலவியரின் அழகிய செய்யுட்கள் காணக் கிடக்கின்றன.

அன்றியும், மேனுட்டின்கண் பல பெண்கள் நாட்டை அரசாண்டிருக்கின்றதைப் போல, நந்தம் தமிழ் நாட்டில் ஆற்றன்மிக்க பெண்ணரசியர் பலர் இருந்திருக்கின்றனர். பாண்டிய பரம்பரையில் மலயத்துவஜ பாண்டியன் மகள் தடாதகைப் பிராட்டியார் கன்னிப் பெண்ணாக இருந்தபொழுதே பாண்டிய நாட்டை ஆண்டு வந்ததாகத் தெரியவருகின்றது. பிற்காலத்தில் மங்கம்மாள் என்னும் நாயக்க அரசி மதுரையிலிருந்து பெயர் பரவ அரசு புரிந்திருக்கின்ருர். கல்வியுந் திறமையும் இல்லாமல் நாகரிகம் மிக்க ஒரு நாட்டை அமைதியுடன் அழகுபெற ஆட்சிபுரிதல் அசாத்தியமான காரியமேயன்ருே? ஆதலின், பூர்விகமாகவே நமது நாட்டில் பெண்கல்வி வளர்ந்தோங்கி வருகின்றதென்பதை ஒருவாறு உணர்ந்துகொண்டோம்.

தற்கால நிலை.

என்ருலும், இதுபோது நமது பாரதநாடு பெண்கல்வியில் ஏனைய நாட்டுக்களுடன் சேர்த்துக் கூறக்கூடிய விதத்தில் இல்லாமல் அத்துணை தாழ்ந்திருக்கின்றதென்பதை அடியிற் காணும் புள்ளி விபரங்களைக் கொண்டு இனிது உணரலாம்.

1000-க்குக் கற்றவர்கள்:—	ஆண்கள்.	பெண்கள்.
பிரிட்டானியா	932	912
அமெரிக்கா	955	930
பிரான்ஸ்	965	940
ஜெர்மனி	990	980
டென்மார்க்	996	995
ஜப்பான்	985	966
இந்தியா	50	12

மேற்கண்ட புள்ளி விபரங்களில் உள்ளபடி பார்ப்போமானல் டென்மார்க் ஜெர்மனி முதலிய நாடுகளில் ஆயிரத்திற்குத் தொள்ளாயிரத்துத்தொண்ணூறு ஆண்களும் பெண்களும் கற்றவர்களாயிருக்கும்போது, நமது புண்ணிய பாரத நாட்டில் ஆயிரத்திற்கு ஐம்பது ஆண்களும் பன்னிரண்டு பெண்களும் மட்டும் எழுதப் படிக்கக் கற்றிருக்கின்றவர்களாய்த் தோன்றுகின்ருர்கள். எஞ்சியுள்ள தொள்ளாயிரத்து ஐம்பது பேர்களும் எழுத்து வாசனை இன்னதென்றே தெரியாத முழுமக்களா யிருந்துவருகின்றனர். நம் நாடு பின்

னடைந்த வாறுதானென்னே! இவ்வாறு கல்வியிற் பிற்போக்குள்ள எந்த நாடும் முன்னேற முடியுமாவென்று நினைத்துப் பாருங்கள். அதனுற்ருன் கேவலம் ஒரு அணு நான்கு சல்லிகளைச் சராசரி தின வரும்படியாகப் பெற்று வாழ்கின்ற நமது பாரத மக்கள் சுதந்தரம் பெற இயலாமல் ஒற்றுமையிழந்து நித்திய அடிமை வாழ்விற் சிக்கி உழல்கின்றனர்.

இதற்குக் காரணம்.

இங்ஙனம் நமது சிறப்புள்ள நாடு கல்வியிற் பின்னடைந்ததற்குக் காரணமென்ன என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்த்தோமாயின், உண்மை விளங்காமற் போகாது. ஒவ்வொரு வீட்டிலும் தவறுமல் வாழ்ந்து, குழந்தைகளைப் பெற்று, உடனிருந்து வளர்த்து வருகின்ற தாய்மார்கள் கல்வி வாசனையே சிறிதுமில்லாத மூடர்களாயிருப்பதால், அவர்களிடம் வளர்கின்ற குழந்தைகள், "தாயைப்போல பிள்ளை நூலைப் போல சீலை" என்னும் பழமொழியைப்போன்று முட்டாள்களாகவே மாறிவிடுகின்றனர். குழந்தைகளைத் தப்பித் தவறிப் பாடசாலைக்கு அனுப்பினுல், அவர்கள் அங்குக் கற்றுவருகின்ற திருத்தமான உச்சரிப்புக்களைத் தாய்மார்கள் தங்களின் கொச்சைப் பேச்சினுல் கெடுத்து விடுகின்றனர். இதனுல் எத்தனையோ பிள்ளைகள் பரீக்ஷையில் தேராமற் பல வருடங்களை வீணே போக்கிவிட்டு வீடு திரும்புகின்றனர். எளிய தந்தையர் தங்களின் புத்திரர்களுக்குச் செலவு செய்ய இயலாமல் சிறுவர்களின் படிப்பை நிறுத்தச் செய்து விடுகின்றனர். இவ்வாறு ஒவ்வொரு குடும்பத்திலும் நடைபெற்று வருகின்றதென்பது மறுக்க முடியா உண்மையாகும். இவ்வளவிற்குங் காரணமென்னவென்றுல், குழந்தைகளுக்குப் போஷகர்களாகவும், தாய்மார்களாகவும் வருகின்ற பெண்மணிகள் கல்வித் தேர்ச்சியற்றவர்களாயிருப்பதேயாகும்.

ஓர் பெரியார் அபிப்பிராயம்.

அறிஞர் ஆகாகான் பெண்கல்வி விஷயமாய்க் கூறியுள்ளதாவது:- "எனக்கு ஒரு ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையுமிருந்து, கொஞ்சம் திரவியமும் இருக்குமானுல், பெண் குழந்தையின் கல்வியபிவிருத்திக்காக அந்தத் திரவியம் முழுவதையும் செலவு

செய்துவிட்டு, ஆண் குழந்தையைச் சும்மா விட்டுவிடுவேன். ஏனெனில், ஆண் குழந்தை தனது ஜீவியத்தில் எந்தச் சந்தர்ப்பத்திலும் கல்வி கற்றுக் கொள்ளக்கூடிய சௌகரியமும் அவகாசமும் பெறுகின்றான். ஆனால், பெண் குழந்தை அவ்வாறு வசதி பெறுவது முடியாது. மேலும், கல்வி பயின்ற ஆண் பிள்ளை தன்னைப் பொறுத்த மட்டில் கல்விமானாயிருப்பதுடன் திருப்தியடைந்து விடுகின்றான். ஆனால், கல்வி பயின்றுள்ள ஒரு பெண்பிள்ளையோ தனது ஜீவிய முழுவதும் இருந்து வளர்த்து விடக்கூடிய பிள்ளைகள் அனைவருக்கும் ஒரு உபாத்தியாயினியாய் விளங்கி வருகின்றாள்." என்பதேயாகும்.

அறிவிற் சிறந்த சகோதரர்காள்! மேலே கூறப்பெற்ற அறிஞர் கூறியுள்ள அமுத மொழியானது, எவ்வளவு உண்மை வாய்ந்ததாயிருக்கின்றதென்பதைச் சிந்தித்துப் பாருங்கள். கற்றுணர்ந்த ஒரு பெண்மணியால் நமது சமூகத்திற்கு ஏற்படுகின்ற நற்பயன்களைப் பற்றி எம்மைப் போன்றதொரு ஆடவர் எடுத்துக் கூறுவதைவிட கற்றுவல்லதொரு பெண்மணியே எடுத்துக் கூறுவது எத்துணையோ விதத்தில் அழகும் அனுபவமும் வாய்ந்ததாயிருக்கும். அத்தகைய பாக்கியம் நம் யாவர்க்கும் இதுபோது கிட்டாமற்போனது வருந்தற்பாலதே யாகும்.

நம்மவர் நிலை.

பற்பல அறிஞர்களும், நிபுணர்களும், சீர்திருத்தக்காரர்களும் இரவு பகலாய் அரும்பாடுபட்டுப் பிரசாரம் புரிந்து வந்ததில் இது சமயம் ஒரு சில நகரங்களில் மட்டும் ஆரம்பப் பெண் பாடசாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. கிராமாந்தரங்களில் பெண் பாடசாலைகளைக் காண்பது அரிதினும் அரிதாயிருக்கின்றது. அவ்வாறு ஏற்படாததற்குக் காரண மென்னவென்றால், கல்வி பயின்றால் பெண்கள் கெட்டுவிடுவார்கள் என்று ஒருசில அறியாத ஜனங்கள் கருதுவதே யாகும். இவ்வாறு இவர்கள் கருதுவது கற்றுருலகம் மெச்சக்கூடியதாகமாட்டாது. ஏனென்றால், கல்வியறிவானது ஒளியாகவும், கல்லாத மடமையானது இருளாகவும் இருக்கின்றது. பகுத்தறிவுள்ள மக்கள் இருளில் இருக்குமட்டும் வழிதவறிக் கெடமாட்டார்களென்றும், வெளிச்சத்தில் வந்தவுடன் வழிகெட்டு விடுகின்றார்கள் என்றும் அறியாமையாற் கூறப்படுவது எந்தச் சொற்ப ஞானமுள்ள

வனுக்கும் ஒப்புக்கொள்ளக்கூடியதாகுமா? என்று கேட்கின்றோம். மேலும், "ஆண்களாயிருந்தாலும், பெண்களாயிருந்தாலும் சீன தேசமானாலுஞ் சென்று (கல்வி) அறிவைத் தேடிக் கொள்ளுங்கள்" என்று போதித்துச் சென்ற நபிகள் திலகம் முஹம்மது நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றி நடந்து வருகின்ற முஸ்லிம் சகோதரர்களும் "கலைமகள்" என்னும் சரஸ்வதியாகிய ஸ்ரீமாட்டியினிடமே தங்களுக்குவேண்டிய கல்வியைத் தினந்தினமும் எதிர்நோக்கி நிற்கின்ற ஹிந்துச் சகோதரர்களும் பெண் கல்விக்கு முட்டுக்கட்டை போட முன் வருவது எமக்கு ஒரு விந்தையாகவே தோன்றுகின்றது.

பெண்மணிகள் தங்களின் புத்திசாலித்தனத்தால் கற்பைக் காத்துக்கொள்ள முடியுமேயொழிய, முட்டாள் தனத்தால் ஒரு நாளும் காத்துக்கொள்ள முடியாதென்பதை ஞாபக மூட்டுகின்றோம். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களையுடைய நங்கையரைக் கல்வியைக் கொண்டு முன்னுக்குக் கொண்டுவர முடியுமேயன்றி வேறு விதத்தால் முடியாதென்பது சான்றோர் கண்ட துணிபு. இதனாற்றான் திருவள்ளுவர்,

> "சிறைகாக்குங் காப்பெவன் செய்யும் மகளிர்
> நிறைகாக்குங் காப்பே தலை."

எனக் கூறியுள்ளார். இதைக் கொண்டு, மாதர்களை அவர்கள் கல்வியறிவாற் பெறுகின்ற கற்பின் தகைமையால் காக்க முடியுமென்றும், சிறைவைத்துக் காப்பதால் ஒரு பயனுமில்லை யென்றுங் கண்டு கொண்டோம். அப்படியிருக்க; கற்றுணர்வதால் பெண் மணிகள் கெட்டு விடுவார்களென வாய்கூசாது கூறுவது அறியாமையின் கொடுமையே யாகும்.

இன்னுஞ் சிலர் மங்கையர்க்குக் கல்வி அவசியமில்லையென்றும், அவர்கள் கற்பதால் எப்பயனும் விளையப்போவதில்லை என்றும் வாதிப்பர். இவர்களுக்கு ஒரு வார்த்தைக் கூறலாமென நினைக்கின்றோம்:—

> "விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
> கற்றாரோ (டு) ஏனை யவர்."

என்று கூறப் பெற்றிருக்கின்ற திருக்குறளில் கல்வி யறிவு இல்லாத மக்கள் (அவர்கள் ஆணையாயினும் அன்றிப் பெண்ணையாயினும்) மிருகத்திற்கு ஒப்பாவார்களென்று காணக் கிடக்கின்றது. ஏனென்றால், தாம் எண்ணியுள்ள விஷயங்களை எழுத்து

மூலமாய்ப் பிறர்க்கு அறிவிக்குஞ் சக்தியும், பிறர் எழுதி வைத்திருப்பதைப் படித்து அவர்களின் கருத்தை உணர்ந்து கொள்ளுஞ் சக்தியும் மனிதர்க்கு அமைந்திருக்கின்றது. இந்த உயரிய சக்தி மிருகங்களுக்குக் கிடையாது. ஆகவே ஒருவர் எத்துணைக் கோடி திரவியத்தைச் செலவு செய்தாலும் மிருகத்திற்கு எழுதப் படிக்கக் கற்றுக்கொடுக்க முடியாது. ஆனல், கொஞ்சம் பிரயாசை எடுத்துக் கொண்டால் தமது பெண் பிள்ளைக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்து விடலாம். இவ்வாறு கற்றுக் கொள்ளும் நிலைமையில் ஸ்திரீகள் படைக்கப் பெற்றிருப்பதிலிருந்து அவர்களுக்குங் கல்வியைக் கற்றுக் கொடுக்க வேண்டுமென்று எல்லாம் வல்ல ரக்ஷகன் எண்ணியிருக்கின்ருனென்று விளங்க வில்லையா? ஆகையால் தங்களின் செல்வப் புதல்வியர்க்குக் கல்வி கற்பிக்காமலிருக்கின்ற மாதாப் பிதாக்கள் தங்களின் மனிதப் பிள்ளையை மிருகச் சுபாவத்திலேயே மாற்றுகின்ருர்களென்பதில் என்ன ஆக்ஷேபமிருக்கின்றது?

கற்றில்லாப் பெண்களின் தன்மை.

எவர் தமது பெண் மக்களுக்குக் கல்வியைப் போதிக்கவில்லையோ அவர் தமது பெண்களைக் குருடர்களாகவே வளர்க்கின்ருரென்பது வெள்ளிடைமலை. ஏனெனிலோ,

"கண்ணுடையர் என்பவர் கற்ருேர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்."

என்பது பொய்யா மொழியாரின் திருவாக்காகும். கல்வியறிவு இல்லாத மடந்தையர் தமது குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டவுடன் தாம் உணர்ந்து கொள்ளவேண்டிய கடமைகளையும் உலக விபவகாரங்களையும் செவ்வையாய் உணர்ந்தில்லாக் காரணத்தால் தாறுமாருய் நடந்து குடித்தனத்தைக் குலைத்து விடுவார்கள். நல்லோர் பெரியோர்களிடம் நடந்துகொள்ள வேண்டிய ஒழுங்கும் மரியாதையுந் தெரியாததால் தண்டுமுண்டாய் நடந்து அயலவர்களையெல்லாம் பகைத்துக் கொள்வார்கள். பிள்ளைகளை வளர்க்கும் முறைமை உணர்ந்தில்லாததால் தமது மனம்போனபடி குழந்தைகளை நடத்திக் கெடுத்து விடுவார்கள். கல்வியறிவில்லாக் காரணத்தால், சாந்தம், பொறுமை, சகிப்புத் தன்மை, இனிய மொழி, கனிந்த அன்பு முதலிய நற்குணங்களை விரட்டி யோட்டிவிட்டு, பகைமை, பொருமை, பிடிவாதம், மூட்டுத்தனம், வீண் பெருமை,

விசாப்பு, முன்கோபம், மூர்க்கத்தனம் முதலான துர்க்குணங்களில் முற்றி முதிர்ந்து மனத்தைத் திருத்த முடியாத 'கல்லாங்காய்' மாதிரி செய்து கொள்வார்கள். இத்தகைய நாரியர் குடியிருக்கும் வீடு எப்படி இருக்குமென்று நினைக்கின்றீர்கள்? சுருங்கச் சொல்லு மிடத்துப் புலி கிடக்கும் புதராகவே மாறிவிடும். அருமை பெரு மையாய்ப் பெற்று வளர்த்த தமது செல்வப் புதல்வியரை இந்த நிலைமையிலாக்கிவிட எந்தத் தாய் தந்தையும் விரும்புவார்களா? அந்த அணங்கியர் இவ்வாறு கெட்ட குணமுள்ளவர்களாய்ப் போவ தற்குக் காரண மென்னவென்றால், நன்மை இன்னது, தீமை இன் னது என்று பிரித்தறிவிக்கின்ற ஞானக் கண்கள் அவர்களுக்கு இல் லாமற் போனதே யாகும். இஃதன்றி,

முற்காலத்தில் பெண் பார்க்க வருகின்ற மாப்பிள்ளை வீட்டார் பெண் நல்ல பலசாலியா வென்றும், கலநெல் குத்துவாளா, இருகல நெல் குத்துவாளா வென்றுங் கவனித்துப் பெண் பேசுவது வழக் கம். பின்பு காலஞ் செல்லச் செல்ல, புதுப்பெண் குடித்தனப் பாங்கு தெரிந்தவளா என்றும், சமையல் நேர்மையுள்ளவளா என் றுங் கவனித்தார்கள். தற்காலத்தில் பெண்கள் உரல் உலக்கையை ஜன்மப் பகையாய்க் கருதி ஒதுக்கித் தள்ளிவிட்டதாலும், சமையல் செய்வதற்குப் போதுமான இயந்திரங்கள் கிடைக்கின்றதாலும், இதுபோது பெண் பார்த்து வருகின்றவர்கள் "பெண் என்ன கற் றிருக்கின்றாள்" என்று பகிரங்கமாய்க் கேட்க ஆரம்பித்து விட் டார்கள்.

நஷ்டமை.

ஆதலின், தமது அருந்தவப் புதல்விகளை அருமை பெருமை யாயும் மிகச் செல்வமாயும் வளர்க்கின்றதாகக் கூறிக் கொள்கின்ற மாதாப் பிதாக்கள் தாங்கள் கூறுவது மெய்யானால், அம் மங்கையர் க்கு ஸ்ரீதனமாய்ப் பல்லாயிரக் கணக்கான திரவியத்தைச் செலவு செய்வதைவிடச் சொற்பச் செலவில் அவர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுத்து, அந்த நங்கையரின் கண்களைத் திறந்து வைப்பது எத் துணையோ கோடி மடங்கு மேலானதாகும். ஏனென்றால்,

மேலழகும், சேலை மினுக்கழகும், பூணழகும்,
தோலழகும், மஞ்சள் துலக்கழகும்,—காலழகோ (டு)
எல்லா அழகும் அழகல்ல; கல்வியுணர்
நல்லார் அழகே அழகு. (பாவலர் மன்னார்குடி)

என்னும் நீதியை யாவரும் உணர்ந்து கொள்ளல் வேண்டும். அன்றியும், கற்றுணர்ந்த மாப்பிள்ளைமார்கள் கல்வியறிவற்ற பேதைப் பெண்களை மணந்து அவதிப்பட்டகாலம் மலையேறிவிட்டதென்பதை யாவர்க்கும் ஞாபகப்படுத்துகின்றோம்.

பெண்மணிகளை நம்பாமல் பாதங்களை இருப்புக் கவசத்தினால் இறுகக் கட்டிவைத்துக் கொடுமைப்படுத்திவந்த சீன தேசத்தார்களும், மானத்தைக் காப்பாற்றும் நாகரிகம் விளங்காமல் இலைகளை ஆடைகளுக்குப் பதிலாக உபயோகித்துவந்த மேனாட்டினரும், இருக்குமிடம் உலகத்திற்குத் தெரியாமலேயே இருந்துவந்த அமெரிக்கர்களும் இதுசமயம் பெண்கல்வியிலும் நாகரிகத்திலும் தலைசிறந்தவர்களாய் விளங்கும்போது, பூர்விகத்திலிருந்து பெருமையிற் சிறந்துவந்த நமது பாரத மக்கள் பெண் கல்வியில்லாமல் பின்னடைந்து, எடுப்பார் கைப்பாலகராய் வளர்வது நமது பொறுப்பற்ற தனத்தையும், நாட்டின் துரதிருஷ்டத்தையுமே எண்பித்துக் காட்டுகின்றது. வீரப் பெண்மணிகளையும், விவேகத் தாய்மார்களையும் பெற்றிருந்த நாம் இவ்வாறு உலகப் போட்டியிற் பின்னடைவது நமது வீரத்திற்கு அழகாகமாட்டாது.

ஆதலின், ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு நகரத்திலும் இலவசப் பெண்பாடசாலைகளை ஏற்படுத்திப் பெண்மணிகளுக்குக் கல்வி கற்பிக்க வேண்டுவது அத்தியாவசியமாகும். அப் பாடசாலைகளிற் கணிதம், தேசச் சரித்திரம், பூகோளம் முதலிய பாடங்களையும், தமிழை நன்கு போதிக்கும் நூற்களையும் அமைப்பது மிகமிக வேண்டற்பாலதாகும். பெண்கல்வி விஷயத்தில் பொதுச் சங்கங்களும், பொறுப்புள்ள ஸ்ரீமான்களும் அதிகப் பிரயாசை எடுத்துக் கொண்டார்களானால் இன்னும் பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குள் நமது நாட்டைக் கல்வியிற் றலைசிறந்த நாடாகக் காணலாம். இது விஷயத்தில் பாலிய சிங்கங்கள் இடுப்புக்கட்டி நின்று பணியாற்ற வேண்டுவதே அவசியம். ஆதலின், ஒவ்வொரு கிராமத்திலும் நகரத்திலும் பெண் பாடசாலைகளை ஏற்படுத்தி, நங்கையர்க்கு நல்ல கல்வியைப் புகட்டி, அவர்களால் சமூகம் உயர்ந்து, யாவரும் சாந்தியுடனும் சமாதானத்துடனும் பெரும்பேறடைந்துய்ய எல்லாம்வல்ல இறைவன் இன்னருள் பாலிப்பானாக. சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஸ்ரீ பிரஹத்சுந்தரகுசாம்பிகா பிரஸ், திருவிடைமருதூர்.

இறைவன் துணை.

முதியோர் கிராமக் கல்வி நூல்.

3-வது பகுதி.

ஐந்தாம் பாகம்:— தேச சரித்திரம், பூகோளம்.

பொருளடக்கம்.

குறிப்பு:— பாட எண்ணிக்கைகளை அடியில் கண்டபடி திருத்திக்கொள்ளவும்.

பாடங்கள்.		பக்கங்கள்.
1	**பண்டைத்தமிழர்:**—பிரம்மஸ்ரீ மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதையர், தமிழ்ப்பேராசிரியர், சென்னை.	20
2	**தமிழ்நாட்டு சரித்திரம்:**— திரு. நீ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள் எம். ஆர். ஏ. எஸ். கட்டிட கண்டிராக்டர், தஞ்சாவூர்.	10
3	**முற்காலத்தில் கிராம பரிபாலனம்:**— ஷை	6
4	**இந்தியா தேச சரித்திரம்:**— திரு. எஸ். வைத்தினாத ஐயர் பி. ஏ., எல். டி., தலைமை ஆசிரியர், தேசீய உயர்தரப் பாடசாலை, மன்னார்குடி.	8
5	**இங்கிலாந்து தேச சரித்திரம்:**— திரு. ஏ. ரெங்கசாமி ஐயர் பி. ஏ., பி. எல்., ஹைகோர்ட்டு வக்கீல், மதுரை.	9
6	**கிராம பூகோளம்:**—திரு. எஸ். கோபால ஐயர் பி.ஏ., எல்.டி. ஆசிரியர், நேஷனல் ஹைஸ்கூல், மன்னார்குடி.	4
6 (1)	**கிராம பூகோளம்—பூவனூர் உதாரணம்:**— இராவ்சாகிபு சு. வி. கனகசபைப் பிள்ளை, தலைவர், கௌமார குருகுலம், மன்னார்குடி.	5
7	**தமிழ்நாட்டு பூகோளம்.** ஷை ஷை	6
8	**இந்திய பூகோளம்:**—திரு. ஜெ. அமலதாஸ் பி. ஏ., எல். டி., ஆசிரியர், பின்ட்லே காலேஜ், மன்னார்குடி.	13
9	**உலக பூகோளம்:**— ஷை ஷை	14

படங்கள்.

சித்தன்ன வாசல் சித்திரங்கள்.

ஓர் கணிகை—	தமிழ்நாட்டு சரித்திரம்	4 (1)
மற்றோர் கணிகை	,,	4 (1)

		பக்கம்
தாமரைப்பொய்கையின் ஓர் பாகம்—தமிழ்நாட்டு சரித்திரம்		4 (2)
சமண முனிவர்	,,	4 (2)
மகேந்திரவர்மன்	,,	4 (3)
ஆங்கில நாடும் அதை அடுத்த ஐரோப்பிய நாடுகளும்—	இங்கிலாந்து தேச சரித்திரம்	முகவணை.
பூவனூர் கிராமம்—	கிராம பூகோளம்	6 (1) 1
தமிழ்நாட்டு மிகப் பழைய பூகோளம்		
சால்மாலித்துவீப முதற்காலம்—	தமிழ்நாட்டு பூகோளம்	3
சால்மாலித்துவீப அந்தியகாலம்	,, ,,	3
தமிழகம்—1800-வருஷத்துக்குமுன்	,, ,,	
தற்காலத் தென் இந்தியா	,, ,,	5
இந்தியாதேச படம்—	இந்தியா பூகோளம்	முகவணை.
பூகோள படம்—	உலக பூகோளம்	,,

கௌமார குருகுலக்
கல்விப் பிரசுரம் 1.

பண்டைத் தமிழர்.

ஆசிரியர்:—பிரம்மஸ்ரீ, மகா மகோபாத்தியாய
உ. வே. சாமிநாதையர் அவர்கள்,
தமிழ்ப்பேராசிரியர், சென்னை.

1. முன்னுரை.

தமிழரென்பது தமிழ் என்னும் பகுதியடியாகப்பிறந்த பெயர்; தமிழ் என்பது ஒரு மொழியின் பெயர். அம்மொழி வழங்கும் நாடு தமிழ் நாடு. தமிழ் நாட்டில் வாழ்பவர்களைத் தமிழர் என்றல் பொருந்தும். தேசங்கள் மொழி வேற்றுமையாற் பிரிக்கப்பட்டிருந்தனவென்று தெரிகிறது.

"தமிழ் கூறும் நல்லுலகத்து"—(தொல்காப்பியம், சிறப்பு)
"இமிழ்கடல் வேலித் தமிழகம்"—(பதிற்றுப்பத்து)

பிறமொழி வழங்கும் நாடுகளைக் குறிப்பிடுகையில் அவற்றை, "மொழி வேறுபட்ட தேசம்" என்று வழங்கி வந்தனர்.

"மொழிபெயர் தேஎத்தர்"—(குறுந்தொகை.)

"தமிழ்கெழு மூவர் காக்கும்,
மொழிபெயர் தேஎத்த பன்மலை யிறந்தே"—(அகநானூறு)

பண்டைக் காலத்துத் தமிழர்கள் மக்கட் பிறவி எடுத்ததற்கு ஏற்ற இயல்புகளை உடையராக இருந்தனர். மெய்வாய் முதலிய ஐம்பொறி யுணர்ச்சியோடு மனவுணர்ச்சியும் பெற்றவர்களை மக்களென்றும் மனவுணர்ச்சி யில்லாமல் ஐம்பொறி யுணர்ச்சிகளைமட்டும் உடையவர்களை மாக்களென்றும் தமிழர் வழங்கிவந்தனர்.

"மக்கள் தாமே ஆறறி வுயிரே"—(தொல்காப்பியம்)

மன உணர்ச்சியாவது செய்யத் தக்கது இது, செய்யத் தகாதது இஃது என்னும் அறிவு முதலியன.

"தக்க வின்ன தகாதன வின்னவென்
றொக்க வுன்னல ராயின் உயர்ந்துள
மக்களும் விலங்கே"—(கம்பராமாயணம், வாலிவதைப்படலம்)

"மக்களும், மாக்களும் மனிதத்தன்மையினால் வேறுபட்டிருந்தாலும் உருவத்தால் மாக்கள் மக்களைப்போன்றே இருப்பர், இத்தகைய ஒப்பை யாம் எங்கும் கண்டதில்லை" என்று வியந்து திருவள்ளுவர்,

"மக்களே போல்வர் கயவர் அவரன்ன
*ஒப்பாரி யாங்கண்ட தில்."

---

*ஒப்பாரி - ஒப்பு.

என்று கூறிய அழகு மிகப்பாராட்டற்பாலது. கல்வியறிவில்லா மக்கள் விலங்காகவும் கருதப்பட்டனர்.

"விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கல்லாரோ டேனை யவர்." —(குறள்)

மக்களுக்குரிய இயல்புகளோடு பண்டைத் தமிழர் வாழ்ந்து வந்தன ரென்பதைப்பற்றிய செய்திகள் இனிச் சொல்லப்படும்.

2. பண்டைத்தமிழர் வாழ்க்கை.

மனிதர்கள் தங்கள் வாழ்க்கையில் இயற்றுஞ் செயல்கள் பல. அவற்றை ஒருவாறு உடலுக்கு ஆக்கந்தருவன, உள்ளத்திற்கு ஆக்கந்தருவன, உயிருக்கு ஆக்கந்தருவன என்று மூன்று பிரிவாகக் கொள்ளலாம். இம்மூன்று வகையிலும் தமிழர்கள் மேம்பட்டு வாழ்ந்துவந்தனர்.

க. உடலாக்கம்.

உடலுக்கு ஆக்கந்தருவன உணவு, உடை, இருப்பதற்குரிய இடம் முதலியன. இவற்றுள் தலை சிறந்தது உணவாகும். உடல் பல தொழில்களைச் செய்து வாழ்வதற்கு உணவு இன்றியமையாதது. மருத்துவ நூல்களும் இக்கருத்தை வற்புறுத்திக்கூறும். அவ்வுணவு உழவினாற் பெறப்படுவது. உழவுத்தொழிலில் தமிழர் மேம்பட்டிருந்தனர். உழவிற்குரிய ஏர், மேழி, கொழு, கலப்பை, பல்லி முதலிய கருவிகளின் பெயர்களும், உழவைப்பற்றிய செய்திகளும் தமிழ் நூல்களிற் சொல்லப்பட்டுள்ளன. திருக்குறளில் உழவைப்பற்றிய அதிகாரம் ஒன்று உள்ளது. அதில் உழவின் சிறப்பும் அதற்குரிய முறைகளும் கூறப்பட்டுள்ளன. உழவையும் உழவரையும் சிறப்பித்து 'ஏரெழுபது' என்னும் நூலொன்றைக் கம்பர் இயற்றியுள்ளார். எல்லாவகைத் தொழிலும் உலகில் நடைபெறுதற்கு ஆதாரம் உழவே என்பதைப் பண்டைத்தமிழர் நன்கு அறிந்திருந்தனர். இது,

"சுழன்றுமேர்ப் பின்ன துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை." —(குறள்)

என்பதனால் அறியப்படும்.

உழுதலைச் செய்யும் வேளாளர்கள் மிக்க மதிப்போடு பாராட்டப்பட்டனர். அவர்களுள் உழுதுண்பார் உழுவித்துண்பாரென்று இருவகையினர் உண்டு. அரசர்கள் தம் கீழுள்ள குடிகளைப் பாதுகாக்கும் முறையில் அவர்களைப் பாதுகாத்தல் முதன்மையான தென்றெண்ணினர்.

"பகடு புறந்தருநர் பார மோம்பி"—(புறநானூறு, 35)
"குடிபுறந் தருநர் பார மோம்பி"—(பதிற்றுப்பத்து, 13)

என்பவற்றில் இக்கருத்து அமைந்திருத்தல் காண்க.

தம்பால் வந்தவர்களுக்கு வேண்டியவற்றை உதவிப் பாதுகாத்தலும் அரசனுக்கு உரிய வரியைச் செலுத்தி அதனால் அவனது காரியங்களை நடப்பித்தலுமாகிய செயல்களால் அவ்வேளாளர்,

"இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
உழவிடை விளைப்போர்" —(சிலப்பதிகாரம்)

எனச்சிறப்பிக்கப்பட்டனர். அரசர்களது போர்க்களத்தைப்பாடிய பொருநர் முதலியோர் உழவர்களது ஏர்க்களத்தையும் பாடிவந்தனர். நிலங்களுக்கு உரியவர்களாதலின் அவர்கள் 'காணியாளர்' என்று வழங்கப்பட்டனர். சோழநாட்டில் இருந்த வேளாளர்கள் வேள், அரசு என்னும் பட்டங்களைப்பெற்றனர். அந் நாட்டு வேளாளர் அறுபத்து நான்கு கோத்திரத்தினர்; *நயினாரென்னும் பட்டப் பெயருடையவர். பாண்டி நாட்டு வேளாளர் காவிதி என்னும் பட்டம் பெற்றார்கள். சோழன் கரிகாலன் தொண்டைநாட்டில் வேளாளராகிய நாற்பத்தெண்ணாயிரம் நற்குடிகளை நிறுவினான் என்றும், அவர்கள் முதற்குடிகளாதலின் முதன்மையாரென வழங்கப்பட்டன ரென்றும், அவர்களே முதலியாரெனவும் ஒரு செய்தி வழங்கி வருகிறது.

வேளாளர் அரசர்களுக்கு அமைச்சராகவும் இருந்தனர். அரசர்களுக்குத் தம் பெண்களை மணம் செய்து கொடுத்தும் வந்தனர். கரிகாலனது தந்தையாகிய இளஞ்சேட்சென்னி நாங்கூர் வேளினுடைய மகளை மணந்து கொண்டான்.

இவற்றால் பண்டைத் தமிழ்மக்கள் உழவினிடத்துக் காட்டி வந்த ஊக்கமும் வேளாளர் பெற்ற சிறப்பும் அறியலாம்.

உ. உள்ள ஆக்கம்.

உள்ளம் அறிவுடையதாதல் வேண்டும். அவ்வறிவே மனிதரை மக்களாகச் செய்வது. அது கல்வியினாற் பெறப்படுவது.

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு" —(குறள்)

"தாம்கற்ற, நூலளவேயாகுமாம் நுண்ணறிவு" —(ஔவையார்)

என்பவற்றால் கல்விக்கும் அறிவிக்கும் உள்ள தொடர்பு விளங்கும். பண்டைத்தமிழர்களது கல்விநிலையைப்பற்றிக் கூறுவதே அவர்கள் உள்ள நலத்தைப்பற்றிக் கூறுவதாகும்.

அக்காலத்து மக்களிற் பெரும்பாலோர் கல்வி யறிவுடையவர்களாயிருந்தனர். தன் மகனுக்குக் கல்வி கற்பிப்பது தந்தையினது முதற்கடமையாக இருந்தது. அதனால்தான் இன்னார் இன்னார் மாணாக்கராதற்குரியோ ரென்பதைக் கூறப்புகும் இலக்கணச் சூத்திரமொன்று,

"தன் மகன் ஆசான் மகனே மன்மகன்"

எனத் தன் மகனை முதலிற் கூறுகின்றது.

"சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே"—(புறநானூறு)

"தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்." —(குறள்)

---

* இது 'நாயனார்' என்பதன் திரிபு என்பர்.

என்பவற்றால் தந்தையினது கடமை இன்னதென்று அறிந்து கொள்ளலாம். தம் மக்களுக்குக் கல்வி கற்பிக்கும் கடமையைச் செய்ய இயலாத சிலர் அவர்களைத் தக்க ஆசிரியர்பால் ஒப்பித்தனர். எங்ஙனமாயினும் மக்களது கல்வியைப்பற்றிய நாட்டம் தந்தை மாருக்கு இருந்து வந்தது. ஆகையினாலேதான்,

"தந்தையொடு கல்விபோம்"

என்று புலவர் ஒருவர் பாடியுள்ளார்.

கல்வியைப் பற்றிய நினைவு தமிழ் மக்களுக்கு அதிகமாக இருந்தது. நூற்பாயிரங்களில் ஆசிரியர் மாணவர் முதலியோரது இயல்புகளும் பாடஞ்சொல்லு முறை கேட்கும் முறை என்பனவும் வரையறையாகக் கூறப்பட்டிருத்தலை ஆராய்ந்தால் அக்காலத்துக் கல்வி நிலையின் அமைப்பு நன்கு விளங்கும். கல்வியிலேயே பற்றுடையராகி ஊக்கத்தோடு மாணவர்கள் கற்றுவந்தனர். ஏழைகள் செல்வர்களிடம் பொருள்பெறுங் காலையில் பணிந்தொழுகிப் பெறுதல் போலக் கல்வி கற்றல் வேண்டும் என்று திருவள்ளுவர் விதிக்கின்றார்.

"உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லாதவர்." —(குறள்)

ஆசிரியருடைய மன முவப்ப ஒழுகியும் அவருக்கு ஒரு துன்பம் வந்த காலையில் உதவி செய்தும் பொருள் உபகாரம் செய்தும் அவருக்கு அடங்கி நிற்றலில் வெறுப்பில்லாமற் கற்றல் வேண்டுமென்று புறநானூறு கூறுகின்றது.

"உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே."

கல்வி கற்றற்குரிய கல்விச்சாலைகள் ஊர்தோறும் இருந்தன.

"கணக்காய ரில்லாத வூரும்
நன்மை பயத்தலில்." —(திரிகடுகம்)

கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் 'கணக்காயர்' எனக் கூறப்படுவர். கணக்கு என்பதற்கு நூல் என்பது பொருள். பல புலவர்கள் கணக்காயர்களாக இருந்தனர். நக்கீரர் தந்தையாராகிய மதுரைக் கணக்காயனாரும் கணக்காயன் தத்தனார் என்னும் புலவரும் கணக்காயர்களே.

கல்வி முறை சிறப்பாக இருந்ததற்குக் காரணம் கேட்ட பாடங்களைச் சிந்தித்துத் தெளிந்து வந்தமையே.

"நெஞ்சுகளனாக...
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்து."

செய்யுட்களை மனப்பாடஞ்செய்யும் வழக்கமானது தொன்றுதொட்டு வந்தது. இப்பயிற்சி உண்டாவதற்காகவே அந்தாதி என்னும் முறை ஏற்பட்டதாகச் சில பெரியோர் கூறுவர். பழையகாலத்து மாணவர்களும் கற்றோர்களும் தங்களுக்குத் தெரிந்த பாடல்களை மறவாமல் இருப்பதற்காக, வழி நடக்கும்பொழுதும் வேறு ஏதாவது

செய்யும்பொழுதும் ஒருவர் ஒரு பாடலைக்கூற, அதன் ஈற்றடியி லுள்ள ஈற்றுச்சீரை முதலாக உடைய வேறு ஏதாவது ஒரு செய்யுளைச் சொல்லிப் பழகுதல் வழக்கம். இத்தகைய கல்வி முறை அக்காலத்தில் இருந்தமையினாலேதான் அளவற்ற தமிழ் நூல்கள் 300 ஆண்டுகளுக்கு முன் வரையில் இறவாமல் இருந்து வந்தன.

இளமையிற் கல்விகற்கும் வழக்கம் மிகச் சிறந்தது. ஆயினும் இளமைப் பருவந்தொடங்கிப் பண்டைத்தமிழ் எப்பொழுதும் படித்துவந்தனர்.

"என்னொருவன், சாந்துணையுங் கல்லாதவாறு"—(குறள்)

என்பதில் இறக்கும் வரையில் கற்கவேண்டுமென்று கூறப்பட்டிருத்தல் காண்க. மணஞ் செய்து கொண்ட பின்னரும் கல்வி கற்றற் பொருட்டுத் தக்க ஆசிரியர்களைத் தேடிக்கொண்டு மனைவியரைப் பிரிந்து பிறநாட்டுக்குச் செல்லும் வழக்கம் இருந்தது. ஒரு நாயகன் தன் மனைவியைப் பிரியும் பிரிவுவகைகள் ஆறு. அவற்றுள் ஓதற்பிரிவு என்பது ஒன்று. மூன்று வருஷங்கள் அவ்வாறு பிரிந்திருக்கலாம் என்பது இலக்கணம்.

"வேண்டிய கல்வி யாண்டுமூன் றிறவாது" -(தொல்காப்பியம்)

ஆகையால், கல்வியில் அவர்கள் எவ்வளவு ஆர்வமுடையவர்களாக இருந்தார்கள் என்பதை அறியலாம்.

புலவர்கள் தாங்கள் படித்துவிட்டோமென்று அமைந்திராமல் மேன்மேலும் நூல்களைப்படித்து ஆராய்ச்சி செய்துகொண்டே இருந்தார்கள். பல சிற்றூர்களில் இருந்த புலவர்கள் ஒரூரிற்கூடி நூலாராய்ச்சி செய்து வந்தனர். தத்தமக்கென வெவ்வேறு தொழில்களுடையவர்களாக அவர்கள் இருந்தாலும் நூலாராய்ந்து வந்தனர். உறையூர் இளம்பொன் வாணிகனார், உறையூர் மருத்துவன் தாமோதரனார், மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார், மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச்சாத்தனார், கொல்லனழிசி, மதுரைப் பெருங்கொல்லனார் முதலிய புலவர்களின் பெயர்கள் அவர்களுடைய தொழிலையும் உணர்த்துகின்றன. புலவர் கூடிய சபை சங்கம் எனப்படும். பண்டைக்காலத்தில் மதுரையிற் சங்கம் இருந்தது. அங்கே பல புலவர்கள்கூடி நூல்களை இயற்றியும் ஆராய்ந்தும் வந்தனர். அவர்களுள் பல மதத்தினரும் பல சாதியினரும் இருந்தனர். யாரேனும் புதியதாக நூல் செய்தால் அது சங்கப் புலவர்களின் முன்னிலையிலாயினும் அரசர் அவைக்களத்தில் அறிஞர் முன்பேனும் அரங்கேற்றப்பட்டு வந்தது. எந்த நூலும் அரங்கேற்றப் படாவிடத்து மதிப்புப் பெறுவதில்லை. இக்காலத்துக் கிடைக்கும் தமிழ் நூல்களுள் மிகப் பழையதாகிய தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல் நிலந்தரு திருவிற்பாண்டியன் அவைக்களத்து அதங்கோட்டாசானென்னும் புலவர் முன்பு அரங்கேற்றப்பட்டதாகும்.

மதுரையில் இருந்த சங்கங்களைப் போலப் பல இடங்களிற் சங்கங்கள் இருந்தன. தமிழின் வகைகளாகிய இயல் இசை நாடகம் என்னும் மூன்றற்கும் தனித்தனியே சங்கங்கள் இருந்தன. சேரநாட்டிலும் கொங்குநாட்டிலும் பல சங்கங்கள் இருந்தன. ஒவ்வோர் அரசரிடத்தும் ஒவ்வொரு செல்வரிடத்தும் சில புலவர்கள் இருந்துவந்தனர். அவர்கள் யாவரும் நூல்களை ஆராய்ந்தும் பல புதிய நூல்களை இயற்றியும் வந்தனர். அரசர்களும் கல்வியறிவிற் சிறந்தவர்களாக இருந்தனர். பண்டைப் புலவர்களுடைய வரிசையிற் பல அரசர்கள் காணப்படுகின்றனர்.

தமிழ்நாட்டில் கல்வி பரவியதற்குப் பல காரணங்கள் இருந்தன. கிராமந்தோறும் கணக்காயர்கள் இருந்து பாடஞ்சொல்லி வந்தமை அவற்றுள் ஒன்று. அன்றி, பல சிற்றூர்களிற் புலவர்கள் இருந்தனர். பழம் புலவர்களுட் பலர் சிற்றூர்களிற் பிறந்தவராகவே காணப்படுகின்றனர். கடியலூர் உருத்திரங்கண்ணனார், நல்லூர் நத்தத்தனார், மாங்குடி மருதனார், கோவூர்கிழார் முதலிய புலவர்களுடைய பெயர்களே அவர்கள் சிற்றூரிற் பிறந்தமையை விளக்கும். அவர்கள் தத்தம் ஊர்களிற் சிறந்த கல்வியைப் பரப்பி வந்தனர். அவர்கள் பல ஊர்களிற் சஞ்சாரம் செய்து வந்தமையின் அவர்களாற் பல ஊர்களிலுள்ளார் கல்விப்பயிற்சி பெற்றனர்.

கல்வி பரவுதற்கு மற்றொரு சிறந்த வழி உண்டு. அது கேள்வி ஆகும். ஒவ்வொரு விஷயத்தையும் ஒவ்வோரதிகாரத்தில் அடக்கிக் கூறிய திருவள்ளுவர் கல்வியைப்பற்றி அவ்வாறு கூறுதல் இயலாதென எண்ணிக் 'கல்வி' என விதிமுகமாக ஓர் அதிகாரமும் 'கல்லாமை' என மறைமுகமாக ஒன்றும் கல்வியோடு தொடர்புடைய 'கேள்வி' என்னும் அதிகாரம் ஒன்றும் கூறியிருக்கின்றனர்.

"கற்றில னாயினும் கேட்க"—(குறள்)

என்பதனால் கேள்வியின் சிறப்பு அறியப்படுகின்றது. பல நாள் கற்ற நூல்களை ஆராய்ந்து அவற்றிலுள்ள சாரங்களை அறிதலைவிட அவ்வாறு ஆராய்ந்தோர்கள் சாரமாக எடுத்துக் கூறுவதைக்கேட்டல் சிறந்ததல்லவா? செவியில் இயல்பாகத் தொளையிருப்பினும் மேலும் கேள்வியென்பதினால் தொளைக்கப்படாவிடின் அச்செவி செவிட்டுச் செவியென்றார் திருவள்ளுவர்:

"கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி."

மற்றொருவர், குற்றமற்ற கேள்வியைக் கேளாதவர்கள் காதிலுள்ள தொளைகள் அம்புகளால் உண்டாக்கப்பட்ட தொளைகளுக்கு ஒப்பாமெனக் கூறியுள்ளார்;

"எய்கணை விழுந்தொளை யன்றே செவித்தொளை
மையறு கேள்வி கேளா தோர்க்கே."—(இரும்பல்காஞ்சி)

இத்தகைய கல்வி கேள்விகளில் மகளிரும் சிறந்திருந்தனர். கல்விக்குரிய தெய்வமாக வணங்கப்படும் கலைமகள் பெண்ணாக இருக்க

மகளிர்க்குக் கல்வியுரிமை இன்றென்று கூறுதல் ஒரு வியப்பே யாகும். பண்டைக் காலத்துப் புலமை நிறைந்த மக்களுள் பெண் பாலர்கள் பலர் காணப்படுகின்றனர். ஒளவையார், வெண்ணிக் குயத்தியார், பெருங்கோப்பெண்டு, பாரிமகளிர், பொன்முடியார், காக்கைபாடினியார் நச்செள்ளையார் என்பவர்கள் அவர்களுட் சிலர். அவர்களுடைய செய்யுட்கள் பல எட்டுத்தொகை முதலிய நூல் களில் உள்ளன.

தலைவனும் தலைவியும் அழகு முதலியவற்றால் ஒத்திருத்தல் வேண்டுமென்பது இலக்கணம். அந்த ஒப்பின் வகையுள் 'உணர்வு' என்பது ஒன்று. அது கல்வியறிவேயாகும். பெண்டிர்க்குரிய இயல்புகளைக் கூறும் ஒரு சூத்திரத்தில்,

"அறிவும் நிறைவும் பெண்பா லான"

என்று தோல்காப்பியர் கூறுதலால் பெண்பாலர் கல்வியறிவிற் சிறந் திருந்தனரென்பதை உணரலாம். சீவகசிந்தாமணியில் விசயை யென்னும் அரசமாதேவியின் கல்விச்சிறப்பு,

"வண்டுமொய்த் தாற்றும் பிண்டி வாமனுர் வடித்த நுண்ணூல்
உண்டுவைத் தனைய நீயும்." —(சீவகசிந்தாமணி, 237)

என்று போற்றப்படுகிறது. சிலப்பதிகாரத்திற் கூறப்படும் கவுந்தி யடிகள் என்னும் ஆரியாங்கனையின் மூதறிவும், மணிமேகலையிற் காணப்படும் மாதவி, சுதமதி, மணிமேகலை என்பவர்களின் இயல்பு களும் மகளிரின் கல்விச்சிறப்பிற்குரிய உதாரணங்களாகும். அன் றியும் பௌத்த சமண சமயவாத நூல்கள் பல மகளிரே வாத மிட்டதாகக் கூறுகின்றன. நீலகேசி முதலிய நூல்களால் இதனை அறியலாம். பௌத்தர்களில் ஸ்திரீ சங்கங்களும் உண்டு.

௩. உயிராக்கம்.

இனி உயிருக்கு ஆக்கந் தரும் செயல்களின் நிலை கூறப்படும்.

உயிர்க்கு உறுதி பயப்பனவற்றை அறம், பொருள், இன்பம், வீடு என நான்கு வகையாகப் பெரியோர்கள் பிரித்தனர்.

அறம்.

அறம் பல்வேறு வகைப்படினும் ஈதலையே தலைமை யுடைய தாகக் கொண்டனர் பெரியோர்,

"ஈத லறம்"—(ஒளவையார்)

இந்த ஈகையானது பண்டைத்தமிழர்பால் மிகச்சிறந்திருந்த இயல்பு ஆகும். பிறர்க்கு ஈதலே வாழ்வின் பயன் என்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர். எப்பொழுது பொறுமை, ஆசை, கோபம் இன்னுச்சொல் முதலியன இன்றி இனிய முகத்தோடு இருந்தனர்.

அக்காலத்து அரசர்களெல்லாம் ஈகையிற் சிறந்திருந்தார்கள். பெருமிதம் அல்லது வீரத்திற்குரிய காரணங்களுள் கொடையும் ஒன்று. மூவகை முரசுகளுள் கொடைக்குரிய முரசு ஒன்று.

கொடுத்துப் புகழ்பெற்ற பெருவள்ளல்களின் வரலாறுகள் பல பண்டைத் தமிழ் நூல்களில் விரிந்து கிடக்கின்றன. அவர்களுடைய ஈகையே உலகை நிலைநிறுத்திப் புலமையையும் நூல்களையும் அழியாது காத்தனவென்பது மிகையாகாது. ஒரு மனிதனுக்கு உளவாகுந் துன்பத்துள் இறத்தலே பெரிது ஆகும். அந்தத்துன்பத்தினும் மிக்க துன்பம் வேறில்லை. ஈதலிலாத்துன்பம் அதனினும் மிக்க துன்பம் என்பது பண்டைத் தமிழர் கொள்கை.

> "சாதலி னின்னாத தில்லை இனிததூஉம்
> ஈத லியையாக் கடை."

என்று திருவள்ளுவர் கூறுதல் காண்க. தன்பால் வந்து இரந்தார்க்கு உரிய பொருள் உதவுதற்கு இயலாதெனின் உயிரைவிட்டு விடுவானென்று ஒருதலைவனைத் தலைவி புகழ்வதாகக் கூறும் பின்வரும் பகுதி அறிதற்குரியது:

> "இன்மை உரைத்தார்க் கதுநிறைக்க லாற்றாக்கால்
> தன்மெய் துறப்பான்." —(கலித்தொகை)

நாட்டை இழந்திருந்த குமணனென்றும் ஒரு வள்ளலை ஒரு புலவர் சென்றிரக்குங் காலத்து நாட்டை இழந்த துன்பத்தினும் அவர் ஒன்றும் பெறாது போதல் மிக்க துன்பத்தை அவனுக்கு விளைவித்தது; அதனால், தன் தலையைக் கொண்டுசென்று கொடுத்துத் தம்பி பாற்பரிசில் பெறும்படி அவன் தன் வாளை அப்புலவரிடம் கொடுத்தானென்பர்;

> "பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
> நாடிழந் ததனினும் நனியின்னா தென,
> வாடந்தனனே தலையெமக்கீய." —(புறநானூறு)

என அப்புலவரே கூறினர்.

ஈயுங்காலத்து இதனால் இப்பயன் கிடைக்குமெனக் கருதி அவர்கள் கொடுப்பதில்லை. அவ்வாறு செய்தல் தர்மத்தை விலைக்கு விற்கும் வியாபாரமென அவர் கருதினர். ஆய் என்னும் ஒருவள்ளலைப்பற்றி,

> "இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
> அறவிலை வாணிகன் ஆயலன்." —(புறநானூறு)

என்று ஒருவர் கூறுதல் காண்க. ஒரு நாள் தம்பால் இரவலர் வாராவிடின் அந்த நாள் கெட்ட நாளென்று அவர்கள் கருதினர்.

> "இரவலர் வாரா வைகல்
> பலவா குகயான் செலவுறு தகவே" —(குறுந்தொகை)

> "புரப்போர் புன்கண் கூர
> இரப்போர்க் கீயா வின்மையா னுறவே" —(புறநானூறு)

என்று அரசர் கூறும் சபதமொழிகளில் ஈயாமையை எவ்வளவு இழிவுடையதாக அவர்கள் கருதிவந்தனர் என்பது காணப்படுகிறது.

அரசர்கள் எவ்வாறு ஒழுகிவந்தனரோ அவ்வாறே குடிகளும் ஒழுகினர். அக்குடிகள் தம்பால் வந்தவர்களுக்கு வேண்டியன ஈந்து பாதுகாத்து வந்தனர்.

ஈதலுள்ளும் பசிக்கு உணவு ஈதல் தலை சிறந்த பேரற மென்பதனைத் தமிழர் உணர்ந்திருந்தனர்.

"உண்டிகொடுத்தோர் உயிர்கொடுத்தோரே" —(மணிமேகலை)

என்பதனால் அன்னதானம் உயிரைக் கொடுத்தலோடொப்பக் கூறப்பட்டது காண்க. பிறர் பசியைத் தீர்த்தவனுக்குப் பசிப்பிணியின் துன்பம் இல்லை என்பது அவர்கள் துணிபு.

"காணார் கேளார் கான்முட மானோர்
பேணுத லில்லோர் பிணிநடுக் குற்றோர்
யாவரும் வருகவென் றிசைத்துட னூட்டி" —(மணிமேகலை)

என்னும் அடிகளால் அன்னதானத்திற்குரியவர்களுள் இன்னார் சிறந்தவர்களென்பது விளங்கும். பண்ணனென்னும் ஒருபகாரி அன்னமளித்ததைச் சிறப்பித்துக் கூறும் பாடலொன்று புறநானூற்றில் உண்டு. அவனுடைய வீட்டில் உண்பவர்களது பேரொலி ஆலமரத்தில் பலபறவைகள் கூடி ஒலித்தலை ஒத்திருந்தது.

"யாணர்ப் பழுமரம் புள்ளிமிழ்ந் தன்ன
ஊண்ஒலி யரவம்."

அவன், சிறுபிள்ளைகளுக்குத் தயிர்ச் சோற்றைக் கொடுத்தான். அதனை அவர்கள் வயிறு நிறைய உண்டுவிட்டு, எஞ்சியதைக் கையில் எடுத்துக்கொண்டு வரிசையாகத் திரும்பிச் சென்றார்கள். அவ்வாறு செல்வது எறும்புகள் தம் முட்டையைக் கொண்டு வரிசையாகச் செல்லுதல்போல உள்ளதென்று கிள்ளிவளவனென்னும் அரசன் கூறுகின்றான்.

"முட்டை கொண்டு வற்புலஞ் சேரும்
சிறுநுண் எறும்பின் சில்லொழுக் கேய்ப்பச்
சோறுடைக் கையர் வீறுவீ றியங்கும்
இருங்கிளைச் சிறாஅர்."

அப்பண்ணன், "பசிப்பிணி மருத்துவன்" என்றும் சிறப்பிக்கப் படுகின்றான். அன்னதானத்தின் பெருமை மணிமேகலையில் மிகச் சிறப்பித்துக் கூறப்படுகின்றது. பெரும்பாணாற்றுப்படையில் வேடர், இடையர், வலைஞர் முதலியோர் தம்பால் வந்த பாணர் முதலியவர்களுக்கு உணவு அருத்தி உபசரித்த செய்தி மிக்க அழகாகக் கூறப்படுகிறது. வீட்டிலுள்ள பெண்கள் கணவர்கள் இல்லையாயின் தங்கள் பிள்ளைகளை அனுப்பி 'மாமன்' முதலிய முறைகளைச் சொல்லி விருந்தினரை அழைத்து வரச்செய்து விருந்தூட்டி அனுப்புதலுண்டு.

அறத்தில் ஈகையைப்பற்றிய செய்திகள் இதுவரையில் ஒருவாறு கூறப்பட்டன. ஈகையையன்றிப் பிற அறங்கள் பலஉண்டு. திருக்குறள், நாலடியார் முதலிய நூல்கள் பலவகை அறங்களை நன்கு

விளக்கிக் கூறுகின்றன. ஈகைக்குப் பின்வருவது ஒழுக்கம். ஒழுக்கம் உயிரினும் சிறந்ததாகக் கருதப்பட்டது. பொய்யாமை, செய்ந் நன்றியறிதல் முதலிய பல அற இயல்புகள் தமிழர் வாழ்க்கையிற் சிறந்திருந்தன. பாவங்களுள் உய்தி இல்லாதது செய்ந் நன்றி மறத்தல் என்பதை அவர்கள் உறுதியாக நம்பினர்.

"நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறம்பாடிற்றே." —(புறநானூறு)

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு." —(குறள்)

உள்ளதைக் கொண்டு திருப்தி யடைதலாகிய ஒரு சிறந்த குணம் அவர்கள்பால் இருந்தது. அஃது அவர்களுடைய இன்பவாழ்விற்கு அடிப்படையாக இருந்தது.

"ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே." —(புறநானூறு)

பொருள்.

பொருள் வருவாய்க்கு உரியவழி உழவும் வாணிகமும் ஆம். பொருளை ஈட்டிக் காத்து வருவாய்க்குத் தகச்செலவியற்றும் தன்மை அக்காலத்தே இருந்தமையின் அவர்களது வாழ்க்கை இன்பமுள்ளதாக இருந்தது.

பொருள் என்னும் பிரிவில் அரசியலைத் திருவள்ளுவர் அமைக்கிறார். அவரைப் பின்பற்றி இப்பிரிவில் பண்டைத்தமிழரசர் இயல்பு கூறப்படும்.

அரசர்கள் தமக்குக் கிடைத்த அதிகாரம் பிறருக்கு நன்மை செய்யும் பொருட்டே என்பதை அறிந்திருந்தனர். குடிகளுடைய நலத்தையே தம் நலமாகக் கொண்டிருந்தனர். காவலன் கோல் கோடின் உலகு அழிந்துவிடும் என்பது அவர்கள் கொள்கை.

"குடிபழி தூற்றுங் கோலே னாகுக" —(புறநானூறு)

என்று சபதங் கூறுதலால், குடிகளால் தூற்றப் படுதலை எவ்வளவு அஞ்சினர் அரசர் என்பது விளங்கும். அவர்கள் குடிகளுக்கு இன்பந்தரும் செயல்களை ஆராய்ந்து செய்தனர். உழவிற்குப் பயன் படும் நீர் நிலைகளை அமைத்தனர்.

"நிலனெளி மருங்கி னீர்நிலை பெருகத்
தட்டோ ரம்ம விவட்டட் டோரே." —(புறநானூறு)

என்று ஒரு புலவர் அரசனொருவனுக்குக் கூறும் அறிவுரையில் நீர் நிலைகளை அமைக்கும் கடமையை எடுத்துக் காட்டுதலைக் காணலாம். கரிகாலச் சோழன் காவிரிக்குக் கரைகட்டினான். அவன் நாட்டுப் புலங்களின் விளைவைப்பற்றி, "பிற நாடுகளில் ஏரி நீராலும் ஏற்றத்தினால் இறைக்கும் நீராலும் விளையும் தானியங்கள் காவிரி சூழ்ந்த

கரிகாலனது சோழ நாட்டில் நெல்லை அரியும் பொழுது சிந்துகின்ற நெல்லளவேயாகும்" என்று ஒருபுலவர் கூறுகின்றார்.

"எரியும் எற்றத்தி னும் பிறநாட்டு
வாரி சுரக்கும் வளனெல்லாம்—ஓரின்
அரிகாலின் கீழுகூஉம் அந்நெல்லே சாலும்
கரிகாலன் காவிரிசூழ் நாடு."

ஆறிலொரு பங்குவரிவாங்கி அவ்வரிப்பொருளைக் குடிகளின் நலத்திற்குச் செலவிட்டு வந்தனர். மிதமான வரி வாங்கவேண்டுமென்று ஓரரசருக்கு ஒரு புலவர் பின்வருமாறு அறிவுறுத்துகிறார். "வயலிலே உள்ள நெல்லை அறுத்துச் சிறிது சிறிதாக யானைக்குக் கவளமாக இட்டு வரின் நிறைவில்லாத வயல் நெல்லும் பலநாளுக்கு ஆகும். நூறுவயலாக இருந்தாலும் யானை தனியே உட்புகுந்து உண்டால் வாயிற் புகுவதிலும் அதன்காலால் அழிக்கப்படுவது அதிகமாகும்".

"காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகும்
நூறுசெறு வாயினுந் தமித்துப்புக் குணினே
வாய்புகுவ தனினும் கால்பெரிது கெடுக்கும்."—(புறநானூறு)

அரசர்கள் தங்கள் ஆட்சியை நடத்துவதற்குத் துணையாக அமைச்சர், பிரதானி, சான்றோர் முதலியோரை அமைத்துக் கொண்டிருந்தார்கள்: ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்னும் இரண்டு குழுவினர் அவர்களது அரசியல் நன்கு நடைபெற உதவி புரிந்து வந்தனர். ஐம்பெருங்குழுவில் மாசனம் ஒருவகையார்.

வழக்குக்களைத் தீர்த்து நியாயம் வழங்குவதில் பண்டைத் தமிழரசர்கள் நடுவுநிலைமை வழுவாமல் இருந்து வந்தனர்: அறங்கூறவையமென்னும் தருமாசனங்களை நிறுவி அவற்றில் அறிவிலும் பிராயத்திலும் முதிர்ந்த சான்றோர்களைக் கூட்டி நியாயம் வழங்கச் செய்தார்கள்.

"அறநிலை திரியா வன்பி னவையத்துத்
திறனில் ஒருவனை நாட்டி மெலிகோல்
செய்தே னாகுக" —(புறநானூறு)

என்று ஓரரசன் சபதஞ் செய்கின்றான். இதனால் அறங்கூறவையத்தில் தக்கசான்றோர்களை நாட்டுவதில் அக்காலத்து அரசர்களுக்கு இருந்த ஊக்கமும் சான்றோரல்லாதார் நாட்டப்படின் கோல்கோடுமென்று எண்ணியிருந்த கொள்கையும் புலப்படுகின்றன.

"பிணக்கறுக்கு மூத்தோரை யில்லா வவைக்களனும்"
—(திரிகடுகம்)

என்பதில் பிராயத்தில் முதிர்ந்த சான்றோர்கள் அவைக்களத்திலிருக்கவேண்டுமென்னும் விதி கூறப்படுகின்றது.

இளமையிலேயே அரச வுரிமையைப் பெற்ற சோழன் கரிகாலனிடத்து நியாயம் பெற வேண்டுமென்று இருவழக்காளர் வந்தனர்.

அவர்கள் கரிகாலனைக் கண்டவுடன், 'இவன் மிக்க இளைஞனாக இருக்கின்றானே. இவன் நன்றாக நியாயம் வழங்குவானா' என்று ஐயமுற்றார்கள். அதனைக்குறிப்பாலறிந்த கரிகாலன் அரண்மனையுட் புகுந்து ஒரு முதியோன்போல வேடம் புனைந்து வந்து அவர்களது வழக்கைத் தீர்த்தனன். இந்த வரலாற்றாலும் அவையத்தார் முதியோராயிருத்தல் வேண்டு மென்பது விளங்குகின்றது. இத்தகைய அவையங்கள் உறந்தை, மோகூர், மதுரை முதலிய நகரங்களில் இருந்தனவென்று அறியப்படுகின்றது.

அரசர்கள் எப்பொழுதும் நற்சுற்றத்தினருக்கு இடையே இருந்து அரசியலை நடத்தி வந்தார்கள். அவர்கள் அரசர்பாலிருந்த நற்குணங்களை எடுத்துப்பாராட்டி மேன்மேலும் அவைபெருகுமாறு செய்து வந்தார்கள். சிறுபாணாற்றுப் படையில் பாட்டுடைத் தலைவனுடைய சுற்றத்தார்களுள் அறிஞர்கள் அவனது செய்ந்நன்றியறிதல் முதலிய நற்குணங்களைப் புகழவும், அஞ்சினோரைக் கொல்லாமல் விடல் முதலிய வீரச்செயல்களை வீரர்கள் புகழவும் அறிவுடைமை முதலியவற்றைப் பரிசில்பெற வந்தவர்கள் புகழவும் அவன் வீற்றிருந்தானென்று கூறப்பட்டுள்ளது. அதனால் இன்னார் இன்னார் இந்த இந்தச் செயல்களைப் புகழவேண்டு மென்னும் முறை உண்டென்று தெரிகின்றது. அரசனைச் சூழ்ந்துள்ளவர்கள் அவன்பால் ஒரு காரியங் கருதி வந்தவர்கள் அதனை வெளியிட்டுக் கூற அஞ்சினராயினும் தாமே அறிந்து அவனிடம் அவர்களது குறைகளைக் கூறி ஆவன செய்விக்கும் இயல்புடையவர்களாக இருந்தனர்.

" நல்லோர் குழீஇய நாநவி லவையத்து
வல்லா ராயினும் புறமறைத்துச் சென்றோரைச்
சொல்லிக் காட்டிச் சோர்வின்றி விளக்கி
நல்லிதின் விளக்குமவன் சுற்றத் தொழுக்கமும்."

—(மலைபடுகடாம், 77-80)

இவ்வாறு அரசியல் எல்லோருக்கும் நன்மையை விளைத்து ஒழுங்காக நிகழ்ந்தது.

இன்பம்

இனி, பண்டைத் தமிழரது இன்ப இயல் கூறப்படும். "காதலிருவர் கருத் தொருமித்தாதரவு பட்டதே இன்பம்" என்பது ஔவையார் வாக்கு. தலைவனும் தலைவியும் ஒன்றுபட்ட கொள்கையோடு இல்லறம் நடத்தி வருதலே இன்பமென்பது பண்டைத் தமிழர் கொள்கை.

" அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது."

—(குறள்)

இந்த இல்வாழ்க்கையில் விருந்தோம்புதல் தலைசிறந்த அறமாக வைக்கப்பட்டுள்ளது. தலைவி, தலைவனிடத்தே ஊடினபொழுது அதற்கு அஞ்சிய தலைவன் ஒரு விருந்தினனோடு இல்லிற் புகுவானேல் அவள் ஊடலைமறந்து விருந்தினரை உபசரிக்கத் தொடங்கு

வாள். தலைவனும் தலைவியும் இருதலைப் புள்ளின் ஒருயிர்போல அன்பாற் பொருந்தி யின்பம் நுகர்ந்து வந்தனர். அகப்பொருளிலக்கணம் தமிழிற் சிறந்திருத்தல் தமிழரது இன்ப ஒழுக்கத்தின் பெருமையையும் வரையறையையும் காட்டும்.

தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே உள்ள அன்பின் திறத்தைப் பண்டைத் தமிழ் இலக்கிய இலக்கண நூல்கள் பலபடப் பாராட்டிப் பேசுகின்றன. அந்த அன்புடைய வாழ்க்கையைப் பொருளாகக்கொண்டு பாடப்பட்ட செய்யுட்கள் மிக்கநயமுடையனவாக உள்ளன. தலைவிக்குத் தலைவன்பாலுள்ள அன்பை விளக்கும் பின் வரும் செய்யுட்கள் இங்கு அறிதற்குரியன :

"அன்னாய் வாழிவேண் டன்னைநம் படைப்பைத்
தேன்மயங்கு பாலினு மினிய வவர்நாட்
டுவலைக் கூவற் கீழ
மானுண் டெஞ்சிய கலிழி நீரே." —(ஐங்குறுநூறு, 203)

"தோழீ, நீ வாழ்வாயாக. நம்முடைய இடத்தில் தேனோடு கலந்த பாலையுண்பதிலும் என்தலைவரது நாட்டில் தழைக்குவியலோடு கூடிய பள்ளத்தின் கீழுள்ளதும் மான்கள் உண்டு எஞ்சியதுமாகிய நீர் இனியதாயிருக்கின்றது" என்பது இதன்பொருள்.

"கொண்ட கொழுநன் குடிவறனுற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ்சோ றுள்ளாள்
ஒழுகுநீர் நுணங்கறல் போலப்
பொழுதுமறுத் துண்ணுஞ் சிறுமது கையளே."

"தனது கணவனுடைய குடி வறுமை உற்றதாக, தன்னை ஈன்ற தந்தை வீட்டிலுள்ள வளம் பொருந்திய உணவை விரும்பாதவளாகி பொழுது இடைவிட்டு உண்ணுகின்ற சிறிய வன்மையுடையவள்" என்பது இதன் பொருள். இச் செய்யுளில் தலைவி தலைவனோடு தானும் வறுமைத் துன்பத்தைப் பொருந்தியிருந்த அன்பின் திறன் புலப்படுதலைக் காணலாம்.

"ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது
வானோ ரமுதம் புரையுமா லெமக்கென"

என்பது தொல்காப்பியச் சூத்திரம். தலைவன் தலைவியினால் தொடப்பட்ட உணவு எத்தகையதா யிருப்பினும் அமுதம் போன்றதெனக் கூறுவான். இதில் தலைவனது அன்பு புலப்படுகின்றது.

வீடு.

இனி, தமிழர் வீட்டு நெறியிலொழுகி வந்தமை கூறப்படும்.

அவர்களுக்குக் கடவுள் பால் அன்பு மிக்கிருந்தது. எல்லாவற்றிற்கும் தலைவன் இறைவனே என்னும் கொள்கையை உடையவர்கள் அவர்கள். நிலத்தைக் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என, ஐந்து பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு

தெய்வத்தைத் தலைமையுடையதாகக் கொண்டு வழிபாடு செய்து வந்தனர். குறிஞ்சிக் கடவுளாகிய முருகனை வெறியாட் டெடுத்து வழிபட்டனர். திருமுருகாற்றுப்படை யென்னும் நூலில் முருகனது வழிபாட்டு முறைகளும் அவன் இருக்கும் இடங்களும் கூறப்படு கின்றன. பாலை நிலத்தார் துர்க்கையை வழிபட்டனர். முல்லை நிலத்தார் திருமாலைக் குரவையாடல் முதலியவற்றால் வழிபட்ட னர். மருத நிலத்தினர் இந்திரனை வழிபட்டனர். நெய்தல் நிலத் தினர் சுறவுக்கோடு நட்டு வருணனை வணங்கினர். இத் தெய்வங் களை யன்றி வேறு பல தெய்வங்களையும் அவர்கள் வழிபட்டு வந்த னர். ஊர்களிற் பல கோயில்கள் இருந்தன. "ஊரானோர் தேவ குலம்" என்னும் இலக்கண மேற்கோளினால் ஊர்கடோறும் கோயில் இருந்தமையை யறியலாம்.

"பணிய ரத்ததநின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே"

என்பதில் சிவபெருமான் திருக்கோயிலை ஓரரசன் வலம் வருதலைப் பற்றிய செய்தி கூறப்படுகின்றது. சிலப்பதிகாரத்தால் காவிரிப்பூம் பட்டினத்தில் பல சமயத் தெய்வங்களுக்குரிய கோயில்கள் இருந் தனவென்று தெரிகின்றது. தெய்வங்களையன்றி அவர்களது ஆயு தங்களை வழிபடும் முறையும் இருந்துவந்தது. இந்திரனது வச்சி ராயுதம், முருகனது வேல், சிவபிரானது சூலம் என்பவற்றை வழி பட்டனர். பல தெய்வ விழாக்கள் நடந்தன. காவிரிப்பூம்பட்டி னத்தில் இந்திரவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. சிவபெரு மானுக்குரிய பங்குனி உத்திர விழா உறையூரில் நிகழ்ந்தது. திரு மாலுக்குரிய ஓணவிழாவைப் பற்றிய செய்தி மதுரைக்காஞ்சி யென் னும் நூலிற் கூறப்பட்டிருக்கின்றது. மதுரையில் ஏழுநாளில் ஒரு விழா நடந்தது. ஆவணியவிட்டவிழா, கருவூர் உள்ளிவிழா என்பன வேறு சில விழாக்கள்.

வைதிகவாழ்வும் தமிழ் நாட்டில் இருந்தது. அந்தணர்களைப் பற்றிக் கூறப்படும் இடங்களில் அச்செய்திகளைக் காணலாம். முக்கோலந்தணர் என்னும் ஒரு பிரிவினர் இலக்கியங்களிற் காணப்படுகின்றனர். அந்தணர்கள் காலையிலெழுந்து வேதமோது வதற்குப் பூவில் வண்டு ஊதுதலை உவமையாக மதுரைக்காஞ்சி கூறுகின்றது. விடியற்காலையில் அவர்கள் வேதம் ஓதுவதினால் விடிந்தமையை யறிந்து மதுரையிலுள்ள மக்கள் துயிலெழுவார் களாம்.

"நான்மறைக் கேள்வி நவில்குர லெடுப்ப
ஏம வின்றுயி லெழுத லல்லதை
வாழிய வஞ்சியுங் கோழியும் போலக்
கோழியி னெழாதெம் பேரூர் துயிலே." —(பரிபாடல்)

உலகம் நிலையாதென்பதனையும் நிலைத்த இன்பத்தைப் பெறு தற்கு மெய்யுணர்தல் இன்றியமையாதென்பதையும் அதற்குத்

தவம் கருவியென்பதனையும் தவத்தினும் சிறந்ததொன்றில்லை யென்பதனையும் பண்டைத்தமிழர் நன்கு அறிந்திருந்தனர். உலகம் நிலையாமையை உணர்ந்து பற்றற்றுத் தவமுயலும் தன்மை சிறந்ததாக மதிக்கப்பெற்றது.

"வையமுந் தவமுந் தூக்கின் தவத்திற்கு
ஐயவி யனைத்து மாற்றாது" —(புறநானூறு)

என்பதனால் தவத்தின் பெருமை புலப்படுகின்றது. பலவகை மதத்தினரும் தவத்தைப் போற்றினர். பலவகை மதத்தினரது தவச்சாலைகள் மதுரை முதலிய இடங்களில் இருந்தன. துறவியர்கள் பலர் தமிழ் நாட்டில் இருந்தனர். தாபதர்களென்று அவர்கள் வழங்கப்பட்டனர். கடவுளையும் வானையும் வாழ்த்திய திருவள்ளுவர் துறந்தார் பெருமையைப் பின்பு எடுத்துக் கூறியதனாலேயே அவர்கள் பால் அக்காலத்துத் தமிழர்களுக்கிருந்த நன்மதிப்பு அறியப்படும்.

"நாலிரு வழக்கிற் றாபதப் பக்கம்" —(தொல்காப்பியம்)

என்னும் சூத்திரம் துறவியரது எண்வகை ஒழுக்கங்களைக் கூறுகின்றது.

உலகம் நிலையாமையைக் கூறும் செய்யுட்கள் பல தமிழ் நூல்களில் உண்டு. அச் செய்யுட்கள் புறப்பொருளில் காஞ்சித்திணையின் பாற்படும். அப்படி ஒரு திணைவகுத்துக்கொண்ட தனாலேயே தமிழர்கள் மெய்யுணர்வை யடையவேண்டுமென்று செய்து வந்த முயற்சியினை அறியலாம். அறிவிற் சிறந்த ஆன்றோர்கள் பலர் வீரத்திலும் கொடை முதலியவற்றிலும் சிறந்த அரசர்களுக்கு உலக நிலையாமையை எடுத்துக்கூறி மெய்யுணர்வு பெறவேண்டுமென்று அறிவுறுத்தியிருக்கின்றார்கள்.

"பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளானு மாணாப் பிறப்பு"

என்றகொள்கை பண்டைத்தமிழர் வாழ்வில் சிறந்திருந்தமையின் அவர்கள் பற்றற்ற நிலையைப் பெறுதற்குரிய முயற்சிகளைச் செய்து வந்தனர். கந்தழி என்று போற்றப்படும் ஒன்றினைப்பெற அவர்கள் முயன்றனர். கந்தழியென்பது சார்பினாற் றோன்றாது பற்றற்று நிற்கும் ஒரு பொருள். அதுவே வீட்டின்பமாம்.

3. பண்டைத்தமிழர் நாகரிகம்.

இனி, பண்டைத்தமிழர் நாகரிகங்களிற் சில கூறப்படும்:

நாகரிகம் என்பதற்குக் கண்ணோட்டமென்றே பொருள் கொண்டனர் பண்டைத்தமிழர்.

"முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சு முண்பர் நனிநா கரிகர்." —(நற்றிணை)

எனினும் இக்காலத்தில் அச்சொல் நகர சம்பந்தமானது என்னும் பொருளில் வழங்குகின்றது. அந்த நாகரிக வாழ்க்கையிலும் பண்டைத் தமிழர் சிறந்திருந்தனர் என்பதற்குப் பல ஆதாரங்கள் உண்டு.

ஒரு நாடு நாகரிகத்திற் சிறந்திருந்தமையை அந்நாட்டு நகரங்களின் சிறப்பு, வியாபாரம், கலைகள், வீரம், புலமைத்திறம் முதலியவற்றால் அறியலாம். பண்டைத்தமிழர்கள் இவ்வகைகளிற் சிறந்த நிலையைப் பெற்றிருந்தனர்.

நகர அமைப்பு.

தமிழ் நாட்டில் அக்காலத்தில் நகரங்கள் பல இருந்தன. அவைகள் உயர்ந்த நாகரிக அமைப்புக்களோடு விளங்கின. ஒழுங்கான வீதிகளும், முடுக்குத் தெருக்களும், முச்சந்தி, நாற்சந்தி, ஐஞ்சந்தி என்னும் சந்திகளும் அம்பலம் பொதியில் மன்றம் முதலிய பொது இடங்களும் இருந்தன. நகரத்தில் வரும் சாக்கடை நீர் பூமிக்கு அடியில் ஓடுமாறு செய்யப்பட்டது. அதற்குக் கரந்து படை என்று பெயர். வேண்டியபோது நீரைக் கொணர்ந்தும் வேண்டாதபோது போக்கியும் விடும் எந்திரங்களும் கருப்புநீர்க் கேணிகளும் மாலைக்காலத்தில் நகரமாந்தர்கள் உலாவிவருவதற்குரிய சோலைகளும் இருந்தன. பலவகைக் கோயில்கள் இருந்தன. காவிரிப்பூம்பட்டினம், உறையூர், மதுரை, வஞ்சி, காஞ்சி முதலிய நகரங்களைப்பற்றிப் பழைய தமிழ் நூல்களிற் பலவகைச் செய்திகள் கூறப்பட்டுள்ளன.

ஊர்களில் இருந்த வீடுகள் பலவகைக் கட்டுக்களுடன் நன்றாக அமைந்திருந்தன. இன்னார் இன்னார்க்கு இந்த இந்த முறையில் வீடுகள் அமைக்கவேண்டும் என்னும் நியதி இருந்தது. கதவு நிலைகள் சித்திரங்களால் அழகு பெற்றிருந்தன. நிலையில் தெய்வங்களின் படிமங்களை அமைத்துப் பூசித்து வந்தனர். சுவர்களிற் சித்திரங்கள் எழுதப்பட்டன.

வியாபாரம்.

அக்காலத்தில் உள்நாட்டு வியாபாரமும் வெளிநாட்டு வியாபாரமும் நன்றாக நடைபெற்றன. கப்பல் வியாபாரம் சிறந்திருந்தது. புகார், தொண்டி, முசிரி, கொற்கை முதலிய பல துறைமுகப் பட்டினங்கள் இருந்தன. அப்பட்டினங்களில் இடையறாது ஏற்றுமதி, இறக்குமதி நிகழ்ந்துகொண்டிருந்தன. காவிரிப்பூம்பட்டினத்துத் துறைமுகத்தைப்பற்றிய செய்தி பட்டினப்பாலை யென்னும் நூலிற் கூறப்பட்டுள்ளது. அங்கே கடற்கரையிலுள்ள தெருக்களிற் பெரிய பண்டகசாலைகள் இருந்தன. கப்பலில் இருந்து இறங்கிய பண்டங்கள் மலைபோல் குவிந்திருந்தன. கப்பல்களுக்கு ஊர் சமீபத்தில் இருப்பதைக் காட்டும் விளக்குகள் இருந்தன. கலங்கரை

விளக்கமென்பது அதன் பெயர். கடற்கரையில் இருந்த வீடுகளிலுள்ள விளக்குகளை மரக்கலத்திலுள்ளார் அறிந்து துறைமுகத்திற்கு வருதலும் உண்டு. பண்டகசாலைகளிலுள்ள பண்டங்களைக் காக்கும் காவலாளர்கள் தங்கள் கடமையைச் செவ்வனே ஆற்றி வந்தனர். இறக்குமதி செய்யும் பொருள்களுக்கும் ஏற்றுமதி செய்யும் பண்டங்களுக்கும் சோழருடைய புலிப்பொறியாகிய முத்திரையை இட்டனர். அப்பண்டங்களுக்குச் சுங்கம் வாங்கி வந்தனர். கப்பல்களில் யானை குதிரை முதலியன பிறநாட்டிலிருந்து வந்தன.

> "பொன்மலிந்த விழுப்பண்டம்
> நாடார நன்கிழிதரும்
> ஆடியற் பெருநாவாய்" —(மதுரைக்காஞ்சி)

என்பதில் விலையுயர்ந்த பண்டங்களைக் கப்பல் கொணரும் செய்தி கூறப்பட்டுள்ளது.

> "நனந்தலை தேத்த நன்கல னெய்ம்மார்
> புணர்ந்துடன் கொணர்ந்த புரவியொ டனைத்தும்"

என்பதிற் குதிரைகள் கப்பலில் வந்தமை கூறப்படுதல் காண்க. யவனம், ஈழம் முதலிய பிறநாட்டோடு தமிழ்மக்கள் வியாபாரம் செய்துவந்தனர்.

உள்நாட்டு வியாபாரத்திற்கும் சுங்கவரி உண்டு. வியாபாரிகள் தங்கள் பண்டங்களோடு செல்லும் வழிகளில் அவர்களைப் பாதுகாத்தற்குரிய காவலாளர்கள் இருந்தனர். சுங்கம், 'உல்கு' என்னும் பெயரால் வழங்கப் பெறும். அரசனுக்கு வரும் பொருள் வகையில் உல்கும் ஒன்று.

நகரங்களில் பெரிய அங்காடிகள் இருந்தன. காலைக் கடையாகிய நாளங்காடியும் மாலைக் கடையாகிய அல்லங்காடியும் இருந்தன. இன்ன இன்ன பொருள்கள் இன்ன இன்ன இடத்தில் விற்கப்படும் என்பதைக் குறிப்பித்தற்கு அவ்வவ் விடத்தில் கொடிகள் இருந்தன. இராக்காலத்தில் விளக்குகள் வைக்கப்பட்டிருந்தன. கடைகளிலும் தட்டுக்களிலும் பொருள்களை வைத்துக் கொண்டு வீட்டு நிழலிலிருந்து விற்பவர்களும் உண்டு.

இத்தகை நிலையில் வியாபாரம் இருந்தது. அதனை நடத்தும் வாணிகர் சிறந்த நிலையில் இருந்தனர். அவர்களில் இப்பர், கவிப்பர், பெருங்குடி வாணிகரென்னும் மூன்றுவகையினருண்டு. அவர்கள் லாபத்தை வெளிப்படையாகச் சொல்லி விற்றனர். அரசர்களாற் பெரிதும் மதிக்கப்பெற்றனர். அன்றி, அவர்களால் எட்டி என்னும் பட்டத்தையும் அதற்குரிய பூவையும் பெற்றனர்.

கலைகள்.

பண்டைத் தமிழர் வாழ்க்கையைச் சிறப்பித்த கலைகள் பல. சிற்பம், ஓவியம், நெய்தற்றொழில், பொன்வேலை, மண்ணினற்

3

பாவை முதலியன செய்தல் முதலிய பலவற்றில் அவர்களுடைய முயற்சி சிறந்து விளங்கிற்று. மண்ணிலும் மரத்திலும் கல்லிலும் பலவகைச் சிற்பங்கள் அமைக்கப்பட்டன. சுவரிலும் துணிகளிலும் பல ஓவியங்கள் எழுதப்பட்டன. மெல்லிய ஆடைகள் நெய்யப்பட்டன. அவை பாம்பின் தோலைப் போலவும் மூங்கிலின் உள்ளிடத்தை உரித்தால் வரும் தோலைப்போலவும் மிக்க மெல்லியனவாக இருந்தன. தொட்டாலன்றிக் கண்ணுக்குத் தெரியாத ஆடைகள் இருந்தன. பட்டினாலும் மயிரினாலும் பல ஆடைகள் செய்யப்பட்டன. பொன் வெள்ளி மணி முதலியவற்றால் பலவகை அணிகள் செய்யப்பட்டன. மணிகளின் இலக்கணங்களை அவர்கள் நன்கறிந்திருந்தனர்.

வீரம்.

தமிழ்ப் பொருளிலக்கணத்துள் ஒரு பகுதியாகிய புறப்பொருள் பெரும்பாலும் வீரச் செயல்களைப்பற்றியே அமைந்தது. அதனால் அவர்களது வீரச் சிறப்புப் புலப்படுகின்றது. அரசர், மறவர் முதலியோரின் வீரத்தைப்பற்றிய பல வரலாறுகள் பழைய நூல்களிற் சொல்லப்பட்டுள்ளன. பகைவர்களை எதிர்த்து முகத்திலும் மார்பிலும் பெறும்புண்ணை விழுப்புண் என்பர். (விழுப்புண்—சிறப்பையுடைய புண்.) அந்த விழுப்புண் படாத நாட்களைக் கெட்ட நாளாக வீரர் கருதினர். போரென்றால் வீரர்களுக்கு மிக்க இன்பம் உண்டாகும்.

"போரெனிற் புகலும் புனைகழல் மறவர்."—(புறநானூறு.)

மறக்குடியிற் பிறந்த பெண்மக்கள் தங்கள் பிள்ளைகள் மிக்க வீரராக இருத்தலை ஒரு பெருமையாகக் கருதினர்.

"களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" —(புறநானூறு)

என்பது ஒரு வீரத்தாயின் கூற்று. மகளிரது வீரக்கருத்தைப் புலப்படுத்தும் பலதுறைகள் புறத்திணையில் உள்ளன.

வீரர்கள் மிக்கிருந்த பலபடைகளை அரசன் உடையவனாக இருந்தனன். போர்க்குச் சென்றபிறகு பகைவருடைய நாட்டிலே பாசறை அமைத்துக்கொண்டு தங்குவார்கள். முல்லைப் பாட்டு என்னும் நூலில் இத்தகைய பாசறை ஒன்றின் அமைப்பு மிக்கவிரிவாகச் சொல்லப்பட்டுள்ளது. படைகள் பலவிதமாக இருந்தன. பிறநாட்டிலிருந்து வந்த வீரர்களும் தமிழர்படைக்கு உதவி செய்தனர். பல வேறு பாஷைகளைப் பேசும படைகளைத் தமிழரசர்கள் உடையவர்களாக இருந்தனர். தமிழ்நாட்டுப் படைகளும் பிறநாட்டு அரசர்களுக்கு உதவி செய்து வந்தன.

படைத் தலைவர்களை அரசர்கள் மரியாதையோடு நடத்திவந்தனர். அவர்களுக்குப் பட்டங்களும் நிலங்களும் வழங்கப் பெற்றன. 'ஏனாதி' என்பது அப்பட்டங்களுள் ஒன்று; அப்பட்டத்திற்குரிய மோதிரம் ஒன்று உண்டு. அஃது ஏனாதி மோதிரம் எனப்படும்.

வீரர்களிடத்தில் அரசர்களுக்கும் மக்களுக்கும் நன் மதிப்பு இருந்தது. பாசறையில் இருந்த அரசன் ஒருவன் நள்ளிரவில், முதல் நாளில் யுத்தம் செய்து புண்பட்ட வீரர்களைப் பார்த்து ஆறுதல் கூறுதற்காக வெளிவந்து வாடைக்காற்றும் மழைத்துளியும் வீசுதலைப்பொருட்படுத்தாது ஒவ்வொரு வீரனையும் காணும் செய்தியொன்று பின்வரும் அடிகளிற் கூறப்பட்டிருக்கின்றது.

" களிறுகளம் படுத்த பெருஞ்செய் யாடவர்
ஒளிறுவாள் விழுப்புண் காணிய புறம்போந்து
* * * *
புடைவீ ழந்துகி லிடவ்விற் றழீஇ
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்." —(நெடுநெல்வாடை)

போரிற் பொருது இறந்த வீரர்களின் ஞாபகக் குறியாக வீரக்கல் நாட்டி அதில் அவ்வீரர்களது பெயர்களையும் செய்த செயல்களையும் எழுதி வழிபட்டு வந்தனர்.

போர் முறைகள் பல உண்டு. கப்பற் போரும் நடந்துவந்தது. நெடுஞ்சேரலாதனும் அவன் மகன் செங்குட்டுவனும் பகைவரோடு கப்பற் போர் செய்தனர்.

புலவர் நிலை.

ஒரு நாட்டின் சிறப்பினைப் பிற்காலத்தவர்கள் அறியும்படி செய்துவைக்கும் உபகாரிகள் புலவர்களே. அவர்களை ஒருநாடு எவ்வளவு உயர்வாகப் போற்றி வந்ததோ அவ்வளவு அந்நாட்டின் நாகரிகம் சிறந்திருந்தது என்று கூறலாம். பண்டைத் தமிழ்ப் புலவர்கள் அரசர்களைவிடச் சிறந்தவர்களாக மதிக்கப்பட்டனர். அரசர்கள் அவர்களை ஆசிரியர் களாகக் கொண்டு வழிபட்டுவந்தனர். அரசர்கள் தகுதியல்லாதவற்றைச் செய்தகாலையில் அவர்களை இடித்து அறிவுரை கூறும் பேராற்றல் புலவர்களுக்கு உண்டு. அவர்கள் தடையின்றி எங்குஞ் செல்லலாம். பகையரசர் நட்பரசர் என்னும் வேறுபாடு அவர்களுக்கு இல்லை. அரசர்கள் புலவர்களைப் போற்றிவந்த பல வரலாறுகள் உண்டு. புலவர்களாற் பாடப்பெறுதலைப் பெரும் பாக்கியமாக அக்காலத்து அரசர்கள் எண்ணினர். அந்தப் புகழ் பேரின்பத்தை ஈயுமென்பது அவர்கள் கொள்கை.

இருபெருவேந்தர் போர் புரிகையில் அவர்களுக்கிடையே நின்று புலவர்கள் சமாதானம் செய்வித்தனர். வேந்தர்களுக்குத் தூதாகச் சென்று நன்மைபுரிவித்தனர். பேகனென்னும் சிற்றரசன் ஒருவன் தன் மனைவியாகிய கண்ணகி என்பவளைத் துறந்திருந்த பொழுது பல புலவர்கள் அவனுக்கு அறிவுரைகூறி மீண்டும் அவளை ஏற்குமாறு செய்தார்கள்.

இவ்வளவு உயர்நிலையிற் புலவர்கள் இருந்தமைக்குக் காரணம் அவர்கள் பால் இருந்த பெருந்தன்மையே. அவர்கள் யாரையும்

மதியாமல் அறவழியே நடந்தனர். 'நல்லிசைப்புலவர்கள்' என்றும் 'சான்றோர்' என்றும் அவர்கள் வழங்கப்பட்டனர். அரசர்கள் அல்லா நெறியில் நடந்தால் அவர்களைக் கண்டிக்க அஞ்சார்கள். தங்களைக் காத்துக் கொள்ளவேண்டுமென்னும் எண்ணம் அவர்களுக்கு இல்லை. பிறருக்கு நன்மை செய்யவேண்டுமென்றும் தம்மைச் சார்ந்தார்களைக் காப்பாற்றவேண்டுமென்றும் அவர்கள் எண்ணினர். பொய்யாமையும் செய்ந்நன்றியறியும் குணமும் அவர்கள்பால் மிகச் சிறந்திருந்தன. உலகியலறிவு அவர்களுக்கு நன்றாகத் தெரியும். கடவுள் படைப்பிலமைந்த பலவகைப் பொருள்களைக்கண்டு அவற்றின் அழகிலும் செயல்களிலும் ஈடுபட்டனர். அவர்களுடைய செய்யுட்களில் உவமையாகக் காணப்படுவன இயல்பாக அமைந்த பொருள்களாக இருக்கும். உள்ளதை உள்ளவாறே கூறும் அழகு அவர்களுடைய செய்யுட்கள் தோறும் விளங்குகின்றன. சிறந்த குணங்களும் உயர்ந்த புலமைத்திறனும் அவர்கள்பால் இருந்தமையே அவர்களுக்கு நன்மதிப்பை உண்டாக்கியது.

4. பின்னுரை.

இதுகாறும் கூறியவற்றால் பண்டைத்தமிழர், மக்களுக்குரிய இயல்புகளை உடையராகி இருந்தனர், உடனலத்திற்குரிய உணவைத்தரும் உழவு முயற்சியிற் சிறந்திருந்தனர், உழவர்கள் நல்ல நிலையில் இருந்தனர், உளநலத்தைத்தரும் கல்வி நிலை மிகச் சிறந்திருந்தது, உயிர்க்கு உறுதிதரும் அறம், பொருள், இன்பம், வீடுகளுள் ஈதல் முதலிய அறங்களைச் செவ்வனே செய்தார்கள், பொருள் வருவாய்க்குரிய செயல்கள் பல செய்தனர், அரசர்கள் குடிகள் நலத்தை ஓம்பிச் செங்கோல் செலுத்திவந்தனர், தலைவன் தலைவியரிடையே அன்பு இருந்தமையால் இல்வாழ்க்கை இன்பம் செறிந்ததாக இருந்தது, வீட்டு நெறிக்குரிய பல காரியங்களை அவர்கள் இயற்றிவந்தனர், தெய்வபக்தி, மெய்யுணர்வு முதலியன அவர்களிடத்திருந்தன, துறவியர்கள் இருந்தனர், அவர்களுடைய நாகரிக வாழ்க்கையில் நகர அமைப்பு வியாபார நிலை என்பன உயர்வுபெற்றிருந்தன, பலகலைகளில் அவர்கள் வல்லுநராயிருந்தனர், வீரத்தில் அவர்கள் சிறந்திருந்தனர், வீரர்களைப் போற்றிவந்தனர், புலவர்கள் நன்கு மதிக்கப்பெற்றனர் என்பன ஒருவாறு விளங்கும்.

எடுத்துக்கொண்ட விஷயமாகிய 'பண்டைத்தமிழர்' என்பது பண்டைத்தமிழ் நூல்களிற் கூறப்பட்ட பல செய்திகளைக்கொண்டு மிக்க விரிவாகச் சொல்லுதற்குரியது. எனினும் இங்கே சுருக்கமாகக் கூறப்பட்டது.

உ

இறைவன் துணை.

கௌமார குருகுலக்
கல்விப் பிரசுரம் 1

தேச சரித்திரம்-2

தமிழ்நாட்டுச் சரித்திரம்.

ஆசிரியர்:—திரு. நீ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள், M. R. A. S.
கண்டிராக்டர், கணபதிநகர், தஞ்சை.

நாம் வாழ்கின்ற, இந்திய நாட்டின் தென்பாகம் ஆகிய, இந்த நாடு தமிழ் நாடு என்று சொல்லப்படும். இதைத் தமிழகம் என்றும் கூறுவார்கள். இக்காலத்தில் நமது தமிழகம் திருவேங்கட மலைக்குத் (திருப்பதிக்கு) தெற்கே மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டதோர் சிறுநிலப்பரப்பாகத் தோன்றினும், மிகப் பழங்காலத்தில் இந்துமகாசமுத்திரம் முழுவதும் பரவியிருந்ததோர் பெருநிலப்பரப்பாகும் என்று பழங்கலைவல்லோர் கூறுகின்றனர். இமயமலையையும் கங்கையினையும் நமது தமிழகத்தோடு வயதில் ஒப்பிட்டுப்பார்ப்போம் ஆனால், முன்னவை பெரிதும் இளையனவே யாகும். நமது நாட்டின் பழைய வரலாற்றைத் தெரிந்து கொள்வதற்குப் பெருந்துணையாக நின்று உதவுவன நமது பழைய இலக்கியங்களும், முன்னோர்கள் கட்டிவைத்துள்ள கோயில்களும், அவற்றில் செதுக்கிவைத்துள்ள கல்வெட்டுக்களும், நமது நாட்டைப்பற்றிப் பிறநாட்டார் எழுதிவைத்துள்ள குறிப்புக்களுமே யாகும்.

பழங்காலத்தில் நமது நாடு மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டுச் சேர சோழ பாண்டியர் என்னும் மூன்று அரசர்களால் ஆளப்பட்டு வந்தது. மன்னர்கள் பெயர்களை ஒட்டியே அவர்கள் ஆண்ட நாடுகளுக்கும் சேரநாடு சோணாடு பாண்டி

நாடு என்று பெயர் வழங்கலாயிற்று. இப்போதுள்ள திருவாங்கூர் சமஸ்தானமும், மலையாளம் நீலகிரி ஜில்லாக்களும், கோயம்புத்தூர் மைசூர் முதலியவற்றுள் சிலபாகங்களும் பழைய சேரநாட்டுள் அடங்கியிருந்ததாக நினைக்கலாம். சென்னைக்குத் தெற்கே திருச்சிராப்பள்ளி வரையில் உள்ள ஜில்லாக்கள் சோழநாட்டுக்குள்ளும் ஏனைய தமிழ் ஜில்லாக்கள் பாண்டிய நாட்டுக்குள்ளும் அடங்கியிருந்தன. மேற்கண்ட நிலவெல்லைகளெல்லாம் ஒரு சமயத்தில் ஒருவர்க்குக் குறைந்தும் மற்றொரு சமயத்தில் விரிந்தும் காலத்திற்கேற்ப மாறுபட்டிருந்ததும் உண்டு. முடியுடைய மன்னர் மூவர்களைத் தவிரக் குறுநில மன்னர்கள் பலர் மலையோரங்களில் ஆணை செலுத்தி வந்தனர். இக்குறுநில மன்னர்கள் முடியுடை மன்னரோடு சிலகாலம் ஒற்றுமையுடையராயும் சிலகாலம் மாறுபட்டும் வந்தனர். வேள்பாரி என்ற குறுநில மன்னன்மீது முடியுடைய மன்னர் மூவரும் ஒருங்கே பகைகொண்டு படையெடுத்துச் சூழ்ந்தனர் என்றதோர் கதையும் உண்டு. இக்குறுநில மன்னருடைய கொடைச்சிறப்பும் வீரச்சிறப்பும் தமிழ்ப் புலவரைப் போற்றும் பண்பும் நம் சங்க நூல்களில் பரக்கக் காணலாம்.

சோழர்.

சோழவரசர்கள் திருச்சிராப்பள்ளியை அடுத்த உறையூரையும் காவிரிப்பூம்பட்டினத்தையும் தலைநகர்களாகக் கொண்டு ஆட்சிபுரிந்தனர். கி-பி. நாலாம் நூற்றாண்டுவரையில் சோழர்கள் செல்வாக்குடன் இருந்தார்கள். இந்தப் பழஞ் சோழர்களில் கி-பி. 1-வது நூற்றாண்டில் திருமாவளவன் என்று சொல்லப்படும் கரிகாலச்சோழன் முதன்மையானவன். இவன் தமிழ்நாடு முழுவதையும் தன்னடிப்படுத்தியும், வடக்கே இமயமலைவரையில் தனது ஆணை செலுத்தியும் சோழர்களுடைய பெருமையை நிலைநாட்டினான். இவன் காலத்தில் வாணிபம் வளம்பெற்றது. கலங்கரை விளக்கமும் ஆயத்துறைகளும், யவன சீன சாவக வியாபாரிகளின் மாளிகைகளும் இவன் தலைநகரமாகிய காவிரிப்பூம் பட்டினத்தில் திகழ்வனவாயின. அன்னியநாடுகளிலிருந்து கடல்வழியாகக் கலத்தில் கொண்டு வரப்பட்ட குதிரைகளும், நிலவழியாக வண்டிகளில் கொண்டு

வரப்பட்ட மிளகு பொதிகளும், இமயம் மேருமலைகளில் பிறந்த மாணிக்கங்களும், தென்கடலிலே பிறந்த முத்துக்களும், மேற்கு மலைகளில் இருந்த சந்தனமும் அகிலும் இத்தகைய பல நாட்டுப் பொருள்களும் நமது சோழநாட்டுத் தலை நகரிலே விலைபோவனவாயின. காவிரியாறும் பல கிளைகளாகப் பிரிக்கப் பெற்று நாட்டை வளம்படுத்தி வேலி ஒன்றுக்கு ஆயிரக்கலம் என்ன விளைவிக்கச் செய்தது. சைவ வைணவ சைன பௌத்த சமயங்கள் வேறுபாடின்றி அரசனுடைய ஆதரவு பெற்று வந்தன.

இத்தகைய சீரும் சிறப்பும் வாய்ந்த சோழ மன்னர்களும் விதிவயத்தாலோ மதியழிவாலோ தம் கிளைமன்னருடன் ஒற்றுமையில்லாமையால், கி. பி. நாலாவது நூற்றாண்டில் வலிமையோடு பரவிவந்த பல்லவ அரசர்களின் ஆட்சியின் கீழ்பட்டுத் தமது பேரரசொழிந்து குறுநிலமன்னராய் ஏதோ ஒரு மூலையில் அடங்கி வாழ்வாராயினர். பல்லவர்கள் காஞ்சிபுரத்தை தலைநகராகக்கொண்டு சோழநாடு வரையிலும் பேரரசுபுரியத் தொடங்கினர். வடநாட்டு மன்னர்கள் எல்லாம் பல்லவர்களுக்கு அஞ்சி ஒதுங்குவார் ஆயினர். இவர்கள் முதலில் சயின பௌத்த சமயங்களையும் பின்னர் சைவ வைணவ சமயங்களையும் தழுவினார்கள். இவர்களுள் சிறப்புவாய்ந்தவன் ஆன **மகேந்திரவன்மன்** என்னும் மன்னனே சைவப்பெரியார் ஆகிய **திருநாவுக்கரசு சுவாமிகளுக்குப்** பல இன்னல் விளைத்துப் பின்னர் தானே சைவத்திற்குத் திரும்பினான். இவனால் ஆக்கப்பட்ட கற்கோயில்கள் பல இப்போதும் தமிழ்நாடு எங்கும் காணலாகும் அவற்றுள் **சித்தன்னவாசல் குகைக்கோயில்** என்பது புதுக்கோட்டைக்கு அருகில் உள்ளது. அக்கோயிலின்கண் அவன் காலத்துத் தீட்டப்பட்ட சித்திரங்கள் பல இன்றும் உள. அவற்றுள் சில அடுத்தபக்கத்தில் காண்க. இவன் மகன் **நரசிங்கப் போத்தரையன்** வடநாட்டில் இறுமாப்புடன் வாழ்ந்து வந்த சாளுக்கிய மன்னன் **புலிகேசி** என்பவனை வெற்றிகொண்டு அவனது தலைநகரமாகிய **வாதாபி** என்னும் பட்டணத்தையும் அழித்து அங்குத் தன் வெற்றியை நிலைநாட்டினான். இவ்வரச

னுடைய சேனுபதியாயிருந்து வாதாபி என்னும் நகரை அழித்தவர் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய சிறுத்தொண்டர் என்பவர். பல்லவர் காலத்திலேதான் நம் சைவ வைணவப்பெரியோர்கள் பலரும் தோன்றித் தங்கள் பாடல்களாலும் வாழ்க்கை முறையாலும் மக்களுக்குச் சமயப்பற்றை உண்டுபண்ணி வந்தார்கள். கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டில் சோழர்களால் பல்லவர் பேரரசு சுருங்கலாயிற்று. அதுமுதல் சோழர்கள் மீண்டும் தலையெடுத்து, தஞ்சை, திருவாரூர், கங்கைகொண்ட சோழபுரம் முதலிய ஊர்களைத் தலைநகர்களாகக் கொண்டு ஏறக்குறையப் பதினைந்தாம் நூற்றுண்டு வரையில் சிலகாலம் பெருஞ்சிறப்புடனும் சிலகாலம் சற்றுத் தளர்ந்தும் தொடர்ச்சியாகத் தமிழகத்தின் பெரும் பகுதியை ஆண்டு வந்தார்கள். பல்லவர்களுடைய மேலாட்சியிலிருந்து சோழ நாட்டை விடுவித்தவன் **முதல் ஆதித்தன்** என்னும் சோழன் ஆவான். கி. பி. 985-ல் பட்டத்துக்கு வந்த **முதலாவது இராசராசன்** என்னும் சோழனுடைய ஆளுகையில் இப்போதுள்ள நம் சென்னை இராசதானியில் முக்காற்பங்குக்கு மேலும் இலங்கைத் தீவும் அடங்கியிருந்தன. தஞ்சையில் உள்ள கண்டோர் வியக்கும்படியான பெரியகோயிலைக் கட்டி அதற்கு **இராசராசேச்சுரம்** என்னும் பெயரையிட்டவன் இவனே. சைவ சமயத்தில் பெரும் பற்றுடையவனுயிருந்தும் ஏனைய சமயங்களில் வெறுப்பில்லாதிருந்தான் என்பதற்கு அவன் காலத்தில் நாகப்பட்டினத்தில் கட்டப்பட்ட பௌத்தக் கோயிலுக்கு **இராசராசப் பெரும் பள்ளி** யென்று தன்பெயர் கொடுத்தழைக்க உடன்பட்டதும், **ஆனைமங்கலம்** என்னும் கிராமத்தை மானியமாக விட்டதுமே தக்க சான்றுகும். **நம்பியாண்டார் நம்பி** திருமுறை தொகுத்ததும் இவ்வரசன் காலத்திலே தான். கி. பி. 11-வது நூற்றுண்டின் இடையிலிருந்து 12-வது நூற்றுண்டின் முதற்பகுதி வரையில் அரசுசெலுத்தி வந்த **குலோத்துங்க சோழன்** காலத்தில்தான் **இராமாநுசர்** என்னும் வைணவப் பெரியார் தோன்றினர். இந்த மன்னார்குடியில் உள்ள விஷ்ணுகோயிலைக் கட்டியவனும் இவ்வரசனேயாவான். இதற்குக் **குலோத்துங்க விண்ணகரம்** என்பது பழம்பெயர்.

சித்தன்ன வாசல் சித்திரம்.

ஓர் கணிகை

மற்றோர் கணிகை

சித்தன்னவாசல் சித்திரம்.

தாமரைப் பொய்கையின் ஓர் பாகம்

சமண முனிவர்

சித்தன்னவாசல் சித்திரம்.

மகேந்திரவர்மன்

இந்தப்படங்கள் எனது நண்பர் அண்ணுமலைப் பல்கலைக்கழக ஆசிரியர் திரு S. K. கோவிந்தசாமி பிள்ளை அவர்கள் M. A., உதவியது.

இவன் நாட்டுக்கருக்குப் பல நன்மைகள் செய்து வந்தான். சுங்கம் வாங்குவதை நீக்கினமையால் இவனுக்குச் **சுங்கந் தவிர்த்த சோழன்** என்னும் பெயர் உண்டாயிற்று.

இவன் காலத்தில் தமிழ்மொழி வளர்ந்தோங்கியது. கீழ் வரும் வெண்பா இவனது சிறப்பை ஒருவாறு புலப்படுத்தும்.

> 'மூவாத் தமிழ்ப்பயந்த முந்நூன் முனிவாழி
> ஆவாழி வாழி அருமறையோர் — காவிரிநாட்
> டண்ணல் அநபாயன் வாழி அவன்குடைக்கீழ்
> மண்ணுலகில் வாழி மறை.

திருவிசைப்பா பாடிய **கண்டராதித்தர்** என்பவர் இச்சோழர் மரபினரே.

கி. பி. 13-ஆம் நூற்றுண்டின் இடையிலே அரசாண்ட கடைசி **இராசராசசோழன்** என்பவன் காலத்தில் சோழராச்சியத்துக்குப் பலவகைத் துன்பங்கள் நேர்ந்தன. **கோப்பெருஞ்சிங்கன்** என்னும் பல்லவச்சிற்றரசன் தான் தனியரசாக மாறுகொண்டு தோன்றுவான் ஆயினன். வடநாட்டரசர்கள் எதிர்க்க ஆரம்பித்தார்கள். **மாறவன்மன் சுந்தரபாண்டியன்** ஒருவன் தாக்கி வெற்றிகொண்டான். இவ்வாறு பலபடியாகத் தாக்குண்டு, பலபடியாகச் சிறப்புற்றிருந்த சோழர் பேரரசு ஒழிவதாயிற்று.

சோழநாடு பின்னர்ச் சிறிதுகாலம் பாண்டியர் ஆட்சியில் அடங்கியிருந்தது. இக்காலத்தில்தான் **டில்லி** நவாப்பின் போர்த்தலைவன் ஆன **மாலிக் காபூர்** என்பவன் தென்னுட்டில் படையெடுத்து வந்து தமிழ் மன்னருடைய நிலைமையெல்லாம் கலக்கினன்.

சேரர்.

சேரவரசர்கள் தமிழுக்குப் பலவகையாலும் சங்க காலம் தொடங்கி உதவிபுந்து வந்தனர். **பெருஞ்சோற்றுதியன்** என்னும் சேரமன்னன் ஒருவன் பாரதப்பெரும்போர் நடந்த காலத்தில் இருதிறப்படைக்கும் உணவு அளித்தான் என்று ஓர் சங்கச் செய்யுள் தெரிவிக்கின்றது. **பதிற்றுப்பத்து** என்னும் நூலில்

சேரர் தமிழுக்குச் செய்த உதவியை நோக்குமிடத்து, எவருள்ளமும் உருகாதிராது. தன்னைப் பாடிவந்த ஓர் புலவருக்கு ஓர் மன்னன் தானும் தன் தேவியும் நீங்கலாகத் தன் நாடனைத்தும் பரிசிலாகக் கொடுத்தான் என்றால் இவர்கள் தமிழ் மொழிமீது கொண்டிருந்த பேரன்பு யாம் அளவிட்டுக் கூறுந் தரத்தில் உள்ளதாமோ?

சேரன் சேங்குட்டுவன் என்னும் அரசன், இமயமலை வரையில் சென்று தமிழ்வேந்தரின் புகழை நிறுத்தி அங்குள்ள அரசர் பலரையும் அடிமைகொண்டு திரும்பினான். கற்புக்கரசியாகிய கண்ணகிக்குக் கோயில் கட்டினவன் இவனே. இவன் தம்பி **இளங்கோவடிகள்** என்பாரே முத்தமிழ்ப் பெருங் காப்பியம் ஆகிய சிலப்பதிகாரத்தைப் பாடியவர்.

இவர்கள் வாழ்ந்தகாலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டாம். இவர்களுக்குப் பின்வந்த சேரமன்னர்களுள் **குலசேகர ஆழ்வார்** என்னும் வைணவப்பெரியாரும், **சேரமான் பெருமாள்** என்னும் சைவப்பெரியாரும் யாவராலும் அறிந்து கொள்ளத்தக்கவராவர். வஞ்சி, கருவூர், திருவஞ்சைக்களம் முதலியன இவர்கள் தலைநகராக விளங்கியன. பிற்காலங்களில் இம்மன்னவர்கள் தமிழ் நாட்டின் தொடர்பு நீங்கினவர்களாய் மலையாள மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு வாழ்வாராயினர். இப்பொழுதுள்ள திருவாங்கூர் திருவனந்தபுரம் அரசரும் இச்சேரர் வழியைச் சேர்ந்தவரென்றே கருதப்படுகிறார்கள். இவர்களுக்குப் பட்டப் பெயரான **வஞ்சிபாலர்** என்பது இதனை ஒருவாறு வலியுறுத்தும்.

பாண்டியர்கள்.

தமிழ் வேந்தர்கள் மூவர்களில் தமிழ்மொழி வளர்ச்சியின் பொருட்டுச் சங்கம் ஏற்படுத்திப் புலவர்களைக் கூட்டி வளர்த்த பெருமை பாண்டியர்களுக்கே உரியதாகும். தலை யிடை கடை யென்று மூன்று சங்கங்கள் இவர்களால் நிறுவப்பட்டன. தமிழ் நாட்டின் தென்பாகம் கடலில் அழுந்திய காலத்தில் தலைச்சங்கமும் இடைச்சங்கமும் அழிந்து போயின. இச்சங்கங்களில்

எத்தனையோ நூல்கள் வெளிவந்திருந்தும் தொல்காப்பியம் என்னும் அரும்பெருநூல் ஒன்று தவிர மற்றையவற்றைப் பெறும் பாக்கியம் நமக்கு இல்லாமல் போயிற்று. கடைச்சங்கத்தாரால் வெளிவந்த நூல்களே இப்போது நமக்குக் கிடைக்கும் சங்க நூல்களாகும். அவையாவன, ஐம்பெருங்காப்பியங்களும், எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும், பதினெண்கீழ்க்கணக்குகளும், இறையனார் அகப்பொருளும் ஆகும். இவையன்றித் திருக்குறளும் உண்டு.

ஐம்பெருங்காப்பியம் என்பன- சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, விளையாபதி, குண்டலகேசி.

பத்துப்பாட்டு என்பன- திருமுருகாற்றுப்படை, பொருநர் ஆற்றுப்படை, சிறுபாண் ஆற்றுப்படை, பெரும்பாண் ஆற்றுப்படை முதலியன.

எட்டுத்தொகை என்பன- நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு முதலியன.

பதினெண்கீழ்க்கணக்கு- நாலடி நானூறு, நான்மணிக்கடிகை, இன்னு நாற்பது முதலியவை.

இப்பாண்டியர்கள் தமிழ்ப் புலவர்களை எத்தகையினராக மதித்தார் என்பதனைத் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் என்பவன் கூறும்

'மாங்குடி மருதன் தலைவனாக,
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக என்நிலவரை.' என்னும்

உறுதியால் நன்குவிளங்கும். பாண்டியர்களுள் பலரும் புலமை பெற்றிருந்தனர். பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதி என்னும் பாண்டிய மன்னனே தென்னாட்டில் ஆரிய வேள்வி முறைகளைக் கொணர்ந்தவனென்பது தெரிகிறது. 6-வது நூற்றாண்டில் களபரர் என்னும் ஓர் மரபினர் பாண்டிய நாட்டைக் கைப்பற்றிப்

பாண்டியர்களைக் கீழ்ப்படுத்தினர். 7-வது நூற்றுண்டில் மறுபடியும் பாண்டியர்கள் கோடுங்கோன் என்னும் பாண்டியன் காலத்துத் தலையெடுக்க ஆரம்பித்தனர். 7-வது நூற்றுண்டிலரசாண்ட கூன்பாண்டியர்தாம் திருஞான சம்பந்தரால் சமணத்தினின்றும் சைவத்திற்குத் திருப்பப்பட்டவர். இவரை நின்றசீர்நெடுமாறன் என்றும் அழைப்பார்கள். கி. பி. 11, 12 நூற்றுண்டுகளில் பாண்டிய நாடு சோழர்களுக்கு உள்ளடங்கியிருந்தது. 13-வது நூற்றுண்டில் மாறவர்மன் சுந்தர பாண்டியனும், ஜடாவர்மன் சுந்தரபாண்டியனும் தோன்றி பாண்டிய நாட்டை சோழர் ஆட்சியினின்றும் மீட்டார்கள். சோழ நாட்டிலும் சில பகுதிகளை தங்கள் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தார்கள். 14-வது நூற்றுண்டின் இடைப்பாகத்தில் பாண்டிய நாடு சிறிது காலம் மகமதியர்கள் கையிலும் பிறகு விஜயநகர நாயக்கவரசர்கள் ஆட்சியிலும் சேருவதாயிற்று.

சோழ, பாண்டியநாடு முழுவதும் 15-வது நூற்றுண்டின் தொடக்கத்தில் தமிழரசர்களின் ஆளுகையினின்றும் நீங்கி விஜயநகர மன்னர்களின் ஆட்சியின்கீழ் ஒதுங்குவதாயிற்று. பாண்டியநாட்டில் நாயக்கர் அரசை நிலைநிறுத்தியவர் விஸ்வநாத நாயக்கர் என்னும் வீரர். இவருக்குத் துணையாகவிருந்து நாட்டுக்குப் பல நன்மைகளையும் செய்தவர் அரிய நாயக முதலியார் என்பவர். விஜயநகர அரசராகிய அச்சுதராயரின் சேனாதிபதியாகிய நாகம நாயக்கனின் மகன் விஸ்வநாத நாயக்கர் என்பவர். இவர், தங்கள் அரசரின் கருத்துக்கு மாறுபாடாக நடந்த தன் தகப்பனை வெற்றிகொண்டு தன் வீரத்தையும், அரச நன்றியையும், கடமையையும் வெளிக்காட்டிய செய்தி யாவரும் புகழத் தக்கதாகும். பாண்டிய நாட்டில் நாயக்கர்கள் காலத்திலும் பழைய பாண்டிய மன்னர்களின் வழிவந்தவர்கள் ஒரு சிறிது அரசாளும் பதவியை ஏற்று வந்ததுண்டு. கி. பி. 1623 முதல் 1659 வரையில் மதுரையிலரசாண்ட திருமலை நாயக்கர் என்பவர் நாயக்க மன்னர்களில் சிறந்தவராவார். விஜயநகர மன்னர்களுக்குக் கப்பம் கட்டும் வழக்கத்தை முதல் முதல் கைவிட்டவர் இவரே யாகும். விஜயநகர மன்னர்களது வலிமை

கி. பி. 1565-ல் நடந்த தலைக்கோட்டை போரில் குன்றுவதா யிற்று; வலிமை குன்றவே முன்னம் அடங்கியிருந்த சிற்றரசர்களாகிய தஞ்சை, மதுரை, ஜிஞ்சி நாயக்கர்களெல்லாம் தாங்கள் தாங்கள் தனி அரசர்களாகத் தலையெடுக்கத் தொடங்கினர். ஒரு சிறிது உயிர்வைத்துக் கொண்டிருந்த விஜயநகர பேரரசு திருமலைநாயக்கரது சூழ்ச்சியால் அடியோடு மாய்வதாயிற்று. தான் செய்த நன்றிகெட்ட செயலுக்குத் தக்கபடி திருமலை நாயக்கரும் மகமதிய மன்னர்களுக்குக் கப்பங்கட்டும்படி நேர்ந்தது. இவர் வழியில் வந்தவர்களில் **மங்கம்மாள்** என்னும் அரசி சிறந்தவராவர்.

தஞ்சையில் நாயக்கர் ராஜ்யத்தை ஏற்படுத்தியவர் **சேவப்ப நாயக்கர்** என்பவர். இவர் விஜயநகர சக்ரவர்த்தியாகிய அச்சுத ராயருக்கு நெருங்கிய உறவினர். இவர் குமாரர் **அச்சுதப்ப நாயக்கர்** (1572—1614). இவர் மந்திரியாகிய **கோவிந்த தீக்ஷிதர்** என்பவர் கல்வியையும் புலவரையும் மிகவும் ஆதரித்தவர். தஞ்சை நகரிலுள்ள 'ஐயங்கடை' ஐயங்குளம் என்பனவும் ஐயம்பேட்டை என்னும் ஊரும் இவர் பெயரால் நாட்டியவைகளே யாகும். இவரை, பெயரால் குறியாது "ஐயர்" என்று வழங்குவார்கள்.

நாயக்கர்கள் காலத்தில், தமிழ் நாட்டில் ஐரோப்பாக் கண்டத்திலிருந்து கிறிஸ்தவப் பாதிரிகள் பலர் வந்து தமிழைப் படித்து, தமிழ் நாட்டில் தங்கள் சமயத்தைப் பரவச் செய்தார்கள். இவ்வாறு வந்த பாதிரிகளில் **பெஸ்கி** என்பவர் சிறந்த தமிழ்ப்புலவர். இவர் இத்தாலியா நாட்டிலிருந்து இங்கு வந்து தமிழ்மொழியைக் கற்று, தமிழ்மக்களும் நாணமுறும் வண்ணம் பெரும்புலமை அடைந்து சிறந்த இலக்கண இலக்கிய நூல்களை இயற்றியுள்ளார். தேம்பாவணி என்னும் காவியம் இவர் இயற்றியதேயாகும். முதல் முதல் தமிழில் அகராதி தொகுத்தவர் இவரே யாவார். தாயுமானவர், குமரகுருபரர் முதலிய பெரியார்கள் வாழ்ந்ததும் நாயக்கர் காலத்திலேயே யாகும்.

நாயக்கர்கள் காலத்துக்குப் பின்பு தமிழ் நாட்டில் சில பகுதிகள் மகாராஷ்டிரர் கையிலும் சிலபாகம் துருக்கர்கள் கையிலும் செல்வதாயின. ஆர்க்காடு என்னும் ஊரைத் தலைநகராக வைத்துக்கொண்டு மகமதியர்கள் ஆள்வாராயினர். தஞ்சையைத் தலைநகராகக்கொண்டு மகாராஷ்டிரர் ஆள்வாராயினர். 18-வது நூற்றாண்டில் தமிழ்நாட்டில் பெருங் குழப்பங்கள் உண்டாயின. ஐதர், திப்பு சுல்தான் இருவரும் பல முறையும் தமிழ் நாட்டைக் கொள்ளையடித்தார்கள். ஐரோப்பாவிலிருந்துவந்த வியாபாரிகளாகிய ஆங்கிலேயரும், பிரஞ்சுக்காரரும், உள்நாட்டு அரசர்களுக்குள் உண்டாகும் கலகங்களில் ஒருவரோடொருவர் சேர்ந்து போர் புரிவாராயினர். தஞ்சையை ஆண்ட மராட்டிய மன்னரில் சர்போஜி என்பவர் சிறந்தவர். இவருக்குத் துணையாகவிருந்து பல நன்மைகள் புரிந்தவர் **ஸ்வார்ட்ஸ்** என்னும் பாதிரியார். 19-வது நூற்றாண்டில் தமிழ் நாட்டில் ஈஸ்ட் இந்தியா கம்பேனியாரது ஆட்சி நிலை பெறுவதாயிற்று; 1858க்குப் பிறகு பிரிட்டிஷ் ராஜ்யத்தில் சேர்ந்து அமைவதாயிற்று. குழப்பமான காலமாகிய 17, 18, 19-வது நூற்றாண்டுகளில் தமிழ்மொழிக்குச் சிறந்த ஆதரவாகவிருந்தவர்கள், இராமநாதபுரம், எட்டியாபுரம் முதலியவற்றின் ஜமீன்தார்களும், திருவாவடுதுறை, தருமபுரம் முதலிய ஆதீனத்தலைவர்களும் சையத்காதர் (சீதக்காதி) போன்ற வள்ளல்களுமே யாவர். 19-வது நூற்றாண்டில் வாழ்ந்த சிறந்த புலவர்கள், இராமலிங்க சுவாமிகள், மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, ஆறுமுக நாவலர், Prof. சுந்தரம் பிள்ளை முதலியோராவார்கள்.

திருவருள் துணை.

தஞ்சைக் கூட்டுறவுப் பதிப்பகம், கரந்தை.

உ

இறைவன் துணை.

கௌமார குருகுலக் கல்விப் பிரசுரம் 1

தேச சரித்திரம் 3.

முற்காலத்தில் கிராமபரிபாலனம்.

ஆசிரியர்:—திரு. நீ. கந்தசாமிப்பிள்ளை அவர்கள், M. R. A. S.
கண்டிராக்டர், கணபதிநகர், தஞ்சை.

நமது உயிரும் உடலும் ஒன்று சேர்த்து நிலைத்திருப்பதற்கு உணவு இன்றியமையாது வேண்டப்படுவது ஒன்றெனஉலகம் அறியும் ஆகலின், அவ்வுணவுப் பொருளை நல்கும் உழவுத் தொழிலின் உயர்வு சொல்லாமையே அமையும். உழவுத் தொழில் நிகழ்வதற்குக் கிராம வாழ்க்கையே இன்றியமையாததாகும். அக் கிராமவாழ்க்கை முற்காலத்தில் எவ்வாறு நடந்ததென்று தெரிவிப்பதே இச்சிற்றுரையின் நோக்கமாகும். நாகரீகம் என நாம் கருதுகிற பலவகையான புதுமைகள் தோன்றியுள்ள இக்காலத்தில் வாழும் நம்மைப் பார்க்கிலும் முற்காலத்தில் வாழ்ந்து வந்து நம் முன்னோர்கள் மனநிலையில் பெரிதும் இன்புற்றிருந்தவர்களாகவே தோன்றுகிறபடியாலும், மக்கள் வேண்டுவது இன்பம் என்பதே தெளிந்த பொருள் ஆதலாலும், அம்முன்னோர்களின் வாழ்க்கை வரலாற்றை ஒரு சிறிது தெரிந்து கொள்வதும் பயனுடையதென்றே கருதப்படும்.

பழங்காலத்தில் ஒவ்வொரு ஊருக்கும் இன்றியமையாது வேண்டப்பட்டனவற்றுள், கோயிலும், குளம் ஆறு வாய்க்கால் முதலிய நீர்வளங்களும், கிராமத்தார் கூடும் பொதுவிடமும் முதன்மையானவை. இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகை

யான தெய்வத்தன்மையோடு தொடர்பு படுத்தப்பட்டு மக்க ளால் பாதுகாக்கப்படுவனவாயின. மக்கள் தரத்திற்கேற்பக் கடவுள் நிலையும் பலதிறத்தனவாய்க் கருதப்பட்டதும் உண்டு. அன்புருவாய கடவுளும் உண்டு. அச்சமே உருவாய கடவுளும் உண்டு. மக்கள் உடல் நலத்திற்குத் தூய்மையான நீர் வேண் டப்படுவது ஆகலின் நீர்நிலைகளும் ஒருவகையான தெய்வத் தன்மையை உடையனவாகவே கருதப்பட்டன. ஒழுக்கம், உடல்நலநெறி (Sanitation) முதலிய இம்மையின்பத்திற்கு இன்றியமையாதன எல்லாம் சமயத்தோடு இயைபு படுத்தப் பட்டிருந்தன.

ஊரில் உள்ளோர் எல்லாம் கூடும் பொதுவிடத்திற்கு மன்றம் எனவும், அம்பலம் எனவும் பெயர். அது ஊர் நடுவே ஒரு பெருவெளியிலே அமைந்திருக்கும் ஓர் மரத்தடியாகும். அம்மரம் பெரும்பாலும் ஆலமரமாகவே இருக்கும். ஊரில் உள்ளவர்களுடைய பெருவழக்கைத் தீர்த்துக்கொள்வது முதல் இளஞ்சிறுர்கள் விளையாடுவது வரையில் இந்த மரத்தின் நிழ லிலே நிகழ்வதாகும். வழக்கைத் தீர்க்கும் காலத்தில் சரிகூறு வார் எவரேனும் பொய் கூறுவாராயின் அம்மரம் தளிர்வாடிப் பொய்கூற்றை வெளிப்படுத்தும் என்று கருதினார்கள். இது

'கரிபொய்த்தான் கீழிருந்த மரம்போலக் கவின்வாடி'

(கலித்தொகை) என்பதனால் விளங்கும். இம்மரத்தடியில் இளம் பருவத்தே விளையாடும் சிறுவர்கள் இயற்கை எழில் தங்கள் உள்ளத்தை இன்புறச்செய்யவும், உயர்ந்த பல கருத்துக்களும் உள்ளத்தே எழுந்து உறுதி செய்யவும் பெற்றவர்களாய்த் திகழ்ந்தார்கள். இம்மரத்தடியே விளையாடும்சிறுர்கள் தங்களை அறியாதே அம்மரத்திடத்து ஓர்வகைப் பற்றுடையவர்களா னார்கள் என்பது,

'ஊன்விளையாடும் வைவேல் உறுவலிசிந்தித்து ஏற்பித்
தான்விளையாடி மேனாள் இருந்ததோர் தகைநல்ஆலை
தேன்விளையாடும் மாலைஅணிந்து பொற்பீடம் சேர்த்தி
ஆன்விளையாடும் ஐந்தூர் அதன்புறம் ஆக்கினானே.'

என்னும் சிந்தாமணிச் செய்யுளால் விளங்கும். இம்மரத்தின் நிழல் பயன்படுவதைக் கண்ட சிறுர் தாமும் அவ்வாறே பயன்படவேண்டும் என்னும் கருத்தைக் கொண்டனர்; தன்னைக் குறைப்பார்க்கும் நிழல் கொடுக்கும் தன்மையைக்கொண்டு, தமக்குக் கெடுதி செய்தவர்க்கும் தாம் நன்மையே செய்ய வேண்டும் என்னும் பாடத்தைப் படித்தனர். பெருமரம் வரியிழந்த காலத்து அதன் விழுதுகள் பலவகையானும் நிலத்தில் காலூன்றி நின்று பாதுகாப்பதைக் கண்டு தாமும் தமது குடியோ நாடோ நலிவெய்தின் தாங்கல் கடனென்று ஓர்ந்து கொண்டார்கள்.

‘தூங்குசிறை வாவலுறை தொன் மரங்களென்ன
ஓங்குகுலம் நையஅதன் உட்பிறந்த வீரர்
தாங்கல் கடனாகும் தலைசாய்க்க வருதீச்சொல்
நீங்கல் மடவார்கள் கடன்என்றெழுந்து போந்தான்.’

(சிந்தாமணி)

இவ்வாறே பற்பல உயர்ந்தநெறிகளை நமது முற்காலத்துக் கிராமச் சிறுவர்கள் எழுத்தறியாத இளம்பருவத்திலேயே கற்று மனவுறுதி அடைந்து பெரும் வீரர்களாய்த் திகழ்ந்து தமக்கும் தம் நாட்டுக்கும் பெருமையை நாடுவார் ஆயினர்.

முற்காலத்தில் நம் கிராமங்களில் கைத்தொழில் யாவும் கவின்பெற விளங்கின. நம் மனத்தாலும் கருதுதற்கு இயலாத மெல்லிய ஆடைகளை நெய்தார்கள். அவ்வாடைகளைப் பற்றிப் பழம்புலவர்கள் கூறும்போது, புகையைப் போன்ற மாசில் தூவுடை என்றும், மூங்கில் தாளைப்போன்ற அறுவை என்றும், பாம்பின் சட்டை உரிக்கப்பட்டதுபோன்ற அறுவை’ என்றும், ‘இந்தரகோபம் என்னும் பூச்சிபோன்ற சாயம் தோய்க்கப் படாமலே நிறம் அமைந்த துகில்’ என்றும் பல படியாகக் கூறினர்.

உழவுத் தொழிலே தலை சிறந்திருந்தது. தங்கள் முயற்சியால் வேலி ஒன்றுக்கு ஆயிரக்கலக்கணக்கில் கண்டு முதல் செய்தார்கள்.

வாணிபம் செய்பவர்கள் தங்கள் பொருளையும் பிறர் பொருளையும் ஒன்றாகவே கருதி தொழில் நடத்திப் பெரும் பொருளை ஈட்டினர். பெண் மக்கள் வீண் செலவின்றியும் விருந்தினரைப் புறந்தருவதில் குறைபாட்டின்றியும் விளங்கினார்கள். பாலும் தயிரும் நெய்யும் விற்ற பணத்தைக் கொண்டுத் தங்களுடம்பில் அணிய அணிகலங்கள் செய்வதற்குப் பசும்பொன் வாங்காமல், பயன்தரத்தக்க கறவைகளை வாங்குவார்கள் என்று ஓர் பழஞ்செய்யுள் கூறுகின்றது.

இனி, எவ்வாறு கிராமக் காரியங்கள் நடைபெற்று வந்தன என்பதைப் பார்ப்போம் ஆனால், ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வோர் அவை இருந்ததென்றும், அந்த அவையில்உள்ள உறுப்பினரை அக்கிராமத்தில் உள்ளவர்களே தேர்ந்தெடுப்பது வழக்கமென்றும், அவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுவதற்கு உரியவர்கள் நல்ல நூல்களைக் கற்றவர்களாகவும் தூயவாழ்க்கையை உடையவர்களாகவும், கால்வேலி நிலமும் சொந்த மனையும் உடையவர்களாகவும், 35 வயதுக்கு மேல் 75 வயதுக்கு உட்பட்டவர்களாகவும் இருக்கவேண்டும். பிறர் பொருளைக் கவர்ந்தோரும் கிராமக் குற்றப் பதிவுப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டோரும் கள்ளக் கையெழுத்து இட்டவரும், ஏதேனும் குற்றம் செய்து அதனால் கழுதை மீது எற்றப்பட்டவரும், ஏதேனும் கையூட்டு (லஞ்சம்) பெற்றப் பொதுக்காரியங்களுக்கு இடையூறு செய்தோரும் அவர்களுடைய உறவினரும் எக்காலத்தும் கிராம சபையில் உறுப்பினராகும் தகுதியுடையர் ஆகமாட்டார்கள். உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக கிராமங்களில் கூட்டம் நடைபெறும். அக் கூட்டத்தில் கிராமத்தில்உள்ள வகுப்பார் எல்லோரும் கூடி அவரவர் வகுப்புக்குத் தகுதியுடையவர்களில் எவரெவரைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று கருதுகிறார்களோ அவர்களுடைய பெயரை ஓர் ஓலை நறுக்கில் எழுதி அச் சபை நடுவே வைக்கப்பெற்றிருக்கும். அவற்றைத் தனித் தனியாக சபை நடுவே வைக்கப்பெற்றுள்ள ஓர் குடத்தில் போடுவார்கள். இந்த நறுக்குகளைப் போடுவதற்கு முன்பு அக் குடத்தில் ஒன்றும் இல்லையென, அக் கூட்டத்தில்

உள்ள வயதில் முதிர்ந்தார் ஒருவர் கவிழ்த்துக் காட்டுவார். கூட்டத்தில் உள்ளார், தங்கள் தங்கள் நறுக்குகளை குடத்தில் போட்டவுடன், குடத்தைக் குலுக்கி, அங்குள்ள அறியாச் சிறுவன் ஒருவனைக்கொண்டு கிராமசபைக்கு எத்தனை உறுப்பினர்கள் வேண்டுமோ, அத்தனை நறுக்குகளை எடுக்கச் சொல்வார்கள். இவ்வாறு எடுக்கப்பட்ட உறுப்பினர்கள் தாம், அந்தக் கிராம சபையார் ஆவார்கள். இவ்வாறு கிராமசபை உறுப்பினர்கள் ஒவ்வொரு ஆண்டும் தெரிந்தெடுக்கப்படுவார்கள். மூன்று ஆண்டுகளுக்குள் எந்தச் சபையிலாவது உறுப்பினராக இருந்தவரை எடுக்கவேமாட்டார்கள். ஒவ்வொரு கிராம சபையையும் பல உட்பிரிவுகளாகப் பிரித்து கிராம காரியங்களைப் பிரித்துக் கொண்டு பார்த்து வருவார்கள்.

தோட்டவாரியம், ஏரிவாரியம், பொன்வாரியம், சம்வத்சர வாரியம் என்பன சில உட்சபைகளின் பெயர். சம்வத்சர வாரியர் என்பவர் நியாய விசாரணை செய்வோர். ஏரிவாரியர் என்போர் நீர் நிலைகளைப் பாதுகாப்பவர்.

ஒவ்வொரு கிராமத்திலும் கணக்கு எழுதுவதற்கு ஓர் கணக்கனை வைத்திருந்தார்கள். கிராம சபைகள் ஒழுங்குற நடைபெறுகின்றனவா என்று பார்ப்பதற்கு அரசனால் அனுப்பப்படும் மேற்பார்வையாளரும் உண்டு.

நிலங்களை விற்பது வாங்குவது முதலியவற்றிற்கு ஆவணம் எழுதப் பட்டிருந்தன. அவ்வாவணங்கள் காப்பிடப்பட்டும் (ரிஜிஸ்டர் செய்யப்பட்டும்) இருந்தன. என்றும் பயன்படக் கூடிய ஆவணங்களைக் கோவில் சுவரில் பொறித்து வைத்தார்கள். நிலத்தைச் செவ்வையாக அளந்து, தரத்திற்கேற்ப வரி விதித்திருந்தது. நம் முன்னோர்கள் நில அளவில் மிகவும் நுட்பமான அளவு வரையில் அளந்திருக்கிறார்கள் என்பதற்கு, ஒருவேலியில் (1/52428800000) ஐயாயிரத்து இருநூற்று நாற்பத்திரண்டு கோடியே எண்பத்தெட்டுலட்சம் பங்குவரையில்

அளந்திருக்கிறார்கள். இக்காலத்து நிலஅளவுக்கு, நம்முன்னோர்கள் அளவு எந்தவகையில் குறைந்ததென்று நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு பள்ளிக்கூடமும் ஆசிரியரும் உண்டு. ஆசிரியராக உள்ளவர்கள். கல்வியாலும் ஒழுக்கத்தாலும் மாணுக்கருடைய அன்பையும் பெற்ரோருடைய நன்மதிப்பையும் பெற்றிருந்தார்கள். கிராமத்தில் ஒற்றுமை மிகுந்திருந்தது. ஒருவருக்கொருவர் மனத்தாங்கல் உடையவர் கூட, பொதுநன்மைகளில் ஒற்றுமையாகவே இருந்து வேலை செய்தார்கள். இப்போது செல்வம் என்று மதிக்கப்படும் பெரும் பொருளீட்டத்தை அவர்கள் அடைந்திரா விட்டாலும் சிந்தையின் நிறைவாகிய செல்வத்தை அடைந்து, 'நல்லம் யாம்' என்னும் நடுவு நிலைமையால் தமக்கும் பிறர்க்கும் இன்பத்தைத் தேடி உயர்ந்த நிலையில் வாழ்ந்து வந்தனர். அவர்களுடைய நற்செயல்களும் உயர்ந்த நோக்கங்களும் நம்மை நல்வழியில் ஊக்குவனவாக.

இறைவன் துணை.

கௌமாரதருதுலக்
கல்விப்பிரசுரம் 1.

இந்தியா தேசசரித்திரம்

ஆசிரியர்:—எஸ். வைத்தினாத ஐயர் பி. எ, எல். டி.
தலைமை உபாத்தியாயர், தேசீய உயர்தரப்பாடசாலை, மன்னார்குடி.

சரித்திரம் என்றால் தற்காலத்திற்கு முந்தியுள்ள ஜனங்களின் வாழ்க்கை, மனோபாவம் முதலியவைகளின் ஆராய்ச்சியே யாகும். இதில் மதசம்பந்தமானவைகளையும் கல்விச்சம்பந்தங்களையும் இராஜரீயமானவைகளையும் ஜனசமூகவாழ்க்கைவிஷயங்களையும் ஆராய்ந்து பார்க்கலாம். இந்த உபந்நியாசத்தில் இராஜரீயமான வாழ்க்கைகளைப்பற்றியே ஆராய்வோம்.

இந்தியா, என்னும் பெயரானது "ஸிந்து" என்னும் ஸமஸ்கிருத வார்த்தையிலிருந்து வந்தது எனலாகும். ஆரியர்கள் முதல் முதல் இந்தப் பரதநாட்டுக்குத் தென்மேற்கு மூலையிலிருந்து பிரவேசிக்கும்போது, அங்கே இருந்த நதி பெரிய சமுத்திரம் போன்று விசாலமாயிருப்பதைக் கண்டு அதற்கு ஸிந்து நதி என்று பெயரிட்டார்கள். அதிலிருந்து கிரமமாக இந்தத் தேசத்திற்கு இந்தியா என்ற பெயர் வந்தது.

சரித்திரகாலம். இந்தத்தேசமானது அனாதியாய் வெகுகாலம் தொடங்கி அனேகநாகரீகங்கள் ஓங்கப்பெற்ற "லெமூரியா" முதலான கண்டங்களில் சம்பந்தப்பட்டிருந்து, அந்தந்தக் கண்டங்கள் தோன்றி மறைந்தபோதிலும், அந்த நாகரீகங்களின் ஸாராம்சங்களையெல்லாம் அடக்கிக்கொண்டதாய், அந்தச்சம்பந்தத்தைவிடாது மேல் மேல் அபிவிருத்தியாகிக் கொண்டு அகஸ்திய மகாமுனி முதலியருஷிகளாலேயும் போஷிக்கப்பட்டும் விளங்கி வருகிறதானபடியால் சரித்திர ஆரம்பம் செய்யப்படுகாலம் பண்டைய காலத்தில் ஆராய்ச்சி செய்ய வேண்டியிருக்கும். இதுவரையில் ஒருவிதமாக எழுதப்பட்டிருக்கிற சரித்திரங்கள் சுமார் சென்ற 2500-வருஷங்களுக்கு எழுதப்பட்டுள்ளன.

பூர்வீகர்கள். இந்தியதேசத்தின் பழையகுடிகள் இப்போது அந்தமான் தீவிலுள்ள. "நீக்ரோயரைப்" போலுள்ளவர்கள் என்று சிலர் அபிப்பிராயம். மற்ற சிலர் திராவிடர்கள் என்றுசொல்லுகிறார்கள்.

இந்தியராஜ்யத்தின் எல்லைகள் வடக்கே இமயமலை முதல் தெற்கே கன்யாகுமரிவரையிலும், மேற்கே பம்பாய்முதல் கல்கத்தா வங்காளக்குடாக்கடல் வரையிலுமுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் 35 கோடி ஜனங்கள் (சுமார் பூமியின் கண்ணுள்ள ஜனத்தொகையில் 5-ல் ஒருபங்கு) சங்கியையோடு, 182 வெவ்வேறான ஜாதியார்களாலும், 149 வித பாஷைகளுடையவர்களாலும் அடங்கப்பெற்றாலும் ஒரே பாதநாடு என்ற பெயருடனும் இந்தியா என்றும் வழங்கப்பட்டுவருகிறது.

இதன் சரித்திரத்தை 3 காலப்பிரிவுகளாகப்பிரித்துக் கவனிப்போம்.

(1) பூர்வீக இந்தியர்களின் காலம். பண்டையகாலம் முதல் 1200 கி. பி. வரையில்.

(2) மத்திய காலம்; முஸ்லிம் காலம். 1200 கி. பி —1800 கி. பி.

(3) நவீன காலம்; பிரிட்டிஷ் அரசாங்க காலம். 800 கி. பி.—1932.

இந்தப் பிரிவுகளெல்லாம் ஒன்றுக்கொன்று சம்பந்தப்பட்டு; ஒன்றன் பிரயோசனத்தை தொடர்ச்சியாகக் கையாண்டுகொண்டே போகிறதென்றே கொள்ளற்பாலது.

பூர்வீக இந்தியகாலம் பண்டையகாலமுதல் 1200—கி. பி. வரை இதிற்கண்ட பிரிவுகள்.

(1) பண்டைத் தமிழர்காலம். இப்போதுள்ள மதுரை, திருநெல்வேலி, இலங்கை முதலிய நாடுகளுக்குத் தெற்கும் கிழக்குமாக இருந்து கடல்கொள்ளப்பட்ட நாட்டில்வாழ்ந்தவர் ஆதி பண்டைத் தமிழர். இவர்களைப்பற்றி பண்டைத்தமிழ்நாடு என்றதில் பார்க்க.

(2) வேதகாலம், ஆரியர்கள் வடமேற்கிலிருந்து கிரமமாக இந்துதேசத்தில் வியாபித்த காலந்தொடங்கி மூன்று வேதங்களும், ராமாயண மகாபாரத முதலான இதிஹாஸங்கள் ஆதாரமாகக் கொண்டு நடந்தேறியகாலம் 3000 கி. மு.—1000 கி. மு.

(3) மதக்கிளர்ச்சிகாலம். பௌத்த ஜயினமதங்கள் தோன்றிய காலம் 1000 கி. மு.—320கி. பி. இதில் மௌரிய ராஜவம்சம் முதலானவை விளங்கப்பெற்றது.

(4) பௌராணிக காலம். 320 கி. பி.—650 கி. பி. இந்தக் காலத்தில் குப்த ஹர்ஷ வர்த்தன முதலான ராஜ்யங்களோங்கின.

(5) ராஜபுத்ரவம்ச காலம். 650 கி. பி.—1200 கி. பி. ஏற்கனவே சரித்திரக்காரர்களால் எழுதிவைக்கப் பட்டுள்ளது.

மதக்கிளர்ச்சி காலம்.

600 கி. மு.விலிருந்து ஆரம்பிக்கிறது.

(1) சைசுனாக வம்சம் 600 கி. மு.—370 கி. மு. அதில் பிம்பிசாரா அஜாதசத்ரு முதலியவர்கள் முக்கிய அரசர்கள், அஜாதசத்ரு என்ற அரசன் தன் தகப்பனாகிய பிம்பிசாரா என்பவனைக் கொன்

ரூன் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக்காலத்திலேதான், பௌத்தமதஸ்தாபகரான புத்தபகவானும் ஜயினமத ஸ்தாபகரான மஹாவீரர் என்பவரும் விளங்கினார்கள்.

(2) பிறகு நந்தவம்சம் 370—கி. மு. 322 கி. மு. வரையில்.

இக்காலத்தில்தான் அலெக்சாண்டர் என்ற பெரியபோர்வீரர் கிரீக்தேசத்திலிருந்து இந்தியாவின்மேல் படை எடுத்தனர். கி. மு. 326-ல் ஜீலம் ஆற்றுக்கரையில் புரூரவச் சக்கிரவர்த்திக்கும் அலெக்சாண்டருக்கும் சண்டை நடந்தது. $6\frac{1}{2}$-அடி உயரமுள்ள புரூரவச் சக்கிரவர்த்தி யானைமீது இருந்து புறங்கொடாமல் சண்டை செய்ததை அலெக்சாண்டர் ஆச்சரியப்பட்டுப்பார்த்து அவரைக் கொல்லாதபடி கைதி செய்து உன்னை என்ன செய்யவேண்டுமெனக் கேட்டார். "ராஜனுகவே" என்றார். அலெக்சாண்டர் அவர் தைரியத்தை மெச்சி இராஜ்ஜியத்தைத் திருப்பிக் கொடுத்தார்.

(3) பிறகு மோரிய வம்சம்; இதில் முக்கிய அரசர்கள் சந்திரகுப்தர், அசோகர் முதலிய பெரியோர்கள். இவர்களில் சந்திரகுப்தர் தான் இந்தியா விசாலமான தென்றும் ராஜ்யத்தை விஸ்தரித்து ஸ்தாபிக்க இடமுள்ளதென்றும் அறிந்தார். அசோகர் 272 கி. மு.—231 கி. மு. வரையில் ஆண்டார். இவர் மஹா பெரியவரென்றும், உலகிலுள்ள அநேக பேரரசர்களிலொருவரென்றும் பெயர் வாங்கினவர். இவர்சமாதானமும், பொறுமையும் கைப்பற்றி மனோபரிபக்குவக் கொள்கைகளால், மனிதர்களின் ஹிருதயத்தைக் கவரவேண்டுமென்கிற ஆசையுடையவராயும் தன்குடிகளின் முன்னேற்றத்தை அபிவிருத்திசெய்வதற்கென்றே தன் காலத்தையும் சக்தியையும் பூராவாக உபயோகித்தவர். மற்றும் உலகமெங்கும் அநாகரீகம் குடிகொண்டிருந்தஅந்த கி. மு. மூன்றுவது நூற்றுண்டிலேயே இப்படிப்பட்ட அரசியல் இந்தியாவில் இருந்ததென்றால் இந்தியநிலை எவ்வளவு உயர்ந்ததென்பது ஆச்சரியப்படத்தக்கதாயிருக்கிறது. அசோகரின் சிலா சாசனங்களில் தர்மம் என்றால் தயை, தானம், சத்தியம் சுத்தம் முதலானவைகள் வெகுஜனமுயற்சியாக இருக்கவேண்டுமென்றும்பிரசுரப்படுத்தியிருக்கின்றனர். இவர்அர்த்தசாஸ்திரத்தைகைப்பிடித்தவர். "பிரஜைகளின்ஆனந்தமே அரசனுடைய ஆனந்தம். பிரஜைகளின் க்ஷேமமேஅரசனின் க்ஷேமம். தனக்கு நல்லது என்பதால் மாத்திரமே பிரஜைகளுக்கு க்ஷேமமாகக் கொள்ளக்கூடாது; பிரஜைகளால் சந்தோஷகர மென்று கருதப்படுபவைகளே நன்மையென்று கருதப்பட வேண்டும்" என்பது அர்த்த சாஸ்திரக் கொள்கைகள். இதைக்காட்டிலும் மேலான அரசியல் வேறில்லை. அந்த அசோகர் எல்லோராலும் பெரியோர் என்று புகழப்பட்டவர். ஆனதால் அப்பேர்ப்பட்ட அரசனை அடையப்பெற்ற இந்தியதேசம் மிகவும் சிறப்புற்றதென்றதற்கும் ஐயமுண்டோ!

(4–5) சுங்க வம்சம், கண்வ வம்சம் 28 கி.மு. முதல் தோன்றி விளங்கிப் பிறகு மறைந்தன.

பௌராணிக காலம்.

(1) குப்த வம்சம் 320 கி. பி.—480 கி. பி. இந்த வம்சத்தில் முக்கியர்கள் சமுத்திரகுப்தர், சந்திரகுப்தர் முதலானோர்கள். மஹா ஹர்ஷவர்த்தனர்என்பவர் 606 கி. பி. முதல் 647 கி. பி. யில், சம்ஸ்கிருத பாஷாபிமானியாயும் அசோகருக்கு சமானமானவராகவும் விளங்கினர்.

ருஜபுத்திர வம்ச காலம்.

பிறகு ருஜபுத்திரர்கள் தோன்றி அபிவிருத்தியாகி 1200 கி. பி. வரையில் அரசாட்சி செய்தார்கள். ருஜபுத்திரர்கள் போர்வீரர்களாயும், போரில்ஆவ லுள்ளவர்களாயும், பரம்பரை மேன்மையுடையவர்களாயும் இருந்தனர். தைரியமுடையவர்களாயும் தங்களுடைய தலைவரிடம் பூரண பக்தியுடையவர்களாயும், பயமற்றவர்களாயும் இந்தியாவில் தைரியம் பூத்ததுபோல் விளங்கினர்கள். ஐரோப்பியர்களால் சொல்லப்பட்ட கதைகளிலிருந்தே ருஜபுத்ர வம்சத்தவர்களின் மேன்மைகள் விளக்கிக் காட்டப்பட்டிருக்கின்றன. இவர்களின் எதிரில் ஐரோப்பியர்களின் தீரத்துவம் எதிர்நிற்கமுடியாது என்று சொல்லலாம். ஜயசந்திரன், பிருத்விராஜன், சம்யுக்தை முதலியோர்களின் கதை யாவருக்கும் தெரிந்த விஷயமே.

சேர சோழ பாண்டிய பல்லவ ராஜ்யம்.

தென்னிந்தியாவில் மேல்கண்ட அரசர்கள் பாரம்பரையாக அரசாட்சி செய்து வந்தனர்.

சோழமண்டலம் வடக்கே நெல்லூர் முதல் தெற்கே புதுக்கோட்டை வரையிலுள்ளது. திருச்சி உறையூர் என்னுமிடம் சோழர்களின் பிரதானஸ்தலம். இவர்கள் பழையவர்களென்று மகாபாரதத்தில்கூட இவர்கள் பெயர் காணக்கிடக்கின்றன. கரிகால் சோழன்என்று கியாதிபெற்ற பெரியோன் 50 கி. பி.—95 கி. பி. யில் அரசாண்டான். சோழர்களில் 7 பெரிய அரசர்கள் உளர். ராஜராஜப்பெரியோன் 985 கி. பி.—1013 கி. பி. ராஜ்யபார நிபுணனுயும், வீரனுயும் விளங்கி இந்தியாவில் அநேக பாகம் ஜெயித்தான். முதல் ராஜேந்திரன், ராஜாதிராஜன், இரண்டாவது ராஜேந்திரன், மூன்றாவது ராஜேந்திரன் முதலானோர் முக்கிய சோழ அரசர்கள். இந்தச் சோழர்கள் காலத்தில் உள்நாட்டு சுய அரசாக்ஷிக்கு முக்கியாம்சமான 'கிராமப் பஞ்சாயத்து' அரசாக்ஷிக்கு அடிப்படையாகக் கையாளப்பட்டது.

மதுரை திருநெல்வேலியில் பாண்டியர்களும், தற்காலத்தில் கேரளம், மலேயாளம், என்று வழங்கப்பெறுகிறவிடத்தில் சேரர்களும் ஆண்டுவந்தார்கள்.

இந்த அரசர்களுக்குள் கோவில் வெண்ணி என்னுமிடத்தில் மஹாயுத்தம் நடந்ததாகத் தெரிகிறது. மஹாபாரத யுத்தகாலத்தில் இந்த அரசர்களால் இருபடையாருக்கும் உணவு அளிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. இவர்களைப்பற்றி தமிழ்நாட்டுச் சரித்திரத்தில் சொல்லப்பட்டிருப்பதை கவனிக்கவும்.

முஸல்மான் ராஜ்யம்.

பிறகு முகம்மதியர்கள் வடமேற்கிலிருந்து பிரவேசித்த காலந் தொடங்குகிறது. கஜினி மஹம்மது, கோரி மஹம்மது முதலானோர்கள் இந்தியாவில் படை எடுத்து வந்தார்கள். 13-வது நூற்றாண்டு முதல் 14-வது நூற்றாண்டு வரையில் சுல்தானியா ராஜ்யம் டில்லியில் நடைபெற்றது. இந்த சுல்தான்களில் குட்புடீன், அல்டாமஸ், பால்பன், அல்லாவுடீன், கில்ஜி முஹம்மதுடோக்ளக், கயாசுடீன் டோக்ளக் முதலானோர்களும், சுல்தானாராஜியா என்ற ராணியும் அரசாண்டார்கள். டில்லியில் இவள் ஒருவள்தான் பெண் அரசியல் நடத்தியவள். இவளால் பெண்பாலர்களுக்கும், இந்தியர்களுக்கும் கௌரவம் உயர்ந்தது.

முஹலாயர் காலம்.

526 கி. பி.—1077 கி. பி. பேபர், ஹுமாயூன், அக்பர், ஜகாங்கீர், ஷாஜஹான், அவுரங்கசீப் முதலியவர்கள் முக்கிய அரசர்கள். இவர்களில் "அக்பர்" பெரியவர், இங்கிலாந்தில் எலிசபெத் ராணியின் அரசாங்க காலத்தில் இங்கு அரசு செலுத்தியவர் இவர். தன்னுடைய ராஜ்ய நிபுணத்துவத்தினாலும், அனுபவ ஞானத்தினாலும், புத்திகூர்மையினாலும் எல்லாரையும் தன்வசமாக்கிக்கொண்டார். பின்பு முஸல்மான் முதலிய எல்லோராலும் நன்கு மதிக்கப்பட்டு, அன்புடனும் மரியாதையுடனும் பாராட்டப்பெற்றார். இவர் சர்வமத ஐக்கியத்தை வளர்க்கமுயன்றார். பலமதங்களிலுள்ள பெண்களை மணம் செய்தார். இவருக்குப் பிறகு கிரமமாக அவுரங்கசீபு வரையில் வந்த அந்த வம்சம் க்ஷீணமடைந்தது. டாஜ்மகால் என்று உலகம் எங்கும் பெயர்பெற்ற சலவைக்கல்லால் கட்டப்பட்ட கோரியும், அநேக கோட்டைகளும் இவர்கள் காலத்தில்தான் வடநாட்டில் கட்டப்பட்டன.

மகாராஷ்டிரர்கள் காலம்.

இக்காலத்தில் மகாராஷ்டிரர்களும், சீக்கர்களும் பெருகிக்கொண்டு வந்தார்கள். சிவாஜிமகாராஜாவின்கீழ் மகாராஷ்டிர வம்

சம் ஓங்கியது. 17-வது நூற்றுண்டில் தனது சுயவலிமையாலேயே அவர் ராஜ்யத்தை ஸ்தாபித்தார். 100-வருஷம் வரையில் அந்த ராஜ்யம் வழங்கியது. அவருடைய காலத்திலுள்ள பெருமைகளை முற்காலங்களில் வெளிப்படுத்தா விட்டாலும், இக்காலத்தில் அவருடைய மகிமை நமக்கு விளக்கி காட்டப்படுகின்றது, அதிலிருந்து அநேகர் ஊக்கத்தை அடைகிறுர்கள். இவருக்குப் பின் சாம்பாஜியும், ராஜா சாகிப்பும், தாராபாய் என்கிற பெண்மணியும் அரசு செலுத்தினுர்கள். பிறகு பேஷ்கார்கள் என்ற பெரிய மந்திரிகளாயிருந்தவர்கள் அரசு செலுத்திஞர்கள். 1761-க்குப் பிறகு ஆப்காணியர்களால் தோல்விபெற்று அந்த வம்சம் அடங்கியது.

பிரிட்டிஷ் அரசாங்கம்.

பிறகு இந்தியாவில் வியாபாரம்செய்து லாபம் அடையக்கோரி ஐரோப்பியர்களாகிற போர்ச்சுகீயர், டச்சுக்காரர், ஆங்கிலேயர்கள், பிராஞ்சுக்காரர்கள் முதலியவர்கள் தோன்றினுர்கள். வியாபார அபிவிருத்திக்காகத் தங்கினுர்கள். வியாபாரஸ்தலங்களை தொழிற் பிரதேசங்களாகவும், தொழிற் பிரதேசங்களை நகரங்களாகவும் மாற்றிக்கொண்டு பெருகி வரவர சுவதேச சிற்றரசர்களின் விபகாரங்களில் உட்புகுந்து, அதன்மூலமாகச் சிலப்பிரதேசங்களைக் கைப்பற்றிக்கொண்டு, தங்கள் ராஜாங்கத்தை ஸ்தாபிக்க ஆரம்பித்தார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் போர்ச்சுகீஸாரும், டச்சுக்காரரும் பின்னடையவே, பாக்கியிருக்கும் பிரஞ்சுக்காரர்கள் வெகு கஷ்டத்தின் மேல் ஆங்கிலேயரால் வெளியேற்றப்பட்டார்கள். 1639-ம் வருஷத்தில் சந்திரகிரி அரசனிடம் கிரயத்திற்கு வாங்கிப்பெற்ற பிரதேசத்தில் சென்னைமாநகரம் ஸ்தாபிக்கப்பெற்றது. பிறகு கிரமக்கிரமமாக கல்கத்தா பம்பாய் முதலிய முக்கிய ஸ்தலங்களை ஏற்படுத்திக்கொண்டார்கள். சில நிற்பந்தங்களின் காரணமாக 1857-ம் வருஷத்தில் பெரிய கலகம் "சிப்பாய் கலகம்" நடந்தது. அதை சிற்றரசர்களின்சஹாயத்தால் ஆங்கிலேயர்கள் அடக்கி, 1858-ம் வருஷத்தில் விக்டோரியா மஹாராணியால் "இராணியின் பேரிகை" என்ற மஹாசாஸனம் அளிக்கப்பட்டு, பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரின் மேல் விசாரணை அதிகாரம் முதலானவை ஏற்பட்டன.

இந்திய சிற்றரசர்களுக்குள் குழப்பமும், கலகமும், ஒற்றுமையின்மையும் ஆங்கிலேயப் பெருக்குக்கு சாதகமாயிருந்தது. பிறகு கிளைவ் வாரன்ஹேஸ்டிங்கிஸ் முதலானவர்களின் திறமை பயன்பட்டது. கார்ன்வாலிஸ் பிறகு மார்க்குவிஸ் வெல்லஸ்லி மார்க்குவிஸ்ஹேஸ்டிங்கிஸ் முதலியோர் காலத்தில் அநேக ருஜ்யங்கள் பிரிட்டிஷ் ருஜ்யத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டன. வில்லியம் பெண்டிங்கிங் முதலிய சில யோசனைக்காரர்களால் கவர்னர்ஜனரல்

கள் காலத்தில் சதி சிசுபலி முதலான சில துர்நடத்தைகள் தடுக்கப்பட்டன. கொஞ்சம் கல்வி கற்பித்தல் ஆரம்பிக்கப்பட்டன. ஆங்கில அரசாட்சி பஞ்சாபு, ஆப்கானியஸ்தான் முதலிய இடங்களுக்குப் பரவவும், சிக்கியர்களுடனும், ஆப்கானிஸ் தானியர்களுடனும் சண்டைகள் ஏற்பட்டன.

டல்ஹௌஸி (1848–1884 கி-பி.) கவர்னர் ஜனரலாக இருந்த காலம் அவருக்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தில் நம்பிக்கை ஏற்பட்டு, அதன் மூலமாய் சிற்றரசர்களின் ராஜ்யங்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டது. 1858-ம் வருஷத்திற்குப் பிறகு வைஸ்ராய்கள் அநேகர் வந்து ராஜாங்கத்தை நடத்தினார்கள். அவர்களில் லார்டுரிப்பன் காலத்தில் உள்நாட்டுச் ஸ்வதேச அரசாக்ஷி சட்டம் ஏற்பட்டது. பின் பல சீர்திருத்தங்கள் நடந்தன. லார்டுகர்சான் காலத்தில் கூட்டுறவுச்சங்க ஆக்டு ஏற்படுத்தப்பட்டது. தற்காலத்தில் 'நிஜ கிருஸ்தவ வைஸ்ராய்' என்ற பெயர் பெற்ற லார்டு இர்வின் அவர்கள் இந்திய ஸ்வய அரசாக்ஷிக்கு வேண்டி சில சாதனங்களை வழங்கினார். இப்போது லார்ட் வில்லிங்டன் பிரபு வைஸ்ராயாக இருக்கிறார்.

இக்காலம் ஆங்கிலப்படிப்பின் பயனாலும், ஆங்கிலேயர்களுடன் பழகியதாலும் அயல் நாட்டாரின் நாகரிகம் ஒழுக்கம் இவைகளின் சேர்க்கையாலும் இந்திய தேச ஆக்ஷியில் இன்னும் உரிமை பெற வேண்டுமென்றும், ஸ்வயராஜ்யம் பெற வேண்டும், பிரஜைகள் மற்ற தேசத்தவர்போலவே ஸ்வதந்தரர்களாக ஆகவேண்டுமென்ற ஆசையும் கிளர்ச்சியும் நமது தேசத்தில் படித்த பெரியோர்கள் துவாராவாக தேசமுழுதும் ஏற்பட்டிருக்கிறது.

1885-ம் வருஷத்தில் இந்தியதேசகாங்கிரஸ் மகாசபை இந்தியர்களின் க்ஷேமத்தைக்கோரி ஏற்படுத்தப்பெற்றது. மகான்களாகிற தாதாபாய் நவுரோஜி, ஸர். பி. எம் மீடா, ஸர். சுரேந்திரநாத் பனர்ஜி, பாலகங்காதர டிலக், கோபாலகிருஷ்ண கோகேல், ஜி. சுப்பிரமணிய அய்யர், அன்னி வஸந்தா அம்மையார், மஹாத்மா காந்தி முதலானோர்கள் தலைமை நடத்தி வந்தார்கள். இந்த நிலைமையில் அந்தரங்க மனோபேதங்களால் வேறுபாடுகள் ஏற்பட்டு தீவிரர்களென்றும், மத்தியஸ்தர்களென்றும் பாகுபாடுண்டாகி, ஒற்றுமையில்லாமல் அநேக மேடை வாதங்கள் ஏற்பட்டு, பலகக்ஷியார்களுமாகச் சேர்ந்து லண்டன் நகரில் வட்டமேஜை மகாநாடு கூடி, இரண்டு வருஷங்களாக பரியாலோசனைகள் நடந்துகொண்டு வருகின்றன.

அதிசீக்கிரத்தில் பிரிட்டிஷ் ராஜாவுடன் ஒத்துழைக்கும் இந்திய குடியரசுச் சட்டம் ஏற்பட்டு பிரஜைகள் க்ஷேமமாக வாழும் சாதனம் ஏற்படுமென்று பல தேசத்தாரின் அன்பு விளக்கம் உலவுகின்றது. இந்த சம்பவங்கள் எல்லாம் இந்தச் சரித்திர மூலமாய்த்

தெரிந்துகொண்ட நாம் நம்முடைய வருங்கால குடியரசுத்தொண்டு செலுத்த உரிமை வாய்ந்தவர்களாக்கிக்கொண்டு ராஜீகத்தில் ஊடு ருவி உலக க்ஷேமத்திற்கு இந்தியா தேசத்தின் குருஸ்தானத்தை மேற்கொண்டு ஸர்வலோக க்ஷேம காரியர்களாக ஆகவேண்டும்.

இங்குச் சில பெரியார்களின் வாக்கியங்கள் நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டியது.

இமயமலைமுதல் கன்யாகுமரி வரையிலும், பங்காளம் முதல் பம்பாய் வரையிலும் விரிந்த இந்தியா உபகண்டமாயினும் ஏக ராஜ்யத்திற்கு குந்தகமில்லை. அதன் ஐக்கியத்திற்கு யாதொரு தடையுமில்லை, (பிரிட்டிஷ் ராஜ்ய பிரதான மந்திரி.)

முப்பது கோடி முகமுடை யாளுயிர்
மொய்ம்புற லொன்று டையாள்—இவள்
செப்புமொழி பதினெட் டுடையாள், எனிற்
சிந்தனை யொன்று டையாள்.

பாரத சமுதாயம் வாழ்கவே—வாழ்க, வாழ்க
பாரத சமுதாயம் வாழ்கவே—ஜய ஜய ஜய (பா)

முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பி லாத சமுதாயம்
உலகத் துக்கு ஒரு புதுமை. வாழ்க. (பா)

எல்லாரு மோர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்திய மக்கள்

எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—வாழ்க. (பா)

(சுப்பிரமணிய பாரதியார்.)

நாம் பலரானது பற்றியே எல்லோரும் ஒன்றே. நமது வேறுபாடுகளாலும் வித்தியாசங்களாலும், விசேஷ சகோதர பாவத்துக்கும், சர்வஜன சமரஸ ஜீவ்யத்திற்கும் ஸர்வஜன அன்புக்கும் விசேஷ இடம் கொடுத்திருக்கிறோம்.

பனியினால் ஊரப்பட்டுள்ள வெவ்வேறு மலைச் சிகரங்கள் சூர்ய உதய வெளிச்ச கோளத்தில் ஸகலமும் ஒரே பர்வதத்தை ஆதாரமாகக் கொண்டதுபோல் நாம் எல்லோரும் ஒரே ஆதாரத்தையுடையோராகிறோம்.

(ரவீந்திரநாத் டாகூர்.)

ஸ்ரீ பிரஹத்சுந்தர குசாம்பிகா பிரஸ் திருவிடைமருதூர்.


ஆங்கிலநாடும் அதை அடுத்த ஐரோப்பிய நாடுகளும்.
ராகல் டிப்ஷன்
அட்லான்டிக் சமுத்திரம்
வட கடல்
பெரிய பிஷர் கரை
நார்வே
ஜட்லண்டு
டென்மார்க்
ஹாலந்து
பெல்ஜியம்
பிரான்சு
பாரிஸ்
ஐரிஷ் கடல்
இங்கிலீஷ் கால்வாய்
அயர்லாந்து
ஷெட்லண்டு தீவுகள்
ஆர்க்னி தீவுகள்
பிரிஸியன் தீவுகள்
நியூயார்க்கிலிருந்து

இறைவன் துணை.

கௌமார தருதலக்
கல்விப் பிரசுரம். 1.

தேச சரித்திரம் 5.

இங்கிலாந்து தேச சரித்திரம்.

ஆசிரியர்:— எ. ரேங்கசாமி அய்யர், பி. எ., பி. எல்.,
ஹைகோர்ட்டு வக்கீல், மதுரை.

1 இந்தியாவும் இங்கிலாந்தும்:— இங்கிலாந்து தேசம் என்பது ஐரோப்பா கண்டத்தில் வடமேற்கு பாகத்திலிருக்கிற ஒரு தீவின் தென்பாகம் நமது இந்தியாதேசம் ஆசியா கண்டத்தின் தென்பாகத்தில் இருக்கிறது. இரண்டு தேசங்களுக்கும் உள்ள தூரம் சுமார் 5000 மைல். ஆனல் இந்த இரண்டு தேசங்களும் சென்ற மூந்நூறு வருஷங்களாகச் சம்பந்தப்பட்டு தற்காலத்தில் இந்தியா தேசமானது ஆங்கிலேயர்களின் ஆளுகைக்குள்ளிருந்து வருகின்றது. அதுகாரணம் பற்றி நாம் இங்கிலாந்து தேசத்தின் சரித்திரத்தை தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமே.

2 ரோம ஆளுகை:— 504-ம் வருஷங்கள். இங்கிலாந்தில் நமக்குத் தெரிந்தமட்டில் முதலில் குடியிருந்தவர்கள் கெல்ட் ஜாதியார். அவர்களுடைய நாகரீகமானது ரோமர்கள், கிரேக்கர்கள், இந்துக்கள் முதலானவர்களுடைய நாகரீகம் அந்தக் காலத்திலிருந்ததுபோல ஓர் உயர்வுற்ற நாகரீகமல்ல. ஜூலியஸ் ஸீஸர் என்ற பெயர்பெற்ற ரோம தளகர்த்தர் கி. மு. 55, 54 ஆண்டுகளில் அந்தக்காலத்தில் பிரிட்டன் என்று பேர்விளங்கிய இங்கிலாந்து தேசத்தின்மேல் படையெடுத்துச் சென்று அதை ரோமபுரியின் ஆளுகைக்கு உள்ளாக்கினர். ரோமபுரியின் ஆளுகையானது கி. மு. 55 முதல் கி. பி. 449 ஆண்டு வரையில் அதாவது சுமார் 500 வருஷம் நீடித்திருந்தது. ரோம ஜாதியாரின் நாகரீகமானது கெலட் ஜாதியாருக்குள் பரவினது. கி.பி. மூன்ருவது நூற்ருண்டில் கிறிஸ்துவமதமானது பிரிட்டன் தேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டு கெல்ட் ஜாதியாருக்குள் பரவ

குறிப்பு:— கி. மு. என்ருல் கிறிஸ்து பிறக்குமுன், கி. பி. என்ருல் கிறிஸ்து பிறந்தபின் என்று பொருள். I, II, III, IV, V. VI, VII, VIII, IX, X. இவை முறையே 1 முதல் 10 வரை உள்ள எண்களை குறிக்கும்; இவைகளுக்கு ரோமன் எண் என்று பெயர். இங்கிலாந்து தேச விபரங்களை பூகோளபடத்தில் காண்க.

ஆரம்பித்தது. ரோம நகரத்தை வெளிப்பிரதேசங்களிலுள்ள நாகரீகமற்ற காத்ஜாதியாரின் தலைவனான அலாரிக் என்பவன் கி. பி. 410ம் ஆண்டில் கைப்பற்றி கொள்ளையடித்தபிறகு ரோம ஜாதியார் அவர்களுடைய செல்வாக்கை இழந்தார்கள். பிரிட்டனில் அவர்களுடைய ஆளுகையும் பலங்குன்றி நசித்துப் போயிற்று.

3 ஸாக்ஸன் அரசர்கள்:– ரோம ஆளுகை விலகினபிறகு ஸாக்ஸன் ஜாதியார் கிழக்கேயிருந்து இங்கிலாந்து தேசத்தைப் படையெடுத்து கீழ்பாகங்களில் குடியேறினர். அவர்களில் பலவகுப்புகள் உண்டு. அவர்கள் எல்லோரையும் பொதுவாக ஆங்கிலேயர்கள் என்றும் அவர்கள் குடியேறின பிரிட்டன் தேசம் ஆங்கில தேசமென்றும் அது முதல் கூறப்பட்டது. அவர்கள் ஆங்கிலதேசமென்ற இங்கிலாந்து தேசத்தின் தென் பாகத்தை கி. பி. 449 முதல் 607-ம் ஆண்டுக்குள் கைப்பற்றினார்கள். அவர்களால் பல ராஜ்ஜியங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. அவைகள் ஒன்றுக்கொன்று இடைவிடாது போர்புரிந்து வந்தன. கி. பி. 7-ம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே அவர்களுக்குள் ஏற்பட்டிருந்த பல ராஜ்ஜியங்கள் 7 ராஜ்ஜியங்களாக வகுக்கப்பட்டன. கிறிஸ்துவமதமும் அந்தக்காலத்தில் ஆங்கிலர்களுக்குள் பரவ ஆரம்பித்தது. ஆங்கிலேயர்கள் கிறிஸ்துவ மதத்தை மேன் மேலும் தழுவி நிற்க அவர்களுக்குள் ஐக்கிய பாவமானது பலம்பெற்று எக்பெர்ட் என்ற ஒரு அரசன் கி. பி. 839-ம் ஆண்டில் இறப்பதற்கு சில வருஷங்களுக்கு முன்னமேயே மற்ற அரசர்களைச் சிற்றரசர்களாகச்செய்து தலைமையைப்பூண்டான். அவனுடைய சந்ததியார்கள் ஆங்கில தேசத்தின் அரசர்களாக கி. பி. 10-வது நூற்றாண்டுவரை ஆண்டார்கள். ஸாக்ஸன் ஜாதியாருக்குள் கடைசியாய் ஹரோல்டு என்பவன் கி. பி. 1066-ம் ஆண்டில் அரச சந்ததியைச் சேராத போதிலும் அரசனாக பிரபுக்கள் கூடின பார்லிமெண்டு போன்ற சபையில் தேர்ந்தெடுக்கப்பட்டான்.

4 நார்மன் வம்ச அரசர்கள் கி. பி. 1066–1154, 88-வருஷங்கள். வில்லியம் 1 ஆகிய நார்மண்டி என்ற ஓர் தென் தேசத்தின் அரசன் ஆங்கில தேசத்தை கி. பி. 1066-ம் ஆண்டில் படையெடுத்து ஹரோல்டு அரசனை வென்று ராஜ்ஜியத்தைக் கைப்பற்றினான். இவனும் இவனுடைய வம்சத்தார்களும் கி பி 1066 முதல் கி.பி. 1154 வருஷம் வரை ஆண்டுவந்தார்கள். ஸாக்சன் ஜாதியாருக்கும் அவர்களை ஜெயித்த நார்மன் ஜாதியாருக்கும் விரோதமானது நீடித்துவந்தது.

5 அன்ஜூ வம்ச அரசர்கள். கி. பி. 1154-1399, 245 வருஷங்கள். வில்லியம் I ன் குமாரனான ஹென்றி I ன் தௌஹித்திரன் ஹென்றி II என்போன் அன்ஜூ ராஜ்ஜியத்தின் சிற்றரசனாயிருந்தான். அவன் கி. பி. 1154 ஆண்டில் ஆங்கில தேசத்தின் அரசனாயினான். இவன் வம்சத்தில் உதித்த ஒரு கொடுங்கோல் மன்னனாகிய யோவான் என்பவன் அரசனாயிருக்கும் பொழுது இங்கிலாந்து தேசத்தில் "மாக்னகார்ட்டா" என்ற ஓர் பிரஜைகளின் உரிமையைப்பற்றிய மகா பத்திரமானது அரசனிடமிருந்து ஜனத்தலைவர்களால் கி பி 1215-ம் ஆண்டில் நிர்ப்பந்தத்தின்பேரில் வாங்கப்பட்டது. அந்த "மாக்னகார்ட்டா" என்ற மகாபத்திரம் ஒவ்வொரு ஆங்கிலேயரின் சுவந்தரங்களுக்கு அடிப்படையாக விளங்குகின்றது. அதின் பிறகு ஆங்கில மன்னர்கள் தாங்கள் இஷ்டப்பிரகாரம் ஆண்டு வந்த முன் முறையை ஒழித்து ஸபை பிரதிநிதிகளின் சம்மதத்திற்கு உள்ளடங்கி ஆளத் துடங்கினார்கள். அந்த மகா பத்திரப்பிரகாரம் அரசனுடைய அதிகாரங்கள் கட்டுப்பட்டன. அவன் ஜனத்தலைவர் சபையின் அங்கீகாரமின்றி ஒரு வரியும் விதிக்கக்கூடாது. எல்லா பிரஜைகளும், குற்றஞ் சாட்டப்பட்டால் சட்டப்பிரகாரமும் ஜூரிமார்களுடைய அபிப்பிராயப்பிரகாரமும் விசாரணையின்பேரில் தண்டனைக்குள்ளாவார்களே யொழிய, அரசன் அவன் இஷ்டப்பிரகாரம் அவர்களை தண்டிக்கக்கூடாது. வரவர ஸாக்ஸன் ஜாதியாரும் நார்மன் ஜாதியாரும் துவேஷத்தை ஒழித்து சிநேக பாவத்தைக் கைப்பற்றி ஒரு ஜாதியாராக கூடினார்கள். அவர்கள் தான் இப்போது இங்கிலீஷ்காரர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இந்தக் காலத்தில்தான் இங்கிலீஷ் பார்லிமெண்டானது ஆரம்பமாய் ஜனங்களுடைய பிரதிநிதிகள் அடங்கிய 'ஹவுஸ் ஆவ் காமன்ஸ்' என்ற சபையாகவும் பிரபுக்கள் சேர்ந்த 'ஹவுஸ் ஆவ் லார்ட்ஸ்' என்ற சபையாகவும் ஏற்பட்டது. 'காமன்ஸ்' சபையோரின் சம்மதமின்றி அரசன் யாதொரு வரியும் விதிக்கக்கூடாது என்ற முறையானது கி.பி. 14-ம் நூற்றாண்டுக்குள் அனுஷ்டானத்திற்கு வந்துவிட்டது. கிறிஸ்துவமத நூலாகிய 'பைபில்' என்ற கிரந்தமானது லத்தீன் பாஷையிலும் கிரேக் பாஷையிலும் வழங்கிவந்து பொதுஜனங்களால் வாசிக்கமுடியாமல் இருந்தது. விக்லீப்பும் அவரை பின்பற்றியவர்களும் கி. பி. 1384-ம் ஆண்டுவாக்கில் அக்கிரந்தத்தை ஆங்கிலபாஷையில் மொழிபெயர்த்தார்கள். அது முதல் இங்கிலீஷ் பாஷையும் ஒரு நவீனத்தோற்றம் பெறத்துடங்கியது.

6 லங்காஸ்டர் யார்க் வம்ச அரசர்கள் கி. பி. 1399-1485 86 வருஷங்கள். இந்த இரண்டு வம்சங்களிலும் 6 அரசர்

கள் அரசாண்டார்கள். அவர்கள் காலத்தில் சிவப்பு ரோஜா வெள்ளைரோஜா மலர்கள் அடையாளமாகக்கொண்ட அந்த இரண்டு கூட்டத்தார்களுக்குள் கி. பி. 1450 முதல் 1455-ம் ஆண்டுவரை உள்நாட்டு போர் நடந்தது. இந்தக் காலத்தில் அதாவது கி. பி. 1474-ம்ளு வாக்கில் வில்லியம் காக்ஸ்டன் என்போன் இங்லீஷ் புஸ்தகங்களை முதலில் அச்சடித்தான்.

7 டேர் வம்ச அரசர்கள் கி. பி. 1485-1603, 178 வருஷங்கள். இந்த வம்சத்தை ஸ்தாபித்தவன் ஹென்றி VII என்போன். அவனுடைய மகனான ஹென்றி VIII என்பவன் ஒன்றின் பின் ஒன்றாக ஆறு ஸ்திரீகளை விவாகம் செய்துகொண்டதாகக் கியாதிபெற்றது மல்லாமல் அவர்களில் சிலரை சிரைச்சேதம் செய்தான். இவன்காலத்தில் ஐரோப்பாகண்டத்தில் லூதர் என்பவர் 'ரிபர்மேஷன்' ஒன்ற மத சீர்திருத்தத்தை ஏற்படுத்தினார். கிறிஸ்துமதத்தில் அதுமுதல் புரோடஸ்டாண்டு வகுப்பார்கள் ரோமான் வகுப்பார்களை விட்டுவிலகி ரோமாபுரியிலிருக்கும் ரோமன்கதோலிக் அத்தியக்ஷகுருவாகிய போப்பின் அதிகாரத்தை மறுத்தார்கள் ஹென்றி VIII அரசன் தன்னுடைய சுயநலத்தைக்கருதி ஆங்கில மடாலயங்களையும் அவர்களுடைய சொத்துக்களையும் கவர்ந்து போப்பின் அதிகாரத்தினின்று தன்னையும் ஆங்கில மதஸ்தாபனத்தையும் விலக்கிக் கொண்டு அதைத்தன் ஆளுகைக்குள் கொண்டுவந்தான். அவனுடைய மகள் மேரி என்பவள் கி. பி. 1553-ம் ஆண்டிர ராணியாக அரசாண்டு ரோமன் கதாலிக் மதத்தில் தீவிர சிரத்தையுள்ளவளாய் புரோடஸ்டாண்ட் சார்பினரை இம்சித்து வந்தாள். அவளுக்குப்பின் வந்த எலிஸபெத் என்ற ராணி புரோடஸ்டாண்ட் சார்பினளாய் ரோமன்கதாலிக் மதஸ்தர்களை இம்சித்தாள். இந்த எலிஸபெத் ராணி காலத்தில்தான் முதல் முதல் அதாவது கி. பி. 1600-ம் ஆண்டில் ஈஸ்ட் இண்டியா கம்பெனி என்ற வர்த்தக கூட்டமானது ஸ்தாபிக்கப்பட்டு இந்தியா தேசத்துடன் வியாபாரம் செய்ய ஆரம்பித்தது. இவள் காலத்தை ஆங்கில சரித்திரத்தில் பெருமையான காலமாகச்சொல்லுகிறார்கள். ஷேக்ஸ்பியர் என்ற மகா நாடகக்கவி இக்காலத்தில் தோன்றினர். அமெரிக்கா தேசத்தில் பல ஆங்கிலத் தலைவர்கள் சென்று குடியேறி நாடுகளை ஸ்தாபித்தார்கள். அது வரை ஐரோப்பாக்கண்டத்திலும் அமெரிக்கா கண்டத்திலும் செழித்து ஓங்கி விளங்கிய ஸ்பெயின் தேசத்தரசனான பிலிப் IIஎன்பவனுடைய கப்பற் படைகள் ஆங்கில தேசத்தைப் படையெடுத்ததில் தோல்வியடைந்தன. எலிஸபெத்ராணியின் காலமானது நமது தேசத்தில் மொகலாய வம்சத்தில் அக்பர் என்பவர் சிறப்பாய் அரசாண்டகாலமாகும்.

8 ஸ்டூவர்ட் வம்ச அரசர்கள். கி. பி. 1603-1714, 111 வருஷங்கள். இந்த வம்சத்தின் முதல் அரசனான ஜேம்ஸ் I என் போன் ஆங்கில தேசத்தின் அரசனாவதற்குமுன்பே ஸ்காட் லாண்டு தேசத்தின் அரசனாயிருந்தபடியால் இரண்டு தேசங் களும் இவன் காலத்தில் ஒரு ஆளுகைக்குள் வந்தன. இந்த அரசன் காலத்தில் இப்பொழுது வழங்கிவரும் கிறிஸ்துவ பைபில் நூலானது ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. இவனுடைய மகன் சார்லஸ் I என்போன் பார்லிமெண்டு சம் மதமின்றி வரிகள் வசூலித்து வந்ததற்காக பார்லிமெண்டு சபையார் இவனை எதிர்த்தார்கள். இருதாரத்தாருக்கும் நடந்த யுத்தத்தில் அரசன் தோல்வியுற்று பார்லிமெண்டு கக்ஷியால் கைதிசெய்யப்பட்டான். இவன் பார்லிமெண்டு சபையில் ஏற்ப டுத்தப்பட்ட ஓர் ஹைகோர்ட்டில் விசாரணை செய்யப்பட்டு, தேசத்துரோகம், கொலை என்ற குற்றங்கள் செய்ததற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டது. அவனை கி. பி. 1649-ம் ஆண்டில் சிரச்சேதம் செய்தார்கள். அதின்பிறகு ஓர் குடியரசு நாடு ஏற்படுத்தப்பட்டு அதற்கு பார்லிமெண்டு கக்ஷியின் தலைவ னை ஒலிவர்கிராம்வெல் என்போன் அதிபதியாய் கி.பி. 1658ம் ஆண்டுவரை அரசாங்கத்தை நடத்தினன். கி. பி. 1660ம் வரு ஷத்தில் சாரலஸ் I மகனான சாரலஸ் II அரசனான ஸ்டூவர்ட் வம்சத்தார் காலத்தில் ஆங்கிலேயர்கள் உலகத்தில் முதன்மை யானகுடி யேறும் ஜாதியாராகவும் வர்த்தகர்களாகவும் ஆயினர். இந்த காலத்தில் நவீன ஆங்கிலபாஷையானது வாசக நடைக்கு உரியதாகச்செய்யப்பட்டது. கி. பி. 1665-ம் வருஷத்தில் லண் டன் நகரமானது பிளேக் வியாதியால் பீடிக்கப்பட்டு பல்லா யிரக்கணக்காய் ஜனங்கள் மாண்டார்கள். கி பி 1666-ம் வருஷத் தில் அதில் பாதி பாகம் ஒருபெரிய அக்னி உபாதியால் அழிக்கப் பட்டது. ஜேம்ஸ் IIன் மருமகன் வில்லியம் IIIயும் மகள் மேரியும் கி. பி. 1689-ம் ஆண்டில் ராசன் ராணியுமாகச் செய்யப் பட்டார்கள். அந்த வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்ட பாத்திய ஸ்தாபன சட்டத்தில் அரசரின் அதிகாரமானது இன்னும் வரம்புக் குள்படுத்தப்பட்டது. அரசன் பார்லிமெண்டின் சம்மதமின்றி வரி விதிக்கப்படாதென்றும் சேனையை வைத்துக் கொள்ளக்கூடாதென்றும் பிரஜைகளுக்கு அரசனிடம் மனுக் கொடுத்துக்கொள்ள பாத்தியம் உண்டென்றும் பார்லிமெண் டில் மெம்பர்கள் அவர்கள் அபிப்பிராயங்கள் தங்குதடையின்றி எடுத்துக்கூறலாமென்றும் இங்கிலீஷ் அரசர் ரோமன் கதாலிக் மதத்தை அனுஷ்டிக்கவாவது அம்மதஸ்தரை விவாகம் செய்து கொள்ளவாவது கூடாதென்றும் அச்சட்டத்தால் ஏற்பட்டது.

9. ஹானோவர் வம்ச அரசர்கள் (கி. பி. 1714—1837) 123 வருஷங்கள். இந்த வம்சத்தில் ஐந்து அரசர்கள் ஆண்

டார்கள். அவர்களில் ஜார்ஜ் III மன்னர் காலத்தில் இங்கிலாந்தின் ஆளுகையிலிருந்து அமெரிக்கா கண்டத்தின் ஐக்கிய மாகாணத்தார் தங்கள் சுயேற்சையை நாடி யுத்தஞ்செய்து பிரிந்தார்கள். ஐக்கியநாட்டின் சுயேற்சையானது கி.பி. 1776ம் வருஷத்தில் விளம்பரப்படுத்தப்பட்டது. இந்தியாவில் கவர்னர் ஜனரலாயிருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் என்பவர் இந்தியர்களை ஹிம்சைப்படுத்தி அநீதியாய் ஆளுகை செலுத்தினரென்று பார்லிமெண்டு சபையில் அவர்பேரில் குற்றஞ் சாட்டப்பட்டது. அவருடைய விசாரணையானது கி.பி. 1788ம் ஆண்டில் ஆரம்பித்து சில வருஷங்களாக நடைபெற்று கடைசியில் விடுதலை செய்யப்பட்டார். பிரான்ஸ்தேசத்தில் 1789ம் வருஷத்தில் ஒரு பெரிய கலாபம் நிகழ்ந்தது. அதின் முடிவில் ஓர் பேர்போன தளகர்த்தனை நெப்போலியன் போனபார்ட் என்பவன் பிரான்ஸ் தேசத்தில் ஆதிக்யம் பெற்று கடைசியில் சக்கிரவர்த்தியாயினன். பிரஞ்சு தேசத்திற்கும் இங்கிலாந்து உள்பட மற்ற சில ஐரோப்பிய தேசங்களுக்கும் கொடும்போர் நிகழ்ந்தது. கடைசியில் நெப்போலியன் வாட்டர்லூ சண்டையில் 1815-ம் வருஷத்தில் தோல்வியடைந்து சிறைப்படுத்தப்பட்டு ஸெண்ட் ஹெலீனுதீவுக்கு அனுப்பப்பட்டு அங்கே 1822ம் வருஷத்தில் மரணமடைந்தான். கி. பி. 1832ம் வருஷத்தில் இங்கிலாந்தில் ஓர்சிறந்த ராஜகீய சீர்திருத்தம் ஏற்பட்டது. அதன் மூலமாய் முன் வோட்டில்லாத ஜனங்களுக்கு வோட்டுகள் கிடைத்து "ஹவுஸ் ஆவ் காமென்ஸ்" சபைக்கு மெம்பர்களாகத் தெரிந்தெடுப்பதற்கு, ஸ்தானங்களையும் வோட்டர்களையும் விசாலப்படுத்துவதற்கும், ஜன உரிமைகளை பலப்படுத்துவதற்கும், ஓர் சட்டம் ஏற்படுத்தப்பட்டது.

10. வின்ஸர் வம்ச அரசர்கள் 1837—இதின் முதல் அரசர் மகாராணி விக்டோரியா. அவர் 1837ம் வருஷமுதல் 1901ம் வருஷம் வரை அரசு செலுத்தினர். அவருடைய காலத்தில் இங்கிலாந்து தேசமானது கீர்த்தியிலும் செல்வாக்கிலும் முன்னேற்றம்பெற்று அந்த காலத்தை புகழ்பெற்ற காலமென்று கொண்டாடுகிறுர்கள். 1854ம் வருஷமுதல் 1856ம் வருஷம்வரை இங்கிலாந்துக்கும் ருஷியாவுக்கும் ஒரு யுத்தம் நடந்து பிறகு சமாதானமாய் முடிந்தது. இந்தியாவில் 1857ம் வருஷத்தில் சிப்பாய்க் கலகம் என்ற ஒரு பெரிய கலகம் உண்டாகி இந்தியாவின் ஆளுகையானது ஈஸ்ட்டு இந்தியா கம்பெனியாரிடமிருந்து இங்கிலீஷ் அரசாங்கத்திற்கு மாற்றப்பட்டது. மகாராணி விக்டோரியாவிற்குப் பிறகு அவர் குமாரரான எட்வர்ட் VII அரசன் ஆனர். அவர் 1910ம் வருஷத்தில் மரணமடைந்தார். அவருக்குப்பின் அவருடைய குமாரரான ஜார்ஜ் V அரசராக அரசுசெலுத்தி வருகிறுர். இவர்

காலத்தில் 1914ம் வருஷமுதல் 1918ம் வருஷம்வரை இங்கிலாந்து பிரான்ஸ் முதலான தேசங்கள் ஒரு தரப்பாகவும், ஜெர்மனி முதலிய தேசங்கள் மற்றொரு தரப்பாகவும் இருந்து ஒரு கோரமான மகா யுத்தம் நிகழ்ந்தது. அந்த யுத்தத்தில் ஜெர்மானியர் தோல்வியடைந்தார்கள். அந்த யுத்தமானது தரையிலும், சமுத்திரத்தின்மேலும், சமுத்திரத் தண்ணீருக்குள்ளும் ஆகாசத்திலும் நடைபெற்றது. அதற்காகக் கடலில் முழுகிக் கிளம்பும் கப்பல்களும், ஆகாய விமானங்களும் உபயோகப்பட்டுவந்தன. அந்த யுத்தத்தின் முடிவில் ருஷியா ஆஸ்திரியா ஜெர்மனி துருக்கி முதலிய தேசங்களில் ஆண்டுவந்த அரசர்கள் அவருடைய ஸ்தானங்களிலிருந்து விலக்கப்பட்டனர். அந்த தேசங்கள் குடியரசு நாடுகள் ஆயின. இங்கிலாந்தின் ராஜவம்சமட்டும் யாதொரு சலனமின்றி அதின் ஸ்தானத்தில் நிலைபெற்று இருந்துவருகிறது.

11. அரசாக்ஷி.

இங்கிலாந்து தேச அரசாக்ஷி "எல்லைக்குட்பட்ட ஏகாதிபத்திய அரசாக்ஷி" எனப்படும். அரசர்வம்ச பரம்பரையில் வருவர். இளவரசுக்கு, பிரின்ஸ் ஆப் வேல்சு என்று பட்டம்.

அரசருக்குக் கீழ் இரண்டு சட்டசபைகள் இருக்கின்றன; ஒன்று ஜனங்களின் பிரதிநிதிகள் அடங்கிய சபை; இதற்கு "ஹவுஸ் ஆப் காமன்ஸ்" என்று பெயர். மற்றது பிரபுக்களின் பிரதிநிதிகள் அடங்கிய சபை; இதற்கு "ஹவுஸ் ஆப் லார்ட்ஸ்" என்று பெயர். இவ்விரண்டும் கூடி பார்லிமெண்ட் எனப்படும். இந்த இரண்டு சபை அங்கத்தினர்களிலிருநதும் செல்வாக்குடைய சில பேர்கள் ஒற்றுமையாகி அரசாக்ஷியை நடத்துவார்கள். இச்சிலபேர்சேர்நத அந்தரங்க சபைக்கு "காபினட்" என்று பெயர். இவர்கள்தான் சகல காரியங்களையும் உண்மையில் முடிவு செய்பவர்கள். இதற்குத் தலைவராக இருக்கப்பட்டவர்தான், பிரதம மந்திரி, "பிரைம் மினிஸ்டர்" என்று சொல்லப்படுவார். இந்த அந்தரங்க சபையில் இந்திய மந்திரி ஒருவர். அவருக்கு உட்பட்டுதான், இராஜப்பிரதிநிதியும், சென்னை முதல் மற்ற கவர்னர்களும் இந்தியாவில் சட்டப்படி அரசாக்ஷி செய்யவேண்டியது. அவ்விதமே மற்றப் பிரதேசங்களுக்கும் மந்திரிகள் உண்டு.

ஒரு சட்டம் புதிதாக ஏற்படவேண்டுமானல், அது முதலில் "ஹவுஸ் ஆப் காமன்ஸ்" சபையில் கொண்டுவரப்பட்டு, அங்கே அங்கீகாரமானபின், "ஹவுஸ் ஆப் லார்ட்ஸ்"ல் ஆங்கீகாரமாகவேண்டும். அப்போது இராஜசம்மதம் அளிக்கப்படும். பிறகு அமுலுக்குவரும். பண சம்மந்தமான எந்த சட்டத்தையும் "ஹவுஸ் ஆப் லார்ட்ஸ்" 1 மாதத்திற்குமேல் தடை செய்யமுடியாது. அந்தகாலத்திற்குள் பிரபுக்கள் அதைத்

திருத்தி ஒப்புக்கொள்ளாவிட்டால் அரசருடைய அனுமதியில் அது அமுலுக்கு வந்துவிடும்.

"ஹவுஸ் ஆப் கரமன்சு"க்குத்தலைவர் அங்கத்தினர்களுக்குள் தேர்ந்தெடுக்கப்படுவர். அவருக்கு "ஸ்பீகர்"என்று பெயர். இராஜ்ஜியத்தில் உயிர்வாழும் ஒவ்வொரு குடும்பத்தாருக்கும் இச்சபைக்கு அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்க ஓட்டுரிமை உண்டு. இப்போது இச்சபையில் மொத்த அங்கத்தினர் 615--492 இங்கிலாந்து, 36 வேல்ஸ், 74 ஸ்காட்லெண்ட், 13 வட அயர்லாந்துலிருந்தும், தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவர்களில் 307, அதாவது சரிபாதி கிராமங்களி (ஊர்கள்) லிருந்து எடுக்கப்படுவது கவனிக்கத்தக்கது. பிரபுக்கள் எல்லாரும், பெரிய பாதிரிமார்கள் உள்பட, ஹவுஸ் ஆப் லார்ட்சுக்கு அங்கத்தினர்களாவார்கள். அச்சபைக்குத் தலைவர் பிரதம மந்திரிக்கு அடுத்தபடியில் உள்ளவர். அவருக்கு "லார்ட் சேன்சலர்" என்ற பட்டம்.

12. முடிவுரை.

இந்தியதேச சரித்திரத்தை இங்கிலாந்துதேச சரித்திரத்துடன் ஒத்துப் பார்த்திடில், சில வித்தியாசங்கள் காணப்படுகின்றன. இந்தியாவானது அநேகமாயிரம் வருஷங்களாக நாகரீகத்துடன் கூடியதாயுள்ளது. இங்கிலாந்தின் நாகரீகமானது சுமார் 1500 வருஷகாலமே நீடித்துள்ளது. நம்முடைய தேசம் இங்கிலாந்து தேசத்தைக்காட்டிலும் அநேக மடங்கு விசாலமாயுள்ளது இங்கிலாந்துதேச சரித்திரமோ பெரும்பாலும் அந்த 1500 வருஷ காலத்தில் ஒரே தொடர்ச்சியுடன் அபிவிர்த்தியடைந்த ராஜீய அமைப்புள்ளது. நம்முடைய சரித்திரத்திலோ பற்பல மாறுதல்களுடன் சென்ற 1500 வருஷங்களாக தொடர்ச்சியின்மையானது காணப்படுகிறது. அந்த தேசத்திலோ இப்பொழுது ஆங்கிலம் ஒரே ஒரு பாஷையாகப் பேசி, ஒரே ஒரு ஜாதியாராக இருக்கின்றனர் நம்முடைய தேசத்திலோ பல பாஷைகள்பேசும் பல ஜாதியார்கள் வசிக்கின்றனர். ஆங்கிலேர்கள் கைத்தொழில்களிலும் வியாபாரத்திலும்ஆளுகையிலும் லௌகீக சாஸ்திரங்களிலும் தேர்ச்சி யடைந்திருக்கிறார்கள். இந்தியர்கள் பொதுவாக அந்தர்முகப்பட்டவர்களாய் தத்துவ சாஸ்திர விசாரணையிலும் மத விஷயங்களிலும் பற்றுதல் உள்ளவர்களாய் பகிர்முக பிரவிர்த்திகளை அதிக உற்சாகத்துடன் நடத்துகிறதில்லை. ஆகையால் இவ்விருதாத்தாரும் ஒருவரிடமிருந்து மற்றொருவர் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் பல உள்ளன.

பாரதி பிரஸ், மன்னார்குடி.

கிராம பூகோளமும், அறிவும்.

ஆசிரியர்:— என். கோபால ஐயர், பி. ஏ., எல். டி.,
ஆசிரியர், தேசீய உயர்தரப் பள்ளிக்கூடம், மன்னார்குடி.

1. பூகோள சாஸ்திரம் என்றால் என்ன?

பூமி, ஆகாயம், சமுத்திரம், இவைகள் சம்பந்தமான விஷயங்கள். பழம்பூகோள சாஸ்திரத்தில் மேற்குறித்தவைகளின் அமைப்புகளைப் பற்றித் தனித்தனியே அறிதல்; புதிய பூகோளத்தில் அவைகளின் சம்பந்தா சம்பந்தங்களையும், மனித வாழ்க்கைக்கு அவைகள் எவ்விதம் ஈடுபட்டிருக்கின்றன என்றும் நாம் கற்றுணர்கிறோம். பூமியின் வளருந்தன்மையையும் அதன் அம்சங்களின் மாறுதல்களையும் மனிதனது வாழ்க்கை அவைகளுக்கு எவ்வளவு தூரம் பாதிக்கப்பட்டும் பாதிக்கப்படாமலுமிருக்கிறதென்றும் நாம் அறிகிறோம்?

2. மனிதவாழ்க்கைக்குப் பூகோளசாஸ்திரம் இன்றியமையாதது. இதன்பொருட்டே மற்ற சாஸ்திரங்களைவிட பூகோள சாஸ்திரம் மாணவர்களுக்கு அவசியமானது. பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் இதன் தன்மை, மற்ற சாஸ்திரங்களிலுள்ள சாராம்சங்களைக் கிரகித்து அவைகளைக்கொண்டு தனக்கு வேண்டியவைகளையறிதல்.

3. பூகோளசாஸ்திரத்தை எவ்விதமாகக்கற்றுணர்கிறோம்?

(1) அநுபவப் பூர்வமாகவும்,

(2) உருவப்படங்கள், போட்டோப் படங்கள், மாடல்கள், அட்டவணைகள், வளைந்தகோடுகள் முதலிய சாதனங்களால்,

(3) முன்னோர்கள் உலகப்பிரயாணங்களில் கண்டறிந்திருக்கும். விஷயங்களை விஷயபூர்வமாகவும், கதாப்பூர்வமாகவும் அறிகிறோம்.

4. ஒவ்வொரு மாணக்கரும் பூகோளசாஸ்திரத்தை அநுபவப்பூர்வமாக ஆரம்பிக்கவேண்டும். இதற்கு முக்கிய சாதனம் கிராம பூகோளம் அதாவது தான்வசிக்கும் கிராமமோ அல்லது பட்டணமோ அதில் உள்ள பூகோளசாஸ்திர அம்சங்கள்.

கிராம பூகோளசாஸ்திரத்திலிருந்து, ஜில்லா, இராஜதானி, தேசம், உலகம், முதலிய பூகோளசாஸ்திர ஆராய்ச்சிக்குச் செல்லுதல்.

5. கிராமத்தில் ஒவ்வொரு மாணுக்கனும் பூகோள சாஸ்திர சம்பந்தமாகக் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

(1) கிராமத்தின் அமைப்பு, எல்லைகள், திக்குகள்.
(2) ,, சீதோஷ்ணம்
(3) ,, மழை.
(4) ,, விளைபொருள்கள்.
(5) ,, கைத்தொழில்கள்.

மேற்குறித்த அம்சங்களை மிகுந்த எளிய வழியில் கற்கஆரம்பிக்கும் முறைகள் பின்வருமாறு:—

(1) கிராமப்பள்ளிக்கூடத்தின் அமைப்பு, விஸ்தீரணம். இவைகளைக்குறிக்கும் படங்களை எழுதுதல்.

(2—3) i மழைகாலம், கோடைகாலம் இவைகளில் சூரியனது தோற்றமும் சலனமும், இந்த சமயங்களில் காற்று எப்படி அடிக்கிறது.

ii சூரியன் உதயம், அஸ்தமனம், ஒவ்வொரு நாளும் குறித்தகாலத்தில் சூரியனது இருப்பிடத்தையும் சலனத்தையும் கவனித்துப்பார்ப்பது. முறை— வீட்டின் தாழ்வாரங்களில் கோல்நட்டு அதன் நிழலின் மாறுதல்களை ஒவ்வொரு நாளும் குறித்துக்கொள்வது.

iii வாயுமானம் அறியும் கருவி (பாராமிட்டர்), சீதோஷ்ணம் அறியும் கருவி (தர்மாமிட்டர்), இவைகளின் பிரயோஜனம், உபயோகிக்கும் விதம் அறிதல்.

(4—5) மாணுக்கர்களை உபாத்தியாயர் கிராமத்து விளைபொருள்களையும், கைத்தொழில்களையும் கண்ணுல் நேரில் பார்ப்பதற்குப் பல பிரிவு(பார்டி)களாக அழைத்துச் செல்வது.

பிரிவுகூட்டத்தார் முக்கியமாக கவனிக்கவேண்டிய அம்சங்கள்:—

(அ) சுற்றிப்பார்க்கப்போகுபவர்கள் (எக்ஸ்கர்ஷன்) விளையாட்டாக சிற்றுண்டி சாப்பிடப்போகிறவர்கள் (பிக்னிக்) அல்ல. பூகோள சாஸ்திர ஆராய்ச்சிக்கு அடிப்படையாகவுள்ளது.

(ஆ) ஆகையால் மாணவர்கள் சுற்றிப்பார்க்க கிளம்புவதற்கு முன் எந்தெந்த விடங்களுக்கு போகப்போகிறுர்களென்றும்,

என்ன யென்ன விஷயங்களை ஆராய்ச்சி செய்யப்போகிறார்கள் என்றும் முன்னரே தெரிந்துகொள்ளவேண்டும். ஆராய்ச்சி செய்தபிறகு வகுப்புகளில் கலந்து பேசிக்கொண்டு தாங்கள் பார்த்த விஷயங்களை மனதில் ஸ்திரப்படுத்திக்கொள்ளவேண்டும்.

(இ) பிரிவுகூட்டத்தார் (பார்டி) செல்லுகையில் சிறுவர்கள் பார்க்கக்கூடிய விஷயங்கள்:—

(1) கிராமத்தின் மேடு பள்ளங்கள் மண்ணின் குணங்கள் அவைகளில் வளரும் மரம் செடிகள்.

(2) நதி (அல்லது ஓடை:-) அதில் நின்று ஓடும் கிளைகள்; நதியால் ஏற்படும் நில மாறுபாடுகள்.

(3) கிராம சந்தை (மார்க்கெட்.)

(4) வண்டிகள் செல்லும் பாதைகள்.

(5) கிராமகொல்லன், கன்னான், தட்டான் பட்டரைகள்.

மேற் குறித்தவைகளிலிருந்து வாலிபர்கள் கிராமத்தின் பரப்பு, எல்லை, சாகுபடி, வியாபாரம், தொழில் முதலியவைகளை எளிதில் தெரிந்துகொள்ளலாம்.

கிராமத்திலிருந்து ஜில்லா, இராஜதானி, தேசம், கண்டம் முதலானவைகளின் பூகோள சாஸ்திரங்களுக்கு மெதுவாக ஆராய்ச்சி செய்யப்போகலாம்.

6. உலக பூகோள சாஸ்திரத்தில் நாம் பெரும்படியாகத் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள் யாவை?

உலக சம்பந்தமான சில பொது விஷயங்கள்:—

(1) சூரியனது வெளித்தோற்றமான சலனம்:- இதை (அடல்ட்)வளர்ந்த பிள்ளைகளுக்கு இயற்கை மூலமாக கற்பித்தல்.

(2) பூமி தன்னைத்தானே சுற்றிக்கொள்ளல். உதாரணம்—பம்பரம் இரவு பகலுக்குக் காரணம்—படம் விளக்கும் பம்பரமும் கொண்டு காண்க

(3) பூமி தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றுதல்—காலங்கள் மாறுபடுதல்.

படம்:— சூரியன் மத்தியில் அதைச்சுற்றி பூமியும் அதன் இடமாறுதல்களும்.

(4) உஷ்ணத்திற்கு ஏற்றாற்போல் (உஷ்ண மண்டலங்கள்) பூமியின் பிரிவினை குளோபின் உருவத்தால் உஷ்ணமண்டலங்களைக் காண்பித்தல்.

சூரியனது நேரான கிரணங்களும் சாய்ந்த கிரணங்களும்.

(5) தாவரப்பொருள்களுக்குத் தகுந்தாற்போல் பூமியின் பிரிவினை. இவ்விடத்தில் உஷ்ணத்தின் தன்மைக்குத் தகுந்தாற்போல் பயிர்பச்சை யென்பதை அறிதல். தாவரமண்டலங்களைப் படங்கள், போட்டோக்கள் மூலமாகத்தெரிந்துகொள்ளலாம்.

(6) மனிதர்களுக்குத் தகுந்தாற்போல் உலகப்பிரிவினை. கருப்புமனிதர்கள், (நீக்ரோக்கள்.) பழுப்புநிறமான மனிதர்கள் வெள்ளையர்கள்.

(7) காற்று மழை இவைகளுக்குத் தகுந்தாற்போல் பூமியின் பிரிவினை.

(1) உலகக்காற்றுகள்.

(2) ஜாஸ்தி மழைபெய்யும் இடங்கள்.

(3) வனாந்திரங்கள்.

(4) பருவக் காற்றுகளினால் மழை பெய்யக்கூடிய இடங்கள்.

(அ) வியாபாரக்காற்றுகள் வீசும் பிரதேசங்கள்.

(ஆ) எதிர் வியாபாரக்காற்றுகள் வீசும் பிரதேசங்கள்.

(இ) பருவக்காற்றுகள் வீசும் பிரதேசங்கள்.

8. பூமியைப் பெரும்பகுப்பான இயற்கைப் பிரதேசங்களாகப் பிரித்தல். பிறகு ஒவ்வொரு பிரதேசத்தின் அம்சங்களைக் கற்றுணர்தல் இப்படிச் செய்வதால் விஷயங்கள் மனதில் தெளிவுறப் படிதல்.

(9) பொதுவான உலகசம்பந்தமான பூகோளசாஸ்திர விஷயங்களைக் கிராம பூகோளத்திலிருந்து படிப்படியாக உலக பூகோளத்திற்குச்செல்வது.

மழைக்காற்று சீதோஷ்ணம் முதலியவை வேறு அலாதி பிரிவாகவும், சூரியனைச்சுற்றி பூமி செல்லுதல் முதலியதைப் பற்றி பஞ்சாங்கம், வானசாஸ்திரம் என்ற பிரிவுகளாகவும். பூதபௌதிகம் என்ற பிரிவில்பார்க்க.

பாரதி பிரஸ், மன்னார்குடி.

கௌமார குருகுலக்
கல்விப் பிரசுரம் 1.

தேச சரித்திரம் 5 (1)

கிராம பூகோளம்.

ஆசிரியர் :—இராவ்சாகிபு சு. வி. கனகசபைப் பிள்ளை,
தலைவர், கௌமார குருகுலம், மன்னார்குடி.

கிராம பூகோள சாஸ்திரம் அறிவதற்கு உதாரணமாக பூவனூர் என்ற ஒரு கிராமத்தை எடுத்து அது சம்மந்தமான சில காரியங்களை ஆராய்வோம்.

பூவனூர் கிராமம்.

1. இருக்குமிடம்.—மன்னார்குடிக்கு வடக்கு 7மைல் தூரத்திலும் நீடாமங்கலத்திற்குத் தெற்கே 2 மைல் தூரத்திலும், பாமணி ஆற்றிற்கு வலதுகரையில் பெரும்பாலுமாகவும் உள்ளது. கும்பகோணத்திலிருந்து மன்னார்குடிக்குப் போகும் கப்பிரோட்டில் 17-வது மைல்கல்லுக்கு சமீபத்தில் இருக்கிறது. பூவனூருக்கும் தெற்கே இராஜப்பையன் சாவடி இரயில்வே ஸ்டேஷன் ஒரு மைல் தூரம்.



2. விஸ்தீரணம்.—சர்க்கார் கிஸ்தி செலுத்தும் நஞ்சை நிலம் 982, புஞ்சை நிலம் 43, தீர்வையில்லாத இனம் 178, புரம்போக்கு

(ஆறு, குளம் முதலிய) 315, தரிசு 1 ஆக மொத்தம் 1519 ஏக்கர் விஸ்தீரணம். ஊர் நத்தம் $57\frac{1}{2}$ ஏக்கர்.

3. ஜனக்கணக்கு முதலிய.—

		ஜனம்			மதத்தினர்		
வருஷம்.	வீடுகள்.	ஆண்-	பெண்.	மொத்தம்.	இந்து-	முஸ்லீம்-	கிறிஸ்து.
1891	274	—	—	1299	—	—	—
1901	338	712	854	1566	1154	18	394
1911	347	689	887	1576	1131	32	413
1921	344	661	852	1513	1110	36	367
1931	—	—	—	1616	—	—	—

1931 வருஷத்திய ஜனக் கணக்கு இன்னும் வெளியாகவில்லை. ஆனல் மேலே சொல்லப்பட்ட எண் குறிப்பாக அறியப்பட்டது. 1891ஸு முதல் 1901ஸு வரை, ஜனங்கள் அதிகமாகி வந்தது. கூடியவரை கொஞ்சம் விருத்தியானது. 1911 வருஷத்திற்கு பிறகு குறைவாக காண்கிறது. இதைப்பற்றி யாவரும் விசாரிக்க வேண்டியது. வியாதிகளினுல் ஜனச் சேதமானதா? வறுமையால் அல்லது வேறு காரணங்களால் அன்னிய ஊர்களுக்குக் குடியேறினுர்களா? தீவாந்தரம் போய் செல்வம் சம்பாதிக்கிருர்களா? முதலிய கேள்விகள் கேட்டு, காரணம் அறிந்து, கஷ்டங்களை நிவர்த்தி செய்ய முயற்சி செய்யவேண்டும்.

கால் நடைகள்.—

வருஷம்.	மாடுகள்.	ஆடுகள்.
1891	821	265
1920	931	342
1924	948	567
1929	1044	402

பின் வருஷங்களின் கணக்கு கிடைக்கவில்லை. கிராமங்களில் கணக்கு பார்த்து மேலே ஜனத்தொகை விஷயம் சொன்னவிதமாக விசாரிக்கவேண்டியது.

வண்டி, உழவுகள் முதலிய.—1920ஸுத்தில், 85 வண்டிகள், 210 உழவுகள், 2 தரிகள், 2 கொல்லர், 2 ஆசாரி பட்டறைகள், 2 கடைகள் உள்ளன.

கோவில், குளங்கள்.—இரண்டு சிவன் கோயில்கள் அதில் ஒன்று பாடல்பெற்ற ஸ்தலம், ஒரு விஷ்ணு கோவிலும் இருக்கிறது; சிவன் கோவில் சாமுண்டி அம்மன் சந்நிதியில் ஞாயிற்றுக்கிழமை தோறும் விஷக்கடிக்கு வேர் கட்டுவார்கள். கிறிஸ்தவர்களுக்கு 3 மாதாக் கோவில்கள் உள்ளன. இவர்கள் பெரும்பாலும் பள்ளர்களும், பறையர்களும் இவர்கள் ரோமன் கதோலிக்கு வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

முஸ்லீம்களுக்கு ஒரு மசூதியும் கட்டப்பட்டிருக்கிறது. சிவன் கோவிலுக்கு 30 வேலி நிலமும், விஷ்ணு கோவிலுக்கு 2 வேலியும் இருக்கிறது. 4 குளங்கள் இருக்கின்றன.

குறிப்புகள்.—மாடு ஆடுகளுக்கு மேய்வதற்கு போதுமான இடம் இருக்கிறதா, மாடு ஆடு மனுஷர்களுக்குக் குடிக்க, குளிக்க ஜலம் போதுமானதா, என்றவைகள் விசாரிக்கவேண்டும். ஜலசௌகரியம் போதுமானதென்று காண்கிறது. ஆனால் அநேகமாய் எல்லாம் நஞ்சையாகவும், தரிசுகள் புஞ்சை நத்தம் முதலிய குறைவாகவும் இருக்கிறபடியால், நஞ்சைகள் சாகுபடி ஆனபிறகு ஆடு மாடுகளுக்கு மேய்ச்சலுக்கு புல் வெளி போதாதெனத் தோன்றுகிறது.

4. விளை பொருள்.—இது காவிரிப்பாய்ச்சலில் உள்ள ஒரு நஞ்சை கிராமம் ஆனதலால் நஞ்சைப் பொருளே அதிகம். புஞ்சை தானியங்களும் குறைவு.

	ஏக்கர்கள் 1893ஸு	1923ஸு
நெல்	1038	1010
சோளம்	7	2
கேழ்வரகு	6	3
தினை	—	1
உளுந்து	—	1
வாழை	1	1½
பழச்செடி	5	7
நிலக்கடலை	3	—
காய்கறி	5	4
மற்றவை	—	2½
மொத்தம் ...	1065	1032

கொல்லைத் தோட்டப் பயிர் செய்வதற்கு இன்னம் இடமுண்டெனக் காண்கிறது. உணவுப்பொருள் தானியங்கள் தவிற ஆமணக்கு முதலிய மற்ற கொல்லைப் பயிர் செய்யக்கூடுமா எனவும் நெல் விலை குறைந்துபோனதால் கரும்பு முதலிய லாபகரமான மற்ற சாகுபடி எவ்வளவு தூரம் செய்ய முடியுமென ஆலோசிக்கவேண்டியது. அவ்விதம் பயிரை மாற்றி விவசாயம் செய்வது பூமி சாரத்தை விருத்தி செய்யும்.

5 மண்வகையும், தீர்வையும்.—

	பிளானில் குறித்த ஸ்தலம்	மண்வகை	தீர்வை 1891ஸு	பாசனம்
1.	அ.	கரிசல் இருமண்	ரூ. 6-0	பாமணியார்
2.	ஆ.	கரிசல் களி	ரூ. 5-0	கொண்டியார்
3.	இ.	தாழ்ந்த கரிசல் இருமண்	ரூ. 5-0	கொண்டியார்
4.	ஈ.	தாழ்ந்த கரிசல் களி	ரூ. 4-8	கொண்டியார்

பிளானில் குறித்த ஸ்தலம்		மண்வகை	தீர்வை 1891ஞ	பாசனம்
5.	உ.	நல்ல கரிசல் இருமண்	ரூ. 7-0	கொண்டியார்.
6.	ஊ.	சாதாரண கரிசல் இருமண்	ரூ. 6-0	கொண்டியார்.
7.	எ,	தாழ்ந்த கரிசல் இருமண்	ரூ. 5-0	பாமணியார்
8.	ஏ.	நல்ல கரிசல் களி	ரூ. 6-0	கொண்டியார்.

குறிப்பு:—இந்த ஸ்தலங்களுக்கு அலாதி அலாதியாக இப்போதுள்ள சராசரித் தீர்வை தெரியவில்லை.

தீர்வை	புஞ்சை	தீர்வை 1 ஏக்கருக்கு	நஞ்சை
1891ஞுக்கு முன்	ரூபா 1-1-10 முதல்		ரூபா 3-2-11 முதல்
	,, 1-7-5 வரை		,, 6-0-9 வரை
1891ஞுல்	,, 1-4-0 முதல்		,, 4-8-0 முதல்
	,, 2-8-0 வரை		,, 7-0-0 வரை
1920ஞுல்	,, 1-8-0 முதல்		,, 5-4-0 முதல்
	,, 3-0-0 வரை		,, 8-4-0 வரை

முப்பது வருஷத்திற்கு ஒரு முறை அப்போது உள்ள கால் ரீதி, தானியத்தின் விலை கூலி முதலியதுகளை முன்னிட்டு சர்க்கார் தீர்வையை முடிவு செய்வதற்கு சேட்டில்மேன்ட் எனப் பெயர். அவ்விதமாகச் செட்டில்மென்ட்டு நடந்தவைகளில் ஏற்பட்ட தீர்வை மேலே காட்டப்பட்டுள்ளன. அன்றியும் தீர்வை பூமி மண்ராசி, பாசனம், வடி கால் முதலியவைகளைப் பொறுத்தும் ஏற்படும்.

6. குடித்தனக்காரர் இயல்பு என்பது குடித்தனக்காரருக்கு உள்ள பூமியையும், அதனுல் சர்க்காருக்கு அவர்கள் தீர்வையைக் கொண்டும் ஒருவாறு அறியலாம்.

தீர்வை ரூபாய்		தீர்வை கொடுக்கும் குடித்தனக்காரர்கள்	அவர்களுக்குள்ள பூமி ஏக்கர்	ஆள் 1க்கு வீதம் ஏக்கர்
0— 1 க்கு	குறைவு	59	9	0·15
1— 10	,,	61	53	0·88
10— 30	,,	61	167	2·74
30— 50	,,	15	92	6·13
50— 100	,,	16	168	10·50
100— 250	,,	13	284	21·76
250— 500	,,	3	134	44·67
500—1000	,,	1	117	117·00
	மொத்தம்...	229	1025	4·48

இங்கு குடித்தனக்காரர்கள் என்றவர்கள் பட்டாதாரர்கள். ஆதலால் மொத்தம் பூவணூரில் 229 பட்டாதாரர்கள் இருக்கிறுர்கள். ஒரு பட்டாதாரரும் ஒரு குடும்பம் எனக் கொள்ளலாம். ஒரு குடும்பத்தில் 1 புருஷன் 1 பெண்சாதி 2, 3 பேர் வயது சென்ற

வர்கள், பிள்ளை பெண்கள் இருக்கும். ஒரு குடும்பத்திற்கு சராசரி 4, 5 பேர்களாகும். இவ்விதமாக 229 பட்டாக்களுக்கும், 1000 பேர் ஆண் பெண் பூமியுள்ள குடும்பத்தினர் ஆவர். மொத்தம் 1513 பேர் ஜனத்தொகை ஆனபடியால் வேறே தொழிலும் இல்லாததால் மேற்சொல்லிய 1000 பேர் போக பாக்கி 500 பேர் சுமார் கூலிக் காரர்கள் ஆவர்.

சாதாரணமாக ஒரு குடும்பத்திற்கு சௌகரியமாக இருக்க 5 ஏக்கர் வேண்டுமென்று வைத்துக்கொண்டால், 48 குடும்பங்கள் சௌகரியமாக இருக்கலாம், மிகுந்த (229-48) 181 குடும்பங் களுக்கு சௌகரியம் குறைவாகும். இதிலும் 61 போக பாக்கி 120 குடும்பங்களுக்கு 1 ஏக்கராவுக்கும் குறைவாக இருக்கிறபடியால் கஷ்டமதிகம் எனச் சொல்லவேண்டியதில்லை. இவர்கள் வேறு கைத்தொழில் செய்து தங்கள் சிலவுகளுக்குத் தக்கவருவாய் அதி கம் செய்யாவிட்டால் கடன் வாங்கிப் பிழைத்து உள்ள நிலமும் விற்றுவிடத்தான் வேண்டிவரும். ஒரு குடும்பத்தில் சம்பாத்தி யம் செய்யக்கூடியவர்கள் பயிரிடுவது தவிற மற்ற தொழில்களை யும் செய்யவேண்டும்.

7. மழை சீதோஷ்ணம் முதலியவைகளை, மன்னார்குடியைப் பற்றி உள்ள விபரங்கள் மழை காற்று சீதோஷ்ணம் என்ற பகுதி யில் உள்ளவைகளைக்கொண்டறிக.

கிராம பரிபாலனம் வழக்கம் போல் கிராம முனிசீபும் கணக் கரும் கிரிமினல், சிவில், ரெவனியூ விஷயங்களை விசாரித்து வரு கின்றனர். கோவாபரேடிவ், பஞ்சாயித்து சங்கங்களும் இருக் கின்றன. சிவன்கோவிலை தேவஸ்தான கமிட்டியாரால் நியமிக்கப் பட்ட டிரஸ்டிகள் கவனித்து வருகிறார்கள். ஜனங்கள் சாமான்னிய மாய் மன்னார்குடிக்கு வந்து தங்களுக்கு வேண்டிய சாமான்களை கடைகளிலும் சந்தையிலும் வாங்கிக் கொள்ளுகிறார்கள். தாலுக்கா போர்ட்டு பள்ளிக்கூடம் ஒன்று இருக்கிறது. அதில் 40 பிரதம பிள்ளைகள் படிக்கிறார்கள். பறையர் பள்ளர்கள் இதில் படிக்க வில்லை அவர்களுக்கு பள்ளிக்கூடமும் வேறு இல்லை அவர்களுக்கு வேண்டிய கல்வி உதவி போர்டார்களாவது, ஊராராவது, பாதிரி மார்களாவது செய்யவேண்டும்.

முடிவுரை :—ஒவ்வொரு கிராமவாசியும் தான் இருந்துவரும் கிராமவிஷயங்களை மேல் சொல்லிய வகையிலும் இன்னம் மற்ற வகையிலும் விசாரித்து அறியவேண்டும், தற்கால முறையில் கல்வி கற்றவர்களுக்கு உலக சமாசாரம், தேச சமாசாரம் பல தெரியும் ஆனால் தங்கள் கிராமவிஷயங்கள் மாத்திரம் தெரியாது. இதைப் போன்ற பேதமை உலகில் வேறெங்கும் இல்லை. கிராம சம்பந்த மான எல்லா விஷயங்களையும் அறிந்து ஆலோசித்தால் அல்லாமல் கிராம முன்னேற்றம் முடியாது. கிராமவாசிபர்கள் இவைகளைக் கவனிப்பார்களாக!

இறைவன் துணை.

கௌமார குருகுலக்
கல்விப் பிரசுரம் 1

தேச சரித்திரம் 7.

தமிழ் நாட்டுப் பூகோளம்.

ஆசிரியர்:—இராவ்சாகிபு சு. வி. கனகசபைப் பிள்ளை
கௌமார குருகுலத் தலைவர், மன்னார்குடி.

ஒரு தேச சரித்திரத்தை அறிய, அதன் காலத்தை 4 பிரிவுகளாகச் செய்து ஒவ்வொரு பிரிவையும் அலாதியாக ஆராயவேண்டும். அவ்வக்கால பூகோளத்தையும் அவ்வகையே அறியவேண்டும். அவையாவன:—

1. மிகப் பழையகாலம்; புராணக்கதைகளையும் கர்னபரம்பரை வாக்குகளையுங்கொண்டு அறிவது.

2. பழைய காலம்; பண்டைய இலக்கிய நூல்களைக் கொண்டு அறிவது.

3. மத்தியகாலம்; பல ஆசிரியர்களின் விருத்தாந்தங்களைக்கொண்டும், கல்வெட்டுகள் மூலமும் அறிவது.

4. சமீபகாலம்; இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு உட்பட்டது; விரிவாக அறியக்கிடப்பது.

1. மிகப்பழைய காலம்.

தமிழ்நாடு மகா புராதன நாடு எனப் பெரியோர்கள் சொல்லவும், புராணங்களிலும் இலக்கியங்களிலும் எழுதியும் இருக்கிறதைக் கேட்கிறோம். புதியதொரு காலத்தை எதிர்பார்க்கும் நாம் பழையகாலங்களின் தமிழ் நாட்டு வரம்பையும் சரிதையையும் அறிவது அவசியம். அன்றியும் புல்லறிவாளர்கள் பூகோள நிலை தம் சிறுஆயுள்நாளில் மாறாததைக் கண்டு இப்போது அது இருப்பதுபோல் எப்போதும் உள்ளதென எண்ணி மோசம் போகிறார்கள். நீண்டகால அளவில் பூமி பல மாறுதல்களை அடைந்து, தரை கடலாகவும், கடல் பூமியாகவும் மாறுவதை அறிஞர் உணர்ந்து மயக்கம் தீருவார்கள். மக்கள் உள்ளத்தில்பற்று அறுவதற்கும் அன்பு மலர்வதற்கும் இம் மயக்கம் தீர்வது அவசியம்.

பல புராணக் கதைகளில் ஒன்று எடுத்துக்கொள்ளு வோம்.

> அமர முனிவர் அகத்தியன் தனாது
> கரகங் கவிழ்ந்த காவிரிப் பாவை" —மணிமேகலை.

கைலாசத்தில் சிவபெருமானுக்கும் உமாதேவியாருக்கும் திருமணம்செய்ய ஆரம்பித்த காலத்தில் அங்கு யாவரும் கூடியதால் வடகோடு தாழ்ந்து தென்கோடு உயர்ந்தமையால், சிவபெருமான் கட்டளையின்படி அகத்தியர் தெற்கு நோக்கி வந்தார். அது சமயம் அவர் கையில் இருந்த ஜலம் கொட்டப்பட்டு அதனால் காவிரி வந்ததெனப் புராணம் கூறும். இதனால் அகத்தியர்தெற்கே வருவதற்குமுன் காவிரிதீரம் இல்லை என்றும், அக்காலத்து அது தோன்றியது என்பதுமே யாகும்.

மேல்நாட்டு சாஸ்திர நிபுணர்கள் கூறுவதும் அவ்வகையே. அதாவது இப்போது கங்காதீரமாகவுள்ளதும் இமயமலைப் பிராந்தியமும் எல்லாம் சமுத்திரமாக இருந்ததாகவும், தற்கால இந்தியாவின் தென்பாகமும் அதன் தெற்கில் மோரீசு சிசல்ஸ், ஆஸ்டிரேலியாவரை தரையாக இருந்ததாகவும் பல காரணங்களைக் கொண்டு முடிவு செய்துள்ளார்கள். அவைகளை எடுத்துக்காட்ட இதுசமயம் அல்ல. பின்னர் வடக்கே தரை தோன்ற அந்த வடதரை சாய்வுக்கும் முன் இருந்த தென்தரை சாய்வுக்கு இடையே காவிரிதீரப் பள்ளத்தாக்கு உதித்ததாகும். அது அகத்தியர் தென்னாட்டுக்கு வந்த சமயம் போலும்.

இதை 1, 2, படங்களில் இருந்து அறிக. 1வது படம் சால்மலித்துவீப (லெமூரிய—**Lemuria**) ஆரம்ப காலத்தியது. 2வது படம் சால்மாலித்துவீப அந்திய காலத்தியது. இவைகளுக்கு இடையே எத்தனையோ ஆயிரக்கணக்கான காலம் சென்றிருக்க வேண்டும். இரண்டு படங்களுக்கும் இடையே உள்ள காலத்திலேதான் காவிரிநதி உற்பத்தியானதும் தமிழகத்தின் தாதையாகிய அகத்தியர் தமிழ் நாட்டிற்கு வந்ததும் என அறியவும். அது இப்போதைக்கு சுமார் 10 லக்ஷம் ஆண்டுகளுக்கு முன்னர் எனக்கொள்ளுவது பல தற்கால பூதபௌதிக சாஸ்திரிகளின் எண்ணம்.

தமிழ் நாட்டு மிகப் பழைய கால பூகோளம்.

இம் மிகப் பழைய கால பூமி கண்டத்தை நமது நூல்கள் சால்மாலித் துவீபம் என்றும் மேல் நாட்டு நூல்கள் லெமுரியாகண்டம் என்றும் கூறும்.

சால்மாலித்துவீபம்-முதற்காலம். படம் 1



LEMURIA – AT ITS GREATEST EXTENT. PLATE 1.

சால்மாலித்துவீபம்-அநதியகாலம் படம் 2



LEMURIA – AT A LATER PERIOD PLATE 2.

குறிப்பு:— (1) இப்போதுள்ள பூகோள எல்லை வெறும் வளவுகோட்டினால் காட்டப்பட்டுள்ளது.
(2) பண்டைக் காலத்தில் பூமியாக இருந்த இடமெல்லாம் நெருக்கக் கோடிட்டு அடைக்கப்பட்டுள்ளது.
(3) இரண்டு பண்டை எரிகளுக்கு சமீபத்தில்தான் மனுஷ சிருஷ்டி முதல் முதல் தோன்றியதென சொல்லப்படுகிறது.

2. பழையகாலம்.

தமிழ் நூல்கள் அனைத்தும் தமிழகத்திற்கு எல்லை கூறுங்கால் வடவேங்கடமே வட எல்லையாக வகுப்பர்;

"வடவேங் கடந்தென் குமரி யாயிடைத்
தமிழ் கூறு நல்லுலகம்" —தொல்காப்பியம்.

என்பதும் மேலே சொன்னவைக்குப் பொருந்தும். படம் 3ல், 1வது படத்தில் உள்ளதை பெரிய அளவில் காட்டப்பட்டிருக்கிறது. அதில் வர்ணமிட்டிருக்கும் பாகம் மாத்திரம் முதல் முதல் தரையாக இருந்தது. வர்ணமிடாத வடபாகமெல்லாம் சமுத்திரமாக இருந்தது. வேங்கடம் (திருப்பதி) வர்ணமிட்ட பாகத்தின் வடஎல்லையில் உள்ளதை கவனிக்கவும்.

நாக நன்னாட்டு நானூறு யோசனை
வியன் பாதலத்து வீழ்ந்து கேடெய்தும் —சிலப்பதிகாரம்.

"பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள" —சிலப்பதிகாரம்.

அடியார்க்கு நல்லார் இதற்கு உரைசெய்ததில் பின் வருமாறு கூறியுள்ளோர்:—

"அக்காலத்து அவர் நாட்டுத் தென்பாலிமுகத்திற்கு வட எல்லையாகிய பஃறுளி என்னும் ஆற்றிற்கும் இடையே எழுநூற்றுக் காலதவாறும் இவற்றின் நீர்மலிவானென மலிந்த ஏழ்தெங்க நாடும், ஏழ்மதுரை நாடும், ஏழ்முன்பாலை நாடும், ஏழ்பின் பாலைநாடும், ஏழ்குன்ற நாடும், ஏழ்குணக்கரை நாடும், ஏழ்குறும்பனை நாடும், என்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும் குமரி கொல்லம் முதலிய பன்மலை நாடும் நதியும் பதியும் தடநீர் குமரி வடபெரும் கோட்டின்காறும் கடல் கொண்டொழிதலால் குமரியாகிய பௌவம் என்னர் என்க."

மேலும் வான்மீகி ராமாயணம் கிட்கிந்தா காண்டம் 41வது சருக்கத்தில் சுக்ரீவர் சீதையைத் தேடச்சொல்லும் அனுமார் முதலியோருக்கு தென்னாட்டின் விருத்தாந்தம் கூறுமிடத்து,

"அகஸ்தியரின் அனுமதியின்மேல் தாமிரபரணி ஆற்றைத் தாண்டி பாண்டிய நாட்டை அடைந்து சமுத்திரத்தைத் தாண்டமுடியுமா என்று பாருங்கள். அந்த ஆழ்ந்த சமுத்திரத்தின் அடியில் அழகானமேடுகளையுடைய மலைகளில் சிரேஷ்டமான மகேந்திர மலையை அகஸ்தியர் அழுத்தியுள்ளார்."

1800 ஆண்டுகட்குமுன் தமிழகம் படம் 7.



TAMIL LAND 1800 YEARS AGO PLATE 7.

தற்காலத் தென் இந்தியா (தமிழகம்) படம் 8.



SOUTH INDIA (TAMIL LAND) AT PRESENT. PLATE 8.

குறிப்பு:— மஞ்சள் நிறமிட்ட பாகம் சால்மாலித் துவீப (Lemuria) காலமுதல் நிலைத்திருக்கும் புராதன பூமி.

என்று சொல்லி அதற்கு அப்புறம் 100 யோஜனை தூரமுள்ள இராவணனுடைய தீவு, லங்கை, இருப்பதாகச் சொன்னார். அதற்கு அப்புறம் 100 யோஜனை நீளம் உள்ளதும் சூரியன் வந்தணுகும் ஒரு விசேஷ உச்சியையுடைய புஷ்பிதக மலையும், 14 யோஜனை உள்ள சூரியவன மலையும், விசுவகர்மன் அகஸ்தியருக்கு ஆசிரமம் அமைத்துள்ள குஞ்சரக்குன்றம், எருதைப்போன்ற பெரிய ரிஷப மலையும் ஒன்றன்பின் ஒன்றாய் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

இவை கன்னியாகுமரிக்குத் தெற்கே எறக்குறைய 7000 மைல் தூரம்வரை முன்பு பூமி இருந்து அமிழ்ந்ததாகக் குறிக்கும். குமரி முனைக்கும் தென்றுருவத்திற்கும் இடையே உள்ள தூரம் இதுவே. இந்நாடு பூர்வம் நாகநாடு எனப் பெயர் பட்டதுபோலும்.

இந்தியாவில் சமீபத்தில் அகப்பட்டுள்ள 125 பட்டாயங்களிலிருந்து பசிபிக் (Pacific) சமுத்திரத்தின் அடியில் இருக்கும் தரை பூமியாக மேலேயிருந்த காலத்து அதில் மனுஷ வர்க்கம் முதல் முதல் உண்டானதாகவும் அதில் பெரு நகரங்கள் இருந்தனவென்றும் அந்த நாடுகளெல்லாம் எரிமலையாலும் ஜலப்பிரளயத்தாலும் அழிந்துபோனதாக நியூ யார்க்கில் (New York) லெப்டினன்ட் (New India 1-1-25) பத்திரிக்கையில் பிரசுரமாகி இருக்கிறது

தமிழகம் 1800-வருஷக்கு முன்.

கடைச்சங்க காலத்தின் அடுத்த பிற்கால விபரம் 7வது படத்தில் காண்க. இது காலஞ்சென்ற தமிழறிஞர் கனகசபைப் பிள்ளை தமிழர்கள் 1800 ஆண்டுகளுக்கு முன்னர் என்ற புத்தகத்தில் சொல்லியுள்ளதை அனுசரித்தது. அப்போது தஞ்சை ஜில்லாவுக்கு புனல் நாடெனவும், மற்ற வேணடு, பூலநாடு, அருவா நாடு முதலிய பல நாடுகளும், அப்போது முக்கிய நகரங்களாக விளங்கிய பட்டணங்களும் அங்கு காட்டப்பட்டுள்ளன. இது முதற் கரிகால் சோழன் காலத்தியது. இந்த மத்திய காலத்தைப் பற்றிய சேர சோழ பாண்டியர்களின் சரிதம் தேசசரித்திரம் 2ல் பார்க்கவும்.

இந்தப்படத்தில் எது முன் சால்மாலித் துவீபகாலத்து பூமியாக இருந்தது எனக்காட்டப்பட்டுள்ளதைக் கவனிக்கவும்.

தமிழகம் தற்காலத்தில்.

தற்காலத்தில் உள்ள தமிழ் நாடு, அதாவது தென்னிந்தியா 8வது படத்தில் காட்டப்பட்டுள்ளது. இதில் ஹைதராபாக்கம், மைசூர், திருவனந்தபுரம் முதலியனவும் உள்ளன. தென்னிந்தியாவின் விபரங்கள் இந்திய பூகோளத்தில் சொல்லப்பட்டுள்ளன.

பாரதி பிரஸ், மன்னார்குடி.



இந்தியா தேசம்.
திபெத்து
அரபிக் கடல்
வங்காள விரிகுடா
இந்து மஹா சமுத்திரம்
ஸீயம்
மாளய தீவுகள்
இலங்கை
மதராஸ்
பம்பாய்
கோவா
லாஸா
பூடான
அந்தமானி தீவு

இறைவன் துணை.

கௌமார குருகுலக்
கல்விப் பிரசுரம் 1.

தேச சரித்திரம் 8.

இந்திய பூகோளம்.

ஆசிரியர் :—ஜே. அமலதாஸ், பி.ஏ., எல்.டி.,

உபாத்தியாயர், பின்ட்லே காலேஜ், மன்னார்குடி.

நமது தேசத்தின் பெயர் இந்தியா. இது உலகத்தின் முக்கியமான தேசங்களில் ஒன்று. இது ஒரு தீபகற்பம். (மூன்று புறம் நிலத்தால் சூழப்பட்டு, ஒருபுறம் ஜலத்தால் சூழப்பட்ட பூபாகத்திற்கு தீபகற்பம் என்று பெயர்) இது ஆங்கிலேயர் தேசமாகிய கிரேட் பிரிட்டெனைவிட இருபது மடங்கு பெரியது. இதின் விஸ்தீரணம் 18,00,000 சதுரமைல்; இது பிரிட்டிஷ் ராஜ்ஜியங்களில் ஆறில் ஒருபங்கு; வடக்கே காஷ்மீரத்திலிருந்து, தெற்கே கன்னியாகுமாரிமுனை வரைக்கும் 2022 மைல்; மேற்கே பலுசிஸ்டானிலிருந்து, கிழக்கே பர்மா மட்டும் 2520 மைல்.

அமைந்திருக்கும் இடம்.—குண (கிழக்கு) கோளத்தின் மத்தியில் அமைந்துள்ளது. இந்து சமுத்திரத்தின் தலைபாகத்தில் இருக்கிறது.

எல்லைகள்.—வடக்கில் ஹிமாலயமலைகள், தெற்கில் இந்துமஹா சமுத்திரம், மேற்கில் அரபிக்கடல், வடமேற்கில் ஆப்கானிஸ்தானம், கிழக்கில் வங்காள விரிகுடா, வடகிழக்கில் சீனதேசம்.

கடற்கரை.—ஜலபாகம் அதிகமாக நிலத்தினுள் ஊடுருவிச் செல்லவில்லை. கடற்கரை நேராக இருக்கிறது. மேலும் கடற்கரை மணற்பாங்காகவும், அலைகளால் மோதப்படுகிறதாகவும், கரைக்கருகில் ஆழமில்லாமலுமிருக்கிறது. கடற்கரை இப்படி இருப்பதினால் உண்டான அசௌகரியங்கள் என்னவென்றால் (1) சீதோஷ்ணஸ்திதியின் சமதன்மை குறைவாயிருக்கிறது. (2) கப்பல் தங்குவதற்கு வசதியான இடங்கள் அநேகமாயில்லை, மேற்குக் கரையில், பம்பாய் இயற்கையாகஅமைக்கப்பட்ட ஒரு துறைமுகம். கிழக்குக்கரையிலுள்ள சென்னையில் கோடானகோடி ரூபாய் செலவழித்து துறைமுகம் கட்டியிருக்கின்றனர்.

தீவுகள்.—இந்தியாவுக்குத் தெற்கில் இலங்கையும், அரபிக்கடலில் இலக்ஷத்தீவுகளும், மாளயத்தீவுகளும், வங்காள விரிகுடாவில் அந்தமான், நிக்கோபார் தீவுகளும் இருக்கின்றன.

இயற்கை அமைப்பு.[1]

வடக்கில் ஹிமாலயத் தொடர்கள் பாமீர் பீட பூமியிலிருந்து தென் கிழக்காக சுமார் 1500 மைலுக்கு வியாபித்திருக்கிறது. இங்கே ஒன்றின்பின் ஒன்றுப் மூன்று தொடர்கள் இருக்கின்றன. இந்த ஹிமாலய மலைப்பிரதேசம் தெற்கு வடக்காய் சுமார் 150 மைல் இருக்கிறது. இங்குள்ள சிகரங்களில் பல சமுத்திரமட்டத்திற்கு 4½ மைல் உயரத்திற்கு மேற்பட்டவை. அச்சிகரங்களில் முக்கியமானவை எவரஸ்ட்டு (29,000 அடி) கஞ்சன்கங்கா, தவளகிரி, நந்ததேவி, நங்கபர்வதம் முதலியன. ஹிமாலய பர்வதம் மிகவும் உயரமானதாகையால் எப்போதும் உரைபனியால் மூடப்பட்டிருக்கிறது. ஹிமாலயம் என்பதற்கு பனி இருப்பிடம் என்று அருத்தம்.

இப்பர்வதத்திற்கு வடக்கிலும் தெற்கிலும் உள்ளவர்கள் போக்கு வரவு வைத்துக்கொள்வது அசாத்தியம்; ஆனால் டார்ஜிலிங், சிம்லா இவைகளின் சமீபத்திலுள்ள தாழ்வான இடங்களின் வழியாய் தீபத்து தேசத்துடன் வியாபாரப் போக்கு இருக்கிறது.

ஹிமாலயத்தால் நம்தேசத்திற்கு நன்மைகள் சில உண்டு; வடக்கிலிருந்து யாவரும் படையெடுத்து வரமுடியாது. வடக்கே உத்திரதுருவத்திலிருந்து வரும் குளிர்காற்றைத் தடுக்குகிறது. மேலும், ஹிமாலயத்தில் உற்பத்தியாகும் நதிகளுக்கு அது எப்போதும் ஜலம் தருகிறது. மழைகாலத்தில் மழை ஜலம் ஆற்றில் ஓடும்; கோடைகாலத்தில் பனிக்கட்டி உருகி ஜலமாக ஆற்றில் வரும்.

2. வடமேற்கு மலைகள்.—ஹிந்துகுஷ், சூலைமான்; இம்மலைகளின் உயரம் குறைவாகையால் இங்கே சிலகணவாய்கள் காணப்படுகின்றன. இவைகளில் முக்கியமானவை கைபர்பாஸ், போலன் பாஸ். இவைகளின் வழியாய் நம்தேசத்திற்குள் முற்காலத்தில் படையெடுத்து வந்தனர் பலர்.

3. வடகிழக்கு மலைகள்.—ஹிமாலயத்தின் கிழக்கிலிருந்து அநேகம் தொடர்கள் தெற்கு வடக்காய் வியாபித்திருக்கின்றன. இத்தொடர்களின் இடையில் நீண்டு குறுகிய பள்ளத்தாக்குகள் இருக்கின்றன. இவைகளின் நீண்டதும், வடக்கிலிருந்து தெற்கே ஓடுகிறதுமான பலநதிகள் காணப்படுகின்றன.

4. சமவெளி.—மேற்சொல்லப்பட்ட வடக்கு, வடமேற்கு, வடகிழக்கு மலைகளுக்கிடையில் ஒரு பெரிய சமவெளி அமைக்கப்பட்டுள்ளது ஹிமாலயத்தில் உற்பத்தியாகிற பல நதிகள் இச்சம

---

[1] **குறிப்பு:—இப்புத்தகத்தில் மழை, காற்று, சீதோஷ்ணம் என்ற பாகத்தில் 3-வது பக்கத்திலுள்ள இரண்டு படங்களையும் இத்துடன் உள்ள படத்தையும் கவனிக்கவும்.**

வெளியில் பாய்கின்றன. சிந்தும், கங்கையும் இங்கே முக்கிய நதிக ளாகையால் இதற்கு சிந்து கங்கா சமவெளி யென்று பெயர்.

5. தக்ஷண (தக்காண்) பீடபூமி.—இதின் உயரம் சுமார் 2000 அடி மேற்கிலிருந்து தென்கிழக்காய் சரிந்திருக்கிறது. இது முக்கோண வடிவமுள்ளதாயிருக்கிறது. இப் பீடபூமியின் மூன்று பக்கங்களிலும் மலைத்தொடர் விளிம்புகள் காணப்படுகின்றன. இந்தியாவின் மத்தியபாகத்தில் ஒன்றின்கீழ் ஒன்ருக விந்தியமலை, சாத்பூராமலை என்ற மலைகள் வியாபித்திருக்கின்றன. விந்தியமலை இந்தியாவை இரண்டு பிரிவாகப் பிரிக்கும் ஒரு இயற்கை எல்லையாக இருகிறது. இதற்கு வடக்கிலுள்ளதை வட இந்தியா என்றும் தெற்கிலிருப்பதை தக்ஷணம் என்றும் கூறுகிருர்கள்.

6. அரவல்லிமலை.—இது விந்தியமலையின் மேற்குக்கோடியி லிருந்து வடகிழக்காக வியாபித்திருக்கிறது. இதன் தொடர்ச்சி யாகவே ஒரு மேட்டு நிலம் டில்லிவழியாக சிம்லா மட்டும் செல்லு கிறது. இது கங்கா, சிந்து நதிகளின் நீரைப் பிரிக்கும் மேடு, கங்கை சமவெளியையும், சிந்து சமவெளியையும் வேறுபடுத்தும் எல்லையாகவும் இருக்கிறது.

7. மத்திய இந்தியா பீடபூமி.—விந்திய மலையின் மேற்கு பாகத்தில், மாளவா என்ற பீடபூமியிருக்கிறது. இப்பீடபூமியும், இதற்கருகாமையிலுள்ள மற்ற பீடபூமி பிரதேசங்களும் மத்திய இந்தியா பீடபூமி யென பெயர் வழங்குகின்றன. இப்பீடபூமி வடகிழக்காய் சரிவுற்றிருக்கிறது.

8. மேற்கு மலைத்தொடர்.—(4000 அடி) இது அரபிக்கடல் ஓரமாக, சாத்பூரமலையின் மேற்கு முனையிலிருந்து தெற்கு வடக் காக வியாபித்திருக்கிறது. பம்பாயிக்கு அருகில் மலை தாழ்வாக இருப்பதினுல், அங்கே சில கணவாய்கள் காணப்படுகின்றன. இவற்றுள் பம்பாய்க்கு வடகிழக்கிலுள்ளதற்கு தால்காட் என்றும் தென்கிழக்கிலுள்ளதற்கு போர்காட் என்றும் பெயர். இவைகள் இருப்புப்பாதை செல்லும் மார்க்கங்களாயிருக்கின்றன. இம்மலைத் தொடர், உள்நாட்டார் மேற்கு சமுத்திரக் கரையுடன் வரவு வைத் துக்கொள்ள கொஞ்சம் இடையூருயிருக்கிறது.

9. கிழக்கு மலைத்தோடர்.—இது மேற்கு மலைத்தொடரை விட உயரம் குறைவு. சமுத்திரத்திற்கு சமீபமாயுமில்லை. இது ஒரே தொடர்ச்சியாயிராமல், பல இடங்களில் தாழ்ந்தும் பிளவு பட்டுமிருக்கிறது இப்பிளவுகள் பல நதிகள் பாயும் வழியாயிருக் கின்றன.

10. நீலகிரிக்குன்று.—மேற்கு மலைத்தொடரும், கிழக்கு மலைத்தொடரும் ஒன்ருய்க்கலந்து தெற்கில் முடியுமிடத்திற்கு நீல கிரிக்குன்று என்று பெயர். இங்கே தொட்டபெட்டா என்றமலைச் சிகரம் ஒன்றுண்டு.

11. ஆனைமலை.—நீலகிரிக்குத் தெற்கில் பாலக்காட்டு கணவாய் இருக்கிறது. கோயமுத்தூர் கணவாய் என்றும் அதை அழைப்பார்கள்: இதின் நீளம் சுமார் 20 மைல். இக்கணவாய் வழியாக சென்னையிலிருந்து மேற்குக்கரைக்கு ஒரு இருப்புப் பாதை செல்லுகிறது. இக்கணவாய்க்குத் தெற்கில் ஆனைமலைக் குன்றுகள் இருக்கின்றன. இவற்றிலுள்ள ஆனைமுடி என்னும் சிகரம் தக்ஷிணத்திலுள்ள சிகரங்களில் உயரமானது. இந்த ஆனைமலை, ஏலக்காய் மலை என்ற பெயருடன் கன்னியாகுமாரி வரைக்கும் வியாபித்திருக்கிறது.

12. சமவெளிகள்.—அரபிக்கடலுக்கும், மேற்கு மலைத்தொடருக்கும் நடுவில் ஒரு சமவெளியிருக்கிறது. அப்படியே, கிழக்கு மலைத்தொடருக்கும் வங்காள விரிகுடாவுக்கு மிடையில் ஒரு சமவெளியிருக்கிறது. கிழக்குக்கரை சமவெளி மேற்குக் கரை சமவெளியை விட அகலமாயிருக்கிறது.

ஆக இந்தியாவின் முக்கிய இயற்கைப் பிரிவுகள் என்னவென்றால் (1) ஹிமாலயப்பிரதேசம், (2) சிந்து சமவெளி, (3) கங்கா சமவெளி, (4) மத்திய இந்தியா பீடபூமி, (5) தக்ஷிணபீடபூமி, (6) கிழக்குக்கரை சமவெளி, (7) மேற்குக் கரை சமவெளி. சீதோஷ்ண ஸ்திதி காற்று, மழை இவைகளைப்பற்றி பிரத்தியேகமா மழை காற்று சீதோஷ்ணம் என்ற பகுதியில் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கவும்.

இந்தியாவின் நதிகள்.

வட இந்தியாவில் பாய்வன.

1. சிந்து நதி.—இதற்கு ஜீலம், சீனாப், ரவி, பியாஸ், சட்லஜ் என்னும் ஐந்து உபநதிகள் இருக்கின்றன. ஐந்து நதிகள் பாய்கிற இந்த இடத்திற்கு பாஞ்சாப் என்று பெயர் இடப்பட்டிருக்கிறது. இங்கே 20 அங்குலத்துக்கு மேற்பட்ட மழைகிடையாதாகையால், இந்த நதிகளின் ஜலத்தைக் கொண்டே சாகுபடி செய்ய வேண்டியதிருக்கிறது இவ்விடத்தில் அநேக கால்வாய்கள் வெட்டி நீர் பாய்ச்சுவதற்கான அனுகூலங்கள் செய்திருக்கின்றனர்.

2. காங்காநதி.—இது மலைப்பிரதேசத்தை விட்டு சமவெளியில் இறங்கும் இடத்தில் அரித்துவாரம் என்னும் ஊர் உண்டு. இது இந்துக்களுக்கு ஒரு புண்ணிய ஸ்தலம். இதற்கு கோமதி, கோக்ரா, கண்டகி, யமுனை, சம்பல் என்ற உபநதிகள் இருக்கின்றன. இந்நதியின் கரைகளில் பெரிய பட்டணங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று காசி கங்கா சமவெளி வண்டல் பூமியாகையால் இது அதிக செழிப்புள்ள பிரதேசம். இங்கே ஜனநெருக்கமும் ஜாஸ்தி.

3. பிரம்மபுத்திரா நதி.—இது உற்பத்தியானது முதல் 800 மைல் தூரம் மலைப்பிரதேசத்திலேயே ஓடுகிறது. ஆகையால் மற்ற இரண்டு நதிகளைப்போல் இது அவ்வளவு பிரயோஜன மானதல்ல. இது சமவெளியில் இறங்கும்போது கங்கா நதியுடன் கலந்து கொள்ளுகிறது. இவ்விரண்டு நதிகளாலுண்டாகிற டெல்டாக்கள் மிகவும் விசாலமானவை. இது வெகு செழிப்பான பிரதேசம் ஆனால் பாரைகளுக்கருகில் காடுகளும் புதர்களும் அடர்ந்திருக்கின்றன. இவை புலிகளுக்கும் முதலைகளுக்கும் இருப்பிடம். இந்த இடத்துக்கு பெயர் சந்தர்பன்ஸ்.

தக்ஷிணத்தில் பாயும் நதிகள்.

1. நர்மதை.—விந்தியமலைகளில் உற்பத்தியாகி, விந்தியா சாத்பூரா மலைகளுக்கிடையே ஓடி, காம்பே வளைகுடாவில் விழுகிறது.

2. தப்தி.—இது சாத்பூரா மலைக்குத் தெற்கில் மேற்கு முகமாய் ஓடி காம்பே குடாவில் விழுகிறது.

3. மகா நதி.—இது கிழக்கு மலைத் தொடரைச் சேர்ந்த மேடுகளில் உற்பத்தியாகி, சிறிது தூரம் வடக்காக ஓடி, பிறகு கிழக்குக் கரை சமவெளியில் இறங்கி வங்காள விரிகுடாவில் விழுகிறது. இதின் டெல்டா செழிப்பானது.

4. கோதாவரி.—இது மேற்கு மலைத் தொடரில் உற்பத்தியாகி, வங்காள விரிகுடாவில் விழுகிறது. தக்ஷிணத்திலுள்ள நதிகளில் இது மிகவும் நீளமானது.

5. கிருஷ்ணா.—இதுவும் மேற்குமலைத் தொடரில் உற்பத்தியாகி கிழக்கில் வங்காள விரிகுடாவை யடைகிறது.

6. காவிரி.—இந்நதியும் மேற்கு மலைத்தொடரில் உற்பத்தியாகி, தென்கிழக்காக பாய்ந்து வருகிறது இதன் சமவெளி தென் இந்தியாவில் மிகவும் அகலமானது. இந்த சமவெளிக்குத் தஞ்சாவூர் ஜில்லா என்று பெயர்.

7. வைகை என்னும் சிறிய நதி ஏலக்காய் மலைகளில் உற்பத்தியாகி, மதுரை ஜில்லாவில் பாய்ந்து மன்னார்குடாவில் விழுகிறது.

8. தாமிரவரணி.—ஆறும் ஏலக்காய் மலைகளில் உற்பத்தியாகி திருநெல்வேலி ஜில்லாவை செழிக்கச் செய்து மன்னார் குடாவில் விழுகின்றது.

9. வடபெண்ணை, பாலாறு, தென்பெண்ணை,—இம் மூன்று நதிகளும் மைசூர் பீடபூமியில் உற்பத்தியாகி, கோதாவரிக்கும், கிருஷ்ணாவுக்கும் இடையிலுள்ள சமவெளியில் பாய்ந்து வங்காள விரிகுடாவில் விழுகின்றன.

10. பெரியாறு என்னும் ஆறு ஏலக்காய் மலைகளில் உற்பத்தியாகி மேற்கு முகமாய் அரபிக்கடலை நோக்கி ஓடுகின்றது. இதில் ஒரு பெரிய அணை போட்டுத்தடுத்து அதின் ஜலம் கிழக்கு முகமாய் ஓடி மதுரை ஜில்லாவுக்கு பிரயோஜனப்படும்படி அரசாங்கத்தார் ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். மற்றபடி, இந்நதியின் ஜலம் யாதொரு பிரயோஜனமின்றி அரபிக்கடலில் போய் சேர்ந்திருக்கும்.

11. பர்மாவில், ஐராவதி, சால்பின், சிட்டகாங்க் என்னும் நதிகள் முக்கியமானவை. இதெல்லாவற்றிலும் ஐராவதி நதியே பர்மாவுக்கு விசேஷமானது. இத்துடன் நாட்டு போக்கு வரவுக்கு வெகுவாய் பயன் படுகிறது. இந்நதிக்கரை ஜனநெருக்கமானது.

இந்தியாவின் விளைபொருள்கள்.

நம் தேசத்தின் ஐசுவரியத்திற்கு ஆதாரமானவை நம் தேசத்தில் கிடைக்கும் பொருள்கள் தான். இப்பொருள்களை இயற்கைப் பொருள்களென்றும், செயற்கைப் பொருள்களென்றும் பிரிக்கலாம். இயற்கைப் பொருள்கள் மூன்று வகைப்படும். அவையாவன (1) தாதுப்பொருள்கள், (2) தாவரப்பொருள்கள், (3) பிராணிப் பொருள்கள்.

இந்தியாவின் தாதுப்பொருள்கள்.

நிலக்கரி.—இது வங்காளத்தில் ராணிகெஞ்சு, ஜெர்ரியா, கிரிதி என்ற இடங்களிலும், அஸ்ஸாம் தேசத்திலும், ஐதராபாத் நாட்டில் சிங்கரேணி என்னும் இடத்திலும் கிடைக்கிறது.

இரும்பு.—இது ராணிகெஞ்சிலும், பீஹார் மாகாணத்தில் மயூரபாஞ்ச் ஜில்லாவிலும், சென்னையில் சேலத்திலும் அகப்படுகிறது.

உப்பு.—இது பஞ்சாபில் உப்புமலைத் தொடரிலிருந்தும், ராஜபுதனத்திலும், பெரும்பாலும் சமுத்திர ஜலத்தினின்றும் எடுக்கப்படுகிறது.

தங்கம்,—இது மைசூர் நாட்டில் கோலார் என்னுமிடத்தில் அதிகமாக அகப்படுகிறது.

மண் எண்ணெய்.—பர்மாவில் அநேக இடங்களில் அதிகமாக அகப்படுகிறது.

ஈயம், தகரம்.—பர்மாவிலும், திருவாங்கூரிலும் கிடைக்கிறது.

மாங்கனிஸ்.—இது எஃகு செய்ய உதவுகின்றது. சென்னையில் விசாகப்பட்டணத்திற்கு அருகிலும், மத்திய மாகாணத்திலும் அதிகமாகக் கிடைக்கிறது.

தாவரப் பொருள்கள்.

1. ஹிமாலயப் பிரதேசத்தில், மலை அடிவாரத்தில் மூங்கில், பனையைப்போன்ற மரங்கள் ஜாஸ்தியாகவும், இதற்கு சற்று உயரத்தில் சகலவிதமான மரக்காடுகளும், இதற்குமேலே புல் பிரதேசமும் உறைபனியும் காணப்படுகின்றன.

2. அஸ்ஸாமில் டீ, சின்கோனு, அரிசி முதலியவை விளைகின்றன.

3. பஞ்சாபில் புல் ஜாஸ்தி; ஆடுமாடுகள் அதிகம்.

4. வடமேற்கு மலைப்பிரதேசம் வறட்சியான பூமி. மழை 10 அங்குலத்திற்கு மேலில்லை. இங்குள்ள ஜனங்களில் சிலர் வியாபாரம் செய்தும் பலர் கொள்ளை அடித்தும் சண்டைபோட்டும் ஜீவனம்சம் செய்கிறார்கள். பொதுவாக இந்த ஜனங்கள் நாகரீகத்தில் குறைவுள்ளவர்கள்.

5. கங்கா சமவெளியில், நெல், சணல் ஏராளமாக பயிரிடப் படுகிறது. நதி ஓரமாய் மேற்கில் செல்லச்செல்ல கோதுமை, தினை, கரும்பு, அபின், அவுரி முதலியவைகள் பயிராக்கப்படுகின்றன.

6. சிந்து சமவெளியின் வடக்கு பாகத்தில் கோதுமையும், தெற்கில் பருத்தியும் வளருகிறது.

7. தக்ஷிணத்தில் பருத்தி, எண்ணை வித்துக்கள் தேயிலை, தேங்காய் முதலியன பயிராக்குகிறார்கள்.

மேல்கரை, கீழ்கரை சமவெளிகளில் நெல் ஏராளமாகயிருக்கிறது; உள்நாட்டுப்புறங்களில் தினை, கம்பு, சோளம் முதலியவை அதிகமாகக் காணப்படுகின்றன.

8. பர்மாவில் காடுகள் ஜாஸ்தி அங்கே உள்ள தாவரப்பொருள்கள் நெல், தேக்கு, ரப்பர், எண்ணை வித்துக்கள் முதலியன.

9. டீ, காப்பி.—நீலகிரி, அஸ்ஸாம் மலைச்சரிவுகளில் பயிரிடப் படுகின்றன.

10. வாசனை சமான்கள் திருவாங்கூரில் விளைகின்றன:

பிராணிகளும், பிராணிப் பொருள்களும். ×

பிராணிகளைக் காட்டு மிருகங்களாகவும், நாட்டுப் பிராணிகளாகவும் பிரிக்கலாம்.

1. காட்டு மிருகங்கள்.

யானை, புலி, சிறுத்தைப்புலி, நரி, இன்னும் பலவித மிருகங்கள் இந்தியாவில் காணப்படுகின்றன.

2. நாட்டுப் பிராணிகள்.

1. யானை.—இது காட்டு மிருகமாயினும், நன்றாய் பழக்கின பிறகு மனிதருக்கு அதிகப் பிரயோஜனமுள்ளதா யிருக்கிறது.

இவைகள் காட்டுப் பிராந்தங்களில் வெட்டிப் போடப்பட்ட மரங்களை இழுப்பதற்கும், மலை நாடுகளில் பிரயாணம் செய்வதற்கும் அதிகப் பிரயோஜனமுள்ளதாயிருக்கிறது.

2. எருதுகள்.—நம்நாடு விவசாய நாடாயிருப்பதால் எருதுகள் ஏராளமாக விருக்கின்றன. இந் நாட்டில் இரண்டு பேருக்கு ஒரு எருது வீதம் கணக்கிடப்பட்டிருக்கின்றன.

3. எருமைகள்.—சுமார் 280 லக்ஷம் இந்தியாவிலும் பர்மாவிலும் இருக்கின்றன. இவை பர்மாவில்தான் ஜாஸ்தி.

4. பசுக்கள்.—எங்கும் வளர்க்கப்படுகின்றன.

5. செம்மறி ஆடுகள்.—சுமார் 220 லக்ஷம் செம்மறி ஆடுகள் இந்தியா, பர்மா தேசங்களில் இருக்கின்றனவாம். இவைகள் முக்கியமாக மலைப்பிராந்தங்களில் காணப்படுகின்றன. பொதுவில் மாம்சத்திற்காகவும் ரோமத்திற்காகவும் இவைகளை வளர்க்கின்றார்கள்.

6. வெள்ளாடுகள்.—எங்கும் காணப்படுகின்றன. இவைகளை லேசில் வளர்க்கலாம்.

7. குதிரைகள்.—சுமார் 2 லக்ஷம் குதிரைகள் நம்தேசத்தில் இருக்கின்றனவாம். நம்நாட்டில், இதர தேசங்களில் போல் குதிரைகளை உழுகிறதற்கு உபயோகப்படுத்துகிறதில்லை.

8. கழுதைகளும், கோவேறு கழுதைகளும்.—மலைப்பிராந்தங்களில் சவாரி செய்ய உபயோகப்படுகின்றன.

9. ஒட்டை.—பாலைவனப் பிரதேசங்களில் அதிக பிரயோஜனமானவை. இதின் கால்கள் பாலையின் மணலில் நடக்கத்தக்கதாக அமைக்கப்பட்டவை. ஜலமில்லாத பாலை வனத்தில் பலநாட்களுக்கு ஜலம் பருகாமல் இந்த மிருகம் ஒன்றே இருக்கமுடியும்.

பிராணிப் பொருள்கள்.

1. பட்டு.—பட்டுப் புழுக்களின் கூடுகளிலிருந்து பட்டு அகப்படுகிறது. இப்புழுவுக்கு முசுக்கொட்டை இலை ஆகாரமானதால், முசுக்கொட்டைச் செடி எங்கே உண்டோ அங்கே பட்டும் அதிகமாகக் கிடைக்கும் வங்காளத்திலும், மைசூரிலும் பட்டு கிடைக்கிறது.

2. ரோமம்.—செம்மறியாட்டின் ரோமம் கதகதப்பைத்தரும் உடைகளைச்செய்வதற்கு உபயோகம். குளிர் பிரதேசங்களிலுள்ள ஆடுகளுக்கு ரோமம் நீளமாயிருக்கிறது. காஷ்மீரத்தில் ஆடுகள் ஜாஸ்தி ; காஷ்மீர சால்வைகள் பிரசித்திபெற்றவை.

3. தோல்.—ஆடு மாடுகள் உள்ள இடங்களில் இது கிடைக்கும். முக்கியமாக சென்னையில் ஜாஸ்தியாக இருக்கிறது.

செயற்கைப் பொருள்கள்.

இந்தியாவில் செயற்கைப் பொருள்களின் உற்பத்தி வெகு குறைவு. இயந்திரசாலை தொழில் விருத்தியாக வேண்டுமாயின் இயற்கைப்பொருள் எளிதில் கிடைக்கவேண்டும். இயந்திரங்கள் சமீபத்திலேயே செய்யப்படவேண்டும். நிலக்கரி, மின்சாரம்போன்றவைகள் அருகில் அகப்படவேண்டும். செய்யப்பட்ட பொருள்களை சீக்கிரம் வெளியிடங்களுக்கு அனுப்புகிறதற்கு போக்கு வரவு மார்க்கங்கள் இருக்கவேண்டும். இந்தியாவில் இயற்கைப் பொருள்கள் எளிதில் கிடைத்தாலும், மற்ற மூன்று சாதனங்களும் குறைச்சலாக இருக்கின்றன. இவைகள் கூடியவரை எங்கேயாவது அமைந்திருந்தால் அங்கே இயந்திரத்தொழில்சாலைகள் விருத்திக்கு வந்திருக்கின்றன.

பருத்தி சாலைகள்.—பம்பாயிலும், ஆமதாபாத்திலும் இருக்கின்றன.

சணற் சாலைகள்.—கல்கத்தா, டக்கா என்னும் இடங்களில் ஏராளமாக விருக்கின்றன.

ரோம நேசவு.—கான்பூரிலும், காஷ்மீரத்திலும் பட்டு நேசவு ஆக்ரா, காசி, அமரிட்சார் என்னுமிடங்களிலும், செம்பு, பித்தளை, ஈயம் முதலிய உலோக வேலைகள்—சென்னையில் மதுரை, திண்டுக்கல், பாலக்காடு என்னும் பட்டணங்களிலும், ஐக்கியமாகாணத்தில் காசி, முராதபாத் என்னும் நகர்களிலும் செய்யப்படுகின்றன.

கைத்தறி நேசவு வேலைக்கு மதுரை, காஞ்சிபுரம், ஆரணி, டக்கா, ஓலூர் என்னும் இடங்கள் பிரசித்தி பெற்றவை.

இரும்பு வேலை.—பீகாரில் டாட்டா நகரிலும், வங்காளத்தில் பாரகரிலும் செய்யப்படுகின்றன.

தோலால்.—பொருள் செய்தல் கான்பூரிலும் சென்னையிலும் ஜாஸ்தி.

ஜனத்தொகை.

நம் தேசத்தில் ஜனத்தொகை சுமார் 35 கோடி. உலகில் உள்ள ஜனங்களில் ஐந்தில் ஒருபாகம் இந்தியாவில் இருக்கிறார்கள். நம் தேசத்திலுள்ள ஜனங்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சிறு கோடு போட ஆரம்பித்தால், அக்கோடுகளைப் போட்டு முடிக்க தூங்கும் நேரம், சாப்பிடும் நேரம் தவிர ஒருவருக்கு ஐந்து வருஷம் பிடிக்கும் என ஒருவர் கூறுகிறார். இந்நாட்டில் சில இடங்களில் ஜன நெருக்கமாயும் சில இடங்களில் குறைச்சலாயுமிருக்கிறது. சம வெளிகளிலும், ஆற்றுப் படுகைகளிலும், விபசாயம் எங்கெந்த இடங்களில் உண்டோ அவ்விடங்களிலும் ஜன நெருக்கம் ஜாஸ்தி மலைப்பிராந்தியங்களிலும், காடுகளிலும், பாலைவனங்களிலும் ஜனங்கள் சொற்பமாயிருக்கிறார்கள்.

பாஷை.

மொத்தம் 147 பாஷைகள் இந்நாட்டில் உண்டு. தென்னிந்தியாவில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துலுக்கு முதலானவை முக்கிய பாஷைகள் வட இந்தியாவில், பெங்காலி, உரியா, ஹிந்தி, ஹிந்துஸ்தானி, பஞ்சாபி, சிந்தி, குஜரூத்தி, மராத்தி முதலிய பாஷைகள் முக்கியமானவை.

மதங்கள்.

இந்தியாவில் மதங்கள் பல உண்டு. ஹிந்துக்களுக்கு க்ஷேத்திர ஸ்தலம் காசி; இராமேசுவரம். மகமதியருக்கு லாகூர்; புத்தர்களுக்கு வட இந்தியாவிலுள்ள புத்தகயாவும்; பர்மாவிலுள்ள ரங்கூன் மான்டிலே என்னும் நகர்களுமாம்.

அரசாங்கப் பிரிவுகள்.

இந்திய ராஜ்யம் முழுவதும் ஆங்கிலேயருடைய ஆளுகையிலிருக்கிறது. அதில் பல பிரதேசங்கள் இந்திய சிற்றரசர்களால் ஆளப்படுகின்றன. இவர்கள் ஆங்கில மன்னருக்குக் கப்பம் கட்டி வருகிறார்கள். இத்தேசத்தில் இதர ஐரோப்பியருக்கும் சில இடங்கள் இருக்கின்றன. இத்தேசத்தை துரைத்தனத்தார் அரசாங்கத்துக்காக பலபிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொன்றையும் ஆள கவர்னர்களை நியமித்திருக்கிறார்கள். கவர்னர்களால் ஆளப்படும் பிரிவுக்கு ராஜதானி என்று பெயர். இந்தியாவின் ராஜதானிகள் எவையென்றால்:—

(1) பஞ்சாப் மாகாணம்.—இதற்குத் தலைநகரம் லாகூர். இங்கே அமிர்தசரஸ் என்னும் வேறொரு அழகிய பட்டணமும் உண்டு.

(2) ஐக்கிய மாகாணம்.—இதற்குத் தலைநகரம் அல்லகாபாத். இம்மாகாணத்தில் காசி, கான்பூர், ஆக்ரா என்னும் பெரிய நகரங்களிருக்கின்றன.

(3) பீஹார், ஒரிஸ்ஸா.—இதற்குத் தலைநகரம் பாட்னா. இங்கே காயா என்னுமோர் பெரிய பட்டணமும் உண்டு.

(4) வங்காளம்.—இதற்குத் தலை நகரம் கல்கத்தா. இதில் டக்கா என்னும் நகரமும் பிரஸித்திப் பெற்றது.

(5) அஸ்ஸாம்.—இதற்குத் தலைநகரம் ஷில்லாங்.

(6) சிந்து.—இதற்கு முக்கிய பட்டணம் கராச்சி.

(7) பம்பாய்.—இதற்கு பம்பாய் நகரம் தலைமையானது பூனா என்னும் ஒரு முக்கிய நகரமும் இங்கிருக்கிறது.

(8) மத்திய மாகாணங்கள்.—இதற்கு நாகபுரி தலைநகரம்.

(9) சென்னை.—சென்னைப்பட்டணம் இதற்குத் தலைமையானது. புதுச்சேரி, கடலூர், தூத்துக்குடி, தனுஷ்கோடி இவைகள் இம்மாகாணத்தின் கீழ்கரையிலுள்ள முக்கிய துறைமுகங்கள். தனுஷ்கோடிக்கும் இலங்கைத் தீவுக்கும் 22 மைல் தானிருக்கிறது. இத்தீவுக்குப் போகிறவர்கள் தனுஷ்கோடி வழியாய் போகிறார்கள். தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி, மதுரை இங்கு உள்நாட்டிலுள்ள முக்கிய பட்டணங்கள்.

(10) பர்மா மாகாணத்திற்குத் தலை நகர் ரங்கூன்.

மேற் சொல்லப் பட்டவைகள் தவிர இந்தியாவில் வேறு சில மாகாணங்கள் ஆங்கிலத் தலைமைக் கட்டளைப் பெற்றவர்களால் (சீவ் கமிஷனர்களால்) ஆளப்பட்டு வருகின்றன. அவையாவன:—(1) பிரிட்டிஷ், பெலுசிஸ்தானம், (2) அஜ்மீர்-மெர்வாரா, (3) குடகு, (4) அந்தமான், நிகோபார் தீவுகள், (5) டில்லி.

வடமேற்கு எல்லை மாகாணம் இது வரைக்கும் சீவ் கமிஷனரால் ஆளப்பட்டு வந்தது. ஆனால் சில மாதங்களுக்கு முன் அங்கு ஒரு கவர்னர் நியமிக்கப்பட்டார்.

இந்தியாவில் மூன்றி லொன்றுக்கு மேற்பட்ட பிரதேசம் சுதேச அரசர்களால் ஆளப்படுகின்றது. இப்படிப்பட்ட நாடுகள் சுமார் **675** உள்ளன. அதில் முக்கியமானவை (1) ஐதராபாக்கம், (2) மைசூர், (3) காஷ்மீரம், (4) திருவாங்கூர், (5) குவாலியர், (6) ஜோதிபுரி, (7) பரோடா.

பிரஞ்சுக்காரருக்குச் சொந்தமானவை கீழ்கரையில் காரைக்கால், புதுச்சேரி, ஏனாம், சந்திரநாகூர், மேற்கரையில் மாஹி என்ற பட்டணங்கள்.

போர்ச்சுகீசியருக்குச் சொந்தமான ஊர்கள்—கோவா, தையு, டாமன் இம்மூன்றும் மேற்கரையில் இருக்கின்றன.

போக்கு வரவு சாதனங்கள்.

வியாபாரமும் பிரயாணமும் சீக்கிரத்தில் நடைபெற போக்கு வரவு சாதனங்கள் அவசியம். இந்தியாவின் போக்கு வரவு மார்க்கங்கள் மூன்று வகைப்படும். அவையாவன :—

(1) இருப்புப் பாதைகள்.—இந்தியாவில் இதுவரைக்கும் போடப்பட்டுள்ள இருப்புப் பாதையின் மொத்த நீளம் சுமார் 40,000 மைல். இவை சின்ன ரயில் (மீட்டர்கேஜ்), பெரிய ரயில் (பிராட்கேஜ்) என்று இரண்டு வகைப்படும். மீட்டர்கேஜ் 3 அடி 3⅜ அங்குலம் அகலமானது; பிராட்கேஜ் இருப்புப்பாதைகள் 5 அடி 6 அங்குலம் அகலமானது. இந்தியாவுக்கும் பர்மாவுக்குமிடையில் உயர்ந்த மலைகளிருப்பதால் இவ்விரண்டு நாட்டிற்கும் இருப்புப் பாதை போக்கு வரவு கிடையாது.

(2) ரஸ்தாக்கள்.—ஊர்களை ஒன்றோடொன்று சம்பந்தப்படுத்துவது ரஸ்தாக்கள் (ரோட்டுகள்). நம் நாட்டில் இவைகள் பெரும்பாலும் கப்பிபோடாத மண் ரஸ்தாக்களாயிருக்கின்றன. இத்தேசத்தின் ரஸ்தாக்களின் மொத்த நீளம் சுமார் 2,00,000 மைல் ஆனால் இதை மற்ற தேசங்களுடன் ஒற்றுப்பார்த்தால் இது மிகக் குறைவென்றே சொல்ல வேண்டும்.

(3) ஜலமார்க்கங்கள்.—நம் தேசத்தில் கங்கை பிரம்மபுத்திரா, ஐராவதி நதிகள் போக்கு வரவுக்கு வெகுவாக உபயோகப்படுகின்றன. சிந்து நதியும், சென்னையிலிருந்து கிருஷ்ணா டெல்டாவுக்குச் செல்லும் பக்கிங்காம் கால்வாயும், போக்கு வரவுக்குப் பயன்படுகின்றன. கோதவரி கிருஷ்ணா ஆற்றுப்பாசனத் தலைக்கால் வாய்களில் படகுகள் போக்குவரவுண்டு.

இந்தியாவின் வியாபாரம்.

இந்தியாவின் உள்நாட்டு வியாபாரம் வெளிநாட்டு வியாபாரத்தை விட ஜாஸ்தி. வருஷத்தில் சுமார் 500 கோடி ரூபாயிக்கு இந்தியா அன்னிய தேசங்களுடன் வியாபாரம் செய்கிறது.

இந்தியாவின் ஏற்றுமதி.—அரிசி, கோதுமை, பஞ்சு, எண்ணை வித்துக்கள், சணல், பருத்தி, அபின், தோல், தேயிலை, அரக்கு, ரோமம், காப்பி, அவுரி முதலியன. இவைகள் பெரும்பாலும் இயற்கைப் பொருள்கள்.

இறக்குமதி.—பருத்திநூல், பருத்தித் துணிகள், உலோகத் தகடுகள், உலோக சாமான்கள், சர்க்கரை, இயந்திரங்கள், எண்ணெய், ரோமசாமான்கள், பட்டு ஆடைகள், மருந்து, இருப்புப் பாதை, கண்ணாடி சாமான்கள் முதலியன. இவைகள் பெரும்பாலும் செயற்கைப் பொருள்கள்.

பூகோளம்.


மேற்கு கோளார்த்தம்.
கிழக்குகோளார்த்தம்.
வட அமெரிகா
தென் அமெரிகா
பஸிபிக் மஹா சமுத்திரம்
அட்லாண்டிக் மஹா சமுத்திரம்
ஐரோப்பா
ஆசியா
ஆப்ரிகா
இந்து மஹா சமுத்திரம்
ஆஸ்திரேலியா
தக்ஷிண மஹா சமுத்திரம்
பூமத்தியரேகை

இறைவன் துணை

கௌமார குருகுலக்
கல்விப் பிரசுரம் 1.

தேச சரித்திரம் 7.

உலக பூகோளம்.

ஆசிரியர் :—ஜே. அமலதாஸ் பி. ஏ., எல். டி.,
ஆசிரியர், பின்டிலே காலேஜ், மன்னார்குடி.

கண்டங்களும் சமுத்திரங்களும்.

பூமி உருண்டை வடிவமுடையது. நீங்கள் எதிரில் பார்க்கிற படத்தில், உருண்டையான பூமியை இரண்டு பிரிவுகளாகப் பிரித்துக் காண்பித்திருக்கிறதைப் பாருங்கள். இவைகளில் கிழக்கு பாகத்துக்கு குணகோளார்த்தமென்றும் மேற்குப் பகுதிக்கு குடகோளார்த்தமென்றும் பெயர். அவைகளில் பூமிபாகம் குறைவாகவும், ஜலபாகம் அதிகமாயிருக்கிறதையும் கவனியுங்கள். விஸ்தீரணத்தில் பூமிபாகம் கால் பங்காகவும், ஜலபாகம் முக்கால் பங்காகவும் இருக்கின்றன. ஜலபாகத்தின் பெரிய பிரிவுகளுக்கு சமுத்திரம் என்றும் பூமிபாகங்களுக்கு கண்டங்களென்றும் பெயர். சமுத்திரங்களின் பெயரை பெரியவைகளிலிருந்து சிறியவை மட்டும் நீங்களே படத்திலிருந்து கண்டுபிடியுங்கள். கண்டங்களின் பெயரையும் அப்படியே கண்டு பிடியுங்கள். பிறகு, நீங்கள் யோசித்தவைகளும், அடியில் கண்டவைகளும் ஒத்திருக்கிறன்னவாவென்று பாருங்கள்.

சமுத்திரங்கள்.	கண்டங்கள்.
1. பஸிபிக் சமுத்திரம்	1. யூரேசியா
2. அட்லான்டிக் சமுத்திரம்	2. ஆப்பிரிகா
3. இந்து சமுத்திரம்	3. வட அமெரிகா
4. உத்திர சமுத்திரம்	4. தென் அமெரிகா
5. தக்ஷிண சமுத்திரம்	5. ஆஸ்திரேலியா

இவைகளில் வட அமெரிகா, தென் அமெரிகா குடகோளார்த்தத்திலும் மற்ற மூன்றும் குணகோளார்த்தத்திலு மிருக்கிறதைப் பாருங்கள். யூரேஷ்யா என்பது ஐரோப்பா, ஆசியா சேர்ந்தது. குண - கிழக்கு, குட - மேற்கு, கோளம் - உருண்டை, அர்த்தம் - பாதி.

சீதோஷ்ண மண்டலங்கள்.

வரையப்பட்டிருக்கும் பூகோள படத்தில், குருக்காகவும் நெடுக்காகவும் கோடுகள் இழுக்கப்பட்டிருக்கிறதை கவனியுங்கள். இவைகள் பூலோகத்தில் மெய்யாகவே இருக்கிற கோடுகளல்ல. பட்டணங்களையும் பலஇடங்களையும் சட்டெனத் தெரிந்து கொள்ள நாம் ஏற்படுத்திக் கொண்ட ஒரு உபாயம். இவைகளில் நெடுக்குக் கோடுகளுக்கு தீர்க்க ரேகைகள் (Longitude) என்றும், குறுக்கு

கோடுகளுக்கு அக்ஷரேகைகளென்றும் பெயர். இந்த ரேகைகளுக்கு இடையிலுள்ள தூரத்தை அம்சங்களாக (Degrees) கணக்கிட்டிருக்கிறார்கள்.

பூகோள படத்தின் மத்தியில் 0 என்ற அம்சத்தை பாருங்கள். அந்த ரேகைக்கு நிரக்ஷரேகை அல்லது பூமத்திய ரேகை என்று பெயர். அதற்கு வடக்கிலும் தெற்கிலும் $23\frac{1}{2}$° (அம்சத்தில்) புள்ளிக் கோடுகளிட்டிருப்பதைப் பாருங்கள். நிரக்ஷரேகைக்கு வடக்கிலுள்ள புள்ளிக் கோட்டுக்கு உத்திராயணரேகையென்றும் தெற்கிலுள்ளதற்கு தக்ஷிணாயணரேகை யென்றும் பெயர். வடதுருவத்திற்கும், தென்துருவத்திற்கும் $23\frac{1}{2}$° தூரத்தில் ஒரு புள்ளிகோடு இருப்பதை கவனியுங்கள்; அவைகளில், வடக்கிலிருப்பதற்கு வடதுருவரேகை யென்றும் தெற்கிலிருப்பதற்கு தென்துருவரேகை யென்றும் பெயர்.

பூலோகத்தில் சீதோஷ்ணம் எங்கும் சமமானதல்ல. இடத்திற்கு இடம் சீதோஷ்ணம் மாறுகிறது. ஒரு இடத்தின் சீதோஷ்ணஸ்திதி சூரியனுடைய கிரணங்களைப் பொருத்தது. உத்திராயண ரேகைக்கும், நிரக்ஷரேகைக்கு மிடையிலுள்ள பிரதேசத்தில் சூரியனுடைய செங்குத்தான கிரணங்கள் நடுப்பகலில் விழக்கூடியதாக இருப்பதினால், இப்பிரதேசம் அதிக உஷ்ணமுள்ளதாயிருக்கிறது. இக்காரணத்தால் இதற்கு உஷ்ண மண்டலம் என்பர். உஷ்ண மண்டலத்திலுள்ளவர் அநேகமாய் கருநிறமுடையோர். இங்கே உஷ்ணமும் மழையும் அதிகமாயிருப்பதினால் தாவரங்கள் புஷ்டியாய் வளரும். இங்குள்ளவர்கள் கஷ்டப்பட்டு வேலைசெய்ய வேண்டியதில்லை. ஆகையால் இப்பிரதேசத்தினருக்கு சுறு சுறுப்பு கொஞ்சம் குறைவு.

உத்திராயண ரேகைக்கு வடக்கிலும் தக்ஷிணயன ரேகைக்கு தெற்கிலும் சூரியனுடைய கிரணங்கள் சாய்வாக விழுவதினால் வடக்கிலும் தெற்கிலும் போகப் போக உஷ்ணம் குறைந்துகொண்டும், சீதளம் அதிகரித்தும் வருகிறது. ஆதலால் உலகத்தின் குளிர்ச்சியான பாகங்கள் வடதுருவத்திற்கும் வடதுருவரேகைக்கு மிடையிலும், தென் துருவம் தென்துருவரேகைக்கு மிடையிலுமிருப்பதாக நாம் யூகித்துக் கொள்ளலாம். வடதுருவத்தைச் சுற்றியிருக்கிற இப்பிரதேசத்திற்கு உத்திர அதிசீதளமண்டலம் என்றும், தென் துருவத்தை சுற்றியிருக்கும் பிரதேசத்துக்கு தக்ஷிண அதிசீதள மண்டலமென்றும் பெயர். இந்த அதிசீதள மண்டலங்களில் வசிக்கும் ஜனங்கள் மிகவும் சொற்பம். இவர்கள் மிகவும் குட்டையானவர்கள். இவர்களுக்கு எஸ்கிமோஸ் (Eskimos) என்று பெயர். இவர்கள் பனிக்கட்டியினால் வீடுகட்டி அதில் வசிக்கின்றனர். இங்கு அகப்படுவது ரெயின்டீயர் என்ற மான் ஒன்றுதான். ஆகையால் இவர்களுடைய ஆகாரம் இந்த மான்களின் மாம்சமும்,

பரனும், அங்கு அகப்படும் சில மீன்களும் தான். இன்னும், இம்மண்டலங்களில் ஆறுமாதம் இரவும் ஆறுமாதம் பகலாயிருப்பதினுல் (ஏன் ?) இவர்கள் ஆகாரம் தேடிக்கொள்ள கஷ்டப்படுகிருர்கள். நாகரீகத்தில், பொதுவாக, இவர்கள் முன்னேற்ற மடையாதவர்.

மேற்கூறின உஷ்ணமண்டலத்திற்கும் அதிசீதளமண்டலத்திற்கு மிடையிலுள்ள பிரதேசம் அதிக உஷ்ணமும், அதிகக் குளிர்ச்சியு மில்லாமல் மித சீதோஷ்ண முள்ளதாயிருக்கிறது. இவைகளில் வடக்கிலுள்ளதற்கு உத்திரமித சீதோஷ்ண மண்டலம் என்றும் தெற்கிலுள்ளதற்கு தக்ஷிணமித சீதோஷ்ண மண்டலமென்றும் பெயர். இப்பிரதேசத்திலுள்ளவர் அநேகமாய் வெண்மை நிறத்தினர். இவர்கள் உஷ்ணத்தின் அகோரத்திலும் சீதள கடுமையிலும் அகப்படாதவர்களாகையால் இவர்கள் சுறுசுறுப்பானவர்களும், சாஸ்திர ஆராய்ச்சி, கைத்தொழில் முதலியவைகளில் விருத்தியடைந்தவர்களாயும் இருக்கிருர்கள்.

கண்டங்கள்

1. யூரேசியா,

பூகோள படத்தில் கிழக்குக் கோளார்த்தத்தில் ஒரு பெரிய கண்டம் வியாபித்திருப்பதைப் பாருங்கள். அதற்கு யூரேசியா என்று பெயர். இது ஆசியா என்றும் ஐரோப்பா என்றும் இரண்டு கண்டங்கள் அடங்கியது. இவை இரண்டிற்கும் இயற்கையமைப்பு நன்ருய் இருப்பினும், சரித்திரம் மிகவும் வேறுபடுகிறதினுல், வெவ்வேருக அவைகளைக் கவனிப்பது நன்று. முதலாவது நாம் ஆசியாவைப் பற்றி பார்ப்போம்.

ஆசியா எல்லாக் கண்டங்களிலும் பெரியது. இவ்வுலகிலுள்ள பூபாகத்தில் மூன்றில் ஒரு பங்கு இக்கண்டத்தில் அடங்கியுள்ளது. இக்கண்டமே ஆரியர்களுடைய முதல் இருப்பிடம். இதுவே கிறிஸ்துமதம், இந்துமதம், இஸ்லாம், புத்தமதம் முதலிய அநேக மதங்களின் இருப்பிடம். இதற்கும் ஐரோப்பா கண்டத்திற்கும் இடையிலுள்ள எல்லை யூரல் மலைத்தொடர்.

ஆசியாவின் கடற்கரை 5120 மைல் நீளமுள்ளது. வடக்கில் அதிகமாக பிளவுபட்டிருக்கிறது. ஆனல் வருஷத்தில் ஒன்பது மாதம் அங்கு பனிக்கட்டி உரைந்திருப்பதினுல் வடக்குக் கடற்கரை பிரயோஜனமானதல்ல. கிழக்குக்கரையும் பிளவுபட்டிருப்பதனுல் அங்கு அநேக தீவுகள்—ஜப்பான், பார்மோசா, பிலிப்பைன், போர்னியோ, முதலிய தீவுகள் காணப்படுகின்றன. தெற்கில், அரேபியா இந்தியா, இந்துசைஞ என்ற தீபகல்பங்களிருக்கின்றன. (தீபகல்பமென்ருல் என்ன என்றறிவதற்கு இந்தியாவின் பூகோளத்தைப் பார்க்க.)

இயற்கை யமைப்பு.—ஆசியாவின் இயற்கை யமைப்பு விசேஷித்தது. இங்கே உலகிலுள்ள பெரிய மலைகளும், மிகத் தாழ்வான சமவெளிகளும், ஆழமான பள்ளங்களும், மேடான பீடபூமிகளும் காணப்படுகின்றன. இக்கண்டத்தின் வடக்கில் சைபீரிய என்ற சமவெளி இருக்கிறது. இது எப்படி சரிவுற்றிருக்கிறதென்பதை அங்கு பாயும் நதிகளைப் பார்த்து அறிந்து கொள்ளலாம். மத்தியில் உலகிலுள்ள பெரிய மலைத்தொடர்களும் பீடபூமி பிரதேசங்களும் காணப்படுகின்றன. இதற்கு தெற்கில் ஆறுகளாலுண்டான சமவெளிகளிருக்கின்றன. இக் கண்டத்திலுள்ள நதிகள் சில வடக்கே உத்திர சமுத்திரத்திலும், சில பஸிபிக் சமுத்திரத்திலும், சில இந்து சமுத்திரத்திலும் விழுகின்றன. சில நதிகள் உள்நாட்டிலேயே சங்கமமாயிவிடுகின்றன. இக்கண்டத்தில் அநேகம் ஏரிகளுமிருக்கின்றன. இவைகளில் காஸ்பியன் கடல் எல்லாவற்றையும்விட பெரிய ஏரி என்று சொல்லலாம்.

சில போது விஷயங்கள்.—ஒரு கண்டத்தின் இயற்கையமைப்பிலிருந்து, ஆங்காங்குள்ள ஜனங்களின் தொழில்களை அறிந்து கொள்ளலாம். ஆசியாவின் கிழக்குக் கரையிலிருப்போர் கப்பலோட்டிகளும், கடல்பிரியருமாயிருக்கிறார்கள் (Sea-faring), மலைப் பிரதேசங்களிலுள்ளவர்கள் திட சரீரமுள்ள வீரர்களாயும், பீடபூமி பிரதேசத்திலிருப்பவர் ஆடுமாடு ஒட்டை முதலிவையோடு ஊர் ஊராய் பிரயாணம் பண்ணும் வியாபாரிகளாயும், சமவெளிகளிலுள்ளவர்கள் விவசாயம் செய்கிறவர்களும், கைத்தொழிலாளரும் தத்துவ ஞானிகளாயும் இருக்கின்றனர். ஆசியாவின் தென் கடற்கரையோரம் அதிகமாக உடைந்தில்லாததினால், இங்கே துறைமுகப் பட்டணங்கள் மிகவும் சில. பெரிய பட்டணங்களும் ஜன நெருக்கமுள்ள இடங்களும் உள் நாடுகளில்தான் இருக்கின்றன. இக்கண்டத்தில் பொதுவாக இருப்புப்பாதைகள் மிகக் குறைவானவை. இங்கே, வடக்கிலுள்ள சைபீரியாவில் 5000 மைல்களுக்கு மேல் நீளமுள்ள ஒரு இருப்புப்பாதை கிழக்கு மேற்காய் செல்லுகிறது. இதைவிட நீளமுள்ள பாதை உலகத்தில் எங்குமில்லை. பாலை மிகுந்த தென்மேற்கு நாடுகளிலும், மத்திய ஆசியாவிலும் வெகுகாலமாக ஒட்டகங்களின் மீது வியாபாரப் போக்கு வரவுகள் நடைபெற்று வருகின்றன. இந்த மார்க்கங்களை "காரவான்" (Caravan) பாதை என்று சொல்லுகிறார்கள். இவைகளை ஒட்டியே இப்போது இருப்புப்பாதை போடுகிறார்கள்.

சீதோஷ்ண ஸ்திதியும் விளைபொருள்களும்.

(1). வடக்கு சமவெளியில் (சைபீரியா) மாரிகாலத்தில் குளிர் அசாத்தியமாயும், கோடை காலம் குறுகலாயுமிருக்கிறது. அங்கே கோடை காலத்தில் அதிகமாய் மழை பெய்கிறது. இச் சமவெளியின் வடக்கு பாகத்தில் துந்தரப் பிரதேசமிருக்கிறது. இங்கே சிறு செடிகளும், பாசி வர்க்கத்தைச் சேர்ந்த பயிர்களுமே

காணப்படும். (2) துந்தரப்பிரதேசத்திற்குத் தெற்கில் ஊசிஇலைக் காடுகள் இருக்கின்றன. மத்திய ஆசியாவில் மழை சொற்பம். மலைச் சுடர்களால் சூழப்பட்டிருப்பதாகையால், இப் பிரதேசத்திற்கு மழை காற்று வர இடமில்லை. இங்கே கோபி என்ற பாலைவனம் இருக்கிறது. மற்ற இடங்கள் புல்வெளிகளாக இருக்கின்றன. இவ்விடம் கோடையில் அதிக உஷ்ணமாயும், மாரியில் அதிகக் குளர்ச்சியாயுமிருக்கிறது. (3) தென் மேற்கு நாடுகளில் மழை அதிகக் குறைவு. இங்கே கோடைகாலத்தில் அவ்வளவு உஷ்ணமில்லை; ஆனால் மாரிகாலத்தில் குளிர் அதிகம். இங்கே கோதுமையும், நாரத்தை, திராக்ஷை, ஈச்சை முதலிய பழம் தரும் மரங்கள் இருக்கின்றன. (4) தென்கிழக்கு நாடுகளில் பருவக் காற்றினால் மழை பெய்கிறது. இங்கே உஷ்ணமும் மழையும் அதிகம். இங்கே அடர்ந்த காடுகளும் (தேக்கு, கருங்காலி, சந்தனம், மூங்கில்) நெல், கோதுமை, கரும்பு, சணல், காப்பி, புகையிலை, பருத்தி முதலியவைகளும் பயிராகின்றன. நம் நாடாகிய இந்தியா இந்த பிரதேசத்தில் தானிருக்கிறது. (5) பூமத்திய ரேகைக்கு அருகிலுள்ள மலேயாத்தீவு கூட்டத்தில் எந்த காலத்திலும் 80 டிகிரி உஷ்ணத்திற்குக் குறைவு இராது. ஆனால் எக்காலத்திலும் மழை அதிகமுண்டு இங்கே காடுகள் அதிகம். இவைகளுக்கு உஷ்ணக்காடுகளென்று பெயர்.

ஜப்பான்.

ஆசியாவின் வடகிழக்கில் ஜப்பான் தீவுகளிருக்கின்றன. இவைகள் நாலு தீவுகளடங்கியவை. இத் தீவுகள் மலைப்பாங்கானவை. அவைகள் எரிமலை சம்மந்தமானவை. ஜப்பானில் கோதுமையும், அரிசியும் ஜாஸ்தியாகக் கிடைக்கிறது இங்கே பட்டுப்புழு உற்பத்தியாகும். முசுக்கட்டை மரங்கள் ஜாஸ்தி. ஆகையால் பட்டு அதிகமாய் கிடைக்கிறது. ஜப்பானியர் குள்ளமாகவும், பார்வைக்கு விசித்திரமாகவும் இருப்பர். அவர்கள் தைரியமும், பலமும் சுறுசுறுப்பும் மிகுந்தவர்கள். இவர்கள் தம்தேசத்தினர் சிலரை இங்கிலாந்து, அமெரிக்க முதலிய நாடுகளுக்கு அனுப்பி ஐரோப்பிய முறைகளை கற்றுக்கொண்டு இப்போது வியாபாரத்திலும் செல்வத்திலும் மேம்பாடு அடைந்திருக்கிறார்கள். ஜப்பான் ஒரு அரசனுடைய ஆளுகைக்குள்ளிருக்கிறது. அவர் மிக்காடோ என்றழைக்கப்படுவர். ஜப்பானியர் பெரும்பாலும் புத்தமதத்தை தழிவியுள்ளவர். ஜப்பானுக்கு தலை நகர் டோக்கியோ.

சீனு.

ஆசியாவின் நாடுகளில் பெரியது இதுவே. இங்கே அரிசி, பட்டு தேயிலை முதலியவை அதிகமாக கிடைக்கிறது. இங்கே மூன்றுபெரிய நதிகளிருக்கின்றன. அவைகளில் 'ஹுவாங்கே' (Huang Ho) என்ற நதியில் அடிக்கடி வெள்ளம் வந்து பொருள் நாசம் ஜனநாசம் அதிகமாகிறபடியால் அந்நதிக்கு 'சீனுவின் துக்கம்' என்று பெயர்.

சீனவுக்கு பீகின் தலைநகரம். இங்கு பலமான அரசாட்சியில்லை. இதைச் சேர்ந்த மஞ்சூரியா நாடு யாருக்குச் சொந்தம் என்பதில் ஜப்பானியருக்கும் சீனருக்கும் சமீபகாலத்தில் ஒரு யுத்தம் நடந்தது.

ஆசியாவுக்குக் கிழக்கில் அனடோலியா, ஸிரியா, அரேபியா, இராக், பாரசிகம், ஆப்கானிஸ்தானம் முதலிய நாடுகளிருக்கின்றன. தென்மேற்கில் ஸியாம், புரஞ்சு. இந்தோசைன, கிழக்கிந்திய தீவுகள் என்பவை. இக்கண்டத்தில் நம்தேசமாகிய இந்தியா அதிக முக்கியமானது.

2. ஐரோப்பா.

பூகோளப் படத்தைப் பார்த்தால் ஐரோப்பா ஆசியா கண்டத்தைச் சேந்த ஒரு தீபகல்பம்போல் தோன்றுகிறது. ஆனல் இது ஒரு கண்டம். சிறியதாயிருப்பினும் இது எல்லா கண்டங்களிலும் முன்னேற்ற மடைந்திருக்கிறது. இதற்குக்காரணமென்ன ? (1) ஐரோப்பா சமசீதள மண்டலத்திலிருப்பதால் ஜனங்கள் வருஷமுழுவதும் யாதொரு கஷ்டமின்றி வேலை செய்யக்கூடியவர்களாயிருக்கின்றனர். (2) இங்கே நிலக்கரியும் இரும்பும் அதிகமாய் கிடைக்கிறதினல், தொழில் சாலைகள் ஏராளமாகவிருக்கின்றன. (3) இக்கண்டத்தில் பல இடத்திலும் ஜலபாகம் உட்சென்றிருப்பதால் கடற்கரை வெகு கோணல் மாணலாய் இருக்கிறது. இக்காரணத்தால் கப்பல் தங்குவதற்கேற்ற பல இடங்கள் இயற்கையாகவே அமைந்திருக்கின்றன, (4) ஐரோப்பாவானது ஆசியா, அமெரிக்கா, ஆப்பிரிக்கா இம்மூன்றிர்க்கும் மத்தியிலிருப்பதால் அதன் வியாபாரத்திற்கு அனுகூலமாயிருக்கிறது.

இயற்கையமைப்பு. ஐரோப்பா பெரும்பாலும் சமவெளியாயிருக்கிறது. தெற்கிலும் மத்தியிலும் ஒரு மேட்டு நிலம் வளைந்து வியாபித்திருக்கிறது. இம் மேட்டு நிலத்தில் உயரமான மலைத்தொடர் ஆல்ப்ஸ். இதின் உச்சி எப்போதும் உரைபனியால் மூடப்பட்டிருக்கும். வடமேற்கில் ஸ்காண்டிநேவிய மலைத்தொடர்கள் அடங்கிய மேட்டு நிலமிருக்கிறது. ஐரோப்பாவின் ஆறுகள் பெரும்பாலும் மத்திய மேட்டு நிலத்திலிருந்து உற்பத்தியாகின்றன இவைகளில் ரைன், டான்யூப் என்ற நதிகள் முக்கியமானவை. ஐரோப்பாவிலுள்ள ஏரிகளில் ஆல்ப்ஸ் மலை பிரதேசத்திலுள்ள ஏரிகள் பார்வைக்கு மிகவும் அழகானவை.

சீதோஷ்ண ஸ்திதியும் விளையும் பொருள்களும். ஐரோப்பாவுக்கு மழை கொடுப்பது அட்லான்டிக் சமுத்திரத்தில் அடித்து வரும் தென்மேற்குக் காற்று. ஐரோப்பாவின் வடக்கிலுள்ள நாடுகளில் குளிர்காலத்தில் குளிர்ச்சியாயும், குறுகிய கோடை காலத்தில் சற்று உஷ்ணமாயுமிருக்கிறது. வடமேற்கு நாடுகளில் கோடையில் வெது வெதுப்பாயும், குளிர்காலத்தில் குளிர்ச்சியாயு

மிருக்கிறது. தெற்கில் மத்திய தரைக்கடலுக் கருகிலுள்ள நாடுகளில் கோடையில் வறண்டும் உஷ்ணமாயும் குளிர்காலத்தில் வெதுவெதுப்பாயுமிருக்கிறது.

ஐரோப்பின் வடபாகத்தில் துந்தரப் பிரதேசமிருக்கிறது. அதற்குத் தெற்கில் ஊசிஇலைக் காடுகள் காணப்படுகின்றன. இதற்கடுத்தாற்போல் அகலஇலைக் காடுகளிருக்கின்றன. இன்னும் தெற்கில் வர வர புல்பிரதேசம் காணப்படுகிறது. ஐரோப்பாவில் எல்லா இடங்களிலும் கோதுமை விளைகிறது. மத்திய தரை நாடுகளில் ஒலிவ் மரங்கள், பலவகை பழமரங்கள் இவைகள் காணப்படுகின்றன.

சில பொதுவிஷயங்கள். ஐரோப்பாவின் கடற்கரை யோரம் அதிகமாகக் கோணல்மாணலாயிருப்பதினால், எல்லா பக்கங்களுக்கும் கடற்கரை சமீபமாயிருக்கிறது. இக்காரணத்தால் இத்தேசத்திலுள்ளோர் கப்பலோட்டிகளும், கப்பல்வர்த்தகத்தில் முன்னேறினவர்களாயுமிருக்கின்றனர். பிளந்த கடற்கரையில் அநேக துறைமுகப்பட்டணங்களிருக்கின்றன. ஐரோப்பாவின் கரையோரத்தில் ஜன நெருக்கம் ஜாஸ்தி. உள்நாட்டில் அவ்வளவு இல்லை. இத்தேசத்தில் ரெயில் பாதை மூலமாயும், ஆறுகள் மூலமாயும், கடற்கரை மூலமாயும் வியாபாரத்துக்கு வேண்டிய போக்கு வரவு சாதனங்கள் லேசாக ஏற்பட்டுள்ளன. ஆகையால் உள்நாட்டு அயல்நாட்டு வர்த்தகங்களில் ஐரோப்பா விசேஷித்த விதமாய் முன்னேற்றமடைந்திருக்கிறது.

ஐரோப்பாவிலுள்ள நாடுகள்.—ஸ்வீடன், நார்வே, டென்மார்க், ஹாலண்ட், பெல்ஜியம், பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்விட்சர்லண்ட், ஆஸ்டிரியா, ஹங்கேரி, இட்டலி, போலண்ட், கக்கே கலோவேக்கியா, பல்கேரியா, துர்க்கியில் ஒரு பாகம், கிரீஸ், அல்பேனியா, ஸ்பெயின் போர்சுகல், ருமேனியா, ருஷ்யா, லுத்துயேனியா, லாட்வியா, எஸ்தோனியா, பின்ட்லண்ட் முதலியன.

பிரிட்டிஷ் தீவுகள்.

கிரேட்பிரிடன் தீவு, ஐர்லண்டு தீவு இன்னும் பல சில்லரைத் தீவுகளும் சேர்ந்து பிரிட்டிஷ் தீவுகளென்று அழைக்கப்படுகின்றன. இவை இந்தியாவைவிட ஐந்து மடங்கு சிறியவையெனினும், உலகத்திலுள்ள தேசங்களுக்கெல்லாம் மேலானது. இது இவ்வளவு உன்னத பதவிக்கு வந்ததின் காரணமென்ன ?

(1) இவை நில கோளத்தின் மத்தியிலிருக்கின்றன. ஐரோப்பாவின் நாடுகளிலிருந்து அமெரிக்காவுக்குப் போகிற கப்பல்களும் அமெரிக்காவிலிருந்து ஐரோப்பிய தேசங்களுக்கு போகிற கப்பல்களும், கிரேட்பிரிட்டன் வழியாய்தான் போகிறது.

(2) இவை மித சீதோஷ்ண மண்டலத்திலிருப்பதால் இங்குள்ள ஜனங்கள் விவேகத்திலும் தேக வலிமையிலும் முன்னேற்றமுள்ளவர்களாயிருக்கின்றனர். சீக்கிரம் இளைத்து போகாமல் அதிக நேரம் உழைக்கக்கூடியவர்களாயு மிருக்கின்றனர்.

(3) இத் தீவுகளின் கடற்கரை அதிக நீளமாயிருப்பதினாலும், கடல் எல்லா பக்கங்களிலும் நிலத்துக்குள் அதிகமாய் ஊடுரிவிச் சென்றிருப்பதினாலும், இங்குள்ளவர்கள் கடலுக்கு அஞ்சுகிறதில்லை. இவர்கள் கப்பற் சண்டையில் மிகவும் தேறியுள்ளவர்கள். கப்பல் வர்த்தகத்தில் முன்னேற்றம் அதிகம். இவர்கள் மற்ற தேசங்களுக்கு சென்று ஆங்காங்கு தங்களுக்கு நாடுகளை ஸ்தாபிக்கின்றனர்.

(4) கிரேட்பிரிட்டன் ஒரு தீவாகையால், நாலாபக்கங்களிலும் சமுத்திரத்தால் சூழப்பட்டிருக்கிறது. இதனால் சம சீதோஷ்ணம் ஏற்படுவதுமின்றி, விரோதிகள் இலேசாக இத் தீவுகள்மீது படையெடுத்து வரமுடியாது.

(5) கிரேட்பிரிட்டெனில் நிலக்கரியும், இரும்பும் கிடைக்கிறது. தொழில் சாலைகள் ஏராளமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆங்கிலேயர் பெரும்பாலும் செயற்கைப் பொருள் உற்பத்தியில் அமர்ந்திருக்கின்றனர்.

பிரிட்டிஷ் தீவுகள் ஓர் அரசரால் ஆளப்பட்டு வருகின்றன. இவருக்கு உதவியாக இரு பெரும் சபைகளிருக்கின்றன. இவைகளில் ஜனங்களின் சபையே (House of Commons) சர்வ வல்லமை பொருந்தியது. இத் தீவுக்கு தலை நகரம் லண்டன். இது உலகத்திலுள்ள நகரங்களில் பெரியது. இத் தீவுகளிலிருந்துதான் ஆங்கிலேயர் நம் தேசத்துக்கு வந்து துரைத்தனம் செய்கிறார்கள்.

3. ஆப்பிரிக்கா.

உங்களுடனிருக்கும் பூகோள படத்தில் ஆப்பிரிக்கா என்னும் கண்டத்தைக் கண்டு பிடியுங்கள். விஸ்தீரணத்தில் இது ஆசியாவுக்கு அடுத்தால்போலுள்ளது. இக் கண்டத்தின் ஜனங்கள் பெரும்பாலும் கறுப்பு நிறமுடையோர். மேலும் அவர்கள் பேய் பிசாசுகளை வணங்கும் அஞ்ஞானிகள். இக் கண்டத்தைப்பற்றிய விவரங்கள் வெகு காலமாக ஜனங்களுக்குத் தெரியாமலிருந்தது. இக் காரணங்களினால், இதற்கு இருண்ட கண்டம் (Dark•Continent) என்று பெயர்.

இயற்கையமைப்பு.—இது ஒரு பீடபூமிக் கண்டம், அதாவது கடற்கரை யோரத்திலுள்ள குறுகிய சமவெளிகளைத் தவிர மற்றவிடமெல்லாம் பீடபூமிப் பிரதேசமாயிருக்கிறது. தென் ஆப்பிரிக்கா பீடபூமி எல்லா பக்கங்களிலும் மலைத் தொடர்களால் சூழப்பட்டிருக்கிறது. ஆப்பிரிக்காவின் தெற்குக் கோடியில் 'நல் நம்பிக்கை'

முனையிருக்கிறது. பண்டைய காலத்தில் இந்தியாவுக்கு வருவோர் இம்முனையை சுற்றித்தான் வருவார். இப்போது சூயஸ் கால்வாய் வழியாய் வந்துவிடுகிறார்கள்.

நதிகளும் ஏரிகளும்.—ஆப்பிரிக்காவிலுள்ள நதிகளில் முக்கியமானவை, நைல், காங்கோ, நய்ஜர், சாம்பசி முதலியன. இவைகளில் நைல், 'எகிப்து தேசத்தின் தாய்' என்று சொல்லுவார்கள். இந் நதியில்லாவிடில் எகிப்துதேசம் ஒரு பாலையாகியிருக்கும். காங்கோ நதி ஆப்பிரிக்காவின் நதிகளெல்லாவற்றிலும் பெரியது. சாம்பஸி நதியில் விக்டோரியா நீர் வீழ்ச்சி என்று நீர் வீழ்ச்சி இருக்கிறது. இது உலகத்தின் நீர்வீழ்ச்சிகளிலெல்லாவற்றிலும் பெரியது (400 அடி உயரம்). இங்குள்ள ஏரிகளில், விக்டோரியா நியான்ஸா, ஆல்பர்ட் நியான்சா, தாங்கனிகா நியான்சா முதலியன பெரியவை.

சீதோஷ்ணமும், விளையும் பொருள்களும்.

ஆப்பிரிகா கண்டத்தின் மத்தியில் பூமத்தியரேகை செல்லுவதால், இதின் பெரும்பாகம் உஷ்ண மண்டலத்திலிருக்கிறது. இதை உஷ்ணக்கண்டமென்று சொல்லலாம். பூமத்திய ரேகைக்கு இருபுறத்திலும் உள்ள நாடுகளில் உஷ்ணமும் மழையும் அதிகமிருப்பதினால் இங்கே உஷ்ணக் காடுகள் அதிகம். இங்கே கருங்காலி, தேக்கு இன்னும் பனைஜாதியை சேர்ந்தமரங்களும் அதிகம். மேலும், பருத்தி, காப்பி, மணிலாக்கொட்டை, பனை என்னும் வாழைப்பழம் தென்னை கரும்பு முதலியவை பயிராகின்றன. இக்காடுகளில் மனிதக் குரங்குகளும், சிங்கம், யானை முதலிய விலங்குகளும், இங்குள்ள நதிகளில் முதலை, நீர்யானை முதலியவைகளும் அதிகம். இப்பிரதேசத்திற்கு வடக்கிலும் தெற்கிலும் மழை குறைந்துகொண்டே போகிறபடியினால், இப் பாகங்கள் பெரும்பாலும் புல் பிரதேசங்கள். இங்கே சோளம், கம்பு, முதலியவை பயிராகின்றன. ஒட்டை, ஆடுகள் நெருப்புக்கோழி இவைகளை இங்குள்ள ஜனங்கள் வளர்க்கின்றனர். நெருப்புக் கோழிகளின் இறகுகள் அபூர்வமானவை. இப் புல் பிரதேசங்களின் வடக்கிலும் தெற்கிலும் பாலை வனங்களிருக்கின்றன. இப் பாலைகளில் மழையே இல்லை. ஆனால் இப்பாலைகளில் தண்ணீருள்ள இடங்களில் ஈச்சை வளருகின்றன. வட ஆப்பிரிகாவிலுள்ள பாலைக்கு சகாரா பாலையென்றும் தென் ஆப்பிரிகாவிலுள்ள பாலைக்கு கல்லகாரிப் பாலை யென்றும் கூறுவர். இப்பாலைகளுக்கு வடக்கிலும் தெற்கிலும், மத்திய தரை சீதோஷ்ணமிருக்கிறது. இங்கே சோளம், கோதுமை, திராக்ஷை, கிச்சிலி, முதலியவை வளருகின்றன.

சில பொதுவிஷயங்கள். ஆப்பிரிகாவில் ஜோகான்ஸ் பர்க் என்னுமிடத்திலும் தங்கம் ஏராளமாகக் கிடைக்கிறது. கிம்பர்லி என்னுமிடத்தில் வைரம் அதிகமாகக் கிடைக்கிறது. உலகத்தில் வேறே ஒரு இடத்திலும் வைரம் இவ்வளவு கிடைப்பதில்லை. ஆப்பிரிக்கர் நாகரீகத்தில் அதிகக் குறை உள்ளோர். ஜனங்கள்

பெரும்பாலும், விவசாயம் செய்தும், ஆடுமாடு மேய்த்தும், சுரங்க வேலை செய்தும் ஜீவனம் செய்கிறார்கள். இக்கண்டத்தில் ஓரம் நேராக இருப்பதினால், இங்குள்ள ஜனங்கள் கப்பல் வேலைகளில் தேர்ந்தவரல்ல. ஆப்பிரிக்காவின் ஆறுகள் போக்கு வரவுக்கு ஏற்ற வையல்ல; இருப்புப் பாதைகளும் மிக்க குறைவு. ஆப்பிரிக்காவில் ஐரோப்பிய குடியேற்றம் இப்போது ஜாஸ்தியாயிருப்பதினால், போக்கு வரவு சாதனங்கள் இப்போது அதிகரிக்கின்றன. இங்குள்ள பலவித ஜனங்களில், நீக்ரோ ஜாதியார் விசேஷித்தவர். இங்குள்ளவர்களில் அநேகர் இப்போது மகமதியராகி யிருக்கின்றனர். ஆப்பிரிகா முழுவதும் ஒரு அரசன் ஆட்சியிலில்லை. இக்கண்டத்தின் பாகங்கள், இங்கிலீஷ், பிரன்சு, பெல்ஜியம், போர்ச்சுகீஸ் ஸ்பேனிஷ் முதலிய ஐரோப்பியரின் ஆதினத்துக்குள்ளிருக்கின்றன.

4. ஆஸ்திரேலியா.

1. ஆஸ்திரேலியா கண்டங்களில் சிறியது, தீவுகளில் பெரியது. இதின் விஸ்தீரணம் இந்திய ராஜ்ஜியத்திலும் ஒன்றரை மடங்கு அதிகம். இதன் பக்கத்தில், நியுகினியா, நியுசீலண்ட், முதலிய பல தீவுகளிருக்கின்றன. இவைகளெல்லாம் சேர்ந்து 'ஆஸ்ட்ரலேசியா' என்று அழைக்கப்படும். இக்கண்டம் மற்றக் கண்டங்களிலிருந்து அதிக தூரத்திலிருப்பதால் இது இருப்பது உலகினருக்கு அநேக காலமாகத் தெரியாதிருந்தது.

கடற்கரை லக்ஷணம். கடற்கரை ஆப்பிரிக்காவின் கரையைப்போல் நேரானது. கடல் நிலத்துக்குள் ஊடுரிவிச் செல்லவில்லையாகையால் துறைமுகப் பட்டணங்கள் அதிகமில்லை. ஆஸ்திரேலியாவின் வடகிழக்கு பாகத்தில் சுமார் 1200 மைலுக்கு பவளக் குன்றுகளிருக்கின்றன. (படத்தைப் பார்க்கவும்).

இயற்கையமைப்பு. ஆஸ்திரேலியா ஓரங்களில் உயர்ந்தும், மத்தியில் குழிந்துமிருக்கின்றது. மேற்குக் கரையோரத்தில் குறுகிய சமவெளியிருக்கிறது. கண்டத்தின் மேற்குப் பாகத்தில் பீடபூமியிருக்கிறது. கிழக்குக் கரையோரத்தில் உயரமான மலைத் தொடர் இருக்கிறது. இம்மலைத்தொடருக்கும் பீடபூமிக்குமிடையே சமவெளி யொன்று இருக்கிறது. இச்சமவெளிக்கு நடுவே ஒரு தாழ்ந்த மேட்டு நிலமுமிருக்கிறது. கிழக்கு மலைத் தொடருக்கும் கடற்கரைக்கு மிடையில் சமவெளி யொன்று இருக்கிறது.

ஆறுகளும் ஏரிகளும். இக்கண்டத்தின் ஆறுகள் கரையோரத்திலுள்ள பீடபூமி விளிம்புகளில் உற்பத்தியாவதால் பெரும்பாலும், சிறியவையும், வேகமுடைய வனுயுமிருக்கின்றன. இக்காரணத்தால் இங்குள்ள நதிகள் வேளாண்மைக்குறியவையல்ல. ஆஸ்ட்ரேலியாவில் மர்ரேடார்லிங் நதியே பெரியநதி. இது 1300 மைல் நீளமுள்ளது. ஏரிகளில் 'ஏரி' ஏரி விசேஷமானது.

சீதோஷ்ணமும், விளையும் பொருள்களும். படத்தில் தக்ஷிணாயன ரேகை கண்டத்தின் நடுமத்தியில் செல்வதை கவனியுங்கள். ஆகையால் கண்டத்தின் வடபாகம் உஷ்ணப் பிரதேசம் தென்பாகம் வெது வெதுப்பான சமசீதோஷ்ணப் பிரதேசம். கண்டத்தின் மத்திய பாகத்தில் சீதோஷ்ண ஸ்திதியின் சம தன்மை கிடையாது. ஏனெனில் சுற்றிலுமுள்ள மலை விளிம்புகள் கடற்காற்றை உள்செல்ல விடுகிறதில்லை. ஆஸ்திரேலியாவின் வடக்கிலும், வடகிழக்கிலும் வருஷத்தில் எப்போதும் மழை பெய்கிறது. இங்கே பனை, மூங்கில், வாழை முதலியவை வளருகின்றன. தென் கிழக்கில் யூக்காலிப்டஸ் (தலைவலித் தைலம்) மரங்களும், பலவகை பிசின் மரங்களும் வளருகின்றன. பீடபூமிப் பிரதேசத்தில் புல் வளர்கிறது. தென்பாகத்திலும், கிழக்குக் கரையிலும், கோதுமை, சோளம், கிச்சிலி, ஆப்பிள் முதலியவை பயிராகின்றன.

சில பொதுவிஷயங்கள். ஆஸ்ட்ரேலியாவில் தங்கம், வெள்ளி, செம்பு, நிலக்கரி, இரும்பு, தகரம் முதலியவை அகப்படுகின்றன. ஜனங்கள் பெரும்பாலும் காடுகளில் மரங்கள் வெட்டியும், எண்ணை இரக்கியும், இன்னும் மீன் பிடித்தும், ஆடுமாடு மேய்த்தும் விவசாயம் செய்தும், சுரங்கம் வெட்டியும் ஜீவனம் செய்கிறார்கள். சிலர் தொழிற்சாலைகளில் செயற்கைப் பொருள் செய்தும் வேலை செய்து வருகின்றனர். பீடபூமியின் ஓரத்திலுள்ள புல்வெளிகளில் மந்தை மந்தையாக ஆடுகள் மேய்த்து வருகிறார்கள். இக்கண்டத்தின் பிராணிகளும், தாவரவர்க்கங்களும் நூதனமானவை. இங்குள்ள பிராணிகளும் தாவரங்களும் வேறெங்குமில்லை. இவைகளில் ஒன்று கங்காரு. இது 5 அடி நீளமுள்ளது. இதன் பின்கால்கள் நீளமுள்ளவை ; இவைகளைக்கொண்டு தத்தித் தத்தி ஓடும். இதன் வயிற்றில் ஒரு குழி இருக்கிறது. இதில் இதன் குட்டியை தூக்கிச் செல்லும், ஓப்போஸ்ஸம் என்று இன்னொரு பிராணியும் இங்கு இருக்கிறது. அதன் அலகும், கால்களும் வாத்தைப் போன்றவை. ஆனால் பார்த்தாலோ நாலுகால் மிருகம். இக்கண்டத்தில் போக்கு வரவு சாதனங்கள் மிகக் குறைவு. ஆஸ்ட்ரேலியாவின் பூர்வீக மனுஷர் மனுஷ பக்ஷிணிகள். ஆனால் இப்போதோ கண்டமுழுவதும் ஆங்கிலேயர் வந்து குடியேறிவிட்டனர்.

5. அமெரிக்காக் கண்டங்கள்.

பூகோள படத்தில் மேற்கு கோளார்த்தத்தைப் பாருங்கள். அதிலுள்ள கண்டங்கள் இரண்டு. அவைகளுக்கு அமெரிக்கா என்று பெயர். வடக்கிலுள்ளதற்கு வட அமெரிக்கா வென்றும், தெற்கிலிருப்பதற்கு தென் அமெரிக்கா வென்றும் சொல்லுவர். இவை இரண்டும் இயற்கை யமைப்பில் ஒத்திருக்கின்றன. பனாமா என்ற பூசந்தியால் சேர்க்கப்பட்டு ஒரு நிலப்பகுதியாயிருக்கின்றன. இவைகளை கண்டுபிடித்தவர் கொலம்பஸ் என்பவர், இவைகளை சமீப

காலத்தில் தான் பழைய உலகினருக்குத் தெரிந்தமையால் அவைகளை புதிய உலகம் என்று சொல்லுவார்கள். இக்கண்டங்களின் சுதேசிகளுக்கு சிவப்பு இந்தியர் என்று பெயர் (Red Indians). இப்போது தென் அமெரிக்காவில் ஸ்பானியரும் வட அமெரிக்காவில் ஐரோப்பியரும் குடியேறியிருக்கின்றனர்.

வட அமெரிக்காவின் வடபாகத்திலிருக்கும் கனடா பிரிட்டிஷ் ராஜ்யத்தை சேர்ந்தது. தென் பகுதி அமெரிக்கா ஐக்யநாடுகளென்றும் பெயருடன் ஓர் குடியரசு நாடாகி விட்டது. இந்நாடுகளுக்குள்ள செல்வத்தைப்போல் வேறெந்த தேசத்துக்குமில்லை. இங்கே நிலக்கரியும் இரும்பும் அகப்படுகிறதினால் தொழிற்சாலை அபிவிர்த்தி அதிகம். இங்கு புல்வெளி பிரதேசமும் அதிகமிருப்பதால் ஆடுமாடுகளின் விருத்தியதிகம். இங்கே போக்குவரவு மார்க்கங்களும் அதிகமாயுள்ளன.

கடற்கரை இலக்ஷணம். வட அமெரிக்காவின் வடகரை அதிகமாய் பிளவுபட்டிருக்கிறது. அங்கே அநேக தீவுகளிருக்கின்றன. அதற்கு ஆர்க்டிக் தீவுக்கூட்டம் என்று பெயர். தென் அமெரிக்காவின் கரையோரம் ஒழுங்காகயிருக்கிறது. (ஆப்பிரிகாவுடன் ஒப்பிடவும்).

இயற்கை ய்மைப்பு. இருகண்டத்திலும் மேல் பகுதியில் மேட்டு நிலமும், கீழ்பக்கத்தில் இன்னுமொரு மேட்டு நிலமும் இவைகளுக்கு நடுவில் அகன்ற சமவெளிகளும் காணப்படுகின்றன. வட அமெரிக்காவில் மேற்கேயுள்ள பர்வதத்திற்கு ராக்கிபர்வதமென்றும், கிழக்கிலுள்ளதற்கு "அப்பலேச்சியன்" என்றும் பெயர். தென் அமெரிக்காவின் மேற்கேயுள்ள பர்வதத்திற்கு "ஆண்டிஸ்" என்று பெயர்.

நதிகளும் ஏரிகளும்.

வட அமெரிக்காவில் மேகன்ஸி, ஸிண்ட்லாரன்ஸ், மிஸிஸிபி என்ற நதிகள் முக்கியமானவை. இவைகளில் பெரியது மிஸிஸிபி. இது உலகத்தின் நதிகளில் அதிக நீளமுள்ளது (4300 மைல்). ஸெண்ட்லாரன்ஸ் நதியில் உலகப்பிரசித்திப்பெற்ற "நியாகரா" நீர்வீழ்ச்சியிருக்கிறது. தென் அமெரிக்காவிலுள்ள அமெஜான் நதி உலகத்தின் நதிகளில் அகன்றது. முகத்துவாரத்தில் இதின் அகலம் 50 மைல் இதைத் தவிர இன்னும் பல நதிகளுமிருக்கின்றன.

வட அமெரிக்காவின் வட பகுதியில் அநேக பெரிய ஏரிகளிருக்கின்றன. இவைகள் போக்கு வரவு மார்க்கங்களுக்கு அதிக பிரயோஜனமானவை.

சீதோஷ்ண ஸ்திதியும், விளையும் பொருள்களும்.

வட அமெரிக்காவின் வடக்கில் துந்தாப் பிரதேச அருகில் பொதுவில் கனாடாவுக்கு குளிர்ச்சியான சீதோஷ்ணமிருக்கிறது. அமெரிக்காவின் மேற்குக் கரையில் சீதோஷ்ணம் சம தன்மை யுடையது. மத்திய பாகமும் கீழ்ப்பாகமும் மேற் கரையைவிட கோடையில் அதிக உஷ்ணமாயும், குளிர்காலத்தில் அதிக குளிர்ச் சியாயுமிருக்கின்றன. துந்தாப் பிரதேசத்திற்குத் தெற்கில் ஊசி இலைக்காடுகளிருக்கின்றன. இதற்குத் தெற்கில் கோதுமை பயிரா கிறது. கோதுமை விளைகிற தேசங்களில் அமெரிக்கா முதன்மை பெற்றது. தென் கிழக்கு பாகத்தில் புகையிலை, சோளம், கரும்பு முதலியவை பயிராக்குகிறார்கள். மேட்டுப் பிரதேசங்களில் புல் ஏராளமாக விளைகின்றது.

மத்திய அமெரிக்கா நாடுகள் ஓர் பீடபூமிப் பிரதேசம். இங்கே அடர்ந்த காடுகளிருக்கின்றன. காப்பி, கரும்பு, வாழை இவைகள் ஏராளமாக விளைகிறது.

தென் அமெரிக்காவில் அமெசான் நதி கரையோரத்தில் உஷ் ணப்பிரதேசத்து காடுகள் அடர்ந்திருக்கின்றன. மலைச் சரிவுகளில் காப்பியும், சமவெளியில் கரும்பும் விசேஷமான பயிர்கள்.

சில பொது விஷயங்கள்.- இக்கண்டங்களில் மண்ணெண்ணெய், தங்கம், செம்பு கிடைக்கின்றன. ஜனங்கள் விவசாயத்திலும், பிரா ணிகள் விருத்தி செய்வதிலும், சுரங்க வேலையிலும், செயற்கைப் பொருள் உற்பத்தியிலும் ஜீவனாம்சம் செய்து வருகிறார்கள். இக்கண்டங்களிலுள்ளார் பெரும்பாலும் கிறிஸ்தவர்கள்.

இப்போது பூகோளத்தையும், அதிலுள்ள கண்டங்களையும் சுருக்கமாகப் படித்தோம். இப் பூ உலகின் விநோதம் நமது அறி வுக்கெட்டாததாயிருக்கிறது. இன்னும் கண்டுபிடிக்கப்படாத கண் டங்கள் இருப்பினும் இருக்கலாம். நாமிருக்கும் இவ்வுலக மட் மல்ல, இன்னும் பல உலகங்கள் இருக்கின்றன. அவை நம் உ கிலும் பெரியன. இவைகளே இவ்வளவு பெரிதாயிருப்பி இவைகளையெல்லாம் படைத்து, காத்து, பராமரித்து வருகிற இறை வன் எப்படிப்பட்டவரா யிருத்தல்வேண்டும். இந்த அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகனும், ஆதி மூர்த்தியாயு மிருப்பவரை ப பக்தியுடன் தொழுது அவரை வழிபட்டு நடப்போமாக.